# நித்திலம்

# නිත්තිලම්

# 2014




**வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை**

CSDI பிரிவு வெளியிடும் வருடாந்த சஞ்சிகை

**කලාප අධ්‍යාපන කාර්යාලය - ත්‍රිකුණාමලය**


CSDI කොට්ඨාශය ඉදිරිපත් කරන වාර්ෂික සඟරාව

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நித்திலம்

# නිත්තිලම්

# 2014

**வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை**

CSDI பிரிவு வெளியிடும் வருடாந்த சஞ்சிகை

**කලාප අධ්‍යාපන කාර්යාලය - ත්‍රිකුණාමලය**

CSDI කොට්ඨාශය ඉදිරිපත් කරන වාර්ෂික සඟරාව

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பு விபரம்


| | |
|---|---|
| தலைவர் | திரு .N. விஜேந்திரன்<br>(வலயக் கல்விப் பணிப்பாளர்) |
| பதிப்பாசிரியர்,முன்அட்டை வடிவமைப்பு | திரு. R. நிமலரஞ்சன்<br>உதவிக் கல்விப் பணிப்பாளர் – (அழகியல்) |
| உதவிப் பதிப்பாசிரியர் | திரு. K. செல்வநாயகம்<br>கோட்டக் கல்விப் பணிப்பாளர் – (குச்சவெளி) |
| ஆலோசகர்கள் | திரு. K. அரியநாயகம்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர் – (நிர்வாகம்) |
| | திருமதி .S. வரதசீலன்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர் – (அபிவிருத்தி) |
| | திருமதி. P. ஜெரால்ட்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர் – (திட்டமிடல்) |
| | திரு. A. செல்வநாயகம்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர் – (முகாமைத்துவம் ) |
| | திருமதி. D.H. மாலினி<br>உதவிக் கல்விப் பணிப்பாளர் – (சிங்களம்) |
| | ஜனாப். M.K .அனீஸ்<br>(நிர்வாக உத்தியோகத்தர்) |
| | திருமதி .R. அமிர்தலிங்கம்<br>ஆசிரிய ஆலோசகர் – (இந்துசமயம்) |
| | திருமதி. I. ரகுந்திரராஜா<br>ஆசிரிய ஆலோசகர் – (தமிழ்மொழி) |
| | செல்வி. T. சாரதா<br>ஆசிரிய ஆலோசகர் – (சமூக விஞ்ஞானம்) |
| | திருமதி. V. ஜெயகணேஸ்<br>ஆசிரிய ஆலோசகர் – (நடனம்) |
| | கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் |
| | உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் |
| | ஆசிரிய ஆலோசகர்கள் |
| | வலயக் கல்வி அலுவலர்கள் |
| நிதி நிர்வாகம் | செல்வி. S. அமுதா<br>(கணக்காளர்) |
| உதவி அலுவலகர்கள் | திருமதி. F. முஸம்மில்<br>(அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| | திருமதி. வித்தியா தீபராஜ்<br>(அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| | திருமதி. G. சிவகுமார்<br>(முகாமைத்துவ உதவியாளர்) |
| | திரு. K. ராஜா<br>(அலுவலக உதவியாளர்) |
| அச்சுப் பதிப்பு | Ben vision Printers |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை கல்வி வலயக் கீதம்

வாழ்க....................வாழ்கவே!
எங்கள்திருமலைக்கல்விவலயம்
வாழ்க..............வாழ்கவே!

பழி இழிபாவ இருள்மறைந்திடவே
தமிழர், சிங்களவர், முஸ்லீம், பறங்கியரும்
அன்போடுஒன்றாய்விழித்தெழுந்திடவே
வாழ்க..............வாழ்கவே!

(எங்கள் திருமலை)

மறிகடலோதம்எழில்நலம்பெருகி
அறிவொளிமாந்தர்அனுதினம்ஊட்டும்
சாகித்ய இசை மலை வான்புகழோங்க!
வாழ்க..............வாழ்கவே!

(எங்கள் திருமலை)

உடலுறு கல்வி உயர்வுடன் ஈந்து
உள்ளங்களெல்லாம்உன்னதம்பெறவே
சீர்பெறஉழைக்கும்திருமலை வலயம்
வாழ்க..............வாழ்கவே!

(எங்கள் திருமலை)

புலன்வழிக்கல்வி பயனுற அளிக்கும்
வினைத்திறன்உறுதிவிளைந்திடும்சமூகம்
கதிரொளிதீபம்கொழித்திடும்திருமலை,
வாழ்க..............வாழ்கவே!

(எங்கள் திருமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# කලාප ගීතය

ජයවේ ජයවේවා !
අපේ ත්‍රීමලයේ කලාපයයි මේ.
ජයවේ ජයවේවා !
අපේ ත්‍රීමලයේ කලාපයයි මේ.
ජයවේ ජයවේවා !

අඳුරු ලොවේ භය දුරු වී සැනසී//
සැම ජාතීන් සතුටින් එකමුතු වී
දියුණුව වෙත යමු එකම සිතින් අපි //
ජයවේ ජයවේවා !

මුහුදේ රැලි සුන්දර බව වැඩිවී//
සැමදා දියුණුවූ බුද්ධියේ මැණිය
අපේ ත්‍රීමලයේ කලාපයයි මේ.
ජයවේ ජයවේවා !

නැණ ගුණ වැඩිවී දියුණුව සැලසී //
සැම සිත් සැමදින එකමුතු කරමින්
දියුණුව උදෙසා වෙහෙස දරණ ඔබ//
ජයවේ ජයවේවා !

ආර්.ජේ.එම්.රාජපක්ෂ මිය.
ගුරු උපදේශිකා (සංගීත)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vision

A Community of Efficient and

an Effective Personalitys.

# Mission

Providing Educational Activities to attain a balanced Personality with physical ,moral,Cultural Spiritual and Economic Standards among the societies

# Moto

Education ,Discipline and Completeness



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.........

### ஆசிச் செய்தி

**01.** முதலமைச்சர் ஆசிச்செய்தி

நசீர் அஜஹமட் (பொறியியலாளர்)
முதலமைச்சர்,
கிழக்கு மாகாணம்.

**02.** கல்விஅமைச்சர் ஆசிச்செய்தி

கௌரவ. சி.தண்டாயுதபாணி
அமைச்சர்
கல்விஅமைச்சு
கிழக்கு மாகாணம்.

**03. නැගෙනහිර පළාතේ ප්‍රධාන ලේකම්ගේ පණිවිඩය.**

**ඩී.එම්.එස්.අභයගුණවර්ධන**
**ප්‍රධාන ලේකම්**
**නැගෙනහිර පළාත.**

**04.** வாழ்த்துரை

ஜனாப் எம். ரி.ஏ.நிஸாம்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.

**05.** வலயக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

நடேசலிங்கம் விஜேந்திரன்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
திருகோணமலை

**06.** இதழாசிரியரின் இதயத்திலிருந்து.....

இ.நிமலரஞ்சன்,
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07.** සුභ පැතුම්

තිරියාය ගිරිහඬුසෑය රජමහ විහාරාධිපති
සිරි ආනන්ද වංශාවතංස සද්ධර්ම කීර්ති ශ්‍රී
ත්‍රි / කලාප අධ්‍යාපන කාර්යාලය ගුරු උපදේශක
ශාස්ත්‍රපති පූජ්‍ය දෙව්නුවර චන්දිම නාහිමි

**08.** ஆசிச் செய்தி

வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ.சோ.இரவிச்சந்திரக் குருக்கள்.j.p
ஆலய பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும்,
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருகோணமலை.

**09.** ஆசிச் செய்தி

மௌலவி.M.Y.ஹதியதுல்லாஹ் (SLPS)
பிரதி அதிபர்,
தி/அல்-ஹம்றா மகா வித்தியாலயம்,
இறக்கக்கண்டி

**10.** ஆசிச் செய்தி

அதிவந். கலாநிதி. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

திருகோணமலை மறை மாவட்ட ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

பக்கம்

01. நவீனகல்வி முன்னெடுப்பில் பாடநூல்கள் — 01

பேராசிரியர் சபாஜெயராசா

02. நேர்மனப்பாங்கிற்கான ஆலோசனையும் வழிகாட்டலும் — 06

திருமதி.கே. இராதாகிருஷ்ணன்
உதவிஅதிபர்
தி/ ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரி

03. மாற்றமும் ஆசிரியரும் — 09

திருமதி. சந்திரகலா சௌந்தராஜன்
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி
திருகோணமலை

04. ஆசிரியர்கள் தங்களை இற்றைப்படுத்த வேண்டிய தேவை — 12

திரு. அ. அதிஸ்டலிங்கம்
B.A (Hons) PGDE
தி/கலைமகள் ம.வி
திருகோணமலை

05. இலங்கையின் பொதுக்கல்விக்கான புதிய கல்விச்சட்டத்தில் கல்விமுறைமை கட்டமைப்பும் தொழிற்பாடுகளும் — 14

திரு. சி. பாக்கியராசா M.A
(ஓய்வுநிலைப்பீடாதிபதி) சௌமியம்
அமரசிங்கம் வீதி
ஆரையம் பதி

06. இடைநிலைக் கல்வியில் பாடத்தெரிவுகளும் எதிர்காலமும் — 19

திரு. மார்க்கண்டன் ரூபவதனன்
சிரேஷ்டவிரிவுரையாளர்
ஊவா வெல்லஸ்ஸப் - பல்கலைகழகம்
பதுளை

07. **Emotional Intelligence (EI)** — 26

S. Praveeena
*Lecturer (Probationary)*
*Department of Business and Management Studies*
*Faculty of Communicating and Business Studies*
*Trincomalee Campus, Eastern University, Sri Lanka*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. எனக்கு ஒரு ஆசிரியர் தேவை **(I need a teacher)** 31

திருமதி. உ. ஜோதிநாதன் (S.L.P.S.I)
Dip in Sch Management (Merit)
தி/மெதடிஸ்தபெண்கள் கல்லூரி
திருகோணமலை

09. பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை தேவையின் அவசியமும் நடைமுறைகளும் 35

B.Soba Lecturer
Department of Education and child Care
Eastern University

10. **Importance of the Investment in Finace** 43

Mrs. S. Kumuthinidevi
Head / Department of Business and Management studies
Faculty of communicating and Business studies
Trincomalee campus ,
Eastern University ,
Sri Lanka.

11. தமிழ் இலக்கியம் காட்டும் பழந்தமிழர் கூத்துக்கள் 46

கலாநிதி திருமதி கி. ஷர்மிளாஞ்சித்குமார்
விரிவுரையாளர்
சுவாமிவிபுலானந்தாஅழகியற்கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

12. பாடசாலைகளில் உளஆற்றுப்படுத்தலின் முக்கியத்துவம் பற்றிய ஓர் பார்வை 51

அருட்சகோதரி மேரிவளர்மதி அ.கா
புனித சூசையப்பர் கன்னியர் மடம்
திருகோணமலை

13. **Stress At Work** 55

Mrs. S. Priyadharsan
Senior Lecturer
Department of Business and Management studies
Faculty of communicating and Business studies
Trincomalee Campus
Eastern University.

14. பூரணமனிதனாய் வாழ்வோம் 61

Dr. செல்வம் கண்ணதாசன்
மருத்துவபீடம்
யாழ் /பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மாணவர் ஆளுமை வளர்ச்சியில் நடனக்கல்வி 66

திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்
நடன ஆசிரியர்
யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

16. ඉගෙන්වීම් ක්‍රියාවලියේ නිසි ලෙස යෙදීම ගුරු වෘත්තියේ වගකීමයි. 68

K.B.S. කාන්ති මුණසිංහ
ත්‍රි/ ඉරක්කකණ්ඩි සිංහල විද්‍යාලය

17. ඉගෙනීමේ අගය 71

G.H.ඉමාෂි චතුරිකා
9 A

18. ගුරුවරයාගේ සේවය විය යුත්තේ යහපත් ශිෂ්‍යයෙකු ගොඩනැගීමයි. 72

A.L.රේණුකා දමයන්ති
ත්‍රි/ උසස් බාලිකා විද්‍යාලය ත්‍රිකුණාමලය

19. இன்றைய கல்விச் சமூகத்தில் அதிகரித்துவரும் மாணவ சமுதாய சீர்கேடுகளுக்கு தீர்வு உண்டா? 74

திரு. அழகுராஜா ஹரிகரன்
பிரதிஅதிபர்
தி/குளக்கோட்டன் த.வி
தம்பலகமம்.

20. மானிடவாழ்வின் பண்பாட்டுப் பதிவுகள் ஒருபார்வை 77

தமிழ்த்தென்றல் தம்பு சிவா

21. பாடசாலைகளுடாக சமதான சகவாழ்வைக் கட்டியெழுப்புவோம் 81

மௌலவி.M.Y. ஹதியத்துல்லாஹ் [S.L.P.S]
பிரதிஅதிபர்
தி/ அல் ஹம்றா மகாவித்தியாலயம்.
இறக்கக்கண்டி

22. பாடவிதான மாற்றங்களும் கலைத்திட்ட மாற்றங்களும் 85

திருமதி. உதயகுமாரி வரேந்திரராஜா
பிரதிஅதிபர்
தி/விபுலானந்தாகல்லூரி

23. பாடசாலை முகாமையும், எதிர்நோக்கும் சவால்களும் 88

திரு. க. சதாசிம்
அதிபர்
தி/கன்னியா அ.த.க.பாடசாலை
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. திறமை குறைவான மாணவர்களை திறமைப்படுத்துவதையே கல்வி விசேட நோக்கமாகக் கொள்ளவேண்டும் 92

சந்துரு மரியதாஸ்
உதவிவிரிவுரையாளர்
கல்வி,பிள்ளைநலத்துறை, கலை, கலாசாரப்பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

25. இன்றைய ஆசிரியரின் கல்விஅனுபவச் சிந்தனைகள் ஓர் கருத்துக் கண்ணோட்டம் 95

திரு. S. லக்குமிகாந்தன் SP.Trd (Scicence)
Dip in speEdu, P.D.C
தி/கும்புறுபிட்டிM.M.T.M.S
திருகோணமலை

26. இன்றையவாழ்க்கை 104

திரு. இ. குகநாதன்
(கிழக்குபல்கலைக்கழகம்)
முனைக்காடு–வடக்கு
கொக்கட்டிச்சோலை
மட்டக்களப்பு

27. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்டவடு 105

திரு. S. வரதசீலன்

28. அதிகாரத்துவத்திற்கு பிரியாவிடை 107

நா.நாகேந்திரகுமார்
முதுநிலை விரிவுரையாளர்
திருமலைவளாகம்
கிழக்குப் பல்கலைகழகம்

29. கல்வி பண்புத்தர மேம்பாட்டை ஏற்படுத்த வினைத்திறனான உள்ளகமேற்பார்வை 110

திரு. ஆ. செல்வநாயகம்
பிரதிகல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
திருகோணமலை

30. வாநிலாவே 120

31. உண்மைகளுக்கு உயிரளிப்போமா? 122

ஜெயவதனி மரியுதாஸ்
தி/புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி
திருகோணமலை

32. தற்கால மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் 124

திருமதி. சரோசா இராமநாதன்
(கலைமானிபட்டதாரி)
தி/கலைமகள் ம.வித்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



திருகோணமலை கல்வி வலயத்தினால் வருடந்தோறும் வெளியிடப்படுகின்ற "நித்திலம்" வழமைபோல் இவ் வருடமும் வெளிவருவதையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.

கிழக்கிலுள்ள கல்விசார் புலத்தில் மாணவர்கள் ஆசிரியர்கள் மேம்பாடு கருதி எடுத்துவரும் பல்வேறு நிகழ்வுத்திட்டங்களில் கலை இலக்கியம் சார் வெளியீடான நித்திலம் சஞ்சிகையை நான் ஆவணப்படுத்தலின் அரும் சொத்தாக மதிக்கின்றேன்.

கிழக்கிலுள்ள கல்வி வலயங்களில் வளமும் சாதனையும் புரியும் மாணவர் ஆசிரியர் குழாம் மற்றும் பாடசாலைத் தொகுதிகளைக் கொண்ட ஒரு பெறுமதிமிக்க வலயமாக திருகோணமலை வலயம் விளங்குகின்றது என்பதை அறிகின்ற போது அதையிட்டு மகிழ்வும், பெருமையும் அடைகின்றேன்.

இச்சஞ்சிகை பிரதேச கலை இலக்கியத்தை மாணவர்களுக்கு தெரியவைக்க உதவுவதுடன் ஆக்கவளமுடைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் உருவாக்க களம் அமைத்துக் கொடுக்கும் என நம்புவதோடு இச்சஞ்சிகையினை வருடந்தோறும் வெளியிடுவதனை பாராட்டதக்கதோர் முயற்சியாகக் காண்கின்றேன். கலை இலக்கியமே ஆக்க உணர்வுகளை மாணவர்களுக்கு ஊட்டுவனவாகவும் உருவாக்குவனவாகவும் உள்ளது. இம் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இம் முயற்சியில் ஈடுபட்டுவரும் வலயக் கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளார், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் என அனைவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். "நல்ல சமூகம் நல்ல மாணவ சமூகத்திடமிருந்தே உருவாகிறது."


- எனது வாழ்த்துக்கள் -

**Hon.Z.A.நசீர் அஹமட் (பொறியியலாளர்)**
**முதலமைச்சர்**
**கிழக்கு மாகாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சரின் வாழ்த்துச்செய்தி



திருக்கோணமலை கல்வி வலயத்தின் ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவினால் வருடாந்தம் வெளியிடப்படும் எமது பிரதேசத்திற்கேயுரித்தான "நித்திலம்" எனும் பெயரைத் தாங்கி வெளிவரும் சஞ்சிகைக்கு கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக்கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இப்பிரிவானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து புத்தாக்கத்துடன் இணைந்த பலசெயற்பாடுகளை மாணவர்களதும், ஆசிரியர்களதும் ஆக்கத்திறன் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தி வருகின்றது. மேலும் திருக்கோணமலை கல்வி வலயத்தின் மற்றுமொரு வெளியீடான "புதிய செல்நெறி" என்ற காலாண்டு செய்தித்தாள் பாடசாலை, கோட்டம், வலயம், மாகாணம், தேசியம் என்ற வகையில் வலயத்தின் சாதனை-களை வெளிக்கொண்டு வருவதனூடாக, சமூக பங்களிப்பிற்கும், சாதனை படைப்பவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது.

"நித்திலம்" சஞ்சிகையானது மாணவர்கள், ஆசிரியர்கள், பல்துறைசார்ந்த விற்பன்னர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்களால் எழுதப்பட்ட ஆக்கங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டு வெளிவருவது, வாசகர்களாக அமையும் ஒவ்வொருவரிடத்திலும் ஆக்கத்திறன் விருத்தியை ஏற்படுத்துமெனக் கருதுகின்றேன்.

2009ம் ஆண்டு வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.அ.விஜயானந்தமூர்த்தி அவர்களால் ஆரம்பித்து வைத்த பணியினை, தொடர்ந்து கடமையாற்றி வருகின்ற அனைத்து வலயக்கல்விப் பணிப்பாளர்களும் முன்னெடுத்து வருகின்றமை பாராட்டுக்குரிய ஒன்றாகும். அந்தவகையில் தற்போதைய வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.ந.விஜேந்திரன், அவர்ளதும், மலர்க் குழுவினரி-னதும் சிறப்பானதும், நீதியானதும், வெற்றிகரமானதுமான இப்பணி தொடர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கௌரவ சி.தண்டாயுதபாணி,**
**அமைச்சர்,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பக்கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு,**
**பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு,**
**கிழக்கு மாகாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# නැගෙනහිර පළාත් ප්‍රධාන ලේකම්තුමාගේ පණිවිඩය



ත්‍රිකූණාමලය කළාප අධ්‍යාපන කාර්යාලය මගින් වාර්ෂිකව එළිදක්වනු ලබන මෙම තින්කලම් සඟරාවට පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම සතුටකි, ත්‍රිකූණාමලය කළාප අධ්‍යාපන කාර්යාලය මගින් කළාපයේ ගුරුවරුන්ගේ ණී සිසු දරු දැරියන්ගේ හා නිලධාරීන්ගේ කලා කුසලතාවන් දියුණු කර ගැනීමටත් එම කුසලතාවන් සඳහා වටිනාකමක් ලබාදීමටත් මෙමගින් ගන්නා උත්සහය අගය කල යුතු වෙ

විශේෂයෙන් ම ලිවීම, කියවීම වැනි කටයුතුවලින් බැහැර වීමට ඇති සමාජ ප්‍රවණතාව වෙනස් කරමින් පොත පතට වර්තමාන පාසල් දරු දැරියන් නැඹුරු කරවීම ද ඉතා වැදගත් කාර්යයකී,

ත්‍රිකූණාමලය කළාප අධ්‍යාපන අධ්‍යක්ෂක ඇතුලු නිලධාරීන් සිය සම්ප්‍රදායික රාජකාරී සීමාවෙන් ඔබ්බට පිවිස මෙවැනි සමාජ සත්කාරවලින් තම සේවාලාභීන්ගේ රසවින්දනය උසස් කිරීමට ගන්නා මෙම උත්සහය සෙසු ආයතනවලට ද ආදර්ශයකිණී
මෙම සඟරාව වඩාත් එලදායී හා ජනප්‍රිය සඟරාවක් වේවායී ප්‍රාර්ථනා කරමිණී

**ඩී.එම්.එස්.අබයගුන වර්ධන**
**ප්‍රධාන ලේකම්**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திலம் நிகழ்காலக் கல்விச் செல்நெறியின் நிதர்சனமாக வாழ்த்துகின்றேன்.



திருகோணமலை வலயக்கல்வி அலுவலகம் வெளியிடும் "நித்திலம்" சிறப்பு மலருக்கு என் சிந்தனை சிதறல்களை பதிவதற்கு களம் அமைத்துத் தந்த நல் உள்ளங்களை நினைத்து மகிழ்வடைகின்றேன்.

சமூகத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைப்பாடுகள் கல்விச்சிந்தனையில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பது கசப்பான உண்மையாகும். தாக்கங்களின் விளைவுகள் எதிர்கால நம்பிக்கை வீழ்ச்சியையும் தளம்பல் நிலையையும் ஏற்படுத்துகின்றது. கல்வித்துறையில் புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்குவதற்கான புதிய சிந்தனை முகிழ்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. சமூக இயங்கியலை புரிந்து கொள்ள முடியாத அவலத்துக்குள் தள்ளப்படும் நிலை ஏற்படுகின்றது.

இந்நிலை தவறான அணுகுமுறைச் சிந்தனைகளுக்கும் கல்வித்தரவீழ்ச்சிக்கும் அடித்தளம் இட்டுக்கொடுக்கின்றது கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்காகவும் தரச்சிறப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காகவும் தூரநோக்குடன் சுட்டிப்பான செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். கிழக்கு மாகாணக்கல்வி திணைக்களத்தைச் சார்ந்த வலயக்கல்வி அலுவலகங்கள் இத்தகைய சுட்டிப்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதனைக் கண்டு மனம் மகிழ்வடைகின்றது. சிப்பிக்குள் முகிழ்ந்திருக்கும் முத்து நித்திலமாகும். நித்திலம் கொழிக்கும் கோணமாமலை என்பது பல்லவர் காலத்து பக்திநெறி கரைபுரண்டோடியபோது திருஞானசம்பத்தரால் விழிக்கப்பட்ட பிரதேச மண்வாசனை தாங்கிய பிரசவமாகும் "நித்திலம்" கல்வி ஊற்றின் கலங்கரை விளக்காகும் என்பது எனது திண்ணம்.

கடந்து சென்ற 05 வருடங்களாக தன்னை அகலமும் ஆழமும்படுத்தி அகல் விரிசிந்தனையுடன் "நித்திலம்" பிரசவமாகி இருப்பதுகண்டு மனம் நிறைவடைகின்றேன். திருகோணமலை கல்வி வலயத்தின் நிகழ்வுகளின் நிகழ்பதிவான நித்திலம் கல்விப்புலம் சார்ந்தோரின் ஆக்கங்களை தாங்கி வெளிவந்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியினை தருகின்றது. முற்போக்கான கல்விச் சிந்தனைகளுடன் திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தினை வடம்பிடித்து இழுத்துச்செல்லும் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.என்.விஜேந்திரன் அவர்களுக்கும் அவரோடு இணைந்து பணியாற்றும் கல்விச் சமூகத்தினர்க்கும் என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள். "நித்திலம்" நிகழ்கால கல்விச் செல்நெறியின் நிதர்சனமாக இருக்கட்டும் என வாழ்த்துவதில் வகையில்லா மகிழ்வடைகின்றேன்.

**எம்.ரி.எ.நிஸாம்,**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்,**
**மாகாணக்கல்வித் திணைக்களம்,**
**திருக்கோணமலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கல்வியின் மகத்துவம் எதிர்கால சந்ததியினரை தோன்றும் புதிய உலகிற்கு முகம் கொடுப்பவர்களாக மாற்றியமைத்து அவர்களையும் இயல்பான வாழ்வியலில் ஒன்றிணைத்துக்கொண்டு சமூகப் பொறுப்புடனும், ஒழுக்க நெறிமுறைகளுடனும், ஆன்மீக சிந்தனையுடனும் செயற்படுகின்ற சமூகமாக திகழ அனைவரும் ஒரு குழுவாக செயற்பட்டு வெற்றி காண வேண்டும் என்பதேயாகும்.

பாடசாலையானது புனிதமான இடமாக அனைவராலும் மதிக்கப்பட வேண்டும். அங்கே எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியிலும் ஈடுபடுகின்ற ஒவ்வொரு உறுப்பினரும் புனிதராக செயற்பட வேண்டும். கல்விபெற வருகின்ற ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களது நலனிலே ஆசிரியர்கள் அக்கறை கொண்டவர்கள் என்ற உணர்வு உருவாகும் விதத்தில் அவர்களுக்கிடையிலே உறவு அமைந்து காணப்படல் வேண்டும். அத்தகைய உறவுப்பாலத்தை உருவாக்கும் வகையிலே தான் "நித்திலம்" சஞ்சிகை தனது கருமத்தை ஆக்கி வருகின்றது. பல்வேறு கருத்துக்களையும் அனுபவங்களையும் காட்சி நிலையிலும் வெளிப்படுகின்ற பண்பு மாறாமல் இருப்பதும் பாராட்டுக்குரியது.

"நித்திலம்"இன மத வேறுபாடின்றி அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செல்லுகின்ற பண்பினையும் தன்னகத்தே கொண்டமைவது மட்டுமன்றி அதன் வெளியீட்டு வைபவத்தின் போதும் சமாதான கலாச்சார நிகழ்வுடன் தவழுகின்றமை வருடாவருடம் இடம் பெற்று வருகின்றது.

பல்வேறு கலாச்சார நிகழ்வுகளை வழங்கிய பாடசாலை மாணவர்களுக்கும் நெறியாள்கை செய்த ஆசிரியர்களுக்கும், பாடசாலையின் அதிபர்களுக்கும் இந்நிகழ்வை சிறப்பிக்க வருகைதந்த அதிதிகளுக்கும் எமது வலயத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். எமது நித்திலத்தின் பிறப்பிற்கு ஆக்கங்களையும் பல்வேறு ஊக்கங்களையும் தந்துதவுகின்ற அனைத்து பெரிய நலஉள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நடேசலிங்கம் விஜேந்திரன்,**
**வலயக்கல்விப்பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்.**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் இதயத்திலிருந்து...



"நித்திலம்" திருமலை வலயத்தின் பொக்கிஷம். கடந்துவந்த பல்வேறு வெற்றிப்படிகளின் மேலாக இன்று இவ்நித்திலம் தங்கள் கைகளில் தவழுகின்றது. இன்றைய நவீன யுகத்தின் விரைவு வாழ்நிலை மனிதனின் சிந்தனை ஆற்றலை மழுங்கடித்திருக்கின்ற தெனவே தோன்றுகின்றது. இந்நிலையில் கல்வியின் துறவுகோலான படைப்புக்களும் ஆக்கங்களும் வெளியீடு செய்யப்படுவதற்கு வழியமைத்துக் கொடுக்க வேண்டியது எமது கடமையாகும்.

கல்வி என்பது மாற்றமுறும் சமுகத்தின் தேவைகளை நிறைவுசெய்வதனை பொறுத்தே முக்கியம் பெறுகின்றது. அந்தவகையில் கல்வி நடவடிக்கைகளின் தேவைகளை நிறைவேற்றுகின்றபோது எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்தல், சந்தேகங்களுக்கு தீர்வளித்தல் அறிவுப்பசியை போக்குதல் என்ற ரீதியில் கல்விசமுகம் பல்வேறு எதிர்பார்க்கைகளை கொண்டுள்ளது. இத் தேவைகளை நிறைவேற்றும் வடிகாலாக CSDI (ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவு) பிரிவினரால் இவ் நித்திலம் இதழ் வெளியிடப்படுகின்றது.

அனுபவப்புலத்தில் தாம் கண்ட பல்வேறு சித்தனைகளையும் வெளிப்பாடுகளையும் ஆக்கங்களையும், கல்விச்சமூகத்தினர்க்கு இந்நித்திலத்தின் வாயிலாக பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நித்திலம் பிறக்க வழியமைத்து தந்ததோடு ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கி வரும் வலயக்கல்விப்பணிப்பாளர் மதிப்பிற்குரிய திரு.என் விஜேந்திரன் அவர்களுடன், வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அனைவரும் இந்நித்திலம் உருவாக்கத்தில் பல்வேறு உதவிகளை செய்து தந்துள்ளனர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். இந் நித்திலம் சிறக்க வாழ்த்துச்செய்திகளையும் ஆசிச்செய்திகளையும் விளம்பர உதவிகளையும் மற்றும் உபசரணை உதவிகளையும் மனமுவந்து தந்துதவிய அனைவருக்கும் நன்றிகள். என்னோடு தோள் கொடுத்துதுதவிய உதவிப்பதிப்பாசிரியர் திரு.கே.செல்வநாயகம் (கோட்டக்கல்விப்பணிப்பாளர், குச்சவெளிகல்விகோட்டம்) மற்றும் இவ் இதழினை அச்சிட்டு வெளியிட உதவிய ஆசிரியர் திரு. D.பகீதரன் (தி/ இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி) மற்றும் **Ben Vision Printers,** இல: 335A, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை. நிறுவனத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**இ.நிமலரஞ்சன்,**
**ஆசிரியர் (நித்திலம் இதழ்)**
**உதவிக்கல்விப்பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்.**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සැමට ඔවදනක්



නභජේ පාපකේ මිත්තේ

නභජේ පුරිසාධමේ

භජේථ මිත්තේ කල්‍යාණේ

භජේථ පුරිසුත්තමේ

"පව්ටු මිතුරන් ඇසුරු නොකරන්න.

සැහැසි මිතුරන් ඇසුරු නොකරන්න.

කළණ මිතුරන් ඇසුරු කරන්න.

උත්තම පුරුෂයන් ඇසුරු කරන්න"

ගොහොරු මඩෙහි දුටුවන්ගේ සිත් ප්‍රබෝධමත් කරන පරිසරය සුවදවත් කරන පුෂ්පයන් විකසිත වේ. මෙම සමාජය ගොහොරු මඩකට සමාන කළ හැකිය. හොඳ - නරක, යහපත් - අයහපත්, දැහැමි - අදැහැමි, සරු - නිසරු, ධාර්මික - අධාර්මික, ධර්මිෂ්ට - අධර්මිෂ්ට, සාධු - අසාධු ආදී වශයෙන් සමාජයේ ජීවත්වන සියලුදෙනාම කොටස් දෙකකට වෙන් කළ හැකිය. මෙවැනි තත්ත්වයට පත්වීමට ප්‍රධානතම හේතුව සමාජ ඇසුර දැක්විය හැකිය. යහපත් අයෙකු කිරීමට ඉතා අපහසු වන අතර අයහපත් අයෙකු කිරීමට ඉතා පහසුය.සම්මා සම්බුදු රජාණන් වහන්සේගේ දේශනාව අනුව උත්පත්තියෙන් පහත් පුද්ගලයෙකු හෝ උසස් පුද්ගලයෙකු නොවන බවත් තමන් කරන ක්‍රියාව අනුව උසස් හෝ පහත් පුද්ගලයෙකු වන බවත් දේශනා කරන ලදි. ආත්මාර්ථය පදනම් කරනොගත් පරහිතකාමී අයෙකු වන ලෙස ශිෂ්‍ය ප්‍රජාව සහ ගුරු ප්‍රජාව ඇතුළු සියලුදෙනාගෙන් ඉල්ලා සිටිමි.

නිත්තිලම් සගරාව තුළින් ලෝවට යහපතක් වේවා!

*නැගෙනහිර පළාතේ ප්‍රධාන සංඝනායක, සිරි ආනන්ද වංශාවතංස සද්ධර්ම කීර්ති ශ්‍රී, ත්‍රිකුණාමලය කලාප අධ්‍යාපන කාර්යාලයේ බුද්ධ ධර්මය ගුරු උපදේශක, ශාස්ත්‍රපති අතිපූජ්‍ය දෙවිනුවර චන්දිම නායක මාහිමිපාණෝ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி......



கலைத்தாயின் துணையுடன் அன்னை ஸ்ரீ பத்திரகாளிஅம்பாளின் அருள்கொண்டு, திருகோணமலை கல்விவலயத்தின் ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவு(CSDI) வருடாவருடம் வெளியிட்டு வருகின்ற "நித்திலம்"சஞ்சிகைக்கு ஆசிவழங்குவதில் நிறைவுகொள்கின்றேன். மாணவர்களின் ஆக்கத்திறன் செயற்பாடுகளை சகலரும் அறிந்துகொள்ளக் கூடியதாக தகவல்களையும் செய்திகளையும் ஆவணப்படுத்தும் அதிஉன்னத செயற்பாட்டினை செய்வதன் மூலம் திருகோணமலை கல்விவலயமானது ஏனைய கல்விவலயங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றது என்பதை அறிந்து பெருமையடைகின்றேன்.

இச்சிறந்த பணியினை செயற்படுத்துகின்ற திருகோணமலை வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.என்.விஜேந்திரன் அவர்களுக்கும் மற்றும் உத்தியோகத்தர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் "நித்திலம்"சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினர் அனைவருக்கும் பணிசிறக்க எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருவருள் கடாட்சம் கிட்டவேண்டுமென இறைவனை வேண்டி ஆசிவழங்கி அமைகின்றேன்.


வேதாகமமாமணிபிரம்மஸ்ரீ

**சோ.இரவிச்சந்திரக்குருக்கள் (JP)**

ஆலயபிரதமகுருவும் ஆதினகர்த்தாவும்,
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளிஅம்பாள் தேவஸ்தானம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி



இறைநாமத்தோடுதம் கல்வியை ஆரம்பிக்குமாறு ஏவிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன்- அல்ஹம்துலில்லாஹ். மூவின மாணவர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகளை ஒரேகுடையின் கீழ் வைத்து கல்விப்பணியாற்றும் திருகோணமலை கல்விவலயத்தினால் வருடாவருடம் வெளியிடப்படும் "நித்திலம்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்திவழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்.

அறிவைத்தேடுவது அனைவர் மீதுமகடமையாகும் எனஅனைத்து சமயங்களும் அறிவுரை கூறுகிறது. அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாகுவார்களா? என அல்லாஹுத்தஆலா அல்-குர்ஆனில் கேள்வி எழுப்பி, அறிவைத்தேடுவதற்கு ஆசையூட்டுகிறான். நம்பிக்கை கொண்டு,அறிவு கொடுக்கப்பட்டோரை அல்லாஹ் பலபடித்தரங்கள் உயர்த்துகிறான் என அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது.

ஒருமனிதன் தான் பெறும் அறிவு, ஆன்மீகத்துடன் கூடியஅறிவாக அமையும்போதுதான் ஈருலகிலும் பல படித்தரங்கள் பெற்று உயரமுடியும். இவ்வுலகில் மாத்திரம் கிடைக்கும் பதவிகளும் அந்தஸ்த்துக்களும் அழிந்துபோகக் கூடியவை. இவ்வுலகில் யாரை ஏமாற்றியும் பதவிகளைப் பெறலாம். ஆனால் மறுஉலகில் இறைவனால் தரப்படும் பதவிஉயர்வே நிரந்தரமானதும், சொந்தமானதுமாகும். அத்தகைய பதவிகளை அடையும் நோக்கோடு மாணவர்களும், ஆசிரியர்களும் தமதுகற்றல், கற்பித்தல் பணிகளை மேற்கொள்வது அவசியமாகும்.

தம்மை அர்ப்பணித்து, அறிவுப்பணிபுரியும் ஆசான்களின் ஆக்கங்களைசு மந்துவரும "நித்திலம்,"கல்விச் சமூகத்தில் ஆன்மீகத்துடன் கூடிய மாற்றத்திற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கின்றேன். அதேநேரம் சகல சமயங்களும் வேண்டிநிற்கும் சகவாழ்வு மூவின மாணவர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் ஊடாக எமது கல்விவலயத்தில் வளர வாழ்த்துகிறேன். நித்திலத்திற்காக உழைக்கும் அனைவருக்கும். இறையருள் கிடைக்குமாக!

மௌலவி,**M.Y.**ஹுதியத்துல்லாஹ்**(SLPS)**
(தேசியநேர்மைத் திறன் விருதுவெற்றியாளர்- 2010)
பிரதிஅதிபர்
தி/தி/அல்-ஹம்ராமகாவித்தியாலயம்
இறக்கக்கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைஆயரின் ஆசிச் செய்தி



திருகோணமலை வலயக்கல்விப் பணிமனையினால் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற "நித்திலம்" சஞ்சிகையின் 2014ம் ஆண்டுப்பிரதிக்கு ஆசிச் செய்திவழங்குவதையிட்டு நான் பெருமைப்படுவதுடன் அவ்வாய்ப்பை எனக்களித்தவர்களுக்கு முதற்கண் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலத்திரனியல் ஊடகவளர்ச்சியின்பால் புத்தகவாசிப்பென்பதுஅருகிவரும் நிலையில் வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாகவும் இந்த ஆண்டில் வலயக்கல்வி அலுவலகத்தின் அடைவுகளை வெளிக்காட்டும் முகமாகவும் நித்திலம் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.

இந்தவருடத்தில் திருகோணமலை வலயக் கல்வி அலுவலகம் பலசிறந்த பெறுபேறுகளைப் பெற்று தனது அடைவுமட்டத்தினை மிகஉயர்ந்த மட்டத்தில் பேறுவதைக் காண்கின்றேன். கிழக்குமாகாண மட்டத்தில் நடைபெற்ற உற்பத்தித்திறன் போட்டியில் மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளதுடன் இன மத ஒருங்கிணைப்பு வேலைத்திட்டத்தின் முன்னோடியாக திருகோணமலை வலயக்கல்வி அலுவலம் விளங்குகின்றது. அத்துடன் கல்விப் பொதுசாதாரணதரப் பத்திர மற்றும் உயர்தரப்பத்திரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடைவுமட்டத்தில் தனக்கென ஒருவளர்ச்சிப் போக்கை பதிவுசெய்துள்ளது.

திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தின் "ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவு" இனால் முன்னெடுக்கப்படும் ஆவணப்படுத்தல் வேலைத்திட்டம் ஒருகலைப் பாரம்பரியத்தைப் பதிவுசெய்வதாக அமைவதை இங்குநான் காண்கின்றேன். இச் செயற்பாடுகள் பல தலைமுறைகளுக்கான தகவல்களை பதிப்பாகவிட்டுச் செல்லும் பணிகளில் ஈடுபடும் தலையாய பணியாகும்.

இதற்கு முன்னின்று உழைத்த திருமலை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.என்.விஜேந்திரன் அவர்களையும் CSDIபிரிவுக்கு பொறுப்பாக இருந்து இச் செயற்திட்டத்தை நெறிப்படுத்திய பதிப்பாசிரியர் திரு.இ.நிமலரஞ்சன் அவர்களையும் நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

வருடாந்தம் வெளிவரும் நித்திலம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே எமதுவிருப்பம். அதற்காக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து அவரது ஆசிகளை வழங்குவதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

நன்றி.

**அதிவந்.கலாநிதியோசப் கிங்ஸ்லிசுவாம்பிள்ளை.**
திருமலை மறைமாவட்ட ஆயர்.

15.06.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Zonal Education Office ,Trincomalee.



## Our Zonal Director of Education

## Mr.N.Vijendren.

நித்திலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கல்வி முன்னெடுப்பில் படநூல்கள்

பேராசிரியர் - சபா.ஜெயராசா

வார்த்தைகள் அற்ற தொடர்பாடல் கல்வியின் ஒரு முக்கிய பரிமாணம் புதிய உலகச்சூழலில் காண்பிய (Visual) பண்பாடும் படிமங்களை அடிப்படையாகக் கொண்ட பண்பாடும் விரைந்து வளர்ச்சி கொளத் தொடங்கியுள்ளன. அசையும் நிலையிலோ அசையா நிலையிலோ படங்கள் மற்றும் படிமங்கள் வழியாகக் கற்பித்தலும் மகிழ்வியம் (Entertainment) செய்தலும் எண்ணிமத் தொழில்நுட்பத்துடன் வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளன.

ஜோன் டிபிஸ் என்பவர் 1960ஆம் ஆண்டில் 'காண்பிய எழுத்தறிவு' என்ற கருத்தாக்கத்தை முன்மொழிந்தார். படங்களையும் படிமங்களையும் வாசிக்கும் திறனை அது குறிப்பிடுகின்றது. கண் வழியாகப் பார்த்தலிலும் (Looking) கண் வழியாக வாசித்தல் (Seeing) வேறுபட்டது. வாய்மொழியைக் காட்டிலும் படங்களின் மொழியை வாசித்தல் காண்பியப் பண்பாட்டில் மேலோங்கி நிற்கின்றது. படங்களின் வாயிலாகச் சிந்தித்தல், வரைபுகளின் வாயிலாகச் சிந்தித்தல் ஆகியவை அங்கே வளர்ச்சி பெற்றிருக்கும்.

காண்பியங்களை ஆக்கியவரும் அவற்றைப் பார்ப்போரும் காண்பியத் தொடர்பாடலில் சந்தித்துக் கொள்கின்றனர். அந்நிலையில் வர்த்தகக் காண்பியங்களும் கலைக் காண்பியங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளும் சுட்டிக் காட்டப்படுகின்றன. வர்த்தகக் காண்பியங்கள் நுகர்வோரின் மனங்களையும் தேவைகளையும் சந்திக்கின்றன. அதே வேளை கலைக் காண்பியங்கள் கலைஞரின் மனங்களையும் தேவைகளையும் சந்திக்க வைக்கின்றன. சில சமயங்களில் மேற்கூறிய இரண்டையும் எல்லைப்படுத்தும் கோடுகள் தகர்ந்து விடுகின்றன.

சிறுவர்க்கான படக்கதை நூல்களிலும், பாடநூல்களிலும் படிமங்களும் சொற்களும் ஊடுவிளையாட்டை மேற்கொள்கின்றன. அவற்றுற்கிடையே ஊடாட்டம் நிகழ்கின்றது. அந்த ஊடாட்டம் கற்றற் செயற்பாட்டை வினைத்திறன்படுத்துகின்றது. கலைச் செயற்பாட்டையும் வளம்படுத்துகின்றது. எழுத்தும் படிமங்களும் ஒன்றுக்கொன்று அனுசரணையாகச் செயற்படுகின்றன. அந்த இணைப்பு கற்றல் அனுபவத்தில் எழுபாய்ச்சலை ஏற்படுத்துகின்றது.

நூல்களில் இடம்பெறும் படம் கலை என்ற அடையாளத்துக்கு உட்படுத்தப்படுகின்றது. மிக அண்மைக்காலத்தில் தான் இந்த அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. அவை அழகியல் திறனாய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன

சிறுவர் நூலாக்கங்களையும் பாடநூல்களையும் அடியொற்றி நூல்களுக்குரிய படங்கள் என்ற கலை வளர்ச்சியடையத் தொடங்கியது. சஞ்சிகைகளின் வளர்ச்சியோடு எழுத்துக்களோடு இணைந்த படங்கள் என்ற கலை வளர்ச்சி ஏற்படத் தொடங்கியது. வாசகர் கவனத்தை ஈர்த்தல் வாசிப்பைத் தூண்டுதல் விற்பனையை அதிகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் இலக்குகள் அதில் உள்ளடங்கியிருந்தன. சஞ்சிகைகளின் விற்பனையை அதிகரிப்பதற்கு பாலியல் ஈர்ப்பைக் கொண்ட படங்களை உள்ளடக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

சிறுவர் இலக்கியங்களைப் பொறுத்தவரை 'படநூல்கள்' (PICTURE BOOKS) என்ற தனித்துவமான வடிவம் வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. அச்சுத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியோடு படநூல்களின் அமைப்பிலும், முன்னேற்றங்கள் ஏற்படத் தொடங்கின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்படத் தொடங்கிய வண்ண அச்சுமுறை படநூலாக்கத்தில் மேலும் பாய்ச்சலை ஏற்படுத்தியது. மரக்கட்டைகளில் இருந்து வண்ணப்படங்களை அச்சிடும் முறையை 1830ஆம் ஆண்டில் ஜோர்ச் பக்ஸரும் சார்ல்ஸ் நைட்டும் அறிமுகம் செய்தனர். அது 'பக்ஸர் செயல்முறை' எனப்பட்டது. அதனைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அவ்வாறு நிகழ்ந்த அச்சுமுறை வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஓவிய மரபுகளிலும் முன்னேற்றங்கள் நிகழத் தொடங்கின.

அச்சுக்கலை வளர்ச்சியோடு படநூல்கள் 'ஓவியர்களின் நூல்கள்' என அழைக்கப்படலாயின. அந்த அளவுக்கு நூலில் உள்ள எழுத்தாக்கங்களைக் காட்டிலும் ஓவிய ஆக்கங்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. 'படநூல் ஓவியர்' என்ற சிறப்புத் துறையினர் வளர்ச்சியடைந்தனர். அவர்களைப் பயிற்றுவிக்கும் கல்வி ஏற்பாடுகளும் இடம் பெற்றன.

எழுத்தறிவு வளர்ச்சியோடு சிறுவர் நூற்பெருக்கம் நிகழ்ந்தது. சந்தை வாய்ப்புக்களும் அதிகரித்தன. ஓவியர்கள் பலர் இத்துறையால் ஈர்க்கப்பட்டனர்.

ஆங்கில மொழி வழியான படநூலாக்கம் உலகம் முழுவதும் விரைந்து பரவலுற்றது. டிஸ்னியின் சிந்தனைகளும் சிறுவர் படநூல்களிலே செல்வாக்குகளை ஏற்படுத்தின. எண்ணிமத் தொழில்நுட்பமும் ஊட்டங்களைத் தருகின்றன.

தமிழ்ச் சூழலில் சிறுவர்க்கான படநூலாக்கங்கள் தாமதித்தே நிகழ்ந்தன. இருபதாம் நூற்றாண்டின் கல்வி விரிவாக்கமும் பரவலும் சிறுவர் படநூல்களின் தேவையை முன்னெடுத்தன.

தமிழில் சிறுவர்க்கான பாடநூலாக்கம் ஆறுமுக நாவலரால் மேற்கொள்ளப்பட்டது. அவர் காலத்தில் இடம்பெற்ற அச்சுமுறையைப் பயன்படுத்தி பால பாடத்தை உருவாக்கினார். ஆயினும் சிறுவர் இலக்கியம், சிறுவர் நூலாக்கம் முதலியவை பின்னர் ஏற்பட்ட வளர்ச்சிகளாயின.

ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் முறைமையில் உளவியலும், கற்பித்தலியலும் இணைக்கப்பட்ட செயற்பாடுகளும், சிறுவர் கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றங்களும், சிறுவர் இலக்கியப் பரப்பில் ஏற்றங்களை ஏற்படுத்தின.

உலக நிலையில் சிறுவருக்குரிய விளையாட்டுப் பொம்மைகள் உருவாக்கத்தில் நிகழ்ந்த முன்னேற்றங்களும் உளவியல் மற்றும் அழகியல் பெறுமானங்களை அடியொற்றிய விளையாட்டுப் பொம்மைகளின் தயாரிப்பு நிலையில் ஏற்பட்ட வளர்ச்சிகளும் சிறுவர்க்கான நூல்களைத் தயாரிக்கும் செயற்பாடுகளிலே செல்வாக்குகளை ஏற்படுத்தின.

உலகச் சூழலில் சிறுவர்க்கான படநூல்களின் தந்தையாக றன்டோல் கல்டிக் கொட் விளங்குகின்றார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவர் சிறுவர் படநூல் தயாரிப்புக்களை மேற்கொண்டார். அக்காலத்தில் எழுத்துக்களை வாசிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முக்கியத்துவம் படங்களை வாசிப்பதற்கு மேற்கொள்ளப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'படங்களினூடாகச் சிந்தித்தல்' என்ற செயற்பாடு உளவியலிலும் பள்ளிக்கூடக் கலைத்திட்டத்திலும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. இன்றைய நவீன கல்வியில் அது மேலும் வலியுறுத்தப்படுகின்றது. படங்களைப் பார்த்தல் என்பது செயல்முனைப்புக் குன்றிய (Passive) நடவடிக்கை என்பது முதலில் நிராகரிக்கப்படுகின்றது. படங்கள் உடல் உள மற்றும் மனவெழுச்சிச் செயற்பாடுகளைத் தூண்ட வல்லவை என்ற கருத்தியலை அடியொற்றி பட நூல்கள் ஆக்கப்படுகின்றன.

சிறுவர்க்கான நவீன கற்பித்தல், சிறுவர் திரைப்படங்களின் ஆக்கம், பொழுது போக்குத் திரைப்படங்களின் ஆக்கம் முதலியனவும் படங்களை வரைவதிலே மாற்றுப் புலக்காட்சிகளையும் செல்வாக்குகளையும் ஏற்படுத்தின. ஓவியர்கள் இத்துறையில் பரிசோதனை கொள்ளவும் முயன்றனர். மெடலினா மொனிஸ் என்ற பெண் ஓவியர் தமது படங்களில் உருவாக்கப்பட்ட வெள்ளை இடைவெளிகளினூடாக அளவுத்திட்டங்கள் பற்றிய உற்றுணர்வையும் அழுத்த விசைகளையும் வெளிப்படுத்த முயன்றார். அன்ரு கோர்டன் என்ற ஓவியர் குறிப்பிட்ட புலத்தின் காலநிலை இயல்பையும் அப்பிரதேசத்தில் எழும் ஒலிகளையும், மணத்தையும் தமது ஓவியங்கள் வாயிலாகக் காட்ட முயன்றார்.

இலங்கையின் தமிழ்ச் சூழலில் இவ்வாறான பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டவர்களுள், ரமணி, ஆசை இராசையா, கைலாசநாதன், கனிவுமதி முதலியோர் முக்கியமானவர்கள். காண்பி அழகியல் உருவாக்கத்தில் அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய தனித்துவங்களைப் பதிவு செய்துள்ளனர். ரமணியின் நளினமான கோடுகள் அவருக்கே உரிய தனித்துவமானவை. இராசையா வண்ணக்கலவைகளால் உணர்ச்சிகளை மிதக்க விடுபவர். கைலாசநாதன் முப்பரிமாண அசைவுகளைத் தமது ஓவியங்களிலே இயக்குபவர்.

சிறுவர் படநூல்களில் எழுத்து வடிவமும் படவடிவமும் இடைவினை கொண்டு 'நாடகத்தை' உருவாக்குகின்றன. சொற்கள் எவற்றைச் சொல்கின்றன என்பதும் படங்கள் எவற்றைக் கையளிக்கின்றன என்பதும் ஒருவித இழுவிசையையும் அமுக்கவிசையையும் வாசிப்போர் உள்ளங்களிலே ஏற்படுத்துகின்றன. அந்த விசைகளினூடே வாசிப்பு உள்ளம் நகர்ந்து செல்லும்.

படத்தையும் எழுத்தையும் ஒன்றிணைத்து வாசிக்கையில் அமுக்கவிசை தொழிற்படுகின்றது. வேறு வேறுபடுத்தி நோக்குகையில் இழுவிசை தொழிற்படுகின்றது.

தமிழில் சிறுவர் படநூல்களைப் பொறுத்தவரை கனிவுமதியின் ஓவியங்கள் தனித்துவமானவை, சிறுவரின் கட்புல நுட்பங்களைத் தூண்டும் வகையில் அவரது ஓவியங்கள் அமைந்துள்ளன. அவர் பயன்படுத்தும் சிறிய கோடுகள் கட்புல நுட்பத்தைப் பயன்படுத்துதலை முன்னெடுக்கின்றன. சிறுவர் ஓவியங்களுக்குரிய சமநிலையை உருவாக்குதலிலும் அவரின் பங்களிப்பு முக்கியமானது. கருத்துக்கும் காட்சிக்குமிடையே சமநிலை பராமரிக்கப்படுகின்றது.

படநூல்களுக்குரிய துலங்கல் பின்வரும் நிலைகளிலே வெளிப்படுகின்றது.

- சொற்களுக்கும் படங்களுக்குமிடையேயுள்ள இடைவினைகளை வாசித்தல், வாசிப்போரின் மனக்கோலங்களுக்கு ஏற்றவாறு சொற்களையும், படங்களையும் அவற்றுக்கிடையேயுள்ள இடைவினைகளையும் வாசித்தல் வேறுபடும். ஆய்வு நிலையில் படமும் ஒரு நூலியம் (Text) தான். வாசிப்பு நிலையில் அதுவும் கட்டுமானக்குலைப்புக்கு (Deconstruction) அல்லது தகர்ப்புக்கு உரியது.
- படங்களில் இடம்பெறும் வண்ணம் வடிவம், செம்பரவல், தொனிப்பு, முறிப்பு, தாவல் முதலியவற்றைப் பகுத்து நோக்கலும், கதை வீச்சுடன் தொடர்புபடுத்தியோ தனித்தோ நோக்குதலும் முன்னெடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢ படங்களில் இடம்பெறும் மனிதரின் உடல் மொழியையும் விலங்குகள் மற்றும் பறவைகளின் உடல்மொழியையும் வாசித்தல். அத்துடன் உடல் மொழியில் உள்ளடங்கி நிற்கும் மனவெழுச்சிகளைப் புரிந்து கொள்ளல்
- ➢ எழுத்திலும் கதையிலும் கூறப்பட்டவற்றுக்கு மேலாகச் சிந்தித்தல். அத்தகைய சிந்தனைக்கு எழுத்தும் படமுமே தளம் அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.
- ➢ படநூல்கள் எழுப்பும் அறைகூவல்களுக்கு முகம் கொடுத்தல், வாசிப்போர் சுவைப்போராக மட்டும் இருக்காது எதிர்வினை கொண்டு துலங்குவோராய் இருத்தலும் முக்கியமானது.

'சிறுவர்கள் எவற்றையும் கோடற்குலைப்பு (Decodiing) செய்வார்கள்' என மெய்யியலாளர் சார்த்தர் ஒரு சமயம் குறிப்பிட்டார். அந்நிலையிலே படநூல்கள் அவர்களுக்கு அறைகூவல் விடுக்கும் வகையில் உருவாக்கப்படல் வேண்டும். பேசியும் எழுதியும் அலுத்துப் போன தேய்வியம்பலை (CLICHÉ) கைவிட வேண்டும்.

வளர்ந்தோரும் படநூல்களைப் பெருமளவில் வாசிக்கின்றனர் என்ற தகவல் இத்துறையில் மேலும் கவனக் குவிப்பை ஏற்படுத்தியுள்ளது. வாசகர் வட்ட விரிவும், விற்பனைப் பெருக்கும் ஒரு வகையில் அவற்றின் தரமேம்பாடு தொடர்பான சிந்தனையைத் தூண்டியுள்ளன.

படநூல்களின் பிறிதொரு வளர்ச்சி புனைகதை சாராத ஆக்கங்களை முன்னெடுத்தலாகும். புனைகதை சாரா எழுத்தாக்கங்களை வாசிக்கும் இரசனை விரைந்த வளர்ச்சியைப் பெற்று வருகின்றது. சிறாரும் அத்தகைய ஆக்கங்கள் மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றனர். அவ்வாறான வளர்ச்சியில் பட ஆக்கங்களும் சிறப்பான பங்கை வகிக்கத் தொடங்கியுள்ளன.

சமூக முரண்பாடுகளும், மேலாதிக்கமும் ஒடுக்கு முறைகளும், யுத்தமும் படநூல்களின் உள்ளடக்கமாகி வருதல் குறிப்பிடத்தக்க பதிவாகும். அந்த வகையில் ஆர்மின் கிரெண்டரின் ஆக்கம் உலகப் புகழ் பெற்றது.

கடதாசித் தள வாசிப்புடன் திரைவாசிப்பும் இன்று வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. அந்த இருநிலைகளிலும் படநூல்களின் வாசிப்புத் தொடர்ந்து எழுகோலம் கொண்டு வருகின்றது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சி வாசித்தலை மேலும் உற்சாகப்படுத்தத் தொடங்கியுள்ளது. இலத்திரனியற் படநூல்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன.


வளர்ச்சியடைந்த நாடுகளில் முன்னேற்றம் பெற்ற வகையில் நிகழ்ந்து வந்த படநூலாக்கம் இப்போது வளர்முக நாடுகளிலும் தர முன்னேற்றத்துடன் இடம்பெறத் தொடங்கியுள்ளது. சிற்றளவு மற்றும் பெரிய அளவு நிலைகளில் இலாபமீட்டும் தொழிலாக படநூலாக்கம் வளர்ச்சியடைந்து வருகின்றது.

பாடப்புத்தகங்களில் வண்ணப்படங்களை இணைத்தல் இந்நாட்டின் கலைத்திட்டச் செயல்முறையில் நிகழ்ந்த ஒரு முக்கியமான வளர்ச்சி. கருமை – வெள்ளைப் படங்களைக் காட்டிலும் வண்ணப்படங்கள் மாணவரிடத்துக் கூடிய இடை வினையைப் புரியக்கூடியவை. சூழல் வண்ணங்களாலானது. வண்ணங்களின் செறிவு வேறுபாடுகளால் பொருள் உணர்த்தப்படுகின்றது. கற்றல் என்பது பொருள் கோடலையும் கடந்த செயற்பாடு. அது உணர்வுகளுடனும், கற்பனைகளுடனும், கருத்துக்களை எறிவு செய்து பார்த்தலுடனும் தொடர்பு கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலமூளை இடமூளை ஆகியவற்றின் செயற்பாடுகள் நவீன உளவியலிலே விரிவாக ஆராயப்படுகின்றன. இடமூளை தருக்க நெறிக்கற்றலுடனும் வலமூளை உணர்ச்சி மற்றும் அழகு நெறிக்கற்றலுடனும் இணைந்ததாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. படங்களோடு இணைந்த நூல்களும் கற்பித்தல் முன்னெடுப்புக்களும், நிறைவானதும் சமநிலையானதும் ஊக்கல் விளைவிப்பதுமான கற்றலுக்கு இட்டுச் செல்லும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர்மனப்பாங்கிற்கான ஆலோசனையும் வழிகாட்டலும்

திருமதி.கே.இராதகிருஸ்ணன்,
உதவி அதிபர்,
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி

'முடியும் என்பது மூலதனம்

முடியாது என்பது மூடத்தனம்' என்பது ஆன்றோர் மொழிந்த வாக்கு மனிதவாழ்வில் முடியும் - முடியாது என்ற இரு துருவ வார்த்தைகளை அன்றாடம் கேட்டுப் பழகியுள்ளோம். இவ்விரு வார்த்தைகளிலும் அதிக அர்த்தம் உண்டு என்பதை நாம் இங்கு மனங் கொள்ளவுள்ளோம். 'முடியும்' என்ற சாத்தியப்பாடான வார்த்தையை மட்டும் வைத்துக் கொண்டு ஒருவர் நேர்மனப்பாங்குடையவர் அல்லது நேர்மையான நடத்தைக் கோலம் கொண்டவர் என வரையறுத்துவிடமுடியாது. அதே போன்று 'முடியாது' என்ற எதிர்மறையான வார்த்தையை உதிர்க்கும் ஒருவரை எதிர்மறையான மனப்பாங்குடையவர் என வரைவிலக்கணப்படுத்தி விடமுடியாது. நேர்முகமான சிந்தனை நேர்முகமான மன உணர்வு நேரிய நடத்தைக் கோலம் என்பனவே ஒருவரது நேர்மனப்பாங்கு மாற்றத்துக்கு வழிகோலும். இத்தகையவர்கள் வினைத்திறனுடன் கருமம் ஆற்றும் வேளைகளில் கடமைகளில் கண்ணியமும் கட்டுப்பாடும் ஒருங்கே இணைவுற்றிருக்கும். பணிநிலையில் இக்கருமம் என்னால் சாத்தியமாகும் அல்லது தற்போது சாத்தியமற்றது என தெளிவான விடை வழங்கப்படும். கருத்து நிலையில் என்னால் முடியாது என்ற கருத்தை முன்வைக்கும் போது அவர் ஒரு எதிர்மறையான மனப்பாங்குடையவர் என விமர்சிப்பது பொருத்தமற்ற விதமாகும்.

மேற்குறித்த விடயங்களை தெளிவுபடுத்துவதன் மூலம் தனிமனித ஆளுமை என்பதும் உயர்வான சிந்தனை வெளிப்பாடு என்பது நேர்மனப்பாங்கிற்கான அணிகலன்களாக அமைகின்றது.

நடத்தை என்பது கற்றலின் விளைவாகும். இதனையே நடத்தை உளவியலாளர்களான தோண்டைக், ஸ்கின்னர், பவ்லோ போன்றவர்கள் விளக்கியுள்ளனர். இருப்பினும் உளவியலாளரான ஹக் வகான (Hugg & Vachgan) போன்றோர் கற்றல் என்பது மரபும் சூழலும் இணைந்த சிந்தனை வெளிப்பாடு என குறித்துரைக்கின்றார். கல்விப் புலத்தில் ஒவ்வொரு மாணவனும் அறிவுத் தேடலில் ஈடுபடும் போது மனப்பாங்கிற்கான மாற்றத்தையும் பெற்றுவிடல் வேண்டும். சகல விழுமிய விடயங்களையும் பெற்றுவிட வேண்டும். இவற்றை பெறுவதற்கான சிறந்த வழிமுறையே ஆலோசனையும் வழிகாட்டலும் ஒரு பிள்ளையின் பிறப்புடனேயே மனப்பாங்கு மாற்றமும் கற்றலும் ஏற்படத் தொடங்குவதாக உளவியலாளர் எறிக்சன் (Erick Erickshan) குறிப்பிடுகின்றார். சாதாரணமாக ஒரு பிள்ளை எத்தனை வயதில் கல்வி கற்க பாடசாலைக்கு செல்லவேண்டும்? இந்த வினாவிற்கு நாம் இலகுவாக சிந்திக்காது முன் வைக்கும் ஒரே விடை ஐந்து வயதில் என்பதாகும். உண்மையில் இது தவறான பதில் உளவியலாளர் எறிக்சன் குறிப்பிடுவது போன்று கருவில் இருந்து பிரசவிக்கப்பட்ட சிசுவினது பிறந்த மறுநிமிடமே தனது தெறிவினையைக் காட்டி அழுகையை ஆரம்பிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசி, தாகம், அரவணைப்பு, சிறுநீர்கழித்தல், உறக்கம் போன்ற பல தேவைகளைக் காட்டி அழுகையை ஆரம்பிக்கின்றது. அத்தேவைகள் யாவும் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படும் பட்சத்தில் உளத்திருப்தியுடனும் நம்பிக்கையுடனும் உறக்கத்தை தழுவிக் கொள்கின்றது. இங்கு தான் நேர்மனப்பாங்கிற்கான விதை விதைக்கப்படுகின்றது. இதனை விடுத்து ஒரு தாய் குழந்தையின் தெறிவினைகளுக்கு எதிராக அடக்கு முறைகளை பிரயோகிக்க முற்படும் போது அது ஒரு வித வன்முறையை கற்க முயற்சிக்கின்றது. இதுவே எதிர்மறையான எண்ணங்கள் நடத்தைகள் மனப்பாங்குகளாக தோற்றம் பெறுகின்றது. இங்கு பிறப்புடன் கூடிய குழந்தை வளர்ப்பும் வாழும் சூழலும் அதிக செல்வாக்கு செலுத்துகின்றது. Education என்ற பதத்தை தமிழில் விரிவாக்கம் செய்யும் போது அது அடியோடு வெளிக்கொணரப்படல் என பொருள்படுகின்றது. எது வெளிக்கொணரப்படல் வேண்டும் எனில் அறிவு திறன் மனப்பாங்கு போன்ற மூன்று விடயங்களும் ஒருங்கே பெறப்படல் வேண்டும். இதனை வள்ளுவர் தந்த வாய்மொழி இவ்வாறு பகர்கின்றது.

'கேடில் விழுச்செல்வம் கல்வி
ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை'

மானிடப் பிறப்பில் ஒருவர் தேட வேண்டிய உயர்ந்த செல்வம் கல்விச் செல்வம் உயர்வான கல்விச் செல்வத்தை பெற விழைகின்ற மாணவர் சமூகம் இன்றைய காலகட்டத்தில் கல்விச் செயன்முறைகளில் மட்டுமன்றி இணைக்கலைத்திட்ட செயன்முறைகளிலும் தொழில்முறை உலகிலும் பல்வேறு விருத்தியியல் சார்ந்த உளநெருக்கீடுகளையும் பின்னடைவுகளையும் எதிர்கொண்டு வருவது கண்கூடு. மறைமுகமான எண்ணங்களும் எதிர்மறையான மனப்பாங்குகளும் மனவெழுச்சி சார்ந்த குழப்பங்களும் பல வழிகளில் மாணவர் சமூகத்தால் எதிர்கொள்ளப்படுகின்றது என்பது நிதர்சனமான உண்மை. இத்தகைய தாக்கங்கள் நெருக்கீடுகள் குறுக்கீடுகள் அவலங்களுக்குள்ளாகும் மாணவர்களுக்கு பாடசாலை மட்டத்தில் உதவுவதற்கு பொருத்தமானதும் நெகிழ்வுத்தன்மை கொண்டதுமான இயக்கியல் அமைப்பாக வழிகாட்டலும் ஆலோசனையும் அலகு பாடசாலைகள் தோறும் ஒரு அலகாக செயற்படுகின்றது. இவ் உலகின் தொழிற்பாடு மூலமே விழுமியம் சார்ந்த பல விடயங்கள் மாணவ சமூகத்துக்கு கையளிக்கப்படுகின்றது. கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் Dr.தாரா டிமெல் அவர்களது அரிய முயற்சியின் பயனாக இன்று இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் ஆலோசனையும் வழிகாட்டலும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் பொருட்டு பாடசாலைகளில் உள சமூக இடையீடு மற்றும் ஆலோசனை அலகுகளும் நடைமுறையில் உள்ளது. (சுற்றுநிருப இலக்கம் 2000/17) இவ்வலகுகளின் ஒட்டுமொத்தமான பணி. யாதெனில் கல்வி புகட்டும் ஆசிரிய மக்கள் அனைவரும் ஒரு சீர்மிய ஆலோசகராக தனது நடிபங்கை நேர்மனப்பாங்குடன் ஆற்ற வேண்டும் என்பதாகும்.


நேர்மனப்பாங்கு என்பது இன்று எல்லோராலும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். காரணம் சிறுவர் உரிமைகளும் துஷ்பிரயோகங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் தவறான வாழ்க்கை கோலத்தை மாணவ சமூகம் பெற்றுவிடுகின்றது. இந்த நிலையில் சீர்மியரின் கடமைப்பாடு பலவாறாக அமையும் பட்சத்தில் மாணவர்கள் மத்தியில் நேர்மனப்பாங்கு விதைக்கப்படும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. ஒரு சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியமங்களை புரிய வைப்பது ஆலோசகரது முக்கிய கடமையாகும். சுயமதிப்பீடு, சுயநம்பிக்கை, சுயகௌரவம், சுயதிருப்தி என்பது வாழ்வின் ஒருவருக்கு சிறந்த பயிற்சியாக அமைய வழிகாட்டல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்விப் புலத்தில் ஏதாவது புதிய விடயங்களை உருவாக்குவதிலும் படைப்பதிலும் வல்லமை உடையனவாக மாறும் மாணவ சமூகத்திடம் நேர்மனப்பாங்கு படம்போடப்படுவதற்கான சாத்தியப்பாடு அதிகம் உண்டு. போட்டியும் சவால்களும் நிறைந்த உலகில் நாம் ஒவ்வொருவரும் தனித்துவ மாணவர்கள் என்ற நம்பிக்கையில் கல்வியில் புடம்போட வேண்டும்.

இவ்வாறான நேர்வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் நேர்மனப்பாங்கு மிக்க மாணவ சமூகம் ஒன்று தேசிய கல்வி இலக்குகளுக்கு அமைவாக தோற்றம் பெற வாய்ப்புண்டு. நேர்மனப்பாங்குடன் திகழும் மாணவ சமூகத்தில் மகிழ்ச்சிகரமான மனநிலையும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உதயமாகும். கவர்ச்சியான பேச்சு நேர்த்தியான நடை கம்பீரமான தோற்றப்பாட்டுடன் நடமாடுவார்கள். வெற்றி என்பது சிறந்த அணுகுமுறையாக இருக்கும். ஒளிமயமான எதிர்காலமும் சுபீட்சமான வாழ்க்கையும் அவர்களது வாழ்வியல் வெற்றியாக நிலை பெறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றமும் ஆசிரியரும்

*திருமதி.சந்திரகலா சௌந்தரராஜன்*
*தி/ மெதடிஸ்த மகளிர் கல்லூரி*
*திருகோணமலை*

பெற்றோர் பிள்ளைகளுக்கு வாழ்வை வழங்குகின்றார்கள் ஆனால் வாழ்வை வெற்றிகரமாக்கத் தேவையான வழிகாட்டல்களை வழங்குபவர்கள் ஆசிரியர்கள் என்பதால் பெற்றோர்களை விட ஆசிரியர்கள் கௌரவிக்கப்படத்தக்கவர்கள்.

அரிஸ்ரோட்டில்

ஒருவரின் வாழ்க்கையில் ஆசிரியரின் பங்கு என்ன? ஆசிரியர் பணி என்பது தொழிலா? அது தொண்டா? உழைப்பா? பணியா? அல்லது சேவையா? சம்பளம் வாங்கினால் எவ்வாறு அது சேவையாகும்? பலன் ஒன்றைப் பெற்றுவிட்டால் அது சேவை அல்லவே? ஆனாலும் ஈடு செய்ய முடியாத சில பணிகளுக்கு என்ன சம்பளம் தந்தாலும் அது பணி அல்ல. சேவை என்றே கூற வேண்டும். ஒருவரின் வாழ்க்கையை மாற்றி அமைக்கும் ஆசிரியர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் அது அதற்கு ஈடாகாது. எனவே தான் ஆசிரியர் பணி சேவை எனப்படுகின்றது.

ஆசிரியர் என்பது ஒரு புனிதமான உறவு ஆசிரியர் மாணவனுக்கு இடையில் இருப்பது ஒரு புனிதமான உறவாகும்.

***ஓம் ஸறனா வவது ஸஹநௌ புனத்து***
***ஸஹ வீர்யம் தரவா வஹை***
***தேஜஸ் வீணாவித தமஸ்து மாவித் விஷாவஹை***
***ஓம் சாந்தி சாந்தி சாந்தி***

அதாவது பரம்பொருள் நம்மிருவரையும் ஒருங்கே காப்பாற்றட்டும். ஒருங்கிணைந்த ஆசிரியர் மாணவர்கள் என்ற நம்மிருவரையும் ஆளட்டும். நாம் இருவரும் ஒருங்கிணைந்து மிகச்சிறந்த காரியத்தைச் செய்வோமாக: நம் இருவருடைய கல்வியும் ஒளியுடையதாக இருக்கட்டும். நாம் இருவரும் வெறுப்புக் கொள்ளாதிருப்போமாக என்கிறது ஒரு சமஸ்கிருத சுலோகமும் அதன் பொருளும். வெறும் மதிப்பெண்களைப் போடுபவரல்ல ஆசிரியர். மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற சக்தி உடையவர் அவர். எதிர்கால உலகின் விதியினை ஒவ்வொரு வகுப்பறையிலும் நிர்ணயிப்பவர் ஆசிரியர்

**The Future of the world is shaper in the classroom**

எதிர்காலத்தில் ஒரு மாணவன் யாராக வரவேண்டும் என்று தீர்மானிப்பவர் இவராவார். எனவே தான் சாதாரண அலெக்ஸாண்டரை மஹா அலெக்ஸாண்டராக மாற்றிய பெருமை ஆசிரியர் அரிஸ்ரோட்டிலை சேர்கின்றது. ஒரு ஆசிரியர் மனம் வைத்தால் ஒரு மாணவனின் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய மாறுதல்களையும் உண்டு பண்ண முடியும்.

கற்பிப்பதை யாரும் விரும்பமாட்டார்கள். அப்படியானால் எப்படிக் கற்றுத்தரவேண்டும்? கற்பிக்கின்றோம் என்ற எண்ணமே இல்லாதபடி கற்பிக்க வேண்டும். அது தான் கற்பித்தலில் இருக்கின்ற மிகப் பெரிய கலை. மாணவனும் தான் கற்றுக் கொள்கின்றேன் என்ற எண்ணம் நீங்கி கல்வி அவனிடம் போய்ச்சேர வேண்டும். குழந்தைகள் கற்றுக் கொள்ளுவதை விரும்புகின்றார்கள். ஆனால் பிறர் கற்றுக் கொடுப்பதை விரும்பமாட்டார்கள். ஆனால் தானாகக் கற்றுக் கொள்ளவிரும்புவார்கள். தானாகக் கற்றுக்கொள்ளலாம் என்ற ஆர்வத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டுமளவிற்கு வகுப்பு நடத்தவேண்டும். நான் சொல்லித்தருகின்றேன் என்றே இருக்கக் கூடாது. மாணவர்கள் ஒரு போதும் கற்பதை வெறுப்பதில்லை. கற்பிக்கின்ற முறையைத் தான் வெறுக்கின்றார்கள். பிள்ளைகளை எவ்வளவு வேண்டுமானாலும் கண்டிக்கலாம். ஆனால் தண்டிக்கவே கூடாது. மனோ தத்துவத்தில் மிகுந்த நிபுணத்துவம் இருந்தால் தான் சிறந்த ஆசிரியராக ஆகமுடியும். 'நான் உனது சிறந்த நண்பன்' என்ற சிந்தனையை ஆசிரியர் மாணவர்களிடத்தே உருவாக்க வேண்டும். மாணவர்களுக்கு சந்தேகம் ஏற்படும் போது ஆசிரியர்களுக்கு தெரியாது போயின் தமக்குத் தெரியாது என்ற விடயத்தை ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு முன், அறியாமை தெரிந்து விட்டதே மானம் போய்விட்டதே என நினைத்தால் வாழ்நாள் முழுவதும் பிள்ளை ஆசிரியர் கூறுவதை கேட்கமாட்டான்.

ஆசிரியர் பணிக்கு வருபவர்கள் அந்தப் பணியில் முழு ஈடுபாட்டுடன் வர வேண்டும். இயங்க வேண்டும். ஒரு மாணவனை உற்சாகப்படுத்தி ஜெயிக்க வைப்பதில் சிறந்த ஊக்கமளிப்பவர் முதலில் தாய் இரண்டாவது தந்தை அடுத்தது ஆசிரியர் மாணவன் மனதில் தன்னால் முடியாது என்ற எண்ணம் பதிந்து விட்டால் அதை அழிக்க வேண்டியது ஆசிரியர்களின் வேலையாகும். ஓர் ஆசிரியர் தான் உலகிலேயே மாணவருக்கு மிகச் சிறந்த உந்துதல் தருபவர் ஆகும்.

மாணவர்கள் செயலாக்கம் உள்ளவர்கள் அதிக நேரம் ஒரே நிலையில் இருப்பதை விரும்பமாட்டார்கள். ஒரு விடயத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதை விட ஒன்றைச் செய்வதிலும், பார்ப்பதிலும் விருப்பம் உடையவர்கள். இதற்கு ஏற்ப கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். எனவே கற்பித்தல் தொடர்பான முன் திட்டமிடல் அவசியமாகின்றது. திட்டமிடலானது குறிக்கோள் பாடவிதானம் பாட அலகு, கற்பிக்கும் முறை பயன்படுத்தப்படும் வளம் மதிப்பீடு, குறிப்புக்கள் போன்றவற்றை உள்ளடக்கி இருக்கும். இத்திட்டமிடலானது தெளிவாக எழுதப்பட்ட ஓர் அறிக்கையாகவோ அல்லது உள்ளார்ந்த உளரீதியாக திட்டமிடப்பட்ட ஒன்றாகவோ இருக்கும். நன்கு திட்டமிடப்பட்ட ஓர் கற்றல் - கற்பித்தல் செயற்பாடே வினைத்திறன் மிக்கதாகவும் விளைதிறன் மிக்கதாகவும் அமையும். உள்ளார்ந்த உளரீதியாக திட்டமிடலானது அனுபவமிக்க ஆசிரியர்களாலேயே வெற்றிகரமாக கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும்.

மாணவருக்கு விருப்பமான முறையில் கற்பிப்பதற்கு ஏற்ற வாண்மையை ஆசிரியர் காலத்திற்கேற்ப இற்றைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இருபத்தோராம் நூற்றாண்டுக்குரிய ஆசிரியர் கற்பித்தல் தொடர்பான புதிய பார்வைகளைக் கொண்டிருக்க வேண்டும். உலகளாவிய ரீதியில் விருத்தியடையும் தொழில்நுட்பவியல் வகுப்பறைச் செயல்முறைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஐபேட் (ipads) ஸ்மார்ட்போன் (smartphones) கணினிகள் மற்றும் இணைய வலைப் பிரயோகங்கள் (web applications) O.H.P மல்ரிமீடியா புறஜெற்றர் போன்றன இருபத்தோராம் நூற்றாண்டாகிய அறிவுமைய நூற்றாண்டின் புதிய தொழில்நுட்பக் கருவிகளாகிவிட்டன. உலகளாவிய ரீதியில் இன்று ஏற்பட்டு வரும் இப்புரட்சியை உள்வாங்கி அதற்கேற்ற வகையில் வெற்றிகரமான ஆசிரியர்களாகத் துலங்க வேண்டும். 21ம் நூற்றாண்டின் ஆசிரியர் அறிவுப்பெருக்கத்தின் திறவுகோலாக அமைதல் வேண்டும். நபர்களையும் சமூகத்தையும் இந்த நூற்றாண்டுக்கு இயைபுடையவராக உருவாக்குதல் வேண்டும்.

**கற்றல் (யுனெஸ்கோ)**

- அறிந்து கொள்வதற்காக கற்றல்
- குறிப்பிட்ட ஒன்றை ஆற்றுவதற்காக கற்றல்
- இணைந்து வாழ்வதற்காக கற்றல்
- ஆவதற்காக கற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21ம் நூற்றாண்டின் கல்வி பற்றிய அனைத்துலக ஆணைக்குழுத்தலைவர் ஜெகிஸ்டெலோர்ஸ் கூறுகின்ற மேற்படி விளைதிறன் பொருந்திய வாழ்க்கை மாற்றங்களுக்காக மாணவனை அணுகும் விதத்தில் ஆசிரியர் தனது வகிபாகத்தை மாற்றிப் பங்களிப்பினை நல்குதல் வேண்டும்.

மாற்றம் என்ற சொல்லைத்தவிர ஏனைய அனைத்தும் மாறிக் கொண்டிருக்கின்றன. இம்மாற்றங்களை எம்மால் தடுத்து நிறுத்தமுடியாது. ஆனால் மாற்றங்களுக்கு ஏற்ப எம்மை மாற்றிக் கொள்ளமுடியும். மாற்றங்களுக்கு உடன்பாடான முறையில் எம்மால் துலங்கமுடியும். ஆனால் இன்றைய மாணவர்கள் வளரும் சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டுள்ளது. உலகமயமாக்கலாலும் நுகர்பொருள் கலாசாரத்தாலும் சீரழிந்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் இடையில் வளர்கிறார்கள். பல்வேறு குற்றச்செயல்களில் தாராளமாகவே ஈடுபடுகின்றார்கள்.

எனவே முன்பு எப்போதையும் விட அதிக வழிகாட்டுதல்கள் தேவைப்படும் காலகட்டம் இன்றைய சூழலாகும். எனவே தற்போதைய நவீன ஆடம்பர மற்றும் கட்டற்ற சுதந்திர வாழ்க்கையின் பின் விளைவுகள் குறித்து வீட்டிலும், பாடசாலைகளிலும் அம்மாணவர்களுடன் தொடர்ந்து உரையாடி, அவர்களின் எண்ண ஓட்டங்களைப் புரிந்துகொண்டு, அதற்கு முறையான வழியில் விளக்கம் கூறி நல்வழிப்படுத்துவதே நமது மாணவர்களை குற்றச் செயல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளமுடியும். காலத்தின் கட்டாயத் தேவையும் இதுவேயாகும்.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வருகின்ற கல்விசார்ந்த தொழில்நுட்பபுரட்சியில் ஆசிரியர்கள் வெற்றிகரமாக இணைந்து கொள்ளல் வேண்டும். அவற்றை தமது நாளாந்த கற்பித்தல் செயற்பாடுகளில் கைக்கொள்ளல் வேண்டும். மாணவர்கள் யார்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் எவ்வாறு கற்க விரும்புகிறார்கள்? தமது பாடசாலைக்கல்வியின் முடிவில் அவர்கள் அடைந்திருக்க வேண்டிய தேர்ச்சிகள் யாவை? அவர்கள் வேலை உலகிலோ அல்லது உயர்கல்வி நிறுவனங்களிலோ பிரவேசிக்கும் போது ஏனையோரை விட எவ்வாறு முன்னிலை வகிக்கச் செய்வது?

நாட்டின் மேம்பாட்டிற்கு அவர்களின் வகிபாகம் யாது? போன்ற வினாக்களுக்கு விடைகாணும் வகையில் ஒரு ஆசிரியர் தனது கற்பித்தல் முறைகளையும், புதிய தொழில்நுட்பவியல் வழங்கும் கற்றல் கற்பித்தல் கருவிகளையும் கற்பித்தல் தராதரங்களையும் ஒன்றிணைத்தல் வேண்டும். இதன் மூலமே நம் நாட்டிற்காக நாட்டின் மேம்பாட்டிற்காக எனும் தூரநோக்கு சிந்தனை நிறைந்த நற்பிரஜைகளாக உருவாக்கமுடியும் என்பதே சிறப்பாக கற்பித்த ஆசிரியர்களை உண்மையாக்கும். மாணவர்கள் வியப்புடன் நினைவில் கொள்வார்கள். ஆனால் அவர்களின் இதயங்களின் உணர்வுகளைத் தொட்ட ஆசிரியர்களை நன்றியுடன் பூஜிப்பார்கள்.
-யாரோ-

தியாகம் மற்றும் அர்ப்பணிப்புடன் கடமை ஆற்றக்கூடிய மேலும் கற்பித்தலை தனது வாழ்க்கையின் இலக்காகக் கொண்ட ஆசிரியர்கள் உருவாக்கப்படாதவரை எம்மால் நல்ல ஒரு கல்வி முறையை உருவாக்க முடியாது.

Dr. இராதா கிரிஜான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் தங்களை இற்றைப்படுத்த வேண்டிய தேவை

திரு.அ.அதிஸ்டலிங்கம் BA (Hons) PGDE
தி/கலைமகள் மகா வித்தியாலயம்

மனித குலத்திற்கே உரிய மகத்தான தொழில் கண்ணியமான தொழில், அப்பழுக்கற்ற தொழில், புனிதமான சேவை எனப் பலவாறாக ஆசிரியர் தொழில் மதியுரை செய்யப்படுகின்றது. 'சொற்களிலும் பார்க்க செயல்களே உரத்த குரலில் ஒலிக்கும்' என்ற முதுமொழிக்கு இணங்க வாண்மை மிக்க ஆசிரியப் பெருந்தகைகளையே இன்றைய உலகம் நாடி நிற்கின்றது. ஆசிரியர்கள் ஒரு சமூகத்தின் வேகம் தன்மை, போக்கு என்பனவற்றை நிர்ணயிப்பவர்கள். ஒவ்வொரு தனிமனித இயல்புகளுக்கும் ஏற்ற முன்னேற்றங்களை உருவாக்க வழிகாட்டுபவர்கள். வரலாற்று காலங்களில் ஏற்பட்ட சமூக மாற்றங்களுக்கும் வேகத்துக்கும் ஈடுகொடுக்க கூடிய வகையில் கல்விச் சேவையை அர்ப்பணிப்புடன் வழங்குபவர்களாக உள்ளனர். அந்த வகையில் வகுப்பறை கற்றல் கற்பித்தலின் போது மாணவர்களை வினைத்திறன் உள்ளவர்களாக மாற்ற வேண்டும், வகுப்பறைக்குச் சென்று பாடத்தை கற்பிக்கும் ஆசிரியராக மட்டுமிராது முழுமையான தனது பணியை நிறைவேற்றுபவராக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்தி கொள்வதனூடாக இத்தகைய பணிகளைச் சிறப்பாக செய்யமுடிகின்றது.

மாறும் உலகுடன் தம்மை பொருந்திக் கொள்வதற்கும் காலத்தின் தேவைக்கு ஏற்ப கல்வியை வழங்கி மாணவர்களின் விருத்திக்கு உதவக்கூடிய வகையிலும், தம் தொழில்வாண்மையினை வளப்படுத்த வேண்டிய கட்டாயத் தேவையை ஆசிரியர்கள் எதிர்நோக்கி உள்ளனர். எனவே இச்சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் தம்மை வலுவூட்டிக் கொள்வதற்கு ஆசிரியர்கள் தமது தொழில்சார் நடவடிக்கைகளை இற்றைப்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமாகவுள்ளது.

நடைமுறையில் ஆசிரியர்களுக்கென பல்வேறு அடையாளங்கள், குறியீடுகள், அடைமொழிகள் உள்ளன. அவ்வகையில் ஆசிரியர்களை கல்வியியலாளர்கள் அரிக்கன் விளக்குப் போன்றவர்கள் எனக் கூறுகின்றனர். ஏனெனில் ஏனைய விளக்குகளோடு ஒப்பிடும் போது பல விசேட தன்மைகள் அரிக்கன் விளக்கிற்கு உண்டு. இவ்விளக்கினை எவ்விடத்திற்கும் இலகுவாக கொண்டு செல்லமுடிவதுடன் மழை, கடும்காற்று என்பவற்றுக்கும் அணையாது தாக்குப் பிடித்து ஒளியை தருகின்றது. தேவைக்கு ஏற்ப ஒளியை கூட்டியும் குறைத்தும் கொள்ளவும் வழியுண்டு. இவ்விளக்கில் 'சிம்னியை' துடைப்பதன் ஊடாக பிரகாசமான வெளிச்சத்தைப் பெற முடிகின்றது. இல்லாதுவிடின் மங்கலான வெளிச்சத்தையே நாம் பெற வேண்டியிருக்கும், அதே போன்று விளக்கின் எண்ணெய் தாங்கியில் எண்ணெய் இருந்தால் மாத்திரமே ஒளிரும் என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

இத்தகைய அரிக்கன் விளக்குடன் ஆசிரியர்களை தொடர்புபடுத்தி நோக்கும் போது பல ஒற்றுமைகள் புலப்படுகின்றன. எவ்விடத்திற்கும் இலகுவாகக் கொண்டு செல்லக்கூடிய இவ்விளக்கினைப் போன்று ஆசிரியர்களும் எவ்விடத்திலும் எத்தகைய மாணவர்களுக்கும் கற்பிக்கத் தயாராக உள்ளனர. எத்தகைய சவால்களுக்கும் முகம் கொடுக்கவும் தயாராகவும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிக்கன் விளக்கின் சிம்னியை சுத்தம் செய்யும் போது பிரகாசமான வெளிச்சம் தெரிவதைப் போன்று ஆசிரியர்களும் தமது தொழில்சார் தகைமைகளை அடிக்கடி வளப்படுத்திக் கொள்ளும் போதே தொழிலில் பிரகாசிக்க முடியும். அரிக்கன் விளக்கிற்கு எண்ணெய் விடுவது போன்று ஆசிரியர்களும் தொழில்சார் விடயங்களை தேடிப்பெற்று தம்மை இற்றைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அப்போது தான் ஆசிரியர்கள் தமது தொழிலில் பிரகாசமான ஒளிக்கீற்றைப் பரப்பமுடியும் என்பது புலனாகின்றது.

இன்றைய நவீன உலகில் தகவல் தொழிநுட்பம் என்ற துறையில் எமது மாணவர்கள் தம்மை அதிகளவில் இற்றைப்படுத்திக் கொண்டு வருகின்றனர். இதன் மூலம் சுயமாகவே தமக்குத் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்கின்றனர். எனவே ஆசிரியர்களும் இத்துறையில் அதிக விருப்பத்துடன் தம்மை ஈடுபடுத்தி இத்துறை சார்ந்த விடயங்களில் தம்மை இற்றைப்படுத்திக் கொள்ளல் அவசியமாகின்றது. ஏனெனில் இன்றைய கல்வி தகவல் தொழிநுட்பத்துடன் இணைந்திருப்பதால் கற்றல் கற்பித்தலின் போது மாணவர்கள் தகவல் தொழிநுட்பத்தில் இற்றைப்படுத்தப்பட்டவர்களாக இருப்பதனால் ஆசிரியர்களை அவர்கள் குறைத்து மதிப்பிட நேரிடலாம். எனவே இந் நிலையினை தவிர்த்துக் கொள்வதற்கு தகவல் தொழிநுட்பம் என்ற விடயங்களில் ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும். இத்துறைகளில் கிடைக்கும் பயிற்சிகளை ஆசிரியர்கள் தவறவிடாமல் பெற்று கொள்வதனூடாக தம்மை இற்றைப்படுத்திக் கொள்ளமுடிகின்றது. இதனூடாக சிறந்த கல்விச் சேவையினை வழங்கவும் நல் மதிப்பைப் பெற்றுக் கொள்ளவும் முடிகின்றது.
மாறாக மாணவர்களுக்கு தெரிந்ததொரு விடயம் ஆசிரியர்களுக்கு தெரியாமலிருக்கும் போது மாணவர் ஆசிரியர்களை குறைத்து மதிப்பிடும் நிலை தோன்றுகின்றது. அதாவது ஆசிரியர் தன்னை இற்றைப்படுத்திக் கொள்ளாத நிலையில் மாணவர்கள் தம்மை இற்றைப்படுத்திக் கொண்டிருக்கும் போது இத்தகைய நிலை தோற்றம் பெறுகின்றது. எனவே ஆசிரியர்கள் தொழில் ரீதியாக தன்னை அன்றாடம் இற்றைப்படுத்த வேண்டியதன் அவசியம் உணர்த்தப்படுகின்றது.


எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு மாணவர்களை ஆற்றுப்படுத்துவதற்கு முன்னர் ஆசிரியர்கள் தம்மை எதிர்நோக்கியுள்ள இச்சவால்களை வெற்றி கொள்ளல் வேண்டும். அப்போது தான் தொழில்சார் வாண்மைத்துவத்தினை ஆசிரியர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் இல்லாவிடின் கற்பித்தல் களம் போர்க்களமாக மாறி விடும், நவீனத்துக்கும் மாத்திரமின்றி பின் நவீனத்திற்கேற்பவும் தம்மை தயார்படுத்திக் கொள்வதற்கு ஏற்றவகையில் தொழில் சார் அறிவை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும். தொடர்ந்து கற்பது மாத்திரமின்றி ஆய்ந்தறிதல்களிலும் கள ஆய்வுகள், படைப்பாற்றல்கள் கல்வித்தகைமையை உயர்த்திக் கொள்ளுதல் போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலமும் ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தருக்குக்
கற்றனைத் தூறும் அறிவு'

என்ற வள்ளுவரின் குறட்பாவுக்கு ஏற்பவும் 'கற்றலுக்கான கற்றல்' என்ற தேர்ச்சி மட்ட அடிப்படையிலும் ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்திக் கொள்ளும் போதே 'ஆசிரியம்' தொழில் வாண்மையுடையதாக அமையும்.
ஆசிரியர் தம் தொழில்சார் விடயங்களை இற்றைப்படுத்திக் கொள்வதற்கும், ஆய்வுகளில் ஈடுபடுவதற்கும் ஆய்ந்தறிதலை மேற்கொள்வதற்கும் ஏற்ற தொழில் வாண்மையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் பாடசாலைத் தலைமைத்துவம் மற்றும் அதற்கு மேல் உள்ளவர்களும் வழி அமைத்துக் கொடுப்பது தலையாய கடமையாகும். அப்போது தான் ஆசிரியர்கள் காலத்தின் தேவைக்கு ஏற்ப தம்மை இற்றைப்படுத்திக் கொண்டு கல்விப் புலத்தில் சேவைகளை முழுமையாக வழங்கும் வாண்மை மிகு ஆசிரியர்களாக விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்டத்தில் கல்வி முறைமை கட்டமைப்பும் தொழிற்பாடுகளும்

இலங்கை நீண்ட காலக் கல்விப் பாரம்பரியங்களைக் கொண்ட நாடு. சமய நிறுவனங்களே ஆரம்பகால கல்வி நிலையங்களாக இருந்தன. கிராமக் கோயில்களும், பிரிவேனாக்களும் பௌத்தர்களின் மரபுசார் கல்வி நிலையங்களாக் இருந்தன. இந்துக்கள் தமது கோயில்களில் பிராமணக் கல்வி முறையான குரு – சிஷ்ய பாரம்பரியத்தின் அடிப்படையில் கற்றல் மரபுசார் கல்வி முறையின் அடிப்படை சமயமும், அறவொழுக்கமுமாக இருந்த போதும் சமயம் சாரா விடயங்களும் இக்கல்வி முறையில் இல்லாமல் இல்லை. அதனை எமது நாட்டில் காணப்படுகின்ற பண்டைய கட்டிடங்களும், நீர்ப்பாசன கட்டமைப்புக்களும் சான்று பகர்கின்றன.

போர்த்துக்கேயரும் பின்னர் ஒல்லாந்தரும் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து எமது கல்வி அமைப்பானது தேய்வடைந்தது. அவ்விடத்தை செமினரி மற்றும் கோயில் பற்று பாடசாலைகள் பிடித்துக் கொண்டன. இவற்றின் முதன்மை நோக்கம் மதமாற்றம். ஒல்லாந்தரே கட்டாயக்கல்வி என்னும் எண்ணக்கருவை இந்நாட்டில் அறிமுகம் செய்தனர்.

1815ல் ஆங்கிலேயர் முழு நாட்டையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். பிரித்தானியர் ஆட்சியிலேயே எமது நாட்டின் கல்வி முறையில் பாரியமாற்றம் ஏற்றபட்டதெனலாம். பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்ததோடு பாடசாலைக் கலைத்திட்டத்தை விரிவாக்கியமை பிரித்தானிய ஆட்சியின் பலாபலன்கள் எனலாம். ஆனால் உயர்ந்தோர் குழாமுக்குரிய வசதிகள் நிறைந்த ஆங்கிலக்கல்வியும், பெரும்பாலான பிள்ளைகளுக்கு தேசியமொழிகள் மூலமான வசதிகள் குறைந்தகல்வியும் வழங்கப்பட்டதிலிருந்து இரட்டைத்தன்மைகள் வெளிப்பட்டன. 1930களில் இத்தகைய முரண்பட்ட கூறுகளைக் கொண்ட தேசிய கல்வி மரபுரிமை உள்ளூர் கொள்கை வகுப்பாளர் கைகளுக்கு மாறியது.

1930களில் இலங்கையின் கல்வி முறைமையின் மாறுநிலை காலமாகும். 1931இல் அறிமுகம் செய்யப்பட்ட சர்வசன வாக்குரிமை சமூகமாற்றத்தைத் துரிதப்படுத்தியது. இதனூடாக கல்வி நிருவாகத்தின் காலனித்துவ அதிகாரக் கட்டமைப்பில் 1939ஆம் ஆண்டின் கல்விச்சட்டம் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தின.

1950 களில் தேசிய வாதமும் கலாசார மறுமலர்ச்சியும் முனைப்புற்றன. இதனால் 1960 களில் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்டன. அதனால் அது தேசிய கல்வி முறையை ஸ்தாபிப்பதற்கான வாய்ப்பேற்பட்டது. இதனூடாக பாடசாலைச் சேர்வும் எழுத்தறிவும் துரிதமாக அதிகரித்தது. ஆனால் கல்வியின் தரம் மற்றும் பொருத்தப்பாடு அதிகரிக்கவில்லை. பாடசாலைகளின் வெளியீடுகள் வேலை உலகிற்கு ஏற்றால் போல் இல்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. படித்த இளைஞர்கள் 1970 – 1980 காலப்பகுதிகளில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். அதுவே 1970 களில் கல்வியில் பொருத்தப்பாட்டை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனூடே இடைநிலை மட்டத்தில் சமநிலை கொண்ட ஒரு பொதுக் கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. மத்திய அதிகார அமைப்பு

1939 ஆண்டின் கல்விச் சட்டத்தையும், அதன் வழிவந்த சட்டங்களை 1960 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் சட்டம், 1961இன் 8ஆம் இலக்க சட்டமூலம், 1981ஆம் 65 இலக்க திருத்தச் சட்டம், 1968 ஆம் 25ம் இலக்க பரீட்சைகள் சட்டம், 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக சட்டம், 1986ஆம் ஆண்டின் 30 இலக்க கல்விக்கல்லூரிகள் சட்டம், 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச்சட்டம் ஆகியவற்றினதும் இவற்றின் கீழான ஒழுங்கு விதிகளது ஏற்பாடுகளை வழிப்படுத்துவதற்கும், வினைத்திறனுள்ள முறையில் அவற்றை நிறைவேற்றுவதற்கும் ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் அமைச்சரே பொறுப்பாகவுள்ளார்.

கல்வி அமைச்சும் கல்வித்திணைக்களமும் 1966ல் ஒன்றிணைக்கப்பட்டது. பொதுக் கல்வி தொடர்பான சகல தொழிற்பாடுகளும் கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன. அமைச்சின் செயலாளர் பணிப்பாளர் நாயமாக நியமிக்கப்பட்டதுடன் பிராந்திய பணிப்பாளர்கள் செயலாளரினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டவர்களாக இருப்பார்.

பொதுச்சேவை ஆணைக்குழுவில் கல்விச்சேவைக்குழு நியமிக்கப்பட்டதுடன், ஆட்சேர்ப்பு பாடசாலைகளுக்கு நியமித்தல், இடமாற்றம், தனியார் ஒழுக்கக் கட்டுப்பாடு என்பன அதற்குப் பொறுப்பாக்கப்பட்டன.

1985 இல் தேசியக்கல்வி நிறுவகச் சட்டத்தின் மூலம் கலைத்திட்ட விருத்தி ஆசிரியர் வாண்மை விருத்தி, முகாமைத்துவப் பணிப்பாளர் விருத்தி மற்றும் ஆய்வு என்பன தேசிய கல்வி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

1987ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க திருத்தச்சட்டம் வழங்கிய மாகாணசபைகளுக்கான அதிகாரப் பகிர்வுடன் கல்வி அமைச்சுக்கான தொழிற்பாடுகள் மேலும் குறைக்கப்பட்டன. கல்வி அமைச்சின் செயலாளர் கல்வி அமைச்சரின் வழிகாட்டலில் கல்வி அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களை மேற்பார்வை செய்வதோடு கல்வி அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலராகவும் உள்ளார்.

கல்வி அமைச்சின் நிருவாகக் கட்டமைப்பானது ஐந்து பிரதான பிரிவுகள் கொண்டது. அவை ஐந்து மேலதிக செயலாளர்களினால் நிருவகிக்கப்படுகிறது. அவை கொள்கைத் திட்டமிடல் மற்றும் மீளாய்வு பிரிவு, கல்விதர விருத்திப் பிரிவு, கல்விச் சேவைகள் பிரிவு, நிருவாகம் மற்றும் நிதிப்பிரிவு, வழங்கல் பிரிவு என்பனவாகும். அத்தோடு உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளும் செயலாளரின் கீழ் உள்ளன. ஆட்சேர்ப்பு , பரவலாக்கம், இடமாற்றம், கல்விப்பணிப்பாளர்களது ஒழுக்கக் கட்டுப்பாடு என்பவற்றை கையாளுவதற்கு பொதுச்சேவை ஆணைக்குழு (PSC) இன் கீழ் கொண்டுவரப்பட்டது.

கல்வி அமைச்சின் தொழிற்பாடுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம். அவை

i. தேசிய கல்விக் கொள்கை அமுலாக்கத்திற்கான சட்டங்களைத் தயாரித்தல்
ii. மாகாணக் கல்வி அதிகாரவமைப்புக்களுடன் இணைந்து அமைச்சினால் தயாரிக்கப்பட்ட தேசிய கலைத்திட்டத்தின் அமுலாக்கமும் கண்காணிப்பும்
iii. தேசிய பாடசாலைகள் படையினருக்கான விசேட பாடசாலைகள், குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களிலுள்ள பாடசாலைகள் என குறிப்பான பாடசாலைகளது முகாமைத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. நியமங்களை உறுதிப்படுத்தும் வகையில் சகல பாடசாலைகளதும் பரிசோதனை மற்றும் மேற்பார்வை
v. 1AB மற்றும் 1C பாடசாலைகளுக்கு அதிபர் தெரிவு மற்றும் நியமத்துக்கான பிரமாணங்களை உருவாக்குதல்
vi. கல்வி அமைச்சின் கீழ் முகவரகங்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குதல்
vii. தேசிய மட்டத்தில் பாடசாலை நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

**பரீட்சைகள் திணைக்களம்**

1939ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க கல்விச் சட்டத்தின் கீழும் 1968ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப்பரீட்சைகள் சட்டத்தின் கீழ் பரீட்சைத் திணைக்களம் பாடசாலை பரீட்சைகள் கட்டுப்படுத்தல் ஒழுங்குபடுத்தல், நடாத்துதல் தொடர்பில் பரீட்சைத் திணைக்களம் ஈடுபாடு காட்டும். பரீட்சைகள் திணைக்களம் பிரதம பரீட்சை ஆணையாளரின் கீழ் இயங்குவதுடன் இத்திணைக்களத்தின் பல்வேறு தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு பிரதி ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் பாடசாலை முறைமையிலுள்ள சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூல பிள்ளைகளுக்கு மேலதிக வாசிப்புக்களையும், உசாத்துணை நூல்களையும் கல்விக் களஞ்சியங்களையும் அகராதிகளையும் தயாரித்து வெளியிடும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. இத்திணைக்களம் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் கீழ் இயங்குகின்றது.

13வது திருத்தச் சட்டத்தின் படி மாகாண சபைகள் பாடநூல்களைத் தயாரித்து கல்வி அமைச்சின் அனுமதியின் பின்னர் விநியோகம் செய்வதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளன. எனினும் சகல பாடசாலைகளுக்கும் பொதுவான பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதனாலும், மத்திய மட்டத்தில் பாடநூல்களைத் தயாரிக்க வேண்டிய தேவையுள்ளது. இதனால் தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்த வகையில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் பாடநூல்களை எழுதுவது சிறந்ததாகக் கருதப்படுகிறது. பாடநூல் விநியோகம் மாகாண அதிகார வரம்புக்குள் மேற்கொள்ளமுடியும்.

**ஆசிரிய கல்வி நிறுவனங்கள்**

கல்வி அமைச்சின் கீழ் உள்ள கல்விக் கல்லூரிகளுக்கான பிரதான ஆணையாளர் அலுவலகம், கல்விக் கல்லூரிகள் சபை, தேசிய கல்விக்கல்லூரிகள் (NCOE) மற்றும் ஆசிரியர் கலாசாலைகள், ஆசிரியர் நிலையங்கள் போன்றனவே ஆசிரியர் கல்வியுடன் தொடர்புடைய நிறுவனங்களாகும். 1986இன் 30ம் இலக்க கல்விக் கல்லூரிகள் சட்டத்தின் பிரகாரம் NCOE கள் தேசிய கல்வி நிறுவனத்துடன் NIE உடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் பட்டங்கள், டிப்ளோமா, சான்றிதழ்கள் NIE ஆல் வழங்கப்படுவதுடன் இவற்றின் கலைத்திட்டத்தை உருவாக்கும் பணிப்பாளர் / அபிவிருத்தி, பரீட்சைகள் நடாத்துதல் போன்றவற்றுக்கும் NIE ஆல் வழங்கப்படுவதுடன் இவற்றின் கலைத்திட்டத்தை உருவாக்கும் பணிப்பாளர் அபிவிருத்தி, பரீட்சைகள் நடாத்துதல் போன்றவற்றுக்கும் NIE பொறுப்பாகவுள்ளது. கல்விக் கல்லூரிகள் சபையின் வழிகாட்டலின் கீழ் NCOE களுக்குப் பொது முகாமைத்துவம், நிதி மற்றும் சேவைகள் வழங்குதல் ஆகியவற்றுக்கு ஆசிரியர் கல்வி பிரதான ஆணையாளர் (CCTE) பொறுப்பாக இருப்பார். ஆசிரியர் கல்வி தொடர்பான அதிகாரசபை (NATE) தேசிய மட்டத்தில் ஆசிரியர் கல்வியை ஒருங்கிணைப்பதற்காக உருவாக்கப்பட்டதாயினும் தற்போது அது செயலிழந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியகல்விக்கலலூரிகள் (National College of Education) 1986ஆம் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிகள் சட்டத்தின் கீழ் கல்விக்கல்லூரிகள் (NCOE) உருவாக்கப்பட்டுள்ளன. இன்று நாட்டில் பதினெட்டு தேசியக்கல்விக்கல்லூரிகள் காணப்படுகின்றன. இவற்றினூடாக மூன்று வருட கால முன் சேவைக் கற்பித்தல் பயிற்சி நெறி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரு வருடங்கள் கல்லூரிகளிலும், ஒரு வருடம் பாடசாலை கட்டுறுப்பயிற்சியாகவும் உள்ளது. NIE யின் சட்டத்தின் கீழ் கற்பித்தல் தகைமைகளை அங்கீகரிக்கக் கூடியதாக டிப்ளோமாக்களை வழங்குவதற்கு வகை செய்யப்பட்டு தரமான ஆசிரிய சமூகத்தை வழங்கும் நிறுவனங்களாக NCOE கள் அமைகின்றன.

NCOE களுக்கு அனுமதிக்கப்படுவோர் பல்கலைக்கழக அனுமதியை நாடும் பரீட்சார்த்திகள் போன்று சம தகைமைகள் கொண்டுள்ளனர். இப்பயிற்சி நெறிகள் தொடர்பான தகைமைகள் மற்றும் பாடநெறிகள் பற்றிய விரிவான விடயங்கள் வலயக் கல்வி அலுவலகம் திருகோணமலை CSDI பிரிவு வெளியிடும் வருடாந்த சஞ்சிகையான நித்திலம் - 2013 கல்விக்கல்லூரிகளும் ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற் பயிற்சிகளும் பற்றிய எனது கட்டுரையின் மூலம் அவதானிக்கலாம்.

ஆசிரியர்களுக்கு சேவைக்கால பயிற்சியை வழங்குவதற்காக சுமார் 100 ஆசிரிய நிலையங்களும் காணப்படுகின்றன. இவற்றுள் சில தங்குமிட வசதியையும் கொண்டுள்ளன.

**ஆ.மாகாணக் கல்வி அதிகார அமைப்புக்கள்**

13ம் திருத்தச் சட்டத்திற்கு முன்னர் தேசிய ரீதியில் நாட்டிலுள்ள மாகாணங்கள் சிக்கலான கட்டமைப்பினைக் கொண்டிருந்தன. மாகாண அதிகாரவமைப்புக்குப் பொறுப்புக்களை வழங்குவதற்காக 13வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் பிரகாரம் கல்வி அமைச்சின் கீழ் மாகாணக்கல்வி அமைச்சு காணப்பட்டதுடன், அனேகமாக மாகாண சபைகளில் முதலமைச்சரின் கீழ் இருக்கின்றது.
கல்வி அமைச்சின் செயலாளரின் அலுவலகத்தின் கீழ், அமைச்சுப் பதவிகள் காணப்படுவதுடன் மாகாண பணிப்பாளர் ஒருவரின் கீழ் மாகாணக்கல்வித் திணைக்களமும், வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்குக் கீழ் வலயக்கல்வி அலுவலகங்களும், கோட்டக் கல்வி பணிப்பாளர்களுக்குக் கீழ் கோட்டக் கல்வி அலுவலகங்ளும் பாடசாலைகளும் உள்ளன.

**இ. சட்டரீதியான அமைப்புக்கள்**

1985ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் தேசிய கல்வி நிறுவகம் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் இலங்கையின் கல்வி அபிவிருத்திக்காக திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல் மற்றும் கல்வியில் சில விசேட துறைகளில் பட்டப்பின் கல்வியை வழங்குதல், கல்வி முறையிலுள்ள ஆளணியினருக்கு அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்திற்கான தேர்ச்சியை வழங்குதல், கல்வியில் நிபுணத்துவ சேவைகளாகக் கிடைக்கச் செய்தல் போன்ற தொழிற்பாடுகளில் NIE ஈடுபட்டுவருகின்றது.

**ஈ.பாடசாலை முறைமை**

1945இல் கலாநிதி C.W.W.கன்னங்கரா அவர்களின் நிருவாகத்தின் கல்வி மீதான விசேட குழுவின் பரிந்துரைகளின் மூலம் இலவசக் கல்வி வழங்கப்படுவதுடன் 1960களில் பாடசாலைகளை அரசு கையேற்றதும் பாடசாலை முறைமையில் இருந்த சில சமனற்ற தன்மைகளும் குறைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது இலங்கையில் 13 வருட கால பாடசாலைக் காலம் காணப்படுகிறது. பாடசாலைகளில் கிடைக்கக் கூடிய கல்வி சார் நிலைகள் மற்றும் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியில் உள்ள கற்கைநெறியின் அடிப்படையில் பாடசாலைகள் விடுக்கப்பட்டுள்ளன. இதன்படி தரம் 1-5 வரையான 2486 பாடசாலைகளும், தரம் 1 -8 வரையான வகுப்புக்கள் கொண்டு 490 பாடசாலைகளும், தரம் 1 – 11 வரையான 4199 பாடசாலைகளும், தரம் 1– 13 வரையான வகுப்புக்களைக் கொண்டு 2213 பாடசாலைகளும் தரம் 6-11 வரையான வகுப்புக்களைக் கொண்டு 27 பாடசாலைகளும், தரம் 6-13 வகுப்புக்களைக் கொண்டு 299 பாடசாலைகளுமாக மொத்தம் 2006 பாடசாலை தொகை மதிப்பு புள்ளிவிபரப்படி 9714 பாடசாலைகள் காணப்படுகின்றன.

திரு.சி.பாக்கியராசா MA
(ஓய்வு நிலைப் பீடாதிபதி)
சௌமியம்
அமரசிங்கம் வீதி
ஆரையம்பதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "NITHILAM" Magazine Publication & Excellence Awarding Ceremony





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடைநிலைக் கல்வியில் பாடத்தெரிவுகளும் எதிர்காலமும்

*மார்க்கண்டன் ரூபவதனன்*
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம், பதுளை.*

## 1. அறிமுகம்

இலங்கையின் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பாடப் பிரிவுகளில், அவற்றின் பரீட்சைகளில், அவற்றினூடான பல்கலைக்கழகத் தெரிவுகளில் காலத்துக்குக் காலம் மாற்றங்கள் ஏற்பட்டுவந்துள்ளன. இவை உள்நாட்டு அரசியல், சர்வதேச ஆலோசனைகள், தேசிய கல்வி ஆலோசனைகள் என்பவற்றின் பரிந்துரைகளினாலோ திணிப்புகளினாலோ நிறைவேறி நடைமுறைக்கு வந்துள்ளன.

2012இல் கொள்கையாக வகுக்கப்பட்டு 2013தொடக்கம் “தொழினுட்பப் பிரிவு” கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பாடப் பிரிவுகளுள் ஒன்றாக நடைமுறைக்கு வந்துள்ளது. தற்போது ஐந்து பிரிவுகள் உள்ளன. அவை உயிரியல், கணிதம், கலை, தொழினுட்பம், வர்த்தகம் என்பனவாகும்.

2014இல் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரத்தில் சில பிரிவுகளில் பயில்வதற்குக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பாடங்களில் தாய்மொழி, கணிதம் ஆகியவற்றில் சித்தியடைந்திருக்கத் தேவையில்லை என்றும் அவற்றை உயர்தரப் பரீட்சைக்கு முன்னர் ‘எடுத்துக்கொடுக்கலாம்’ என்றும் அரசு அறிவித்துள்ளது. இறுதியாக நடைமுறைக்கு வந்துள்ள இம் மாற்றங்கள் உயர் தர பாடத் தெரிவுகள், மூன்றாம் நிலைக்கல்வி - உயர் கல்வித் தெரிவுகள் என்பவற்றில் பல கேள்விகளை, எதிர்பார்ப்புகளை, வாய்ப்புகளைத் தோற்றுவித்துள்ளன.

## 2. க.பொ.த. சா/தபாடத் தெரிவுகள்

கல்விக் கால அடுக்கமைவில் ஒரு வகுப்பில் மாணவர் பெறும் பெறுபேறு அதற்கு முன்னைய அல்லது பின்னைய வகுப்புப் பெறுபேறுகளுடன் தர்க்கரீதியான தொடர்புகொண்டிருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தொடர்புகள் இருக்கலாம்; இல்லாவிடினும் தவறில்லை.

பொதுவாக மக்கள் மத்தியில் உலவிவரும் ஆதங்க அல்லது அமைதிகாண் தேற்றரவுக் கூற்றை இங்கு உதாரணமாக நோக்கலாம்: ஸ்கொலஷிப்பில பாஸ் பண்ணுற எல்லாரும் கம்பஸ் போறதில்ல.

அந்த வகையில் க.பொ.த. சா/த இன் பெறுபேறு க.பொ.த. உ/த பெறுபேற்றில் தாக்கத்தைச் செலுத்தும் என வலுக் கட்டாயமாக ஊகிக்கவேண்டிய தேவை இல்லை. ஒரு விடயம் மட்டும் இங்கு முக்கியம். க.பொ.த. சா/த இல் நல்ல பெறுபேறு பெற வேண்டும்; க.பொ.த. உ/த இல் நல்ல பெறுபேறு பெற வேண்டும் என அவ்வக் காலத்தில் மாணவர்கள் உறுதிபூணவேண்டும்; மற்றவர்கள் மாணவருக்கு அதை ஊட்டவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் க.பொ.த. சா/த பரீட்சை ஒரு அடிப்படைத் தடைதாண்டல் பரீட்சையாகவே உள்ளது. அந்த வகையில் சில பாடங்கள் கட்டாய பாடங்களாக்கப்பட்டுள்ளன. தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமயம், வரலாறு ஆகிய பாடங்கள் கட்டாயமானவையாகும். இவற்றுடன் மூன்று தொகுதிகளில் இருந்து தலா ஒவ்வொரு பாடம் எடுத்து எல்லாமாக ஒன்பது பாடங்களுடன்மேலதிகமாக - விருப்பத்தெரிவாக இரண்டாம் மொழி ஒன்றையும் எடுக்கலாம்.

க.பொ.த. சா/த பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த. உ/த பிரிவை அதில் பாடங்களைத் தெரிவுசெய்யும் நிலைப்பாடு ஆரோக்கியமானதல்ல. தொகுதிப் பாடங்களைத் தெரிவுசெய்யும்போது எதிர்காலத்தில் க.பொ.த. உ/த இல் படிக்கப்போகும் பிரிவு, தெரிவுசெய்யும் பாடங்கள் என்பவற்றை முன்கூட்டியே கருத்தில்கொள்வது சாலச் சிறந்தது. அது மாணவர்களைச் சிறந்த பெறுபேறுகளை நோக்கி இட்டுச்செல்லும் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

| எதிர்காலத்தில் கற்கவிரும்பும் உயர்தரப் பிரிவு | தெரிவுசெய்யக்கூடிய பாடங்கள் |
|---|---|
| உயிரியல் | சுகாதாரமும் உடற்கல்வியும், விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும், கடற்றொழிலியலும் உணவுத் தொழினுட்பமும், தகவற் தொடர்பாடல் தொழினுட்பவியல், இரண்டாம்மொழி, அழகியற் கல்வி |
| கணிதம் | தகவற் தொடர்பாடல் தொழினுட்பவியல், இரண்டாம்மொழி |
| வர்த்தகம் | முயற்சியாண்மைக் கற்கைநெறி, வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும், தகவற் தொடர்பாடல் தொழினுட்பவியல், இரண்டாம்மொழி, அழகியற் கல்வி |
| தொழினுட்பம் | புவியியல், மனைப்பொருளியல், தொடர்பாடல் மற்றும் ஊடகவியற் கற்கை, வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும், விவசாயமும் உணவுத்தொழினுட்பவியலும், கடற்றொழிலியலும் உணவுத்தொழினுட்பமும், தகவற் தொடர்பாடல் தொழினுட்பவியல், இரண்டாம்மொழி, அழகியற் கல்வி(சித்திரம்) |
| கலை | புவியியல், மனைப்பொருளியல், தொடர்பாடல் மற்றும் ஊடகவியற் கற்கை, குடியுரிமைக் கல்வியும் மக்களாட்சியும், முயற்சியாண்மைக் கற்கைநெறி, வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும், தகவற் தொடர்பாடல் தொழினுட்பவியல், இரண்டாம்மொழி, அழகியற் கல்வி |

இங்கு குறிப்பிட்டுள்ளவாறு உயிரியல்,கணிதம் வர்த்தகம், தொழினுட்பம் மற்றும் கலைப் பிரிவினர் தங்களுக்குரியனவான பாடங்களைத் தெரிவுசெய்து படிப்பது உயர்தரக் கல்வியை இலகுவாக்குவதுடன் பல்கலைக்கழகத் தெரிவில் வாய்ப்புக்களையும் அதிகரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகக் கலைப் பிரிவைத் தெரிவுசெய்ய எதிர்பார்த்திருப்பவர்கள் நுண்கலைப்பாடங்களில் ஒன்றையும் சமூக விஞ்ஞானம் சார்ந்த ஒரு பாடத்தையும் மானுடவியல் சார்ந்த பாடங்களில் ஒன்றையும் படிப்பதுடன் அப்பாடங்களுடன் தொடர்பான பாடங்களை உயர்தர கலைப்பிரிவில் தொடர முடியுமா என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.இணையாக ஒருசில மொழிகளைப் பயில்வதும் உகந்தது.

தமக்கு உகந்த, தமது எதிர்காலத் தொடர் கல்விக்கு வழிவகுக்கக்கூடிய பாடங்களைத் தெரிவுசெய்யவேண்டியது இன்றியமையாததாகும்.
ஒவ்வொரு மாணவரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தாம் எடுக்கும் ஒன்பது பாடங்களிலும் "குறைந்த பட்சம்"C சித்திகளைப் பெற்றிருப்பது அவரை உயர்கல்வித் தேவைகளுக்கான அடிப்படைத் தகுதிகளை உடையவராக்கும். அல்லது தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களிலாவது C சித்திகளைப் பெற்றிருப்பது உயர்கல்வியிலும், தொழில்முறைக் கல்வியிலும் அவருக்குப் பல வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள உதவும்.

### 3. க.பொ.த. உ/த பாடத் தெரிவுகள்

க.பொ.த. உயர் தரத்தில் எந்தப் பிரிவைத் தெரிவுசெய்ய வேண்டும்; எந்தப் பிரிவைத் தெரிவுசெய்தால் குறிப்பிட்ட துறையில் சிறப்புத் தேர்ச்சி மிக்கவராக மிளிரமுடியும் என்பன பற்றியெல்லாம் சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்குப் புகட்டவேண்டும். குறைந்த பட்சம் க.பொ.த. சாதாரண தரத்திலாவது அது பற்றிய தெளிவுடன் மாணவர்களை வழிநடத்துவது அவர்களின் உயர்கல்வியை வளமாக்கும் என்பதை இவ்விடத்தில் மீண்டும் அழுத்திக்கூறவேண்டியுள்ளது.

இவ்வாறான தெரிவுகளின் அடிப்படையிலேயே அபிவிருத்தியடைந்த நாடுகள் என அடையாளப்படுத்தப்பட்ட நாடுகளில் கல்வி, ஆய்வு, கண்டுபிடிப்பு என்பன நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றன.
இலங்கையைப் பொறுத்தவரையில் இங்கு பயிலும் மாணவர்களின் கல்வி வரலாற்றில் க.பொ.த. உயர் தரப் பிரிவைத் தெரிவுசெய்வது முக்கிய தீர்மானம் எடுத்தலாகும். இத் தீர்மானம் நல்ல முறையில் அமைந்தால் அவர்களின் வாழ்க்கை சிறப்பாக அமையும். இத் தீர்மானம் எடுத்தலில் சில முக்கிய விடயங்கள் கருத்தில் எடுக்கப்படவேண்டும்.

1. மாணவரின் விருப்பம்
2. மாணவரின் பெற்றோரின் விருப்பம்
3. ஆசிரியரின் ஆலோசனை
4. மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புகள்
5. கற்கப்போகும் பாடசாலையின் வளம்
6. மொழிமூலம்
7. கற்கப்போகும் பிற பிரதேசம், சூழல், பாடசாலை வளம்
8. செலவுகள்

இவற்றில் மாணவரினதும் பெற்றோரினதும் விருப்பம் மிக முக்கியமானதாகும். இவ் விருப்பத்தைப் பரிசீலித்து மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புகள் பற்றித் தெளிவு கொடுக்கும் ஆசிரியரின் ஆலோசனை அல்லது வழிகாட்டல் மிக இன்றியமையாததாகும். இந்நிலையில் ஆசிரியர் மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புகள் குறித்து இற்றைப்படுத்திய தெளிந்த அறிவுள்ளவராக இருக்கவேண்டியது மிக மிக முக்கியமானதாகும்.

### 3.1. போட்டிப் பரீட்சை

இலங்கையில் க.பொ.த. உயர் தரப் பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாகும். இப் பரீட்சைப் பெறுபேறின் அடிப்படையிலேயே அரச உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். எனவே மாணவர்கள் போட்டி மனப்பான்மையுடன் படிக்கவே வேண்டும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிப் பரீட்சையாக இருப்பதனால் அந்தப் போட்டி குறித்து மாணவர்கள் தெளிவுபெற்றிருக்கவேண்டியது கட்டாயமானது.

1. எதற்கு – எந்தக் கற்கைக்கு – பட்டத்திற்கு போட்டியிடுகிறோம்
2. போட்டிக்கான அடிப்படைத் தேவைகள் - தகுதிகள் எவை?
3. யாருடன் போட்டிபோடுகிறோம்
4. எத்தனை தடவைகள் போட்டியிடலாம்
5. என்னென்ன (தந்திர)உபாயங்களைப் பிரயோகிக்கலாம்

என்பன பற்றியெல்லாம் மாணவர்கள் தெளிவுடன் இருக்கவேண்டும். இவ் விடயங்கள் மீதான தெளிவு மாணவர்களை இலக்கை அடையச் செய்யும் என்பது அனுபவ, உய்த்தறி முடிவு.

3.2. மொழிமூலம்

அண்மைக் காலமாக கல்விச் சமூகத்தின் மத்தியில் உலவிவருகின்ற ஒரு'அங்கலாய்ப்பு'த்தான் இந்த மொழிமூலம். தமது பிள்ளைகளை ஆங்கில மொழிமூலம் கற்பிப்பதா, தமிழ் மொழிமூலம் கற்பிப்பதா,சிங்கள மொழிமூலம் கற்பிப்பதா என்பதே அவ் அங்கலாய்ப்பு.

அறிவைப் பெறுவதற்கு மொழியறிவு இன்றியமையாதது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் இன்னமொழியில் கற்றால்தான் அறிவுகிடைக்கும் என்பது ஒருவகை அறிவீனமே. அதே வேளை,ஒரு குறிப்பிட்ட மொழியில் எல்லா விடயங்களையும் பெறமுடியாதிருப்பதும் உண்மை. அது அம் மொழியினுடைய குறையல்ல; அம்மொழியால் அடையாளப்படுத்தப்படுவோரின் குறை. தமிழும் இந்நிலையில் உள்ள ஒரு மொழிதான். ஆங்கிலத்தினால்தான் எல்லாம் ஆகும் என்பது அம்மொழிசார் அதிகாரத்தினால் அடிமைப்படுத்தப்பட்டவரின் அடிமைச் சிந்தனை. இப்படிச் சிந்திப்பதுதான் கோழைத்தனம் அல்லது பிற்போக்குத்தனம் என்றும் இவர்கள்(அடிமைச் சிந்தனையுடையோர்) ஆணித்தரமாக வாதிடக்கூடும். ஆனால், உலக அறிவியல் வரலாற்றை எடுத்தால் ஆங்கிலமல்லாத பிற மொழிகளால் பங்களிப்புச் செய்யப்பட்டவற்றின் விகிதாசாரத்தைத் தெரிந்தவர், உணர்ந்துகொள்வார்.

ஆனால், ஆங்கிலம் ஒரு சர்வதேசத் தொடர்பாடல் மொழி என்றவகையிலும் பெரும்பாலான அறிவியல் விடயங்கள் அதனூடாக உடனுக்குடன் கிடைக்கின்றன என்பதாலும் எமக்கு இலகுவில் கற்க வாய்ப்புள்ள மொழி எனும் வசதித்தன்மையாலும் ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்வது இன்றியமையாததும் ஒருவகையில் கட்டாயமானதுமாகும்.

ஒரு மாணவர் ஆங்கிலத்தில் அதி சிறப்புத்தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பில், நிலைப்பாட்டில் மாற்றுக்கருத்து இல்லவே இல்லை. ஆனால், ஆங்கிலம் இல்லாவிட்டால் எதிர்காலம் இல்லை என்பது ஒரு தன்னம்பிக்கையற்ற அறைகூவல்தான். அப்படி என்றால் ஜப்பான், சீனா, பிரான்ஸ், கொரியா, கியூபா, ஜேர்மனி, ரஷ்யா போன்ற நாடுகள் அடுத்த சில ஆண்டுகளுக்குள் இல்லாது போய்விடவேண்டும். எனவே மாணவர்களின் கல்வி இயல்பான முறையில் ஒரு மொழிமூலம் அமைவது சிறப்பானது. தாய்மொழிக் கல்வியே சிறந்தது என்பது மொழியியலாளர்களதும், கல்வியியலாளர்களதும் உய்த்தறி முடிவு.

இலங்கையில் உயர்கல்விக்கு மாணவர்களை உள்ளீர்க்கும் போது, மொழிமூலம் ஒரு அடிப்படையாகக் கொள்ளப்படுவது இல்லை என்பதையும் கருத்திலெடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம், தமிழ், சிங்களம் என்கிற மொழிமூலங்களில் எதில் படித்தாலும் அனைவரும் சமமாகவே கருதப்படுவர். பல்கலைகழகத் தெரிவுமுறையில்:

1. மாணவரது உயர்தரப் பிரிவு
2. அதில் தெரிவுசெய்துள்ள பாடங்கள்
3. மாணவர் அதில் பெற்றுள்ள பெறுபேறு - இஷற் புள்ளி
4. மாணவரது நிருவாக மாவட்டம்
5. மாணவர் தெரிவுசெய்யும் பல்கலைக்கழக கற்கைநெறி

என்பனவே கருத்தில் கொள்ளப்படும். மாறாக இவர் இன்ன மொழியில்(உ-ம்: ஆங்கிலம்) கற்றிருக்கிறார். ஆகவே இவரை முதலில் பல்கலைக்கழகத்திற்குள் அனுமதிக்கவேண்டும் என்று ஒரு நியதி இல்லை.

### 3.3. பாடத் தெரிவுகள்

க.பொ.த. உயர் தரப் பிரிவைத் தெரிவுசெய்ததன் பின்பு அப்பிரிவுள் என்னென்ன பாடங்களைத் தெரிவுசெய்யவேண்டும் என்பதும் முக்கியமாகும். அதில் ஒரு பிரிவிலிருந்து பல்கலைக்கழத்திற்குத் தெரிவாகக்கூடிய 'உயர்' கற்கைநெறிக்குத் தேவையான பாடங்களை எடுத்தால் போதுமானது. அதேவேளை பல்கலைக்கழகக் கற்கைநெறிக்கு எதிர்பார்க்கும் பாடங்களை முன்கூட்டியே தெரிவுசெய்து படிப்பதும் உகந்தது.

| பிரிவு | பொதுவானவை | தெரிவுக்குரியவை |
|---|---|---|
| உயிரியல் | உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் | விவசாயவிஞ்ஞானம், கணிதம், இணைந்தகணிதம், உயர்கணிதம், உணவுத்தொழிநுட்பம், உயிர் வளத் தொழிநுட்பம், விவசாயத் தொழிநுட்பம் |
| கணிதம் | இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் | உயர்கணிதம்,உயிரியல், விவசாயவிஞ்ஞானம், கணிதம், தகவலும்தொடர்பாடல் தொழிநுட்பமும், கணக்கியல், வியாபாரப் புள்ளிவிபரவியல், பொறிமுறைத் தொழிநுட்பம், குடிசார்தொழிநுட்பம் (இவற்றுடன் கலை, வர்த்தகப் பாடங்கள் சில) |
| வர்த்தகம் | வியாபாரக் கற்கைகள், பொருளியல், கணக்கியல் | வியாபாரப் புள்ளிவிபரவியல், இணைந்தகணிதம், பௌதிகவியல்,தகவலும் தொடர்பாடல் தொழிநுட்பமும், விவசாயவிஞ்ஞானம், புவியியல், வரலாறு, அரசியல், அளவையியலும் விஞ்ஞான முறையும்,ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் |
| தொழிநுட்பம் | பொறியியற் தொழினுட்பவியல் அல்லது | பொருளியல்,புவியியல், மனைப்பொருளியல், ஆங்கிலம்,தொடர்பாடல் மற்றும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | உயிரியல்முறைமைகள் தொழினுட்பவியல், தொழினுட்பவியலிற்கான விஞ்ஞானம் (இவற்றுடன் அடுத்த நிரலிலிருந்து ஒரு பாடம்) | ஊடகக்கற்கை,தகவல் மற்றும் தொடர்பாடற்தொழினுட்பவியல், சித்திரம், வணிகக் கல்வி, விவசாயவிஞ்ஞானம், கணக்கியல் |

கலைப்பிரிவில் கல்வி கற்க விரும்புபவர்கள்

1. 3 தேசியமொழிகளையும் எடுக்கலாம் (த/சி/ஆ)
2. கூடியபட்சம் 2 செம்(சாஸ்திரீய) மொழிகளுடன் 1 தேசிய மொழி
3. 3 சமூக விஞ்ஞான பாடங்கள்/பிரயோக சமூகக் கற்கைகள்
4. 2 சமூக விஞ்ஞான பாடங்கள், 1 தொழிநுட்வியல் பாடம்
5. ஒரு சமயம் எடுத்தால் அதே சமயத்தின் நாகரீகம் எடுக்கலாகாது.
6. அழகியற் கற்கைகளில் ஒன்று

எனப் பாடங்களைத் தெரிவுசெய்து கொள்ளமுடியும்.

க.பொ.த. உயர் தரப் பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சை என்பதால் மாணவர் படிப்பதற்குச் சுலபமான பாடங்கள் எனத் தாம் கருதும் பாடங்களை எடுத்து பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதை இலக்காகக் கொண்டு செயற்படுவது நல்லது.

3.4. பாடத் தெரிவுகளும் இஸற் புள்ளியும்

இஸற் புள்ளி ஒவ்வொரு தனி மாணவரும் தாம் எடுத்துக்கொண்ட பாடத்தில் பெற்ற பெறுபெற்றின் கணிப்பீடு ஆகும். மூன்று பாடங்களில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக இது கணிக்கப்படுகின்றது.பின்பு சேர்த்துத் தரப்படுகிறது.

ஒரு பாடத்தை எடுத்த மாணவர்கள் மத்தியில் குறிப்பிட்ட ஒரு மாணவர் பெற்ற புள்ளியானது, அப்பாடத்தின் அதிகூடிய புள்ளிக்கும் மிகக்குறைந்த புள்ளிக்கும் எவ்விடத்தில் இருக்கிறது என்பதே இதன் (இஸற் புள்ளி) சுருக்கமான விளக்கம்.

இவ் இஸற் புள்ளிக் கணிப்பீட்டில் மாணவரின் மொழிமூலம், மாவட்டம் என்பன தாக்கஞ் செலுத்தா.

உயிரியல்,கணிதம், வரத்தகம் ஆகிய பிரிவுகளுக்கான இஸற் புள்ளிகளைக் குறித்து மாணவர்கள் விசனப்பட்டுக்கொள்வதில்லை.

இஸற் புள்ளி அமுலுக்கு வந்ததுமுதல் இதுவரை காலமும் கலைப் பிரிவு மாணவர்கள் அங்கலாய்த்துக் கொள்வதை அவதானிக்கமுடிகிறது. இந்தப் பாடத்திற்கு இஸற் புள்ளி கூட; இந்தப் பாடத்திற்கு இஸற் புள்ளி குறைவு எனத் தமக்குள் தீமானித்து பாடங்களைத் தெரிவுசெய்கிறதில் குழம்பிப்போய்விடுகிறார்கள்.

இவ்வாறு எல்லா மாணவர்களும் நினைத்து ஒரு குறிப்பிட்ட சில பாடங்களுக்குள் அனைவரும் முடங்கிப்போயிருக்கிற சந்தர்ப்பங்களையும் அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த. உயர் தரப் பரீட்சை முடிவுற்றதன் பின்னரே அப் பரீட்சையில் தோற்றிய ஒவ்வொரு மாணவருக்குமான இஸற் புள்ளி தீர்மானிக்கப்படுகிறது என்பதை மனதிலிருத்திக்கொள்ள வேண்டும்.

3.5. நிருவாக மாவட்டம்

புத்தியுள்ள சமூக சிந்தனையற்ற பலர் தமது பிள்ளைகளை வெட்டுப் புள்ளி குறைந்த மாவட்டங்களுக்குக் கொண்டுசென்று க.பொ.த. உயர் தரம் கற்பித்துப் பரீட்சை எழுத வைக்கிறார்கள்; அங்கு ஏற்கனவே வசித்துவரும் மாணவர்களின் வாழ்க்கையில் மண்ணையள்ளிப்போட்டு. தமது பிள்ளைகள் எப்படியாவது, இலகுவாகப் பல்கலைக்கழகம் புகுந்துவிடவேண்டும் என்கிற 'நல் நோக்கத்திற்காக'.

மாவட்ட (இஸற் புள்ளிக்கான) வெட்டுப் புள்ளி என்பது மாவட்டத்தின் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டது. ஒரு மாவட்டத்தில் வாழும் இனக்குழுக்களின் விகிதாசாரம் அதில் தாக்கம் செலுத்துவதில்லை. இதனால் பல்கலைக்கழகத்தின் ஒரு குறிப்பிட்ட கற்கைநெறிக்கான வெட்டுப்புள்ளிக்குள் வரும் அனைவரும் பாகுபாடின்றி சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

உதாரணமாக: ஒரு மாவட்டத்தில் கற்கைநெறி ஒன்றிற்கான வெட்டுப்புள்ளிக்குள் வரும் மாணவர் தொகையில் அம் மாவட்டத்தில் எண்ணிக்கையில் குறைந்தளவுடைய இனத்தவர் தமது விகிதாசாரத்தின் எண்ணிக்கையில் கூடுதலாகவோ, குறைவாகவோ பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கான வாய்ப்பு இலங்கையில் உண்டு.

எனவே தாம் வாழுகின்ற மாவட்டத்திலேயே அங்கு கற்கின்ற மாணவர்களுடன் போட்டி போட்டு முன்னிலைக்கு வரும் வகையில் கற்றுத்தேறவேண்டும். இதற்கு ஆசிரியரும் பெற்றோரும் உறுதுணையாக இருக்கவேண்டும்.

4. தொகுப்புரை

க.பொ.த. சாதாரண தரத்திலேயே தமக்குகந்த பாடங்களைத் தெரிவுசெய்துகொண்டு பரீட்சையில் குறைந்த பட்ச சித்திகளையாவது பெற்றுக்கொள்ளவேண்டும். அத்துடன் தாய்மொழியறிவுடன் மேலதிகமாக குறைந்தது ஆங்கிலம் உள்ளிட்ட இருமொழிகளில் திறன்கொண்டிருப்பதும் சிறந்தது.

அத்துடன்,க.பொ.த. உயர் தரப் பிரிவில் மாணவர்கள் தம்மால் இலகுவாக விளங்கிக் கற்று, கூடிய புள்ளிகளைப் பெறக்கூடிய பாடங்களைத் தெரிவுசெய்து அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வாழ்வில் தாம் முன்னேறக்கூடிய வழிகளை முன்கூட்டியேதயார்செய்துகொள்வது உசிதமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Emotional Intelligence(EI)

*S.Praveena*
*Lecturer (Probationary)*
*Department of Business and Management Studies*
*Faculty of Communicating and Business Studies*
*Trincomalee Campus, Eastern University, Sri Lanka*

Scholars, researchers, psychologists, practitioners, and academics have now turned their eyes on the very popular topic of emotional intelligence. Managing as well as controlling emotions of each and every individual plays an important role in succeeding in their personal life as well as career life. And more and more companies are now seeing that encouraging emotional intelligence skills is a vital component of any organization's management philosophy.

Early psychologists focused on cognitive aspects (Thorndike &Stein, 1937). Later it was found that non-cognitive aspects played an important role in a person's life (Wechsler, 1940). Wechsler identified "non-intellective elements" as "intellective elements" including affective, personal and social factors. Wechsler stated that non-cognitive abilities are crucial in predicting one's ability for success in life especially in adaptation. The author also stated the non-intellective abilities which could determine intelligent behaviours.

Gardner (1983) published a work on multiple intelligences. In his models he mainly focused on two additional intelligences namely, intrapersonal intelligence and interpersonal intelligence. Gardner defined intrapersonal intelligence as the ability to understand one's own feelings, motivations and fears whereas interpersonal intelligence was defined as the ability to understand others and their desires, motivations and intentions. Gardner suggested that the two additional intelligences were also considered as important as traditional intelligence which led to success. Then the term 'emotional intelligence' was used firstly in Payne's doctoral thesis.

From time to time, more scholars have tried to provide the best definition of emotional intelligence. Salovey and Mayer (1990) defined emotional intelligence as "the subset of social intelligence that involves the ability to monitor one's own and others' feelings and emotions, to discriminate among them, and to use this information to guide one's thinking and actions". Later they improved the definition for emotional intelligence as "the ability to perceive emotions, to access and generate emotions so as to assist thoughts, to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

understand emotions and emotional knowledge, and to reflectively regulate emotions so as to promote emotional and intellectual growth" (Mayer & Salovey, 1997, p.5).Later Goleman (1998, p.317) defined emotional intelligence in his book as "the capacity for recognizing our own feelings and those of others, for motivating ourselves, and for managing emotions well in ourselves and in our relationships". According to Mayer, Salovey and, Caruso (2000, p.396), emotional intelligence defined as "the ability to perceive and express emotion, assimilate emotion in thought, understand and reason with emotion, and regulate emotion in the self and others". Later Mayer, Roberts, and Barsade (2008, p.111) defined the emotional intelligence as "the ability to carry out accurate reasoning about emotions and the ability to use emotions and emotional knowledge to enhance thought".

Numerous studies have been conducted during the recent past decades to examine the relationship between emotional intelligence and diverse areas specially career and organizational success (Derman, 1999; Dries, & Pepermans, 2007). For example, Derman (1999) examined the association between emotional intelligence of family- member managers and business success and to find out whether an individual manager with minimum emotional intelligence has a negative effect on the business compared to the higher level emotional intelligence of managers, by taking forty six participants and eleven families in Israel. The results showed that there was a strong relationship between emotional intelligence and business success. Later, Dries and Pepermans (2007) conducted a study to reveal emotional intelligence and identify the high potential managers. In this study fifty one high potential and fifty one regular managers were selected as the sample. The results showed that there is a higher level of emotional intelligence elements such as assertiveness, independence, optimism, and social responsibility revealed in high potential managers compared to regular managers. Also it was found that high potential managers showed the higher level of job performance.

Further, emotional intelligence can be deliberately developed and it is supporting leadership development (Groves *et al.*, 2008). Emotional competencies and personality traits are valuable predictors of job performance and emotional competencies seem to be more powerful predictors of performance than personality traits (Ramos, Fernández-Berrocal, & Extremera, 2007). In the present context emotional intelligence is identified as one of the competencies that should be possessed by managers since it is positively associated with diverse areas of personal and organizational outcomes. Hence, EI of managers leads to business success (Derman, 1999), to enhance mental health (Schutte, Malouff, Thorsteinsson, Bhullar, & Rooke, 2007), to enhance the financial position of the organization (Stein, Jeremy, &Gill Sitarenios, 2009), lead to job performance (Hsi-An & Susanto, 2010), and to enhance the effectiveness of corporate governance (Nwokah & Augustine, 2010).

Also it was found that emotional intelligence of employees leads to enhance the financial position of the organization. Executives who possessed higher levels of empathy, self-regard, reality testing, and problem solving were more likely to yield high profit-earning companies (Stein *et al.*, 2009). Similarly, another study showed that emotional intelligence of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

government employees within public organizations has had an impact on job performance similar to that in private organizations (Hsi-An & Susanto, 2010).

A number of studies tested the relationship between EI and marketing effectiveness as well. One study found that emotional intelligence leads to marketing effectiveness in corporate organizations in Nigeria (Nwokah & Augustine, 2009). Another survey was administered using an assessment process which incorporated "buyers'" and "suppliers'" assessment for the independent variable, emotional intelligence, and the dependent variable, relationship performance, using regression and correlation analysis. The results showed that buyers' emotional intelligence is positively related to relationship performance, most significantly from the perspective of their key suppliers (Schumacher, Wheeler, & Carr, 2009).

Moreover studies supported that EI enhances the effectiveness of corporate governance (Nwokah & Augustine, 2010). Also one previous study tested the relationship between the three dimensions of emotional intelligence namely, self-awareness, self-regulation, and empathy to managers' concern for the quality of products and services and problem solving behaviour of subordinates. They found that self-awareness and self-regulation are positively correlated with problem solving and self- regulation was positively related with concern for quality. Study suggested that supervisors, who are deficient in EI, could be provided appropriate training that could improve their concern for quality and problem solving (Rahim & Minors, 2003).

In several other studies emotional intelligence has been tested with leadership (Barling, Slater& Kelloway, 2000; Burbach, 2004). Barling *et al.* (2000) found the association between emotional intelligence and transformational leadership by controlling the attribution style of leaders. The results showed that emotional intelligence is linked with a few aspects of transformational leadership namely, inspirational motivation and idealized influence. However this study showed that laissez faire management was not associated with emotional intelligence. Later Burbach (2004) tested the relationship between emotional intelligence and leadership traits namely; transformation, transactional, and laissez-faire behaviours. In this study the sample was construction executives who possessed the job titles of presidents or vice presidents. The results showed that there was a positive correlation between the variables of emotional intelligence and transformational leadership.

Thus, emotional intelligence provides positive consequences for everyone. Especially it determines the leaders' success in organizations. Emotional intelligence is considered as twice as important as technical skills and intellectual intelligence for all jobs at all levels (Goleman, 1998). The importance of emotional intelligence for leaders as without emotional intelligence, a person can have the best training in the world, an incisive, analytical mind, and an endless supply of smart ideas, but he/she still won't make a great leader. Further he stated that among star performers with average areas in senior leadership positions, nearly ninety



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

percent of the differences in their profiles was attributable to emotional intelligence factors rather than cognitive abilities.

**References:**

Barling, J., Slater, F. & Kelloway, E. K. (2000). **Transformational leadership and emotional intelligence: an exploratory study**. Leadership and Organization Development Journal, 21,157-161.

Buchanan, B. (1974). **Building organization commitment: The socialization of managers in work organizations**. AdministrativeScience Quarterly, 22, 533-546.

Derman, J. (1999). **The relationship between the emotional intelligence of family member managers and business success in family business**. Dissertation Abstracts International, 55: 2397.

Dries, N., & Pepermans, R. (2007). **Using emotional intelligence to identify high potential: Metacompetency perspective**. Leadership and Organizational Development Journal, 28(8), 749-770.

Gardner, H. (1983). **Frames of mind: The theory of multiple intelligences**. New York: Basic Books.

Goleman, D. (1995). **Emotional Intelligence: Why It Can Matter More than IQ**. New York: Bantam Books.

Goleman, D. (1998). **Working with Emotional Intelligence**. New York: Bantam Books.

Groves, K. S., McEnrue, M. P & Shen, W. (2008). **Developing and measuring the emotional intelligence of leaders**. Journal of Management Development, 27(2), 225 – 250.

Hsi-An,S. & Susanto,E. (2010). **Conflict management styles, emotional intelligence, and job performance in public organizations**. International Journal of Conflict Management, 21(2), 147 – 168.

Mayer,J.D.,Roberts,R. D. & Barsade, S. G. (2008). **Human Abilities: Emotional Intelligence**. Annual Review of Psychology, 59: 507-536.

Mayer, J.D.& Salovey, P. (1997). **What is emotional intelligence?**. In: Salovey,P.& Sluyter,D.J. (Eds.) Emotional Development and Emotional Intelligence. New York: Basic Books.

*Nwokah,* N. G. &Augustine, I. A. (2010). **Corporate Governance**. International Journal of Business in Society, 10(2),150-162.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rahim, M. A & Minors, P. (2003). **Effects of emotional intelligence on concern for quality and problem solving.**Managerial Auditing Journal, 18(2), 150 – 155.

Ramos, N., Fernández-Berrocal, P. & Extremera, N. (2007). **Perceived emotional intelligence facilitates cognitive-emotional processes of adaptation to an acute stressor.** Cognition and Emotion, 21, 758-772.

Stein, S.J., Jeremy, A.P.P. & Gill Sitarenios, Y. (2009). **Emotional intelligence of leaders: a profile of top executives.** Leadership & Organization Development Journal, 30(1), 87 – 101.

Salovey, P. & Mayer, J. D. (1990). **Emotional intelligence.** Imagination, Cognition andPersonality, 9(3), 185-211.

Schumacher, L., Wheeler, J. V. & Carr, A.S. (2009).**The relationship between emotional intelligence and buyer's performance.** Journal of Business & Industrial Marketing, 24.

Schutte, N. S., Malouff, J. M., Thorsteinsson, E. B., Bhullar, N & Rooke, S. E. (2007). **A meta-analytic investigation of the relationship between emotional intelligence and health Personality and Individual Differences.** 42(6), 921–933.

Thorndike, R. L. & Stein, S. (1937). **An evaluation of the attempts to measure social intelligence.** Psychological Bulletin, 34, 275-284.

Wechsler, D. (1940). **Non intellective factors in general intelligence.** Psychological Bulletin, 37, 444-445.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு ஒரு ஆசிரியர் தேவை
# I Need a Teacher



- என்னை நான் என அடையாளம் காண
- நான் சொல்வதை செவிமடுக்க
- என்னைப் பாராட்ட
- எனக்கு பாதுகாப்பை வழங்க
- எனது தேவைகளை அடையாளம் காண
- எனது வகுப்புத் தோழிகளின் பல்வேறு பண்புகளை அடையாளம் காண
- சமூகம் மற்றும் சூழல் குறித்து எனக்கு அறிவூட்ட
- எனது ஆற்றல்களையும், குறைபாடுகளையும் அடையாளம் காண
- எனது பிரச்சினைகளைத் தீர்க்கவும் எனக்கு உதவவும்
- தலைமைத்துவத்தை நோக்கி என்னை இட்டுச் செல்ல
- கற்பதற்கான ஒரு சிறந்த சூழலை ஏற்படுத்த
- சவால்களை எவ்வாறு வெற்றிகரமாக எதிர்கொள்வது என என்னை உற்சாகப்படுத்த
- எனது புத்தாக்க சிந்தனையை விருத்தி செய்ய
- ஒரு விடயத்தில் கவனத்தைச் செலுத்துவதற்கான எனது ஆற்றலை விரிவுபடுத்த
- ஒரு படைப்பாற்றல் கொண்ட நபராக என்னை வளர்த்தெடுக்க
- எனது துணிச்சலையும் சுயகௌரவத்தையும் வளர்க்க
- விழுமியங்களையும் ஒழுக்கநெறிகளையும் என்னுள் நான் உள்வாங்க
- எனது வளர்ச்சிக்காக நான் பின்பற்றக்கூடிய பண்புகளைக் கொண்டவராக
- திறந்த மனத்துடன் முடிவெடுக்கக் கூடியவளாக என்னை உருவாக்க
- எனது பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்த
- ஒரு பன்மைக் கலாசார சமூகத்தில் வாழ்வதற்கு அவசியமான தேர்ச்சிகளை விருத்தி செய்ய
- ஒரு திறமை வாய்ந்தவனாக என்னை உருவாக்க
- எனது சிறுவர் உரிமைகளைப்பாதுகாக்க
- ஒரு சிறந்த பிரஜையாக என்னை உருவாக்க
- என்னுடனும், என்னிலும் எனக்காகவும் இருக்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் இல்லாவிட்டால் நிலைமை எவ்வாறிருக்கும்
## Although facts are such,what will be the situation if there was no teacher











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலையில் மிக உயர்ந்த மனித வளமாக விளங்குபவர்கள் ஆசிரியர்களாவர்.
- இவர்களே பாடசாலையின் கல்வி அடைவை தீர்மானிக்கும் அத்தியாவசிய காரணிகளாவர்.
- மாறுகின்ற உலகத்திற்கேற்ப திறன்களையும் புதிய அனுபவங்களையும் பெற்றவாறு அவற்றைத் தமது மாணவர்களுக்குக் கடத்தும் உயிரோட்டமான நபர் ஆசிரியராவார்.
- பாடசாலைக் கற்பித்தல் செயற்பாடுகளின் போது பெற்றுக்கொண்ட அனுபவங்கள், பிரச்சனைகள் ஆகியவற்றுக்குத் தீர்வு காணும்போது இவர்கள் ஆய்வாளர்களாகின்றனர்.
- இவ்வாறு ஆசிரியர்களின் வகிபங்குகள் பின்வரும் ஒரே பார்வையில்.........




- மாணவர்களின் வளர்ச்சிப் படிநிலையைக் கருத்திற் கொள்ளாது அப்பருவத்திற் செல்வாக்குச் செலுத்தும் இயல்பூக்கங்களை சிறந்த முறையில் வளப்படுத்துவது ஆசிரியரின் கடமையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்களின் ஆற்றல்களையும் கற்றல் விளைவுகளையும் தீர்மானிப்பதில் ஆசிரியர் தொகையும், ஆசிரியர் தராதரமும் அவசியமானவை. இவ்விடயத்தில் பாடசாலை மட்ட மேம்பாடு பிரதான இடம் வகிக்கின்றது.

**You decide which is the best way of Teaching .......**








அறிவுடைய சமூகமொன்றில் அறிவே உந்து சக்தியாகும், என்ற நிலைப்பாட்டில் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றலை விருத்தி செய்யுமுகமாக, வெற்றிக்கான பல்வேறு வழிமுறைகளினூடாகவும் தொடர்ந்து செல்வதற்கான வாய்ப்புகளை பாடசாலைகள் வழங்குதல் வேண்டும். கற்றல்மீதும் மாணவர்களின் உண்மையான தேவைகளின் மீதும் கவனம் செலுத்துவதன் மூலம் வினைத்திறன்மிக்க கற்பித்தல் கலாசாரத்திற்கு வழிகோலலாம்.

**TEACHER YOU ARE:**

**T: TALENTED**

**E: ELEGANT**

**A: AWESOME**

**C: CHARMING**

**H: HELPFUL**

**E: EFFICIENT**

**R: RECEPTIVE**



தேடல்:
www.wikipedia.com , அகவிழி, www.google.lk

திருமதி.உ.ஜோதிநாதன் SLPS - I
Dip.in.Sch.Management(Merit)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவையின் அவசியமும், நடைமுறைகளும்

**B. SOBA, LECTURER,**
**DEPARTMENT OF EDUCATION & CHILD CARE**
**EASTERN UNIVERSITY**

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"என்ற ஔவையாரின் கூற்றிற்கிணங்க மனிதராகப் பிறந்த எல்லோருக்கும் வழிகாட்டலும் ஆலோசனையும் தேவைப்பாடுடையதாகக் காணப்படுகின்றது. அன்று தொடக்கம் இன்று வரையில் வழிகாட்டல் ஆலோசனை பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வந்துள்ளது. ஆரம்பத்தில் கல்வி என்பது வழிகாட்டல் என்றும், வழிகாட்டல் என்பது கல்வி என்றும் கருதப்பட்டதோடு,குடும்பம் மற்றும் சமூகம் என்ற அடிப்படையில் ஒழுக்க விழுமியங்களைப் பேணும் பொருட்டும் பெரியவர்கள் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் புத்திமதிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வருதல் வழக்கமாக இருந்தது. இன்று உலகமயமாக்கலின் விளைவாகச் சமூக அமைப்பு மாற்றம் பெறுவதுடன் மாணவர்களின் எண்ணங்களும், சிந்தனைகளும் மாற்றமடைந்து கொண்டு செல்வது நாம் காணக்கூடிய விடயமாகவுள்ளது. இந்நிலையில் வழிகாட்டல் ஆலோசனைக்கான தேவைகள் விரிவடைந்து உளவியல் மற்றும் சமூக விஞ்ஞான அடிப்படைகளைக் கொண்ட கொள்கைகளும், கோட்பாடுகளும் பயன்படுத்தப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இதன் காரணமாக பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவை என்பதைத் தாண்டி வழிகாட்டல் மற்றும் உளவளத்துணைச் சேவை என்றளவுக்கு மாற்றம் பெற்று வருவதாகக் காணப்படுகின்றது. பெரும்பாலான மாணவர்களிடையே உள ஆரோக்கியத்தின் அடிப்படைத் தேவைகளான குழுவாகச் செயற்படல், விட்டுக்கொடுத்தல், பிறரைமதித்தல், சமூக வலைப்பின்னல் போன்றவை உடைந்து நான் மட்டுமே வெற்றி பெற வேண்டும் என்ற சிந்தனை மாணவர் மத்தியில் மேலோங்கியுள்ளமையைக் காணக் கூடியதாகவுள்ளது. இந்நிலையை மாற்றியமைத்து சிறந்த மாணவர் சமூகத்தை உருவாக்குவதனூடாக நற்பிரஜை கொண்ட சமூகத்தை உருவாக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஆரம்ப கால வாழ்க்கை முறை சிக்கலின்றி எளிமையாகவும், பாடசாலைகளில் பயிலும் மாணவர் தொகை குறைவாகவும் காணப்பட்டமையினால் இச்சேவை பாடசாலைக் கல்வியுடன் இணைந்த ஒரு அம்சமாகவே கருதப்பட்டது. இதனால் அக்காலத்தில் வழிகாட்டல் ஆலோசனைக்கெனத் தனிப்பட்ட சேவையொன்று அவசியமாகத் தோன்றவில்லை. ஆனால் இன்றைய நிலையில் ஆசிரியர்கள் கற்பித்தற் செயற்பாடுகளுடன் வழிகாட்டல் ஆலோசனை சேவையின் பொறுப்பையும் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலுள்ளதால் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கெனத் தனியான ஒரு பிரிவு தேவையாகவுள்ளது.இன்று குடும்ப அமைப்புக்கள் மாற்றமடைந்து வருவதாலும், சமூகப் பொருளாதார கலாசார மாற்றங்கள் மிக விரைவாக ஏற்படுவதாலும் அவற்றுக்கேற்ப மாணவர்கள் தம்மை இயைபுபடுத்திக் கொள்ள முடியாமல் தடுமாறுகின்றனர். இவற்றினைக் கருத்திற் கொள்ளும் போது கல்வி நிலையங்களில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையானது ஓர் உடனடித் தேவையாகவுள்ளது. இத்தேவைகளை நிறைவேற்றும் வகையில் ஆசிரியர் தாம் கற்பிக்கும் பாட விடய அறிவுடன் கல்வி உளவியல் சம்பந்தமாகவும், வழிகாட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனை சம்பந்தமாகவும் பயிற்சி பெற்றிருப்பது இன்றியமையாததாகும். வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தேவையும் பரப்பும் காலத்துக்குக் காலம் விரிவடைந்து கொண்டே வந்துள்ளது. அந்த வகையில் கல்வி நிலையங்கள், பயிற்சி நிலையங்கள், மருத்துவ நிலையங்கள்,தொழில் நிறுவனங்க்கள், புனர்வாழ்விற்கு வழிகாட்டும் நிலையங்கள் குடும்ப அமைப்புக்கள் போன்ற துறைகளில் பயனுள்ளதாக இருந்து வருகின்றது. பிரச்சினைக்குத் தீர்வு காணவோ அதனைச் சமாளிக்கவோ முடியாமல் துன்பப்படும் அனைவருக்கும் வயது, பால் மற்றும் சமூக வேறுபாடின்றி வழிகாட்டல் ஆலோசனை சேவை பெரிதும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

வழிகாட்டல் ஆலோசனை பற்றி பல்வேறு உளவியலாளர்களால் பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. S.morrison குறிப்பிடுகையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உறுதியான முடிவுகளை எடுப்பதற்கு அளிக்கப்படும் உதவி வழிகாட்டல் எனக் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுவாகப் பார்க்குமிடத்து வாழ்க்கையின் சகல சந்தர்ப்பங்ளிலும் எல்லாப் பருவங்களிலும், சூழலுடன் இயைபாக்கம் காணவும் சுய திறன்களை விருத்தி செய்யவும் பொருத்தமான தெரிவுகள் செய்யவும், தீர்மானங்களை மேற்கொள்ளவும் உளவியல் அணுகுமுறை அடிப்படையில் பயிற்சி பெற்றவர்களால் வழங்கப்படும் உதவி வழிகாட்டல் என்ப்படுகின்றது.ஆலோசனை என்னும் போது ஒரு பிரச்சினையை எதிர்நோக்கிக் கொண்டிருப்பவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு ஆலோசகரை நேர்முகமாகச் சந்தித்து கலந்துரையாடி அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறைகளைத் தீர்மானித்துக் கொள்வதாகும்.இதனடிப்படையில் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையானது அதிபர், ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆலோசகர் போன்றோரால் ஒரு மாணவன் மனநிறைவும் சமூகப் பொருத்தப்பாடும் பெற்றுக் கொள்ளும் வகையிலும், தன் ஆற்றல்களின் உச்ச நிலையை அடைந்து கொள்ளும் பொருட்டும் வழங்கப்படும் உதவிகள் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையினுள் முக்கியத்துவமுடையதாகும்.இன்றைய நிலையில் மாணவர்களை ஆற்றுப்படுத்தல், சீரமியப்படுத்தல் என்ற அடிப்படைகளில் இச்சேவையானது முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றது.

பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவையானது ஏன் அவசியமாகவுள்ளது?

இன்றைய நிலையில் விஞ்ஞான தொழிநுட்ப முன்னேற்றம்,தகவல் தொழில் நுட்பத்தின் விரைவான வளர்ச்சியும், மாணவர் மத்தியில் அதன் செல்வாக்கும், பாடசாலைக் கல்விக்கும் வேலை உலகிற்கும் இடையேயுள்ள பாரிய இடைவெளி,சமூக கலாசார மாற்றம், குடும்ப அமைப்புக்கள் சீர்குலைந்து வருதல், கற்கைநெறி சார்பான தேவைகள், தொழில் வாழ்க்கைக்கான வழிகாட்டலின் தேவை, பொதுசனத் தொடர்பு விரிவாக்கம்,மாற்றமடையும் கலாசாரம் போன்ற காரணங்களினால் மாணவர்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்பட்ட வண்ணமுள்ளது. இதனால் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவை கட்டாய தேவையாகவுள்ளது.

ஒரு பிள்ளையின் விருத்தியில் குடும்பத்தின் பங்கு இன்றியமையாததாகும். தாய் தனது குழந்தையை அரவணைத்து பராமரித்து அப்பிள்ளையின் உடல், உளத் தேவைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால் ஆளுமைச் சீர்கேடுகள் ஏற்படுமென உளவியல் ஆய்வுகளும் உறுதியாக நிருபித்துள்ளன. இவ்வாறிருக்கையில் பெற்றோர் தொழில் நிமித்தமாக வெளிநாடு செல்வதால் பெற்றோரின் அன்பு, ஆதரவு, தேவையான ஊட்டச்சத்துள்ள உணவுகள், பொருத்தமான பொழுதுபோக்கு வசதிகள் கிடைக்காமை போன்ற காரணங்களினால் பிள்ளைகள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படுவதோடு,பொருத்தப்பாடற்றவர்களாகவும் மாறுகின்றனர். இவ்வாறான மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைகள் உடனடியாக வழங்க வேண்டியது கட்டாயமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகப் பொருளாதார கலாசார மாற்றங்கள் நாளுக்கு நாள் மிக விரைவாக ஏற்படுகின்றன. பாரம்பரிய நடை, உடை, பாவனை, மனப்பாங்கு யாவும் துரிதமாக மாறிக் கொண்டு வரும் நிலையில் மாணவர்களின் நடத்தையில் தாக்கத்தை ஏற்படுத்தி வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கத் தடையாக அமைவதனாலும் மாணவர்கள் நவீன மாற்றங்களுடன் இசைவு காண்பதற்கான ஆயத்த நிலையைப் பெறுவதற்கும் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை அவசியமாகவுள்ளது.

தற்கால விஞ்ஞான உலகில் வாழ்கின்ற மாணவர்கள் அறநெறி, மனித விழுமியங்கள் போன்றன தேவையில்லை என்று அவற்றை நிராகரிக்கும் மனப்பாங்குடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். இதனால் கொலை, களவு, பாலியல் ஒழுக்கக் கேடு, மது, போதைப் பொருள் பாவனை, வன்முறைகள் ஆகியன மாணவர் சமூகத்திலும் மலிந்து காணப்படுகின்றன. இந்நிலையில் மனிதத் தன்மையுடன் நடத்தலானது மாணவர் சமூகத்தினரிடையே கேள்விக்குறியாகவே காணப்படுவதால் இந்நிலமைகளைச் சீராக்கும் வகையில் வழிகாட்டல் ஆலோசனையின் தேவை அவசியமானதாகவுள்ளது.

மாணவர்களிடையே விருப்புப் பாடங்களைத் தெரிவு செய்வதில் காணப்படும் குழப்பநிலை, உயர்தரப் பிரிவில் எந்தத் துறையைத் தெரிவு செய்வது, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்பப் பாடத்துறையைத் கற்றுக் கொள்ள விருப்பம் இருந்தும் அத்துறையைத் தெரிவு செய்வதில் காட்டும் தயக்கம் போன்றவாறான கற்கை நெறி தொடர்பான பிரச்சினைகள் மாணவர் மத்தியில் நிலவுவதனால் இப்பாட நெறித் தெரிவுகளைச் சரியாக மேற்கொள்ளும் வகையிலும் வழிகாட்டல் ஆலோசனைத் சேவை தேவைப்பாடுடையதாகவே உள்ளது.

தற்பொழுது தொழிற்றுறைகள் பலவாறாகப் பல்கிப் பெருகி வருவதால் பாடசாலைகளில் இடைநிலை மற்றும் உயர்தர மாணவர்களுக்குத் தொழில் வழிகாட்டல் பற்றிய அறிவையும், சேவையையும் வழங்கி எதிர்காலத்தில் தொழில் தெரிவுக்கு வழிகாட்டுவது இன்றியமையாததாகவுள்ளது.

தற்காலத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும், சீர்கேடுகளுக்கும் கல்வி நிலையங்களே முக்கிய பங்கினை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனச் சமூகம் சுட்டிக் காட்டிக் கொள்ளும் நிலையில் மாணவர்கள் தமது வாழ்வைச் சிறப்புற அமைத்துக் கொள்ளவும்,தமக்கும் சமுதாயத்துக்கும் நற்பயனை நல்கக் கூடிய ஆளுமையுடையோராக உருவாகுவதற்கும் பாடசாலை வழிகாட்டல் சேவையானது வழியமைத்துக் கொடுக்கின்றது. இவ்வாறாக இன்றைய நிலையில் பல்வேறு காரணங்கள் மாணவர்களின் சிந்தனையிலும், நடத்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் கற்றலிலும் பின்னடைவை ஏற்படுத்துகின்றது. எனவே மாணவர்கள் எதிர் கொள்ளும் இவை போன்ற சவால்களைப் பொருத்தமான முறையில் கையாள்வதற்கு வழியமைத்துக் கொடுப்பது வழிகாட்டல் ஆலோசனைச் சேவையாகும் என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்த முக்கியத்துவங்களினடிப்படையில் பாடசாலையில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையானது பின்வருமாறு கட்டமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவையின் நடைமுறைகள்.**

வழிகாட்டல் ஆலோசனைச் சேவை பாடசாலையின் ஒரு முக்கிய அம்சமாக அமைய வேண்டும் என்பதை இன்றைய கல்வியியலாளர்களும் உணர்ந்துள்ள நிலையில் ஆலோசகருடன் அதிபர், ஆசிரியர் பாடசாலையில் தொழில் புரியும் அங்கத்தவர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பதன் மூலமே இச்சேவையைச் சிறப்பாக்கிக் கொள்ள முடியும்.பாடசாலைகளில் இச்சேவையானது தனியார்சார், கல்விசார், தொழில்சார், உடல் நலம்சார், சமூகம்சார், பாடப்புற செயல்சார் என்ற அடிப்படைகளில் ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு துறையும் மாணவர் முன்னேற்றத்திற்கான பல வழிமுறைகளையும் மாணவர் பிரச்சினைக்கான பல தீர்வுகளையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளது. இவ்வாறே இந்த ஆறு துறைகளையும் உள்ளடக்கியதாகவே பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவை காணப்படுகின்றது.

கல்வி சார் வழிகாட்டலின் நோக்கங்கள் என்ற வகையில் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைத் தொடர்ந்து கவனித்து நெறிப்படுத்துதல், விசேட கல்வித் தேவைகள் உள்ளோர், கற்றல் குறைபாடுடையோர், மீத்திறனுடையோர் ஆகியோரை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான கற்றல் முறைகளைக் கையாளுதல், தனிப்பட்ட பாடத்துறைகளில் குறைவாகவுள்ள மாணவர்களுக்கு அத்துறையில் விசேட உதவி வழங்குதல், உயர் கல்வியைத் தொடர்ந்து கற்கவும், கற்றலை இடைநிறுத்தாமலிருக்கவும் ஆலோசனை வழங்குதல் போன்ற கல்வி நோக்கங்களைக் கொண்டுள்ளது.

தனியார்சார் வழிகாட்டலின் நோக்கம் என்னும் போது சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல், தமது நல்விருத்திக்கு தாமே பொறுப்பேற்க ஊக்குவித்தல். இவ்வாறே சமூக வழிகாட்டலின் நோக்கமாக சமூக இசைவாக்கம் பெற உதவி வழங்குதல், சமூக விழுமியங்களை விருத்தி செய்தல், சமூக' நியமங்களுக்கேற்ப நடத்தல், குழுச் செயற்பாடு, தலைமைத்துவம், ஒத்துழைத்தல் போன்றவற்றுக்கு பயிற்சியளித்தல். பாடப்புறச் செயல்சார் வழிகாட்டலின் நோக்கமானது, வகுப்பறைக்கு அப்பாலுள்ள பாடப்புறச் செயல்களில் ஈடுபடுதல், பாடசாலை வளங்களான நூல்நிலையம், விளையாட்டரங்கு, சங்கங்கள் போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்ள ஊக்குவித்தல். இவ்வாறே உடல், உளக் குறைபாடுகள் இருப்பின் அவற்றை இனங்கண்டு, சிகிச்சை பெறுவதற்கு சிபார்சு செய்வதாக உடல் நலம்சார் வழிகாட்டலின் நோக்கம் காணப்படுகின்றது.

ஒவ்வொரு பாடசாலையின் நிலைமைக்கும் பொருத்தமான வழிகாட்டல் கட்டமைப்பை நிறுவுதல் வேண்டும். இந்த வகையில் மூன்று வகையான கட்டமைப்புக்களைப் பாடசாலைகளில் அமைத்துக் கொள்ள முடியும். மையப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பு முறை, மையப்படுத்தப்படாத ஒழுங்கமைப்பு முறை, இரு முறைகளையும் ஒன்றிணைத்த ஒழுங்கமைப்பு முறை போன்றவையாகும்.

மையப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பு முறை என்னும் போது பாடசாலைகளில் ஆலோனைச் சேவைக்கென ஒரு தனிப்பட்ட இடம் ஒதுக்கப்பட்டு செயற்பாடுகள்இடம் பெறுவதோடு,சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆலோசகர் குழு செயலாற்றும் அதே வேளை அறிக்கைகளைப் பேணுதல், தரவுகளைத் திரட்டுதல், வகைப்படுத்தல் போன்ற செயல்களையும் ஆலோசகரே மேற்கொள்பவர்களாகக் காணப்படுவர். இதேவேளை மையப்படுத்தப்படாத ஒழுங்கமைப்பு முறையே அனேகமான பாடசாலைகளில் காணப்படுகின்றது.இம்முறையில் வழிகாட்டலுக்கான பொறுப்பை பாடசாலையிலுள்ள சகல ஆசிரியர்களும் ஏற்றுக் கொள்வர். இவர்கள் வழிகாட்டற் செயற்பாடுகளிலும் தேர்ச்சியுடையவர்களாக இருப்பர். மையப்படுத்தப்பட்ட, மையப்படுத்தப்படாத என்ற இருமுறைகளையும் ஒன்றிணைத்த ஒழுங்கமைப்பு முறையானது இடைநிலைப் பாடசாலைகளுக்குப் பொருத்தமாகக் காணப்படும். இவ்வமைப்பிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆலோசகர் ஒருவருடன் இணைந்து மற்றைய ஆசிரியர்கள் ஆலோசனை சேவையில் செயற்படுவார்கள்.

ஒரு பாடசாலையில் வழிகாட்டல் ஆலோசனை சேவையைச் சிறப்பாக வழிநடத்த வேண்டுமாயின் போதியளவு வளங்கள் தேவையாகவுள்ளது. இந்தவகையில் பாடசாலை ஆலோசனை சேவை அமைப்புக்கெனத் தனிக்கட்டிடம் காணப்படல் வேண்டும், இதில் ஆலோசனை அறை, இணைப்பு ஆலோசகருக்கு ஒரு தனியறை, பதிவேடுகளைப் பேணுவதற்கு ஒரு தனியறை, ஆய்வுகள் மேற்கொள்ளும் வகையில் ஓர் ஆய்வு கூடம் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடங்கும் வகையிலான கட்டிடம் அமைந்திருத்தல் அவசியமாகும். தேவையான தளபாடங்கள், ஒளி- ஒலிப்பதிவுக் கருவிகள், தேவையான பத்திரிகைகள், போன்றவற்றோடு மாணவன் பற்றிய விபரங்கள், குடும்பம் பற்றிய விபரங்களைக் கொண்ட கோவைகளைச் சேகரித்து வைப்பதற்கு ஏற்ற வசதிகள் போன்றன ஆலோசனை சேவை அமைப்பினுள் காணப்படுதல் அவசியமானதாகும்.
இவ்வாறான அமைப்பைக் கொண்டதாக இயங்க வேண்டிய வழிகாட்டல் ஆலோசனை சேவையானது பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட காலகட்டத்தையும் நோக்குவது சிறப்பாக அமையும்.

**பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவையின் அறிமுகம்.**

பாடசாலைகளில் 1950 ஆம் ஆண்டிக்கு முன் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை நடைபெற்றதாகச் சான்றுகள் எதுவும் இல்லை. ஆனால் 1950 ஆம் ஆண்டு தொடக்கம் சில பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவரினதும் விபரங்களைக் கொண்ட "திரள் பதிவுகள்"பேணப்பட்டன. இதிலிருந்தே வழிகாட்டல் சேவை ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து 1960 ஆம் ஆண்டளவில் கல்வியியலாளர்கள் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தேவை பற்றி பல அறிக்கைகளை வெளியிட்டனர். இதன்பின்னர் 1981 ஆம் ஆண்டு கல்வி வெள்ளையறிக்கையுடன் வழிகாட்டல் சேவையின் முக்கியத்துவம் உணரப்பட்டதோடு, இவ்வறிக்கையில் 34 தொடக்கம் 50 வரையான பந்திகளில் வழிகாட்டல் ஆலோசனையின் முக்கியத்துவம் சுட்டிக்காட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதனடிப்படையில் 1981 ஆம் ஆண்டு கல்வி அமைச்சும் தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து முக்கிய பல செயற்றிட்டங்களை முன்னெடுத்ததன் பயனாக "யொவுன் மித்திரேயோ" என்ற ஆலோசனை சேவை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தொடர் விரிவாக்கமாக 1982 ஆம் ஆண்டு இச்சேவையானது மாணவர்களுக்கென இருபத்தாறு பாடசாலைகளிலும், ஐந்து நிலையங்களிலும், களனிப் பல்கலைக் கழகங்களிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இச்சேவைக்கெனத் தனியான பிரிவு ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஏற்படுத்தப்படுவதுடன், அதன் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.இந்த வகையில் இதனை 2001 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க 20.01.2001 ஆம் திகதியிடப்பட்ட கல்வியமைச்சின் சுற்று நிருபம் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளமையையும் காணமுடிகின்றது. இதில் 300 மாணவர்களுக்கு மேலுள்ள பாடசாலைகளில் ஓர் ஆசிரியரை முழுமையாக இப்பணிக்காக விடுவிக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, ஆசிரியர்களுக்கான தகுதியும் விளக்கமாக அறிவிக்கப்பட்டுள்ளமை சிறப்பானதாகும்.

இதனைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு மக்களின் உயிரைக் காவு கொண்டு நாட்டினையே பேரழிவுக்கும், பெரும் சோகத்திற்கும் உட்படுத்திய சுனாமிக்குப் பின்னர் ஆலோசனை என்ற சொல் மக்கள் மத்தியில் பிரபல்யமாகப் பேசப்பட்டதோடு, பாடசாலையினுள் மட்டுமல்லாது சமூகத்திற்கும் கட்டாய தேவைப்பாடுடையதாகக் காணப்பட்டது. இக்காலப் பகுதியிலேயே பாடசாலை ஆலோசனைச் சேவைக்கென கல்வியமைச்சினால் ஆசிரியர் நியமிக்கப்பட்டனர். இந்த வகையில் நோக்கும் போது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் நான்கு வகையான முறைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவைக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. இச்சேவைக்கென அரசினால் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள்.
2. பாடசாலை அதிபர்கள் சிபார்சு செய்ததன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு மகாணக்கல்வித் திணைக்களத்தினால் கடிதம் மூலம் பொறுப்பளிக்கப்பட்டோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாடசாலை அதிபர்களினால் பொறுப்பளிக்கப்பட்டோர்.
4. குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் இவர்களின் சேவை பெறப்படும் வகையில் கல்வி அமைச்சினால் அங்கீகாரம் பெற்று அரசசார்பற்ற நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள்.

என்ற அடிப்படைகளில் இச்சேவைக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இன்று நடைமுறைப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையினுள் உள்ளடங்கும் ஆளணியினரின் பணிகள்**

பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையினுள் உள்ளடங்கும் ஆளணியினருக்கு பல்வேறு பணிகள் காணப்படுகின்றது. இந்தவகையில் அதிபர் பின்வரும்பணிகளை ஆற்ற வேண்டியவராகவுள்ளார். வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தலைவராகவும், இணைப்பாளராகவும், பணிப்பாளராகவும் செயற்படும் அதிபரானவர் வழிகாட்டல் ஆலோசனை சேவை தொடர்பாக ஆராய்ந்து சிபார்சுகளைச் செய்யவென ஒரு குழுவை நியமித்தல், சேவைக்கான வசதிகளான தனியான அறை, தளபாடங்கள், உபகரணங்களை வழங்குதல், வழிகாட்டல் பற்றிய கருத்தரங்குகள், கூட்டங்கள், பாடநெறிகளில் ஆசிரியர்களைப் பங்கு கொள்ளச் செய்தல், இச்சேவை தொடர்பான செயற்பாடுகளில் பெற்றோர்கள் ஈடுபட்டுச் செயலாற்றக் கூடிய ஏற்பாடுகளைச் செய்தல், ஆலோசனை சேவையை மேற்பார்வையிடல் போன்றவாறான கடமைகளை நிறைவேற்றுபவராக அதிபர் காணப்பட வேண்டும்.
அதிபரைப் போலவே ஆசிரியர்களுக்கும் பல பொறுப்புக்கள் உள்ளன. ஆலோசனை தேவைப்படும் மாணவர்களை அவதானித்து தரவுகளைத் திரட்டுதலும் அவற்றின் பதிவுகளைப் பேணுதல், மாணவர்கள் பற்றிய விடயங்களை அதிபர் ஊடாக பெற்றோருக்குத் தெரியப்படுத்தல், மாணவர்களின் உச்சமான அபிவிருத்திக்கான வசதி வாய்ப்புக்களை வழங்குதல் போன்ற பொறுப்புக்களை நிறைவேற்றுபவராக செயற்பட வேண்டியுள்ளது.

ஆலோசகரைப் பொறுத்த வரையில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை பற்றிய விளக்கங்களை ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்களுக்கு வழங்குவதுடன் கல்வி, தொழில்வாழ்க்கை, சமூகம், தனியாள் ஆகியன சார்ந்த சகல துறைகளிலும் மாணவர்களுக்குத் தேவைப்படும் வழிகாட்டல் ஆலோசனையை வழங்குதல் வேண்டும். மாணவர்களின் பிரச்சினைகளைக் கையாண்டு பொருத்தமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதுடன் ஆசிரியர்களையும் செயற்படத் தூண்டுதல், பிள்ளைகள் பற்றிய தெளிவான தகவல்களையும் அறிக்கைகளையும் பேணுதல்,வழிகாட்டல் ஆலோசனை சேவை தொடர்பாக சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களின் உதவிகளைப் பெற்றுச் செயற்படல், ஆலோசனை தேவைப்படும் மாணவர்களை அவதானித்து மாணவர்கள் பற்றிய விடயங்களை அதிபர் ஊடாகப் பெற்றோருக்குத் தெரியப்படுத்தல், மாணவர்களின் உச்சமான அபிவிருத்திக்கான வசதி வாய்ப்புக்களை வழங்குதல்.போன்றவாறான பணிகளை நிறைவேற்றுபவராகச் செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை இவ்வாலோசனை வழிகாட்டல் மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், சமூகம் போன்றோர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றனர் இந்த வகையில் ஆசிரியர்கள் சார்பான நன்மைகளை நோக்கும் போது ஆசிரியர்களுக்கு மாணவர்கள் பற்றிய முழுவிபரத்தையும் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது. அதாவது மாணவர்களினது ஆற்றல்கள், அவர்களின் பலம், பலவீனம், அடைவுமட்டம், குடும்பப் பின்னணி போன்றவற்றை அறிந்து கொள்வதால் அதற்கேற்ப பணியாற்ற ஆசிரியர்களுக்கு முடிகின்றது. ஆசிரியர் மாணவர் மத்தியில் தொடர்புகள் அதிகரிப்பதால் சிறப்பான கற்றல் கற்பித்தல் நிலைமைகளை ஏற்படுத்தி வெற்றியடைய முடிகின்றது.

மாணர்கள் சார்பாகக் கிடைக்கும் நன்மைகளை நோக்கும் போது மாணவர்கள் தங்கள் நிலமைகளை புரிந்து கொண்டு பொருத்தமான வழிமுறைகளில் தமது தகைமைகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். பாடத் தெரிவு, பொழுது போக்குத் தெரிவு, பரீட்சைக்கான ஆயத்தப்படுத்தல் நுட்பங்கள் போன்றவற்றைப் பொருத்தமாக தெரிவு செய்து கொள்ள முடிவதோடு, கல்வி தொடர்பாக. தொழில் தொடர்பான, உளவியல் தொடர்பான பொருத்தப்பாடுகளைப் பெற்றுக் கொள்வர்.

பெற்றோர் சார்பான நன்மைகள் என்னும் போது தமது பிள்ளைகளினது ஆற்றல்கள், ஆளுமைக் கோலம், அவர்களின் பலம், பலவீனம், சமூகவியல் பண்புகள், அடைவு மட்டம் போன்ற பல விடயங்கள் பற்றியும் அறிந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றோருக்கு கிடைப்பதால் அதன் மூலம் தங்கள் பிள்ளைகளை சிறப்பாக வழிநடத்த சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. பெற்றோர், பிள்ளைகளின் உறவுகள் வலுப் பெறுவதோடு, தமது பிள்ளைகளின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் பொருத்தப்பாடுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும்.

இவ்வாறாக மாணவர், ஆசிரியர்கள், பெற்றோர், சமூகம் போன்ற அனைவருக்கும் பயனுடையதாகக் காணப்படும் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையானது பல சவால்களையும் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் செயற்பட்டு வருகின்றது.

**பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையினை நடைமுறைப்படுத்தும் போது எதிர்நோக்கும் சவால்கள்.**

1. பாடசாலையினுள் வழிகாட்டல் சேவைக்கெனத் தனிப்பட்ட கட்டிடம் இல்லாமையும், பாவனைக்குத் தேவைப்படும் பௌதீக வளங்கள், கருவிகள் போன்றன இல்லாமை.
2. பல அடிப்படைகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் அத்துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக அவர்கள் இல்லாதுள்ளனர்.
3. பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் போதிய தொடர் பயிற்சிகள் வழங்கப்படாமை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோருக்குப் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு குறைவாகக் காணப்படல்.
5. பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கென நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் சில வேளைகளில் அலுவலகக் கடமைகளையும், கற்பித்தல் பணிகளையும் நிறைவேற்ற வேண்டியவர்களாக் காணப்படுகின்றார்கள்.
6. பாடசாலை நேர அட்டவணையில் இச்சேவைக்கென நேர ஒதுக்கீடு செய்வதில் பிரச்சினைகள் காணப்படல்.
7. வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குவதற்குச் செலவிடப்படும் காலத்தை விட மாணவர் தரவுகளைத் திரட்டுதல், அறிக்கைப்படுத்துதல், தரவுகளைப் பேணுதல் என்பவற்றுக்குக் கூடிய காலம் தேவைப்படடல்.

இவ்வாறான சவால்களை வெற்றிகரமான முறையில் கையாள வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

முடிவுரை

வழிகாட்டலும், ஆலோசனையும் வாழ்நாளில் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் பிரச்சினைகளையும், சவால்களையும் வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு உந்து சக்தியாக அமைகின்றன. இதனடிப்படையிலேயே ஒவ்வொரு பாடசாலையிலும் இச்சேவையைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாணவர்களைப் பொருத்தப்பாடுடையவராக மாற்ற வேண்டியது இத்துறையின் முக்கிய கடமையாகவுள்ளது. இந்தவகையில் இச்சேவையில் பணிபுரியும் அதிபர், ஆசிரியர்கள் ஆலோசகர் போன்றோர்கள் இது தொடர்பாக மேலும் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதோடு, நல்ல மனவளத்தைப் பேணும் உளவளத் துணையாளராகச் செயற்பட்டு மாணவர்களின் கல்வி, உடல் நலம், தொழில், பாடத்தெரிவு போன்றவற்றில் ஏற்படும் உளநலப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதோடு, ஆரோக்கியமான சமூகத்தையும் கட்டியெழுப்புதல் இன்றியமையாததாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Importance of the Investment in Finance

*Mrs.S. Kumuthinidevi*
*Head/Department of Business and Management Studies*
*Faculty of Communicating and Business Studies*
*Trincomalee Campus, Eastern University, Sri Lanka*

**Investment** is time, energy, or matter spent in the hope of future benefits actualized within a specified date or time frame. Investment has different meanings in economics and finance.

Investment is also the commitment of money or capital to purchase financial instruments or other assets in order to gain profitable returns in the form of interest, income, or appreciation of the value of the instrument. Investment is related to saving or deferring consumption.

In economics, investment is the accumulation of newly produced physical entities, such as factories, machinery, houses, and goods inventories.

In finance, investment is the purchase of an asset or item with the hope that it will generate income or appreciate in the future and be sold at the higher price. It generally does not include deposits with a bank or similar institution. The term investment is usually used when referring to a long-term outlook. This is the opposite of trading or speculation, which are short-term practices involving a much higher degree of risk. A good investment strategy will diversify the portfolio according to the specified needs.

In business, the purchase by a producer of a physical good, such as durable equipment or inventory, in the hope of improving future business.

**Meaning of Investment:**

An investment involves the choice by an individual or an organization such as a pension fund, after some analysis or thought, to place or lend money in a vehicle, instrument or asset, such as property, commodity, stock, bond, financial derivatives (e.g. futures or options), or the foreign asset denominated in foreign currency, that has certain level of risk and provides the possibility of generating returns over a period of time.

When an asset is bought or a given amount of money is invested in the bank, there is anticipation that some return will be received from the investment in the future.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Investment Types**

A particular investor normally determines the investment types after having formulated the investment decision, which is termed as capital budgeting in financial lexicon. With the proliferation of financial markets there are more options for investment types.

**According to the financial terminology investment means the following:**

- Purchasing Securities in Money or Capital Markets
- Buying Monetary or Paper Financial Assets in Money or Capital Markets
- Investing in Liquid Assets like Gold, Real Estate and Collectibles

Investors assume that these forms of investment would furnish them with some revenue by way of positive cash flow.

These assets can also affect the particular investor positively or negatively depending on the alterations in their respective values. Investments are often made through the intermediaries who use money taken from individuals to invest. Consequently the individuals are regarded as having claims on the particular intermediary. It is common practice for the particular intermediaries to have separate legal procedures of their own.

**Following are some intermediaries:**

- Banks
- Mutual Funds
- Pension Funds
- Insurance Companies
- Collective Investment Schemes
- Investment Clubs

Investment in the domain of personal finance signifies funds employed in the purchasing of shares, investing in collective investment plans or even purchasing an asset with an element of capital risk. In the field of real estate, investments imply buying of property with the sole purpose of commercial property for corporate purposes that are geared to generate some amount of revenue.

**Essential of Investment**

An essential of investment refers to why investment, or the need for investment, is required. The investment strategy is a plan, which is created to guide an investor to choose the most appropriate investment portfolio that will help him achieve his financial goals within a particular period of time.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

An investment strategy usually involves a set of methods, rules, and regulations, and is designed according to the exchange or compromise of the investor's risks and returns. A number of investors like to increase their earnings through high-risk investments, whilst others prefer investing in assets with minimum risk involved.
However, the majority of investors choose an investment strategy that lies in the middle.

**Investment strategies can be broadly categorized into the following types:**

- **Active strategies:** One of the principal active strategies is market timing (an investor is able to move into the market when it is on the low and sell the stocks when the market is on the high), which is applied for maximizing yields.
- **Passive strategies:** Frequently implemented for reducing transaction costs.

One of the most popular strategies is the buy and hold, which is basically a long term investment plan. The idea behind this is that stock markets yield a commendable rate of return in spite of stages of fluctuation or downfall. Indexing is a strictly passive variable of the buy and hold strategy and, in this case, an investor purchases a limited number of every share existing in the stock market index, for example the Standard and Poor 500 Index, or more probably in an index fund, which is a form of a mutual fund.
Additionally, as the market timing strategy is not applicable for small-scale investors, it is advisable to apply the buy and hold strategy. In case of real estate investment the retail and small-scale investors apply the buy and hold strategy, because the holding period is normally equal to the total span of the mortgage loan.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் இலக்கியம் காட்டும் பழந்தமிழர் கூத்துக்கள்

கலாநிதி(திருமதி).கி.ஷர்மிளா ரஞ்சித்குமார்
விரிவுரையாளர்
சுவாமி விபுலானந்தா அழகியற்
கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியங்கள் காலத் தொன்மை உடையவை, செறிவானவை, தமிழ் இலக்கியங்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு காலம் பழமை வாய்ந்தவை தொகையும் பாட்டுமான பழந்தமிழிலக்கியங்கள் பழந்தமிழர் வாழ்க்கையினைப் படம் போல் காட்டுகிறது. வாழ்க்கை விளக்கங்களாகத் திகழ்கின்றன. மக்கள் இரவு முழுவதும் விழித்திருந்து கூத்து நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் கண்டு களித்தனர்

"பாடலோர்த்து நாடக தயந்தும் வெண்ணிலாவின் பயனறுய்த்தும் கண்ணடை இய கடைக்கங்குவான்"

பட்டினப்பாலை 113--115 என்ற பாடல் அடிகள் கூறுகின்றது. பழந்தமிழர் வாழ்வில் கூத்துக்கலை பெரும்பங்கு கொண்டிருந்தது. மக்கள் வாழ்க்கையில் தலையாயது வழிபாடு ஆகும் பழந்தமிழ் வழிபாடு கூத்து வழி நடந்தது. முழுமுதற்கடவுளாகிய சிவனை மக்கள் கூத்து நிகழ்த்தும் பாவனையில்வைத்து வணங்கினர் சிவன் ஆடலில் வல்லவனாக இருந்தான். சிவன் பல கூத்துக்களை ஆடியதாக இலக்கியங்கள் கூறுகின்றன. அத்தோடு முருகனுக்கு கூத்து ஆடும் ஒரு பண்பும் இருந்ததாக குறிப்பிடலாம்.

சங்க இலக்கியங்களில் காணப்படும் நடனம் குரவை, துணங்கை , வெறியாட்டம் எனும் மூன்று வகை கூத்துகளாக இருக்கின்றது. மேலும் பலவகையானகூத்து முறைமைகளை சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. மாதவி ஆடிய 11 வகையான கூத்துக்குள்ளும் கலி நடனம் ,குடக்கூத்து உரற் கூத்து , கரணக்கூத்து ,நோக்குக் கூத்து, விநோதக் கூத்து , பாவைக் கூத்து, வென்றிக் கூத்துகள் போன்ற பலவகை கூத்துக்களும் இலக்கியங்களில் கூறப்படுகின்றன. சங்ககாலத்தில் வாழந்த மக்கள் தங்களுக்குரிய இருப்பிடங்களில் குழுவாக கூட்டமாக வாழ்ந்தவர்கள் எனவே அவர்களின் நடனமும் குழு நடனமாகவே அமைந்திருந்தது. மன்னர்களைக் காணச் செல்லும் விறலியோ கூத்தரோ தனிநடனம் செய்வார்கள் ஆனால் அகப்பொருளின் மரபின் கீழ் பயின்று வரும் பாடல்களில் குழு நடனங்களையே பார்க்க இயலுகின்றது.

## குரவைக் கூத்து

தொகையும் பாட்டுமான இலக்கியங்களில் மிகப்பரவலாக பேசப்படும் கூத்து குரவையாகும். அக்காலத்துச் சமுதாயத்தில் காணப்பட்ட சில பொழுது போக்கு விளையாட்டுகள் போலவே குரவைபாமரருக்குரிய ஒரு கூத்தாக விளங்குகிறது. முதலில் குறவர் வாழும் குறிஞ்சி நிலத்திலேயேகுரவைக் கூத்து தோற்றம் பெற்றது. பின்னர் பிற நிலங்களுக்கும் பரவியது. அதன் பெயரளவிலேயே குரவையின் பிறப்பிடம் புலனானதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. குறவர்க்கே உரிய கூத்து.குறவை ஆனது அது குறவர் + அவை = குறவை - குரவைஎன்னும் படி குழு நடனமாகவும் நிலை பெற்றது "குன்று தோறும் நின்ற குரவை"என மதுரை காஞ்சியில் கூறப்படுகின்றது. எனவே குன்றுப்பகுதிக்கே உரியது குரவை என்பது வலியுறுத்தப்படுகிறதாக தெரிகிறதுஎன தமிழ் ஆய்வாளர் Dr. ஜான் ஆசீர்வாதம் கூறுகின்றார்.மேலும் அவர் " ஒருங்கு நாமாடுங் குரவையுள்"கலித்தொகை 103 - 75 - 76 இக் கூற்றிலிருந்து இது பலர் கூடி நிகழ்த்தும் குழு நடனம் எனவும் கூறுகின்றார். குரவை என்பது பலர் கூடி நிகழ்த்தும்கூத்து ஆகும் குரவையில் ஏழு அல்லது ஒன்பது பேர் கூடி வட்டமாக நின்று கற்கடக கை சேர்த்து வீரம் , சிருங்காரம் ஆகியவற்றை பொருளாகக் கொண்டு ஆடுவர்.

" குரவை என்பது எழுவர் மங்கையர்
செந்நிலைப் பாண்டியன் கடகக் கை கோத்து
அந்நிலைக் கொட்ப நின்றாடலாகும்"

சிலப்பதிகாரம்77

எனசிலப்பதிகாரம் கூறுகின்றது.

குரவையில் பலவகைகள் காணப்படுகின்றன. அவைகளை நோக்குவோமானால் வழிபாட்டுக் குரவை , இக்குரவை வழிபாட்டின்போது ஆடப்படுகின்றது. , பொழுது போக்குக் குரவை இக்குரவை பொழுது போக்குத் தன்மை வாய்ந்தது. பொழுது போக்கு என்ற நிலையிலே அந்தந்த நில மக்கள் குரவையிலே தாமே பங்கு கொண்டு மகிழ்ந்தார்கள் இக்குரவை ஆடுவோர்கள் அருந்தி இருப்பார்கள் ஆய்ச்சியர் குரவை மாதவியை விட்டுப் பிரிந்த கோவலன் கண்ணகியுடன் மாநகர் அடைந்தான் கண்ணகியை மாதரி என்னும் இடைக்குலப் பெண்ணிடம்அடைக்கலம் விட்டுச் சிலம்பு விற்று வருவதற்காக புறப்பட்டுச்செல்லுகின்றான். ஆயர் சேரியில் பல துர் நிகழ்வுகள் நிகழ்ந்தன. அதனால் மாதரி ஆயர் குலத்தில் உள்ள பிறமங்கையர்களுடன் சேர்ந்து குரவை ஆடினாள் என சிலப்பதிகாரம் கூறுகின்றது இக்கூத்தை அவர்கள் பலமுறை ஆடியுள்ளனர் என்பதும் அதனால் இது அவர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட கூத்தாக இருந்திருக்கக் கூடும் என்பதும் புலனாகின்றது திடீரென ஆடத்தொடங்கியதால் இக்கூத்திற்கு ஒப்பனை எதுவும் இல்லை என்பதும் புலனாகின்றது அடுத்து குன்றற்குரவை மலை வாழ்மக்கள் ஒன்று கூடி பத்தினி தெய்வத்தையும் முருகக்கடவுளையும் வாழ்த்திப்பாடுவதும் குன்றற் குரவையாகும் கண்ணகி தன் கணவனுடன் விமானம் ஏறி வானுலகிற்குச் செல்வதை கண்ட குறிஞ்சி வாழ் மக்கள் மிக வியப்புற்று அவளைத் தம் குலதெய்வமாகக் கருதி அவளுக்காக இக்குரவைக் கூத்தை நிகழ்த்தினர் இக்கூத்து குன்றற்குரவையாகும் தொல்காப்பியத்தில் முன்நேர்க் குரவை பின்நேர்க் குரவை என இரு விதமான குரவை கூறப்பட்டுள்ளது படைத்தலைவனான அரசன் போருக்கு போவதற்கு முன்னர் தேரின் முன்நின்று ஆடுவது முன்தேர்க் குரவை அவனது வெற்றிக்குப் பின் ஆடுவது பின் தேர்க்குரவையாகும் இவ்வாறு பல வகைக் குரவைகள் ஆடப்படுகிறது தொழில் முறையில் இவை ஆடுவது இல்லை.

### துணங்கைக்கூத்து

சங்ககாலக் கூத்துகளுள் குரவையினைப்போன்ற செல்வாக்குள்ள ஒரு கூத்து துணங்கைக் கூத்தாகும் , கூத்துக்களிலே குரவைக்கூத்தோடு இணைய வைத்துப் பேசப்படுகிறது. இரட்டைக் கூத்துக்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றது. கூத்துக்களை ஆய்வு செய்த Dr. ஜான் ஆசீர்வாதம் அவர்கள் சங்க கால இலக்கியங்களில் பெரும்பாலும் துணங்கை குரவை இவை இரண்டும் ஒரே குறிப்பில் இணைத்துப் பேசப்படுவதை எடுத்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்ட மதுரைக் காஞ்சியில் கூறப்பட்ட" துணங்கையம் சீர்சீர்த்த மூட மறப்ப துணங்கையம் தழு உலின் மணம் கம்புசேரி "இவ் வரிகளை சுட்டுகின்றார் துணங்கைக் கூத்து முதலில் தோன்றியதா குரவைக் கூத்து முதலில் தோன்றியதா என ஆய்வினை மேற்கொண்ட விற்பன்னர்கள் துணங்கையே முதலில் தோன்றியது ஏன்று கூறுகின்றார்கள் சிலப்பதிகாரமும் துணங்கையினை இணைத்துப் பேசும் போது துணங்கையினையே முன் வைத்துள்ளது.

" துணங்கையர் குரவையர் அணங்்
கெழுந்தாடி "

துணங்கை மகளிராலே ஆடப்படுகிறது. ஆடவர் ஆடுவதில்லை, மகளிரோடு ஆடவர் ஆடவிரும்பினால் அவர்கள் மகளிரைப்போல் தம்மை உருமாற்றி ஆடவேண்டும் பகலிலே துணங்கை ஆடப்படும், மர நிழலிலும் கடற்கரையிலும் ஆடப்படும், தகுந்த ஆயத்தங்களுடன் விழாப்போல் துணங்கை கூத்து நிகழும். பேய்த்துணங்கை, போர்த் துணங்கை, மகளிர் துணங்கை என்று சங்ககாலத்தில் துணங்கை மூன்று விதமாக நிகழ்ந்தது பேய்த் துணங்கை இது பின் தேர்க் குரவை எனவும் மற்றும் போர்த் துணங்கை இது முன்தேர்க் குரவை எனவும் மகளிர் கூடி ஆடுவது மகளிர் துணங்கை எனவும் ஆடப்பட்டுள்ளது இம் மூன்று விதமான துணங்கைகளிலுமே ஆடும் நெறியில் வேற்றுமையினை உணரலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். மகளிர்த் துணங்கையில் கைபுணர்ந்தாடுவது முறையாக இருந்துள்ளது." கை புணர்ந்தாடும் துணங்கை"என இலக்கியங்களில் கூறப்படுகின்றது துணங்கை ஆரவாரம் மிகுந்த கூத்து துணங்கை பாடுவதும் உண்டு.

வெறியாட்டு

தொகையும் பாட்டுமான சங்க இலக்கியங்களில் துணங்கை மற்றும் குரவைக்கு மேலாக மிக விரிவாகப் பேசப்படுகின்ற கூத்து வெறியாட்டு ஆகும் சிவபெருமானின் கபாலக் கூத்து வழி உருவான பேய்த்துணங்கைகளின் மறுதலைக் கூத்தாக நின்று விளங்கிய ஒரு கூத்து வெறியாட்டு எனலாம். ஆய்வாளர் Dr. ஜான் ஆசீர்வாதம் அவர்கள் வெறியாடுவோர் தாமாக அவர்கள் ஆடுவதில்லை எனவும் அவர் மீது ஏறிய கடவுளரின் தூண்டுதலால் அதனை ஆடினர் தெய்வம் ஏற்ப்பெற்று ஆடும் கூத்து இது எனக் கூறுவதோடு, அக நாநூறு 98இல் 17 - 20 வரிகளை எடுத்துக்காட்டுகிறார்.

" வெறி அயர் வியன் களம் பொற்பவல் லோன் பொறி அமையாவையில் நூங்கல்"

தெய்வம் ஏற்றப்பட்டு ஆடினமையால் வெறியாட்டு ஆர்வாரம் மிகுந்ததாக தோன்றும். இதனால் இலக்கியங்கள் தனி நபர் கூத்து இதுவாயினும் இதனை ஒரு விழாவுக்கே ஒப்பிட்டு பேசியுள்ளனர். சிலப்பதிகார காலத்தில் வெறியாடி உண்மை வெளிப்படுத்தும் மகளிர் "சாலினி "என்று தனிப்பெயர் பெற்று இருந்தனர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். முருகனால் பற்றப்பட்டு வெறியாடுவது நிகழ்வதுடன் வனதேவதையால் பற்றப்பட்டு வெறியாடுவது நிகழ்வதுண்டு இதனை மகளிர் நடத்துவர்.

பௌர்ணமி நாளன்று நடு இரவில் வெறியாட்டு நிகழ்ந்தது முருகாற்றுப்படுத்த நடு நாள் களத்தில் நின்று வேலன் முருகனை தன் மீது வரும்படி அழைப்பான். இவ்வாறு வேலன் அழைக்கையில் அச்சம் தருகின்ற முறையில் முருகன் அவன்மீது வந்திறங்குவான்அவ்வாற்றலால் வேலன் வருங்காலம் உணர்த்துவான் குருதி முதலிய சிந்திய இடத்தில் ஒரு இரவில் நிகழுவதால் அச்சம் தருகின்ற முறையில் முருகன் வரவேலன் ஆடுவதாலும் அக் கூத்து அச்சம் தருகின்ற கூத்தே ஆகும் இது ஒரு சமய சடங்காகவே ஆடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட சங்க இலக்கியங்களில் பிற வகைக்கூத்துக்கள் பல உள்ளன 'கலிநடனம் 'இக் கூத்து 'ஆரியக் கூத்து'எனவும் அல்லது கயிறாட்டம் எனவும் அழைக்கப்படும் இக் கூத்து கயிற்றின் மேல் ஆடுதல், இக் கூத்து ஆடுவது எளிதல்ல இசைக்கேற்ப கவனத்தைச் சிதற விடாது கயிற்றின் மீது மெல்லவே நடப்பர் அடுத்து குடக்கூத்து பானையினைத் தலையில் வைத்து ஆடும் கும்பக் கூத்து இதுவாகும். சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய 11 வகைக் கூத்தில் குடக்கூத்தும் அடங்கும். இக் கூத்தே காலப்போக்கில் கரக ஆட்டமாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும். உரற்கூத்து இக்கூத்து உரலைக்கட்டித் தொங்கவிட்டு ஆடும் ஆட்டம்இது. இக்காலத்தில் பளுதூக்குதல் போன்றது இது கடுமையான கூத்தான போதிலும் இக்கூத்தை மகளிரே நிகழ்த்தினர் என்று தெரிகிறது. மகளிர் தூக்குவதற்கு வாய்ப்பாக உரல் சிறியதாக அமைந்திருந்தது உரற் கூத்திற்கு இசைப் பின்னனியிருந்தது. இன்னியம் எனும் இசைக்கருவி இதற்குப் பின்னனியாக இசைக்கப்பட்டது. கரணக்கூத்து பண்டைய போட்டி நிகழ்வாக நிகழ்ந்த மல்லாடலே கரணக்கூத்தாகும் மாதவியின் 11 ஆடல் வரிசையில் இந்த மல்லாடலும் இடம் பெற்றது. கண்ணனும் வானாசுரனும் மோதுகின்றனர். கண்ணன் மல்லனாய்ச் சென்று அறை கூலி அவனைப் பிடித்து உயிர் போக நெரித்து ஆடினான், இதுவே இக்கூத்தாகும். பாவைக்கூத்து பாவை விளையாட்டு, பாவைக்கூத்தென்று வடிவம் பெற்றுள்ளது. பாவை புனைதற்கென்றே வல்லுனர் இருந்து முள்ளனர்மணற்பாவை, புற்பாவை, மரப்பாவை, தோற்பாவைஎன்று வளர்ச்சிபெற்றே காணப்பட்டது. இவ்வாறு பாவைகளைவைத்து ஆட்டுவிக்கும் கூத்து பாவைக்கூத்துஎனப்படும்.

அடுத்து வென்றிக் கூத்துக்கள் போர்க் கூத்துகளாகிய, வென்றிக் கூத்துகள் போருக்கு முன்னர் நிகழ்ந்தவை, போருக்குப் பின்னர் நிகழ்ந்தவை என்று இருவகைப்படும். போருக்குச் செல்லும் வீரர்களை ஊக்குவிக்க ஆடும் கூத்துகள் போருக்கு முன் ஆடும் கூத்து எனவும் வெற்றி பெற்ற வீரர்களை வாழ்த்தி ஆடுவது போருக்கு பின் நிகழும் கூத்து எனவும் கருதப்படுகின்றது இவற்றில் பலவகைகள் உண்டு வாள் மலைக்கூத்து போருக்குகொண்டு செல்லும் வாள்களை கைகளில் ஏந்தி ஆடும் கூத்து வாளின் பெயராலே இக்கூத்து வாள் மலைக்கூத்து என அழைக்கப்படுகிறது வள்ளிக்கூத்து இக்கூத்து போர்க்கூத்துடன் தொடர் புடையது. சமயத்தன்மையும், சமுதாயப்பண்பும் ஒருங்கினைந்து அமைந்ததாக காணப்படும். கழல்நிலைக்கூத்து போரில் சாதனை புரிந்த வீரனுக்கு கழலனிந்து மகிழ்ச்சியில் ஆடுவது கழல் நடனமாகும். துடிக்கூத்து துடி என்ற இசைக்கருவியினால் அமைந்த ஒரு கூத்து துடிக்கூத்தாகும் சிலப்பதிகாரத்தில்இக் கூத்து கூறப்பட்டுள்ளது. சூரனது நெஞ்சைப் பிளந்து அவன் போரினைக் கடந்த முருகன் அக்கடலிலே துடி கொட்டி ஆடியது.

அடுத்து சிவனின் கூத்துக்களாக கொடு கொட்டிகூத்து சிவன் தேவியை ஒருபக்கத்தில் வைத்தவாறு இக்கூத்தினை நிகழ்த்தினார். திரிபுரத்தை எரியச் செய்யுமாறு சிவபெருமானிடம் தேவர்கள் வேண்ட வடலைத் தீயை தலையிலே கொண்டு திருமாலை அம்பாகவும் உமையை ஒருபக்கமாகவும் கொண்டு சிவபெருமான் வெற்றிக்களிப்பில் கை கொட்டி ஆடிய ஆடல், மாதவி இக்கூத்தை ஆடியுள்ளார் அடுத்து பாண்டரங்கக்கூத்து தேரின் முன்னிடத்து நின்று நான்முகன் காணும்படி பாரதி வடிவாகிய சிவன் வெண்ணீற்றை அணிந்து ஆடியது இக்கூத்தையும் மாதவி தனது அரங்கேற்றத்தின் போது ஆடிக்காட்டினாள் கபாலக்கூத்து கபாலக் கூத்து கபாலம் தலையோட்டினை குறிக்கும் இதனை ஏந்தி ஆடியதாகவும் , காளிக்கு எதிராக சிவன் இக்கூத்தை ஆடியதாகவும் பல வரலாறுகள் உள்ளன. சாந்திக்கூத்து இக் கூத்து முறையான ஆட்டக் காரர்களால் மட்டுமே ஆடப்பட்டது விறலியர்ஆட்டங்கள் இவ் வகையையே சேர்ந்தது பறை முதலிய கருவிகளின் ஆரவார இசைக்கு ஏற்ப ஆடப்படுவன.மயில் ஆடும் அழகு நடனங்களுக்கு ஒப்பிடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து என்பது ஒரு கலையாகும் பொழுது போக்கு அதன் சிறந்த நோக்கமாகும் பண்டைத்தமிழகத்தில் விளங்கிய குரவை, துணங்கை, வெறியாடல் போன்ற கூத்துக்கள் மக்கள் வாழ்க்கையில் எல்லாவித நிலைகளிலும் பங்கு கொண்டு விளங்கியுள்ளது. வழிபாட்டில் கூத்து சிறப்பிடம் பெற்றது. தொழிலாக நிகழ்ந்து வருவாயினைத் தேடித்தந்தது. சிறந்த பொழுது போக்கு கலையாக நிகழ்ந்ததோடு கூட காதல் மற்றும் வீர வாழ்வுக்கு உதவியுள்ளது இவற்றை நோக்கின் கூத்துக்கலை பழந்தமிழர் சமுதாயத்தில் எத்தனை உயர்விடத்தைப்பெற்றிருந்தது என்பதை நன்கு உணர்த்துகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளில் உள ஆற்றுப்படுத்தலின் முக்கியத்துவம் பற்றிய ஓர் பார்வை

இன்று எமது தமிழ் சமுதாயத்தை பொறுத்தவரையில் உள ஆற்றுப்படுத்தல் என்பது மிகவும் இன்றியமையாத ஓர் விடயமாக மாறி வருகின்றது. கடந்த கால உள்நாட்டு யுத்தமும், சுனாமி அனுபவமும் இதன் முக்கியத்துவத்தை தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. அதே வேளை இன்று மனிதன் முன்னெடுக்கும் அனைத்துச் செயற்பாடுகளிலும் ஏற்படும் பிரச்சினைகளின் வழிகாட்டல் செயன்முறையாக இன்று உள ஆற்றுப்படுத்தலானது முன்னேறி வருகின்றது. உள ஆற்றுப்படுத்தல் என்பது ஒரு உறவாடல் செயன்முறையாகும். இதன் அடிப்படையாக இருப்பது ஒரு உதவும் உறவாடல் ஆகும். உள ஆற்றுப்படுத்துநர்,ஆற்றுப்படுத்தல் தேவைப்படுவோருக்கு தனது பிரச்சினையை தானே கையாள உதவுகின்றார். எனவேதான் உள ஆற்றுப்படுத்தல் என்பது "தனியாளின் வாழ்நாள் முழுவதிலும் ஏற்படும் அனைத்து தீர்மானமெடுக்கும் சந்தர்ப்பங்களிலும் உரிய முறையில் முகங்கொடுக்கும் சக்தியை அந்நபரிடம் கட்டியெழுப்ப உதவும் ஒரு செயன்முறையாகும்" என ஆன் ஜோன்ஸ் என்பவர் குறிப்பிடுகின்றார்.

இக்காலத்தில் உள ஆற்றுப்படுத்தலினை பலரும் நாடி வருகின்றார்கள். அந்த வகையில் சிறுவர்கள், இளையோர், குடும்பத்தவர், முதியோர், என அனைத்து தரப்பினரும் உள ஆற்றுப்படுத்தலினை நாடுகின்றார்கள். அதாவது கற்றல் இடர்பாடுகள், உறவுச்சிக்கல்கள், ஆளுமைப்பிரச்சினைகள்,பாலியல் ரீதியான பிரச்சினைகள், குடும்பப்பிரச்சினைகள்,துஷ்பிரயோகத்துக்குள்ளானோர்,வன்முறைப்பாதிப்புக்கள், ஏமாற்றங்கள், தோல்விகள், போதைப்பொருள் பாவனை, உடல் நோய்தாக்கங்கள், புரிந்துணர்வின்மை போன்றவற்றால், உள ஆற்றுப்படுத்தலினை நாடுகின்றனர்.

இன்று தொழில் நிறுவனங்கள், வைத்தியசாலைகள், சமூக நிறுவனங்கள், போன்ற இடங்களில் உள ஆற்றுப்படுத்தல் முக்கியம் பெறும் அதே வேளை பாடசாலைகளிலும் அதனது தேவையை காண முடிகின்றது. பாடசாலைகளை எடுத்துக் கொண்டால் ஆறு வயது தொடங்கி பதினெட்டு வயது வரையான காலப்பகுதி பாடசாலைப்பருவத்தில் உள்ளடங்கியுள்ளது. அந்த வகையில் மனித வளர்ச்சிக் கட்டங்களில் முக்கியமான, குழந்தைப் பருவம் மற்றும் கட்டிளமைப்பருவங்கள், இப்பாடசாலைக்காலங்களில் அடங்கியுள்ளது. இப்பிள்ளைகள் பாடசாலை தொடங்கியது முதல் அவர்களின் வாழ்நாட்களின் கணிசமான பகுதி பாடசாலையிலேயே கழிகின்றது. எனவே இப்பாடசாலை வாழ்க்கை என்பது பிள்ளைகளின் வாழ்வில் மிகவும் முக்கியமானதாகும். சிறுபராயத்து மனப்பதிவுகள் வாழ்க்கைக் காலம் முழுவதிலும் பிரதிபலிக்கும்.

இப்பருவத்திலேயே பிள்ளைகளது உடல், உள சமூக நலன்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும். இன்றைய சிறுவர்களே நாளைய உலகத்தை உருவாக்க வேண்டியவர்கள். ஆகவே அவர்களது அனைத்து விருத்திகளையும் பொருத்தமான வகையில் மேம்பாடு அடைய உதவுதல் முக்கியமானதாகும். மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெற அவர்களுக்கு உடல் நலனோடு உளநலனும் மிகவும் அவசியமானதாகும். கற்றலில் ஆர்வம், ஊக்கம், கிரகித்தல், ஞாபகசக்தி, நுண்ணறிவு விருத்தி என கற்றலின் எல்லா செயற்பாடுகளும் ஒழுங்காக நடைபெறுவதற்கு மாணவர்களது உள நலன் சிறப்பானதாக இருத்தல் வேண்டும். அத்தோடு சமூகத்தில், குடும்பத்தில் அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவினை எவ்வாறு அமைகின்றதென்பதும் அவர்களினது உள நலனிலே தங்கியுள்ளது. ஆகவே மாணவர்களது உளநலனை மேம்படுத்தும் வகையில் பாடசாலைகளில் உள ஆற்றுப்படுத்தலானது முக்கியமானதாக மாறி வருகின்கின்றது. காரணம் மாணவர்களின் உடல், உள சமூக விருத்தியானது முன்னைய காலங்களை விட இன்றைய மாணவர்களில் பின்னடைவானதாகவே காணப்படுகின்றது. இதற்கான பல காரணங்கள் மாணவர் மத்தியில் காணப்படுகின்றது.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் கரு உருவானது தொடக்கம் மலரும் வரை குழந்தைகள் வன் முறையின் ஓசையைக் கேட்டுக் கொண்டே வன்முறையுடனே பிறக்கின்றார்கள். பின்னர் அவர்களே வன்முறைக் கலாசாரத்தை சமூகத்தில் விதைப்பவர்களாக உருவெடுத்து வன்முறையுடன் கைகோர்த்து நிற்கின்றார்கள். பெற்றோர்கள் கூட வன்முறைக் கலாசாரத்திற்கு அடிமைப்பட்டவர்களாக தம்முடைய சுடு சொற்களாலும்,அன்பற்ற, பண்பற்றசெயற்பாடுகளினாலும்,பிள்ளைகளுக்கு நெருக்கீடுகளை ஏற்படுத்துகின்றார்கள். இன்று பெற்றோரின் அழுத்தங்களும் அதீத ஆசைகளுமே பிள்ளைகளுக்கு உளரீதியான தாக்கங்களை உருவாக்குகின்றன. இப்பாடசாலைப்பருவமானது பிள்ளைகள் பெற்றோரில் தங்கி வாழும் பருவமாதலால், இக்காலப்பகுதியில் அவர்கள் முழுமையாக பெற்றோரின் அன்பையும், அரவணைப்பையும் எதிர்பார்க்கும் நிலை காணப்படுகின்றது. இதனைப் பல உளவியலாளர்களும் தெளிவுபடுத்துகின்றனர். அதன் படி John Bowlby எனும் உளவியலாளர் 'குழந்தையின் அன்பு பசியானது அதன் உணவு பசியை விட மேலானது' என்கிறார். உளவியலின் தந்தையான Freud,'ஒரு பிள்ளைக்கு அதன் குழந்தைப் பருவத்தில் தாயினது அன்பும் அரவணைப்பும் முக்கியமானது'என எடுத்துக்காட்டுகின்றார். மேலும் உளவியலாளரான Erik Erikson 'ஒரு மனிதனது வளர்ச்சி கட்டங்களில் குழந்தைப்பருவத்தில் கிடைக்கக் கூடிய அன்பும் அரவணைப்பும் அதன் வளர்ச்சி முழுவதிலும் முக்கிய பங்காற்றுவதுடன், குழந்தையின் பின்னைய வளர்ச்சிக்கும் ஒரு திறவு கோலாக அமைகிறது' என்கின்றார்.

ஆனால் இன்று இந்நிலை மாறி விட்டது. இன்றைய பெற்றோர் தாங்கள் சாதிக்க தவறியதை தங்கள் பிள்ளைகளைக் கொண்டு அடைய எத்தனிக்கின்றார்கள். இவ்வாறான அதீத ஆசையால் பிள்ளைகளுக்கு அதிக அழுத்தத்தை கொடுக்கின்றார்கள். தனது பிள்ளை வைத்தியராக, பொறியியலாளராக, பெரிய பெரிய பதவிகளை வகிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மேலதிகமாக கல்வியை வழங்கி அவர்களை வழி நடத்துகின்றார்கள். ஆனால் அதே பிள்ளையின் மனதில் தான் என்னவாக வரவேண்டுமென்ற ஆசை உள்ளது என்பதனை எந்த பெற்றோரும் உணர்ந்துகொள்வதில்லை. பிள்ளையும் தனது ஆசையை உள்மனதில் அடக்கி வைத்து விட்டு பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றத் தலைப்படுகின்றது. இதனால் பிள்ளையிடத்து ஒரு சிக்கல்நிலை உருவாகி அது பிற்காலத்தில் உள நெருக்கீடு, வெறுப்பு, குற்ற உணர்வு, தோல்வியைத் தழுவி விடுவோமோ என்ற பயம் போன்ற உணர்வுகளுக்கு ஆளாகின்றது. இவ்வாறான தாக்கங்களால் கல்வியை சிறப்பாக மேற்கொள்ள முடியாத பிள்ளைகளையும் எமது பாடசாலைகளில் காணமுடிகின்றது. ஆனால் பெற்றோர்கள் தாங்கள் பிள்ளைகளுக்காக பாடுபட்டு உழைக்கின்றோம், அவர்களது கல்விக்காக எவ்வளவோ செய்கின்றோம், இருந்தும் ஏன் பிள்ளை கல்வியில் பின்னடைவாக இருக்கின்றது என கவலைப்படுகின்றனர். பிள்ளையின் ஆசை, இலக்குகளை அறிந்து செயற்படும் பெற்றோர் இவ்வாறு கவலைப்பட தேவையில்லை.

இன்றைய குடும்ப அமைப்பானது பிள்ளைகளுக்கு மேலும் உள நெருக்கீடுகளை ஏற்படுத்துவதாய் அமைகின்றன. அதாவது பெற்றோர்கள் தம் தாய், தந்தை உறவுகளை விட்டு தனிக்குடித்தனம் சென்று வாழ்க்கை நடாத்துகின்றார்கள். ஆகவே பிள்ளை தனது சுக துக்கங்கள் முழுவதையும் பெற்றோரிடமே பகிர வேண்டி உள்ளது. அதே வேளை பெற்றோர் வேலைக்கு செல்பவராயின் அங்கே பிள்ளையின் உடல், உள தேவைகள் பூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படாமல் போக, பிள்ளையானது தனிமையில் வாடுகின்றது. ஆனால் முன்பிருந்த கூட்டுக்குடும்ப அமைப்பானது பல பிரச்சினைகளின் தீர்வாக அமைந்திருந்தது. பின்வந்தவர்களது சுயநலபோக்குகள் அவ்வாறான சிறந்த நடைமுறைகளை விழுங்கி விட்டன. இதனால் இப்போது மிஞ்சி இருப்பது எல்லா மனிதரும் ஒட்டு மொத்தமாக மன உளைச்சலுக்கு ஆளாவதே. இதன் காரணமாக இன்றைய பிள்ளைகள் சுயநலம், மற்றவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமை, மற்றவர்களையும் தன்னையும் குறை நிறைகளோடு ஏற்றுக் கொள்ளாமை என்பவற்றுடன் வளர்கின்றார்கள்.பெற்றோர் சிலர் பிள்ளைகளுக்கு அதிக கட்டுப்பாடுகளை விதிக்கும் அதே வேளை, வேறு சில பெற்றோர் தங்களது பிள்ளைகளை அவர்களது கால் போன போக்கில் விட்டு விடுகின்றார்கள். பிள்ளைகளின் ஒரு முக்கிய தேவையான அன்புத்தேவைகளுக்கு மேலாக, பெற்றோர் தமது விருப்பங்களை நிறைவேற்றுதல், பிள்ளைகளின் பிழைகளை கவனிக்காது விடுதல் போன்ற செயற்பாடுகளால் பிள்ளைகள் தவறான பாதைக்கு இட்டுச் செல்லப்படுகின்றனர்.இதன் காரணமாக சிலவேளைகளில் குற்றவாளிகளாகி இறுதியில் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

மனித வாழ்வின் இனிமையான பருவமான கட்டிளமைப்பருவம் இப்பாடசாலைக்காலப் பகுதியில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இனிமையான இந்த இளமையில், நிறைந்த நெருக்கீடுகளும், சவால்களும் கூட காணப்படுகின்றன. உடலியல், உளவியல் மாற்றங்கள் பிள்ளைகளில் உள நெருக்கீடுகளை தோற்றுவிக்கின்றது. அதாவது இவர்களது உடலில் ஏற்படும் ஓமோன்களின் தொழிற்பாடானது அவர்களது நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. எனவே இப்பருவத்தினர் எதிர்பால் கவர்ச்சிக்கு உட்படுகின்றார்கள். எனவே அவர்கள் எதிர்பாலாருடனான ஒன்றிப்பையே அதிகம் விரும்புவர். பின்னர் அவர்களது கவர்ச்சி நிலைக்கு காதல் எனும் பெயரைப் போட்டுக் கொண்டு சிலர் தவறான வழிகளுக்கும் செல்கின்றார்கள். இக்காலப்பகுதியில் பெற்றோர் இதனைப் புரிந்து கொள்ளாமல் அவர்களை சந்தேகக் கண்கொண்டு நோக்குதல், பிழையான வழிமுறைகளை கையாளுதல் (அடித்தல்,திட்டுதல்) என்பவற்றை செய்வதால் அவர்கள் தங்களது உள்ளத்தில் உள்ளவற்றை, தமது உணர்வுகளை வெளிபடுத்த முடியாமல் தவிக்கின்றார்கள். பாடசாலைகளில் சில ஆசிரியர்களும் தப்பான கண்ணோட்டத்தில் நோக்குதல், பொருத்தமில்லாத தண்டனைகளை பயன்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதால் இப்பருவமானது மிகவும் சவால்கள் நிறைந்த பருவமாக மாறுகின்றது.

எனவே இவ்வாறான பல பிரச்சினைகள் இன்றைய மாணவர்கள் மத்தியில் காணப்படுவதால் அவர்கள் தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு பல தவறான தீர்மானங்களை மேற்கொள்கிறார்கள்.தமது பிரச்சினைகளை தீர்க்க யாரும் இல்லை என உணரும் பட்சத்தில் தாமே சில முடிவுகளை எடுக்கத் தலைப்படுகின்றனர். இதனால்தான் சிறுவர்கள் பலர் வன்போக்கான நடத்தையை வெளிப்படுத்தவும், கல்வியை வெறுத்து ஒதுக்கவும், தற்கொலை முயற்சிகளில் ஈடுபடவும், போதைப்பொருளுக்கு அடிமையாகவும்,தவறான காரியங்களுக்கு துணைபோகவும், தமக்கு பிடித்தமான வாழ்க்கையை தெரிவு செய்யவும் தலைப்படுகின்றார்கள். எனவே வாழ்விழந்து, கல்வியிழந்து நடுத்தெருவில் நிற்கும் காலமும் வெகு தூரமில்லை. ஆகவே இவ்வாறான தவறான முடிவுகளை அவர்கள் எடுக்காத வண்ணம் இன்று பாடசாலைகளில் சிறந்த உள ஆற்றுப்படுத்தல் அவசியமாகிறது.

உள ஆற்றுப்படுத்தலானது மாணவர்கள் தமது பிரச்சினைகளை தாமே கையாளவும்,பிரச்சினைகளின் மத்தியிலும், தமது கல்வியை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதனை அவர்களுக்கு தெளிவுபடுத்துவதாகவும்,இந்த உள ஆற்றுப்படுத்தல் உதவி செய்கின்றது. மேலும் உள ஆற்றுப்படுத்தலானது ஒரு மாணவனின் நடத்தையை சீர்செய்யும் ஓர் ஊன்று கோலாக அமைகின்றது. பாடசாலையில், சமூகத்தில் மற்றவர்களுடன் எவ்வாறு சுமூகமான உறவைக் கட்டியெழுப்பலாம், மற்றவர்களை புரிந்து கொண்டு எவ்வாறு தமது நடத்தையை மாற்றியமைக்கலாம் முரண்பாடுகள், விரிசல்களை எவ்வாறு கையாண்டு மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளை கட்டியெழுப்பலாம் என்பதற்கும் வழிகாட்டுகின்றது. இன்னும் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தெரிவுகளை மேற்கொள்ளவும், தமது திறன்களை இனம் காணவும் அதன்படி தமது வாழ்வைக் கொண்டு செல்லவும் உதவுகின்றது.

பிள்ளை தனது உள்ளக் கிடக்கைகளை யாரிடமும் கூற முடியாத நிலையில் அதனை ஆழ்மனதில் போட்டு புதைத்து விடுகின்றது. அதே நேரம் ஒருவர் தனது கதையைக் கேட்க ஆயத்தமாய் இருக்கின்றார் என்பதனையும் அறியும் போது அவ்ஆழ்மனதில் அடக்கி வைக்கப்பட்ட உணர்வுகளை அப்படியே உள ஆற்றுப்படுத்துநர் முன் கொட்டி விடுகின்றது. இதனால் பிள்ளையின் மனம் அமைதியடைகின்றது. பிள்ளை தன்னைப் பற்றிதான் அறிந்து கொள்ளவும், தன்னிடம் உள்ள மறையான பண்புகளை மாற்றிக் கொள்ளவும் நேரான பண்புகளை வளர்த்துக் கொள்ளவும் இவ் உள ஆற்றுப்படுத்துதலானது உதவுகின்றது.

ஒவ்வொரு மாணவர்களது உள நலனையும் மேம்படுத்தும் பொருட்டு இன்று உள ஆற்றுப்படுத்தல் அத்தியவசியமானதாக, அடிப்படைத் தேவைகளோடு ஒத்ததாக காணப்படுகின்றது. ஆகவே பயிற்றுவிக்கப்பட்ட அனுபவம் வாய்ந்த உள ஆற்றுப்படுத்துநர்களைக் கொண்டு பாடசாலை மாணவர்களது உள நலனை மேம்படுத்த வேண்டியது பாடசாலை நிர்வாகங்களினது தலையாய கடமை என்பதனை மறக்க கூடாது.

அருட்சகோதரி மேரி வளர்மதி அ.கா
புனித சூசையப்பர் கன்னியர் மடம்,
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STRESS AT WORK

Work stress is defined as the harmful physical and emotional responses that occur when job requirements do not match the worker's capabilities, resources, and needs (National Institute of Occupational Safety and Health 1999). It is recognized world-wide as a major challenge to individual mental and physical health, and organizational health (ILO 1986). Stressed workers are also more likely to be unhealthy, poorly motivated, less productive and less safe at work; and their organizations are less likely to succeed in a competitive market. By some estimates work-related stress costs the national economy a staggering amount in sick pay, lost productivity, health care and litigation costs (Palmer et al. 2004).

**Job Stress**

Job stress is something we all face as workers and we all handle it differently. There is no getting around it. But, not all stress is bad, and learning how to deal with and manage stress is critical to our maximizing our job performance, staying safe on the job, and maintaining our physical and mental health. Some jobs, by definition, tend to be higher stress -- such as ones that are in dangerous settings (fire, police), that deal with demanding customers (service providers), that have demanding time pressures (healthcare), and that have repetitive detailed work (manufacturing) -- but stress is not limited to any one particular job or industry.

**How Stress Affects Your Work Performance**

Workplace stress is derived from many sources. It can be a demanding boss, annoying co-workers, rebellious students, angry customers, hazardous conditions, long commutes and a never-ending workload. Your work performance is also affected by stresses such as family relationships, finances and a lack of sleep stemming from fears and anxieties about the future. How you handle the effects of stress depends on whether it is easier to change the situation or change your attitude toward it.

**Common effects of stress**

Indeed, stress symptoms can affect your body, your thoughts and feelings, and your behavior. Being able to recognize common stress symptoms can give you a jump on managing them. Stress that's left unchecked, can contribute to health problems, such as high blood pressure, heart disease, obesity and diabetes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Common effects of stress | | |
|---|---|---|
| On your body | On your mood | On your behavior |
| • Headache<br>• Muscle tension or pain<br>• Chest pain<br>• Fatigue<br>• Change in sex drive<br>• Stomach upset<br>• Sleep problems | • Anxiety<br>• Restlessness<br>• Lack of motivation or focus<br>• Irritability or anger<br>• Sadness or depression | • Overeating or undereating<br>• Angry outbursts<br>• Drug or alcohol abuse<br>• Tobacco use<br>• Social withdrawal |

**Workplace stress warning signs**

Unfortunately, people do miss the early warning signs that they are stressed. But there are some warning signs that tell you to head towards the upper end of the stress scale, these can include:

- Struggling to cope at work and not speaking up or seeking help to improve your situation.
- Not setting boundaries between your work and home life – taking work home with you, checking your emails outside work hours, or just thinking about work in non-work time.
- Having low morale – this includes not feeling supported, not being able to find meaning in your work and feeling undervalued.
- Engaging in negative, irrational and catastrophising thinking patterns such as: "I have to be responsible for everything." "Everything will collapse without me." "I have to perform to 100 per cent."
- A real or perceived lack of control over your job and how you do it.
- Feeling undervalued by your managers and colleagues.
- Feeling disconnected from your colleagues and other people in your life. This is sometimes a problem for people who do shift work, or work in jobs that require extensive travel away from family or friends or periods of isolation.
- Taking days off work when you are not sick or going to work, but not being productive.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Stress management strategy**

- **Avoid unnecessary stress**

Not all stress can be avoided, and it's not healthy to avoid a situation that needs to be addressed. You may be surprised, however, by the number of stress in your life that you can eliminate.

- Learn how to say "no" – Know your limits and stick to them. Whether in your personal or professional life, taking on more than you can handle is a surefire recipe for stress.
- Avoid people who stress you out – If someone consistently causes stress in your life and you can't turn the relationship around, limit the amount of time you spend with that person or end the relationship entirely.
- Take control of your environment – If the evening news makes you anxious, turn the TV off. If traffic's got you tense, take a longer but less-traveled route. If going to the market is an unpleasant chore, do your grocery shopping online.
- Avoid hot-button topics – If you get upset over religion or politics, cross them off your conversation list. If you repeatedly argue about the same subject with the same people, stop bringing it up or excuse yourself when it's the topic of discussion.
- Pint down your to-do list – Analyze your schedule, responsibilities, and daily tasks. If you've got too much on your plate, distinguish between the "shoulds" and the "musts." Drop tasks that aren't truly necessary to the bottom of the list or eliminate them entirely.

- **Alter the situation**

If you can't avoid a stressful situation, try to alter it. Figure out what you can do to change things so the problem doesn't present itself in the future. Often, this involves changing the way you communicate and operate in your daily life.

- Express your feelings instead of bottling them up. If something or someone is bothering you, communicate your concerns in an open and respectful way. If you don't voice your feelings, resentment will build and the situation will likely remain the same.
- Be willing to compromise. When you ask someone to change their behavior, be willing to do the same. If you both are willing to bend at least a little, you'll have a good chance of finding a happy middle ground.
- Be more assertive. Don't take a backseat in your own life. Deal with problems head on, doing your best to anticipate and prevent them. If you've got an exam to study for and your chatty roommate just got back from home, say up front that you only have five minutes to talk.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Manage your time better. Poor time management can cause a lot of stress. When you're stretched too thin and running behind, it's hard to stay calm and focused. But if you plan ahead and make sure you don't over exert yourself, you can alter the amount of stress you're under.

➢ **Adapt to the stressor**

If you can't change the stressor, change yourself. You can adapt to stressful situations and regain your sense of control by changing your expectations and attitude.

- Reframe problems. Try to view stressful situations from a more positive perspective. Rather than fuming about a traffic jam, look at it as an opportunity to pause and regroup, listen to your favorite radio station, or enjoy some alone time.
- Look at the big picture. Take perspective of the stressful situation. Ask yourself how important it will be in the long run. Will it matter in a month? A year? Is it really worth getting upset over? If the answer is no, focus your time and energy elsewhere.
- Adjust your standards. Perfectionism is a major source of avoidable stress. Stop setting yourself up for failure by demanding perfection. Set reasonable standards for yourself and others, and learn to be okay with "good enough."
- Focus on the positive. When stress is getting you down, take a moment to reflect on all the things you appreciate in your life, including your own positive qualities and gifts. This simple strategy can help you keep things in perspective.

Adjusting Your Attitude

How do you think can have a profound effect on your emotional and physical well-being. Each time you think a negative thought about yourself, your body reacts as if it was in the throes of a tension-filled situation. If you see good things about yourself, you are more likely to feel good; the reverse is also true. Eliminate words such as "always," "never," "should," and "must." These are telltale marks of self-defeating thoughts.

➢ **Accept the things you can't change**

Some sources of stress are unavoidable. You can't prevent or change stressors such as the death of a loved one, a serious illness, or a national recession. In such cases, the best way to cope with stress is to accept things as they are. Acceptance may be difficult, but in the long run, it's easier than railing against a situation you can't change.

- Don't try to control the uncontrollable. Many things in life are beyond our control—particularly the behavior of other people. Rather than stressing out over them, focus on the things you can control such as the way you choose to react to problems.
- Look for the upside. As the saying goes, "What doesn't kill us makes us stronger." When facing major challenges, try to look at them as opportunities for personal growth. If your own poor choices contributed to a stressful situation, reflect on them and learn from your mistakes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Share your feelings. Talk to a trusted friend face to face or make an appointment with a therapist. The simple act of expressing what you're going through can be very cathartic, even if there's nothing you can do to alter the stressful situation. Opening up is not a sign of weakness and it won't make you a burden to others. In fact, most friends will be flattered that you trust them enough to confide in them, and it will only strengthen your bond.
- Learn to forgive. Accept the fact that we live in an imperfect world and that people make mistakes. Let go of anger and resentments.Free yourself from negative energy by forgiving and moving on.

➢ **Make time for fun and relaxation**

Beyond a take-charge approach and a positive attitude, you can reduce stress in your life by nurturing yourself. If you regularly make time for fun and relaxation, you'll be in a better place to handle life's stresses.

Healthy ways to relax and recharge

- Go for a walk.
- Spend time in nature.
- Call a good friend.
- Sweat out tension with a good workout.
- Write in your journal.
- Take a long bath.
- Light scented candles.
- Savor a warm cup of coffee or tea.
- Play with a pet.
- Work in your garden.
- Get a massage.
- Curl up with a good book.
- Listen to music.
- Watch a comedy.

➢ **Adopt a healthy lifestyle**

You can increase your resistance to stress by strengthening your physical health.

- Exercise regularly. Physical activity plays a key role in reducing and preventing the effects of stress. Make time for at least 30 minutes of exercise, three times per week. Nothing beats aerobic exercise for releasing pent-up stress and tension.
- Eat a healthy diet. Well-nourished bodies are better prepared to cope with stress, so be mindful of what you eat. Start your day right with breakfast, and keep your energy up and your mind clear with balanced, nutritious meals throughout the day.
- Avoid alcohol, cigarettes, and drugs. Self-medicating with alcohol or drugs may provide an easy escape from stress, but the relief is only temporary. Don't avoid or mask the issue at hand; deal with problems head on and with a clear mind.
- Get enough sleep. Adequate sleep fuels your mind, as well as your body. Feeling tired will increase your stress because it may cause you to think irrationally.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Conclusion**

Work stress can be measured by several indicators. As a result, some variables can at times show differing types of associations with various population groups. In particular, self-perceived work stress often had a seemingly inverse relationship to other indicators of work stress. For example, white-collar workers were more likely than others to have low job strain and high job satisfaction, yet they also had higher levels of self-perceived work stress. Groups with high self-perceived work stress included middle-aged, married, high income, and higher education. It seems workers were more likely to find their work stressful when it was based on their perceived responsibility rather than job strain or dissatisfaction.

**References**


- Dollard, Maureen F. and Jacques C. Metzer. 1999. "Psychological research, practice, and production: The occupational stress problem." *International Journal of Stress Management*. October. Vol. 6
- K. Aswathappa (2010), Human Resource Management, 6th Edition, Tata McGraw Hill Education Private Limited.
- Leontaridi, Rannia M. and Melanie E. Ward. 2002. "Work-Related Stress, Quitting Intentions and Absenteeism." Discussion Paper No. 493. May. Institute for the Study of Labor (IZA). Bonn, Germany
- National Institute for Occupational Safety and Health (NIOSH). 2004. *Overtime and Extended Work Shifts: Recent Findings on Illnesses, Injuries and Health Behaviors*. Centers for Disease Control and Prevention, U. S. Department of Health and Human Services. April.
- Shashi K. Gupta, Rosy Joshi (2005), Human Resource Management, 2nd Edition, Gautam Graphic Printers



**Mrs.S.Priyadharsan**
**Senior Lecturer**
**Department of Business and Management Studies**
**Faculty of Communication and Business Studies**
**Trincomalee Campus, Eastern University**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



WESAK FESTIVAL 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



TAMIL DAY PRIZE GIVING 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூரண மனிதனாய் வாழ்வோம்

Dr. செல்வம் கண்ணதாசன் ,
மருத்துவபீடம் ,
யாழ். பல்கலைக்கழகம்.

திருகோணமலை மகாவித்தியாலயமே விழாக்கோலம் பூண்டிருந்தது. வழியெங்கும் மாவிலை தோரண அலங்கரிப்பு; வாசலிலே பூரண கும்பம் ; ஒலிபெருக்கி “பிள்ளையார் சுழிபோட்டு....” என்றும் பக்தி மணம் பரப்பிக்கொண்டிரந்தது. திரு.ஆசிரியர்திலகம் அவர்களின் சேவை நலன் பாராட்டு மற்றும் பிரிபுபசார விழா கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. கணித ஆசிரியரான திரு.ஆசிரியர்திலகம் அன்று தனது ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார்.

மதகுருமார், கல்விப்புலம் சார் அதிகாரிகள், அயற்பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் , பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் ஆசிரியரது குடும்ப உறுப்பினர்கள், உற்ற நண்பர்கள் என மேடையும் மண்டபமும் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது.

விழா தொடங்கியது; நிகழ்ச்சி நிரலின்படி பலரும் எமது ஓய்வுபெறும் திரு ஆசிரியதிலகம் அவர்களைப்பற்றி பலவாறு புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

விழாநாயகனுக்குத் திடீரென தலைகிறுகிறுக்கிறது. ; பயங்கரமாக வலிக்கிறது ; இருகைகளாலும் தலையை இறுகப்பற்றிக்கொள்கிறார். ஒரு சில நொடிகளில் வலிநின்று விடுகிறது.

என்ன ஆச்சரியம்! ஒவ்வொருவரும் மனதில் நினைப்பவை திரு ஆசிரியர்திலகத்திற்கு விளங்கத்தொடங்குகிறது. ஒருசிலர் நினைப்பவற்றையே பேசுகின்றனர். பலர் நினைப்பதொன்று பேசுவதொன்றாகக் காணப்படுகிறதே. ஆச்சரியம், பயம் போன்ற பல்வேறு உணர்ச்சிகளால் உந்தப்பட்டவர் அனைவரது மனங்களையும் அறிய முயல்கிறார்.

உயரதிகாரிகள் , சக ஆசிரியர்கள் , தமது மாணவர்கள் , தமது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவரது மனங்களையும் வாசித்தறிகிறார்.


மிக நீண்ட பெருமூச்சின்பின் , “நான் வாழ்க்கையில் என்ன சாதித்தேன்?” என தன்னைத்தானே கேட்டுக்கொள்கிறார்.

இப்படியான சந்தர்ப்பங்கள் எங்கள் ஒவ்வொருவரிற்கும் வரும். அந்தவேளை பெரும்பாலும் வாழ்க்கையிலே நாம் நீண்டதூரம் பயணித்திருப்போம். எம்மை மீளமைத்துக்கொள்ள கால அவகாசம் போதாமலிருக்கும். எனவே, வாழ்க்கையில் நாம் வெற்றியடைந்தோம்; வாழ்க்கையைப் பரிபூரணமாக வாழ்ந்தோம் என்பதை எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிடலாம் என்று அறிந்து, இப்போதே எம்மை நாம் தயார்படுத்திக்கொள்வதே சாலச்சிறந்தது.




வாழ்க்கை முன்னேற்றச் சக்கரம்

"வாழ்க்கை முன்னேற்றச் சக்கரம்" என்பதன் மூலம் எம்மை நாமே அளவிட்டுக்கொள்ளலாம். மற்றவர்களுக்காகவன்றி, எமக்காக- எமது மனச்சாட்சியின்படி, நாம் எங்கே நிற்கிறோம் என நம்மை நாமே சுயமதிப்பீடு செய்து கொள்வோம்.

மேல்குறித்த தனிப்பட்ட முன்னேற்றம் ; தொழில்சார் முன்னேற்றம் ; உறவுகளில் முன்றேற்றம் ; நிதிநிலைமையில் முன்னேற்றம் ; சமூகப்பங்களிப்பில் முன்னேற்றம் மற்றும் ஆன்மீகத்தில் முன்னேற்றம் என அனைத்துத் துறைகளிலும் முன்னேறிருந்தாலே வாழ்க்கையில் முன்னேறியதாக அர்த்தம். வாழ்க்கையைப் பூரணமாக வாழ்ந்ததாக அர்த்தம். ஒவ்வொரு பிரதான பிரிவிலும் மேலும் சிறுசிறு உட்பிரிவுகள் உள்ளன- சக்கரத்தின் சிறுசிறு கம்பிகளாக. ஒவ்வொன்றாக சிறிது உற்றுநோக்குவோம்.

மைய அச்சிலிருந்து விளிம்பு வரையான தூரத்தினை 100% ஆகப்பிரித்தால், ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என நம்மைநாமே அறிந்துகொள்ளலாம்.

### தனிப்பட்ட முன்னேற்றம் (Personal development)

தனிப்பட்ட தனிநபர் சார் முன்னேற்றத்தை இதுகுறிக்கும்.

***உடலை ஆரோக்கியமாக வைத்திருத்தல் (health)***

எமது தனிப்பட்ட முன்னேற்றத்தில் ஓர் கம்பி இதுவாகும். உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான நிறையுணவு பற்றிய அறிவு இருப்பதோடு அதனை நடைமுறைப்படுத்தவும் வேண்டும். காலையுணவு கட்டாயம் உண்ண வேண்டும். அவ்வாறு செய்கிறோமா?
போதிய உடற்பயிற்சி, போதிய ஓய்வு என்பன அவசியம். மேற்கொள்கிறோமா?
கம்பியில் எவ்வளவு தூரத்தில் (வீதத்தில்) குறிக்கலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மென்திறன்கள் (soft skill)*

எமது தனிப்பட்ட முன்னேற்றத்தில் இன்னோர் கம்பி.
மற்றவர்களுடன் தொடர்பாடும் முறை (communication skill) பொறுப்புணர்ந்து செயற்படுந் தன்மை (responsibility) குழுவாகச் செயற்படுந்தன்மை (team work skill) தலைமைத்துவம் வழங்கப்படுகையில் சுயநலமின்றி வழிநடத்துதல் (leadership skill) போன்ற குணங்களில் நாம் எங்கே நிற்கிறோம்?
கம்பியில் எவ்வளவு தூரத்தில் (வீதத்தில்) குறிக்கலாம்?

**தொழில்சார் முன்னேற்றம் (Professional development)**

எமது தொழிலில் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்பதனை சுயமதிப்பிடுவோம்

*திறமைமிக்க ஆசிரியர் (efficient teacher)*

எனது பாடத்தினை மிகவும் அர்ப்பணிப்புடனும் திறமையாகவும் கவர்ச்சிகரமாகவும் எளிமையாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் கற்பிக்கின்றேனா? அனைத்து மாணவர்களும் விளங்கிக் கொண்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறேனா?
கம்பியில் எவ்வளவு தூரத்தில் (வீதத்தில்) குறிக்கலாம்?

*தொடர் கற்றல் (continuous education)*

எனது பாடம் சம்பந்தமாகவும் கல்வியல் மற்றும் கற்றல் கற்பித்தல் தொடர்பாகவும் ஏற்பட்டுவரும் நவீன உத்திகள் மற்றும் மாற்றங்கள் பற்றி ஆவலுடன் தொடர்ந்து கற்று வருகிறேனா?
கம்பியில் எவ்வளவு தூரத்தில் (வீதத்தில்) குறிக்கலாம்?

**உறவுகளில் முன்னேற்றம் (Relationship development)**

ஏனையவர்களுடன் எமது உறவை நன்னிலையில் பேணுதல் எமது கடமையாகும்.

*குடும்ப உறவு (family)*

தாய், தந்தை, சகோதரர், கணவன், மனைவி, குழந்தைகள் போன்றோருடனான உறவுமுறை முன்னேற்றகரமாக உள்ளதா?
எமது சொல் செயல்கள், அவர்களுக்கு உற்சாகமும் உறுதுணையாகவும் இருக்கின்றனவா?
எம்மைத் தமது குடும்ப உறுப்பினர் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்கிறார்களா?
கம்பியில் எவ்வளவு தூரத்தில் (வீதத்தில்) குறிக்கலாம்?

*நண்பர்கள் மற்றும் சகஊழியர்கள் (friends & colleague)*

எமது நண்பர்களதும் சக ஊழியர்களதும் சுக துக்கங்களில் மனப்பூர்வமாகப் பங்குபற்றுகிறோமா?
அவர்களது முன்னேற்றத்தினை எமது முன்னேற்றமாகக் கருதுகிறோமா?
எம்மைத் தமது நண்பர் அல்லது சக ஊழியர் என்று சொல்லிக்கொள்வதில் அவர்கள் கொள்கிறார்களா?
கம்பியில் எவ்வளவு தூரத்தில் (வீதத்தில்) குறிக்கலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதிநிலைமையில் முன்னேற்றம் (Financial development)

மிகுந்த பணக்காரராக இல்லாதபோதும் எமது தேவைகளை நிறைவேற்றக் கூடியவகையில் இருத்தல்

*நிதித் தேவைக்காக மற்றவர்களில் தங்கியிராத தன்மை (financial independence)*

எமது பணத்தேவைகளுக்கு மற்றவர்களில் தங்கியிருக்கிறோமா?
எமது வருமானத்திற்குட்பட்ட வகையில் செலவுகள் செய்கிறோமா? சிறு தொகையை மாதாமாதம் சேமித்து வருகிறோமா?
ஒரு சிறுதொகையைத் தான தருமம் செய்கிறோமா?
கம்பியில் எவ்வளவு தூரத்தில் (வீதத்தில்) குறிக்கலாம்?

## சமூகப்பங்களிப்பில் முன்னேற்றம் (Development in Social contribution)

நாம் ஒரு சமூகப் பிராணி. எமது முன்னேற்றத்திற்கு பெற்றோர், உறவினர், ஆசிரியர்கள், நண்பர்கள், ஏன் முகந்தெரியாதவர்கள்கூட உதவியுள்ளனர். எனவே, வட்டியோடு இல்லாதுவிடினும் ஓரளவிற்காவது எமது கடனைத் திருப்பிக்கொடுக்கவேண்டியது எமது கடமையல்லவா?
நாம் நன்மை செய்யச்செய்ய மிகுந்த நன்மை எமக்குவிளையும். எமது பரம்பரை நன்கு வாழும்.
கம்பியில் எவ்வளவு தூரத்தில் (வீதத்தில்) குறிக்கலாம்?

## ஆன்மீகத்தில் முன்னேற்றம் (Spiritual development)


எம்மையும் மீறி ஒருசக்தி எம்மை இயக்கிவருவதை யாவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். மெஞ்ஞானிகள் கடவுள் என்றும் பிரம்மம் என்றும் விஞ்ஞானிகள் அதீத புத்தி (super intelligence/ super conscious) அதீத இயற்கை (super natural) என்றும் குறிப்பிடுகின்றனர்.
இந்த சக்தி எம்மிலும் அனைத்து உயிர்களிடமும் காணப்படுவதை உணர்ந்து செயற்படுவதனையே ஆன்மீகத்தில் முன்னேற்றம் எனலாம்.
இயற்கையைப் பேணிக்காப்பதும் இந்தவகையிலேயே அடங்கும்.
நாம் அனைவரும் ஒன்றே என்ற எணர்வு ஏற்படுகையில் அன்பு கருணை இரக்கம் மற்றவர்கள் நிலையில் எம்மை வைத்துப்பார்த்தல் என்ற உணர்வுகள் ஏற்படும்.
இந்நிலையில், போட்டி பொறாமை அகலும்; வஞ்சகம் சூது மறையும்; பூவுலகே சொர்க்கலோகமாகும்
நமது நிலை என்ன?
இறைவழிபாடு, தியானம், நல்லவர்களின் சேர்க்கை என்பன இவற்றிற்கு உதவும்.
கம்பியில் எவ்வளவு தூரத்தில் (வீதத்தில்) குறிக்கலாம்?

இப்பொழுது எமது வாழ்க்கை முன்னேற்றறச்சக்கரம் எமக்குக் கிடைத்திருக்கும். ஒருசில துறைகளில் நன்கு முன்னேறியும் சிலவற்றில் பின்தங்கியும் இருக்கக்கூடும். பாதகமில்லை. இதனை அறிந்துகொண்டதே மிகப்பெரிய விடயம்.
இப்பொழுது நாம் செய்யவேண்டியதெல்லாம் முன்னேறியுள்ள விடயங்களில் ஒருசில வீதம் முன்னேறவும், பின்தங்கியுள்ள விடயங்களில் அதிக கவனம் செலுத்தவும் ஆரம்பிக்க வேண்டும்.
அதிகளவு ஆசைப்படாது சிறுசிறு முன்னேற்றங்களாக முயற்சிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் நித்திரைக்குச் செல்லும்போதும், நித்திரைவிட்டு எழும்போதும் , மற்றைய எல்லா சிந்தனைகளையும் விடுத்து, "எல்லாத்துறைகளிலும் முன்னேறியுள்ளேன்" என குறைந்தது 5 நிமிடங்களாவது எமது ஆழ்மனதிற்பதியும்வகை நம்பிக்கையோடு எண்ணுங்கள்.
நாம் முன்னேறியுள்ள நிலையில் எம்மை நாம் மனப்படமாகக் காணவேண்டும். உதாரணமாக உறவுநிலையில் முன்னேற்றம் ஏற்படவிரும்பினால், சகஊழியர்களுடன் நன்கு பழகுவதாக, அவர்களுடன் ஒருங்கிணைந்து மாபெரும் செயலைச் செய்வதாக, அவர்களை நீங்கள் பாராட்டுவதாக, அவர்கள் உங்களைப் பாராட்டுவதாக மீண்டும் மீண்டும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் மனப்படம் காணவேண்டும்.
இவ்வாறு, தவறாது 90 நாட்கள் செய்தபின் பாருங்கள், நீங்களே ஆச்சரியப்படும் வகையில் மாற்றம் தெரியும்.
பூரண மனிதனாக வாழ்வதில் இனியென்ன தடை?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆளுமை வளர்ச்சியில் நடனக்கல்வி

திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்,
நடன ஆசிரியை,
யா / பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் முதன்மையானது ஆடற்கலை என்பர். இந்த அகிலத்தையே ஆக்கி ஆண்டருளும் முழுமுதற் பொருளாம் கூத்தபிரானே ஆடற்கலையே முதன்மையானது என நிருபிக்கும் வகையில் தன் ஆடலில் ஐந்தொழிலையும் அடக்கி தத்துவார்த்தமான கலைப்படைப்பினை எமக்கு அருளியுள்ளார். பார்ப்பதற்கும் கேட்டு இரசிப்பதற்குமான கலை ஒன்றினை ஆக்கித்தரும்படி பிரம்மாவிடம் கேட்க நால்வேதங்களின் சாரமாக ஐந்தாவது வேதமாக நடனக் கலையைக் படைத்துப் பரத முனிவர் மூலம் பூவுலகிற்குப் பரப்பினார் என்கிறது புராண வரலாறு. இவ்வாறு பூவுலக்கிற்குப் பரப்பப்பட்ட நடனக் கலை பாவம் இராகம் தாளம் எனும் முக்கிய அம்சங்களை தன்னகத்தே கொண்டு மிளிர்வதால் பரதக்கலையாகத் தோன்றியது என்பதும் ஆன்றோர் கருத்து.

அபிநயத்திற்கும் இசைக்கும் தாள விடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து பல பிரமாணங்களில் இன்று வளர்ச்சி கண்டிருக்கும் பரதக்கலையானது உலகம் முழுதும் பரந்துவிரிந்து இந்துக்களுக்கு மட்டுமல்லாது சகல மதத்தவர்களினது மனங்களிலும் இடம்பிடித்து ஒரு முதன்மைக் கலையாக விளங்குவது கண்கூடு. இந்தவகையில் இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்திலே அழகியற்பாடங்களுள் 1972ஆம் ஆண்டுமுதல் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மாணவர்களது ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் வகையிலும் அழகியல் உணர்வினை ஏற்படுத்துவதுடன் ஆன்மீக கற்கையை வளர்ப்பதும் அதன் நோக்கமாகும். கலைத்திட்டத்தில் நடனக்கலை சேர்க்கப்பட்டதன் விளைவாக மாணவர்களிடையே உற்சாகமாக இயங்குந் தன்மையையுடன் உடற்பயிற்சி செய்வதுபோன்று சகலவிதமான உடல் ஆரோக்கிய நிலையினைப் பேணவும் உடலிலுள்ள பெரும்பாலான உறுப்புக்களின் இயக்கத்தினால் மூளை விருத்தியும் புத்துணர்ச்சியான சிந்தனையை ஏற்படுத்தவும் முடிகிறது எனலாம். இதன் மூலம் நடனம் பயிலும் மாணவர்களிடையே ஒரு வித்தியாசமான ஆளுமையைக் காணமுடிகிறது.

தற்கால கல்வி முறையினூடான கற்பித்தல் முறைகளில் செயன்முறை ரீதியிலான கற்பித்தலிற்கு முதலிடம் வழங்கப்படுவது தெரிந்ததே. செயற்பாட்டு ரீதியான கற்பித்தலில் 80-90% ஆன விளக்கத்தினை மாணவர்பெற்றுக்கொள்கிறார்கள் என்கிறது ஆய்வு. இந்த மாணவர் மையமான கற்பித்தல் முறையிலே ஒரு பிரச்சினையை குழுவாக அணுகி அதற்கான தீர்வினை தாமாகவே தேடி விடைகாண்கின்ற முறையிலான இச்செயற்பாட்டு ரீதியான கற்பித்தல் முறையிலே சீரான முகாமைத்துவத்தினையும் சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்துக்கொள்ள ஏதுவாக அமைகிறது. இதற்காக மாணவர்கள் எதற்குந் துணிந்து முன்வரக் கூடியவர்களாகவும் கூச்ச சுபாவத்தைத் தவிர்த்து தனித்தியங்கக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இப்பண்புகளை நடனபாடம் கற்பதன் மூலம் மாணவர்கள் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனபாடங்கற்கும் மாணவர்கள் ஏனைய பாடங்களிலும் நன்கு துலங்குவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் இணைப்பாடவிதான செயற்பாடுகளாக இடம்பெறும் விழாக்கள் போட்டிகள் என்பன மாணவர்களது ஆளுமை விருத்தியில் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றன. இலங்கை கல்வியமைச்சினால் நடாத்தப்படும் தமிழ்த்தினப் போட்டிகளும் மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதில் பெருங்பங்காற்றி வருகின்றது.


வருடாவருடம் நடனப்போட்டிகளில் தனிநடனம் 5 பிரிவுகளாகவும் குழு நடனம் நாட்டியநாடகம் எனப் பலமாணவர்கள்கள் பங்குபற்றும் சந்தர்ப்பங்களை வழங்குவதுடன் கோட்ட, வலய , மாவட்ட, மாகாண, தேசிய நிலைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவும் வழிசமைக்கின்றது. அதுமட்டுமல்லாது தற்போது கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்படும் அரச நடன விழா, தேசிய நாட்டிய விழா போன்றனவும் பாடசாலையினூடாக மாணவரின் ஆளுமை வளர்ச்சியில் உதவுகின்றன.

பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப்போட்டிகளில் இடம்பெறும் இடைவேளை நிகழ்வு மாணவரிடையேயும், பெற்றோரிடையேயும் பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது.கல்வியில் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்கள்கூட இந்நிகழ்வுகளில் மிகவும் ஆர்வமாகப் பங்குபற்றி தமது ஆற்றல்களை வெளிக்காட்டுகின்றனர். பெரும்பாலான பாடசாலைகளில் பலநூற்றுக்கணக்கான மாணவர்களை இந்நிகழ்வுகளில் ஈடுபடுத்தி அம்மாணவர்களின் மனப்பாங்கிலே மாற்றத்தினை ஏற்படுத்த முடிகிறது. இவ்வாறான நிகழ்வுகள் மூலம் மாணவர் இடைவிலகலையும் வரவுக் குறைவினையும் தவிர்த்து கல்வியில் ஈடுபடுத்த முடிகிறது.

பாடசாலை என்பது சமூகத்தின் அச்சாணி ; அதேவேளை சமூகம் பாடசாலையின் முதுகெலும்பு. பாடசாலையானது சமூகம் பெருமிதம் கொள்ளும் வகையில் தன்னை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்பது தற்போதைய கல்விக் கொள்கையாகும். இதற்கமைவாக மாணவரினூடாக வெளிப்படுத்தப்படும் ஆற்றுகைகள், திறன்கள், வெற்றிகள் சமூகத்தைச் சென்றடைவதும் அதனூடாகப் பெருமிதம் கொள்வதும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவற்றிற்கு நடனடக்கலை நிகழ்வுகளும் மாணவரின் சிறந்த வெளிப்பாடுகளும் சமூகத்தினையும் பாடசாலையையும் இணைத்துக்கொள்ளும் பாலமாக அமைவதுடன், சமூகத்தில் மாணவர்கள் தம்மை வெளிப்படுத்துவதிலும் தமது திறன்களை வெளிக்கொணர்வதிலும் ஆர்வங்காட்டுவதினூடாக அவர்களின் ஆளுமை மேலும் வலுவடைகிறது. தொடர்ந்தும் தமக்கு ஒரு சமூக அந்தஸ்தைப்பெற்றுக்கொள்ள முடியும் என்ற மன உறுதி மாணவர்களிடையே வெளிப்படுகிறது. இதற்கு வலுக்கோலும் வகையில் அமையும் பாடசாலைக் கலைத் திட்டத்தில் நடனபாடத்தின் வகிபாகம் முக்கியமானது. எனவே, அழகுணர்வும் ஆத்மீக ஈடுபாடும் ஆளுமைவிருத்தியும் தரவல்ல நடனக்கலை வருங்காலத் தலைவர்களான மாணவர்களுக்குக் கிடைத்த அரியதோர் பொக்கிஷமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ඉගෙන්වීම් ක්‍රියාවලියේ නිසි ලෙස යෙදීම ගුරු වෘත්තියේ වගකීමයි.

ගුරු වෘත්තිය ලොව ඉතා වටිනා සේවයකි.එමගින් යහපත් පුරවැසියන් ලොවට දායාද කළ හැකිය. නිසි දැනුමෙන් පිරිපුන් ගුරුවරයෙකුගෙන්අධ්‍යාපනය ලබන දරුවන්ට එය මහඟු පිටිවහලකි.එසේම ඉගැන්වීම් ක්‍රියාවලියේ නිසි ලෙස යෙදීම ගුරුවෘත්තියේ වගකීමකි.එනම් යහමගට මෙන්ම අගාධයට සිසුන් ඇද දමන ගුරුවරු ලොව සිටින බව නොරහසකි.

බුදුන් වහන්සේ ලොව පහළව සිටි කාළයේ දී ත් අහිංසක නමුත් සිසුවා ගුරුවරයාගේ ප්‍රකාශයක් නිසා ඉතා දරුණු පුද්ගලයෙකු බවට පත් වූහ. ඔහු අවසානයේ ලොවම භීතියෙන් සිටි අංගුලිමාල නමින් ප්‍රසිද්ධියට පත් ව තිබේ.ඔහු යහළුවන්ගෙන් විහිළු තහළු වලට ලක්ව මුළු සමාජය සමගම වෛරයෙන් යුතුව කටයුතු කළ පුද්ගලයෙකි.දෙමව්පියන්ට පවා මෙල්ල කළ නොහැකි තරමට ඔහු දරුණු තත්වයට පත්වූයේ ගුරුවරයා යහපත් ලෙස ඉගැන්වීම් කටයුතු සිදු නොකළ බැවිණි.

එපමණක් නොව මෑත කාළයේදී විදෙස් රටවල පාසල් සිසුන් තම ගුරුවරයාට වෙඩි තැබීමත් පිහි පාරවල් එල්ලකරන්නට තරම් දරුණු පුද්ගලයන් බවට පත් වී ඇත.එයට ප්‍රධාන හේතුව ඔවුන්ගේ ආකල්ප වර්ධනයට ගුරුවරුන් අපොහොසත් වීමයි.එසේ නම් උසස් අධ්‍යාපන් ආයතන වලින් රටක අධ්‍යාපන ප්‍රතිපත්ති හා අධ්‍යාපන අරමුණු හඳුනාගෙන ඒ අනුව සිසුන්ට අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ සකස් කර යුතුයි. එය නවීන ක්‍රමයට ගැළපිය යුතුයි. එසේ ම සිසුන් ප්‍රායෝගිකව අධ්‍යාපන කටයුතුවල නිරත කළ යුතුවේ.

ප්‍රධාන වශයෙන්ම අධ්‍යාපනයේදී සිසු දරුවන්ගේ දැනුම ,කුසලතා ආකල්ප ඉගෙනුම් ඉගැන්වීමේ ක්‍රියාවලියේදී ළඟා කරවිය යුතුය.සිසු දැනුම වර්ධනය කිරීමට නම් ගුරුවරයා විශ්වය පිළිබඳව හොඳ දැනුමකින් සන්නද්ධ පුද්ගලයෙකු විය යුතුය. පොත පත පමණක් නොව ලොව තොරතුරු පිළිබඳ පිපාසිතව තොරතුරු සොයන්නෙක් ගවේශකයෙකු විය යුතුයි.සිසුන් සමඟ දැනුමෙන් තර්ක කිරීමට ඔහු සමත් විය යුතුය. දිනෙන් දින දරුවන්ට අලුත් දැනුම ලබා දෙන්නෙකු විය යුතුය.

එසේම කුසලතා වලින් පිරිපුන් පුද්ගලයෙකු විය යුතුය. සිසු කුසලතා වර්ධනය කිරීමට නම් අනිවාර්යයෙන් ගුරුවරයා දක්ෂයෙකු විය යුතුය.පිහිනීම ළමයෙකුට පුහුණු කිරීමේදී පළමුව ගුරුවරයා පිහිනීම කළ යුතුය.ඉන් පසු එහි අත්දැකීම් දරුවන්ට ලබා දිය යුතුයි.ඉන්පසු දරුවන් එම කාර්යයෙහි නිරත වීම තුළින් අධ්‍යාපනය ලබා දිය යුතුයි.පාසල් පන්ති කාමරයේදීත් ක්‍රීඩා පිටියේ දීත් දරුවන්ට එය ප්‍රායෝගික විය යුතුය.එමගින් දරුවන්ගේ ජීවිතයට නව අත්දැකීමක් ලබා ගැනීමටත් මතක ශක්තිය වැඩි කර ගැනීම අවබෝධය ලැබීමට හේතුවනු ඇත.

එමෙන්ම ආකල්ප වර්ධනය කිරීමේදීත් සිසුවා තුළ යහපත් ආකල්ප බිහිකළ යුතුය.එනම් පවුල් පරිසරයේ දී ඔහුට යහපත් ආකල්ප නොලැබීම නිසා සමාජය දෙස යහපත් ඇසකින් බැලීමට නොහැකියාව ලබයි.ඔහු සෑම විටම හොඳයි ඉතා හොඳයි, සතුටුදායකයි , ඉතා සතුටුදායකයි වශයෙන්ප්‍රසංශාවට ලක් විය යුතුය.තම පංති කාමරයේදී දිළිඳු දරුවෙකුට පැන්සලක් , මකනයක් නොමැති වූ අවස්ථාවකදී තමා ළඟ වැඩිපුර තිබෙන දෙයක් එම දරුවාට ලබා දීමට කරුණාවන්ත බවක් අනෙක් දරුවන්ගේ සිත තුළ ඇති කළ යුතුයි.එසේම ගුරුවරයා ඉගැන්වීම්



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ක්‍රියාවලිය සිදු කිරීමට පෙර පන්ති කාමරයේ සිටින සියලු සිසුන් අධ්‍යනය කළ යුතුයි. ඔවුන්ගේ දක්ෂතා හඳුනා ගත යුතුයි. එමෙන්ම දුර්වලතා ද හඳුනාගත යුතුයි.

ඒ අනුව සිසුන් එකිනෙකා ගේ වෙනස්කම් පිළිබඳ මනා අවබෝධයක් ලැබිය යුතුය. ඔවුන්ට අවවාද උපදෙස් ලබාදීමේ දීද එය වැදගත් වේ. ඉතා දිළිඳු පවුලක දරුවෙකුට ඉටු කළ නොහැකි කාර්යයක් පැවරිය නොහැක. එසේම පරිසරය අනුව ලබා ගත හැකි සම්පත් හඳුනාගෙන කටයුතු කළ යුතුයි. ගුරුවරයා විෂය සමගාමී ඉගැන්වීම් කටයුතු වල නිරත වීමට පෙරගුරුමාර්ගෝපදේශ සංග්‍රහ කියවා එමගින් පෙර සූදානමක් ලබා ගත යුතුය. එහි නිපුණතා ක්‍රියාකාරකම් පිළිබඳ පූර්ව සූදානමක් ලබා ගත යුතුය. වර්ෂ ආරම්භයේදී ලබා දෙන විෂයන් හෝ පන්ති භාරත්වය අනුව වාර සටහන් , දින සටහන් පාඩම් සටහන් අනුව පාඩම් බෙදාගෙන වර්ෂය තුළ සිදු කළ යුතු අධ්‍යයන කටයුතු බෙදා වෙන් කර ගත යුතුයි. එය දිනෙන් දින අවසන් කිරීමේදී අධ්‍යයන කටයුතු කරගෙන යාමට පුනරීක්ෂණ වලට හා වාර අවසාන විභාග පැවැත්වීම සඳහා විශාල ප්‍රයෝජනයක් ලැබේ.

මීට අමතරව පාසල් ක්‍රීඩා කටයුතු, භාෂා තරඟ , නාට්‍ය උත්සව කටයුතු සඳහා කාලය වෙන් කර ගත යුතුය. පාසල් අධ්‍යයන කාලය ඒ සඳහා යෙදවීමට සිදු වුවහොත් ඒ සඳහා පාසල් කාලයෙන් පසුව හෝ සති අන්ත නිවා දිනවලදී සිසුන්ගේ අධ්‍යයන කටයුතු සිදුකළ යුතුය.එය ගුරුවරයාගේ වගකීමකි.

එසේම ගුරුවෘත්තිය සඳහා රජයේ ලබා දෙන නිවා වලට අමතරව අසනීප නිවා , අනියම් නිවා ලෙස නිවා දින හතළිස් හයක් ලබා ගැනීමට හැකියාව තිබුණ ද එය නිකරුණේ ලබා ගැනීම සිසු දරුවන් ට කරන අපරාධයකි.එක් දිනකදී දරුවන් හතළිස් පහක් පමණ සිටින එක් පන්ති කාමරයක දරුවන්ගේ අධ්‍යාපන කටයුතු වලට දැවැ බාධාවකි.එසේම කුඩා දරුවන් ට පමණක් නොව සා.පෙළ , උ. පෙළ පන්ති වල සිටින දරුවන්ටද ඒ අතරතුර විවිධ අනතුරු වලට එනම් රණ් දඹර ඇති කර ගැනීමට අවස්ථාව මෙමගින් උදාවනු ඇත.

එමෙන්ම ගුරුවරයා පන්තිකාමරයට නොපැමිණ වෙන වෙන ස්ථාන වල වෙනත් ක්‍රියාවලියක නිරත වීම මගින් ද දරුවන්ගේ අධ්‍යාපන කටයුතු සඳහා තිබෙන කාලය වැය වී යනු ඇත.එසේම පාඩමට අවශ්‍ය පෙර සූදානමක් ගුරුවරයා තුළ නොමැති වීමෙන් දරුවන්ට පාඩම තුළින් අපේක්ෂිත නිපුණතාවය කරා ළඟා වීමට නොහැකියාව ඇති වේ. එමෙන්ම බොහෝ කරුණු එක්රැස් කර ගැනීමට නොහැකිවීමෙන් ගුරුවරයා බොහෝ අවස්ථා වලදී විවිධ අපහසුතාවලට මුහුණ දීමට සිදුවිය හැකි ය. එමෙන් ම දැනුම පමණක් ගුරුවරයා තුළ තිබීම ප්‍රමාණවත් නැත. එය දරුවන්ට බෙදා දීමට හොඳ හඬ පෞරුෂයක් මෙන්ම සිසුන් ඉදිරියට පැමිණ ඉගැන්වීමේ කටයුතු කිරීම සඳහා මනා පෞරුෂත්වයක් ගුරුවරයා තුළ තිබිය යුතුය.

එසේම බොහෝ පාසල්වලදී වාර්ෂික අධ්‍යායන චාරිකා සංවිධානය කරනු ලබයි. පරිසරය පිළිබඳව පෙර අත්දැකීම් නොමැතිකම නිසා දරුවන් විවිධ අනතුරු වලට මුහුණ පෑමට සිදු වූ අවස්ථා අපට අසන්නට දකින්නට ලැබේ. එනම් එම දරුවන් භාරව පැමිණෙන ගුරුවරුන් තම වගකීම නිසි ලෙස ඉටුකර නොමැතිකම ඊට හේතුවයි.තමන් පාසලට පැමිණ උදෑසන අත්සන් කර නැවත අත්සන් කර ගෙදර ගොස් සිටියද නැවත සිසු දරුවන්ගේ යම්කිසි ගැටළුවකදී එයින් මගහැර සිටිය නොහැකිය. ගුරුවරයා මගතොටේ දී වුවද යම් කිසි විනය විරෝධී ක්‍රියාවක දරුවන් යෙදී සිටිනු දුටුවහොත් එයින් මුදවා හැරීම ගුරුවරයාගේ වගකීමයි.

එසේම තමා උගනවන විෂය කුමක් වුවත් එක් එක් පන්තිවල සිටින දරුවන්ගේ දෙමාපියන් සමඟ සාකච්ඡා කළ යුතුය. සිසුන්ගේ දියුණු විය යුතු අවස්ථා හා අවශ්‍ය උදව් ලබාගත යුතුය දරුවන් අධ්‍යාපනයට යොමු කිරීමට අවශ්‍ය මඟ පෙන්වීම දෙමව්පියන්ට ලබාදිය යුතුය. පොත්පත් ඇඳුමක් හෝ නොමැති සිසුන්ට තමන්ට හැකි ආකාරයෙන් ඒවා ලබා දිය යුතුයි. තමාගේ ආහාර




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වේල හෝ ලබා දී ඔවුන් අධ්‍යාපනයට යොමු කරවා ගැනීමට ගුරුවරයෙකු ගේ වගකීමකි.

එසේම ඔවුන්ගේ ක්‍රීඩා කටයුතු වලදී හාඅනෙකුත් අවස්ථාවලදී මගපෙන්වීම මෙන්ම හොඳ පුහුණු කරුවෙකු වෙත යොමු කිරීම මගින් ඔවුන්ගේ හැකියාවන් තව තවත් වර්ධනය කර ගැනීමට හැකියාව ඇති වේ. එසේම ගුරුවරයා සෑම වේලාවකදීම නිවසේ සිටියදීත් ගමන් බිමන් යාමේදීත් පාසල් යාමේදීත් ආදර්ශමත් විය යුතුය. අඳින පළඳින ආකාරය කතාබහ , සමාජ ආශ්‍රය , පවුල් පරිසරය ද උචිත අයුරින් සකස් කර ගැනීමට ගුරුවරයා සමත් විය යුතුය. ඔහු සමාජයේ මුල්තැනක් ගන්නා පුද්ගලයෙකු මෙන්ම සමාජයට ආදර්ශමත් පුද්ගලයෙකු විය යුතුය.

එමෙන්ම ඉගැන්වීමේ ක්‍රියාවලියේ නිසිලෙස යෙදීම ගුරුවෘත්තියේ වගකීමකි. නැතහොත් වෛද්‍යවරු , ඉන්ජිනේරුවරු ,විද්‍යාඥයින් , දාර්ශනිකයින් බිහි නොවී සමාජයේ මැරයන් , පාතාල මිනිමරුවන් බිහිවීමට ඉඩ තිබේ. ගුරුවරයාගේ මග පෙන්වීම නිසිලෙස යෙදීම නිසා යහපත් සුන්දර ලොවක් හෙට දින ලෝකයට දායාද වනු නොඅනුමානය. එය අපේ වගකීමකි.

K.B.S. කාන්ති මුණසිංහ
ත්‍රී/ ඉරක්කකණ්ඩි සිංහල විද්‍යාලය





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ඉගෙනීමේ අගය



ශ්‍රී ලංකාව නිදහස් අධ්‍යාපනය ක්‍රියාත්මක වන රටකි. ප්‍රාථමික අධ්‍යාපනයේ සිට විශ්ව විද්‍යාල අධ්‍යාපනය දක්වා නොමිලේ ඉගෙන ගැනීමට එමගින් අවස්ථාව උදාවේ. රටක් නිදහස් අධ්‍යාපනය සඳහා විශාල මුදලක් වැය කරන්නේ ඉගෙනීමේ අගය කියා නිම කළ නොහැකි නිසාමය.

ඉගෙනීම නිසා මූලිකවම අකුරු ලිවීමේ හා කියවීමේ හැකියාව ලැබෙයි. එමගින් බසයක නාම පුවරුව කියවා ගමනක් බිමනක් යාමටත් , නාමපුවරුවක් කියවා මගක් තොටක් සොයා ගැනීමටත් දවටනයක් බලා භාණ්ඩයක විස්තර දැනගැනීම වැනි අවම අවශ්‍යතා සපුරා ගැනීමට අවස්ථාව උදා වේ.

ඉගෙනීම නිසා අකුරු ලිවීමේ හා කියවීමේ හැකියාව පමණක් නොව ඉලක්කම් එකතු කිරීමේ අ කිරීමේ , බෙදීමේ හැකියාවද ලැබේ. එය තමාටම කියා සුළු ව්‍යාපාරයක් ආරම්භ කිරීමට අවස්ථාව ලබා දෙයි.ශ්‍රී ලංකාවේ දියුණු ව්‍යාපාරිකයින් බොහෝමයක් යාන්තමින් ප්‍රාථමික අධ්‍යාපනය ලැබූ අයයි.ඔවුන් ඉගෙනීම තුළින් ගණිත ශාස්ත්‍රය දැන ගැනීම මෙම ජයග්‍රහණයට හේතුව වෙයි.


පාසලේදී ශිෂ්‍යයාට විෂයන් මූලික කරගත් අධ්‍යාපනයක් ලැබෙයි. එමගින් ශිෂ්‍යයාට අනාගතයේදී තම ජීවනෝපාය සඳහා රැකියාවක නිරතවීමට අවස්ථාව උදා වෙයි.

**" එක් පාසලක් විවෘත කරන විට සිරගෙවල් සියයක් වැසෙයි"**යන්න ප්‍රසිද්ධ කියමනකි. පාසල් අධ්‍යාපනය නිසා ශිෂ්‍යයා හික්මෙයි. ලැජ්ජා භය හඳුනාගනියි. මිනිසා හික්මීමට ඇති හැකියාව ද ඉගෙනීමේ අගයවැඩි කරයි.

G.H.ඉමාෂි චතුරිකා
9 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ගුරුවරයාගේ සේවය විය යුත්තේ යහපත් ශිෂ්‍යයෙකු ගොඩනැගීමයි.

ගුරුවරයා යනු දරුවාට සමාජය පිළිබඳ මග පෙන්වන උතුම් වූ කාර්යය භාර්යයක් ඉටුකර දෙන නියමුවාටය. ගුරු භූමිකාව තුළ ගුරුවරයා යනු පැවතුම් යුතුකම් නිලතල බලතල යන ක්‍රියාවලිය තුළ තම කාර්යය භාර්යය ඉටු කරන පුද්ගලයාටය. O.A ඔයිසර් යන අධ්‍යාපනඥයා පවසන පරිදි , ගුරුවරයා යනුවෙන් අදහස් කර ඇත්තේ උපදේශකවරයෙක් , මගපෙන්වන්නෙක් , දැනුම ලබා දෙන්නෙක් , මවක් පියෙක් , නීතිඥවරයෙක් විටෙක සහෝදරයෙක් හා යෙහෙළියක් ලෙස දරුවා හඳුනාගෙන ක්‍රියා කරන තැනැත්තෙක් වශයෙනි.

ගුරුවරයාගේ සේවය විය යුතතේ පෙර පාසල් අධ්‍යාපනය හමාර කර විධිමත් පාසලකට පැමිණෙන දරුවා හඳුනාගෙන ඇයගේ දක්ෂතා අගයමින් ඉදිරිය වෙත පියනැගීමට උදව් කිරීමයි. පාසල් මව වෙත එන දරුවන්ගේ ක්‍රියා කලාපයන් විවිධ විය හැකිය. ළමුන් අතර සුහග ළමයි මෙන්ම දුස්සමාහිත ළමයි පසුබට ළමුන් සිටිය හැක. මෙම දරුවන් හොඳින් හඳුනාගෙන අධ්‍යාපනය ලබා දිය යුතුවේ.අධ්‍යාපනඥයෙකු වන ජිං ජැක් රූසෝපවසන පරිදි වයස අවුරුදු දහ හතරට අ ළමයින්ට ඉගැන්විය යුත්තේ ස්වභාවධර්මයා සමඟ ගැටී අධ්‍යාපනය ලැබීමට මග පෙන්වීම සිදු කළ යුතුබවයි. එසේම ළමයා යනු කුඩා මිනිසෙකු නොවේ. ළමයා යනු කුඩා දරුවෙක් යන සංකල්පය මිනිස් මනසට තහවුරු කර දී ඇත.

ගුරුවරයාගේ සේවය විය යුත්තේ තමා සතු විෂයානුබද්ධ දැනුම හිස් කලයකට වතුර පුරවන සේ නොව ළමයාට විෂයානුබද්ධ දැනුම ගවේශණශීලීව විමර්ශනාත්කව සිතා බලමින් නිරීක්ෂණ නිගමනවලට එළඹීමට මග පෙන්වීමයි.ජෝන් ඩී නම් අධ්‍යාපනඥයා පවසන පරිදි ස්වභාවධර්මයා සමඟ ගැටී ක්‍රියාකාරකම් ලබමින් ඉගෙනීමට සුදුසු පරිසර රටාවක් දරුවාට ලබා දීම සුදුසු බවයි.

ජෝන් මයිකල් සරඩිප් අධ්‍යාපනඥයා පවසන පරිදි වර්තමානයේ දී දරුවන්ට අධ්‍යාපනය ලබාදිය යුත්තේ ශිෂ්‍ය කේන්ද්‍රිය අධ්‍යාපනයක් බව දක්වා ඇත. ශිෂ්‍ය කේන්ද්‍රිය අධ්‍යාපනයේදී ශිෂ්‍යයා ප්‍රමුඛකොට ගෙන අධ්‍යාපනය ලබාදීමක් සිදුවිය යුතුය.

ගුරු සිත නොරිදවා
වෙලාව නොවරදවා
බැති පෙම් උපදවා
අකුරු උගනිම් කුමරු සොදවා

යන කවිය ගෙන හැර බලන විට එදා සමාජයේ ගුරුවරයාට නොයෙක් ඇප උපස්ථාන කරමින් අධ්‍යාපනය ලැබීමක් දක්නට ලැබිණි. එසේම වෙලාව නොවරදවා බැති සිතින් ශිල්පය ලැබීමක් දක්නට ලැබිණි. එදා අහිංසක කුමරු අංගුලිමාල බවට පත් වූයේ ගුරුවරයාගේ වැරදි මග පෙන්වීම හේතුකොටගෙනය. ලොව්තුරා බුදු රජාණන් වහන්සේ හටද ගුරුවරයෙක් සිටි සේක. එනම් තමා උගත් ධර්මය ගුරු තනතුරේ තබාගෙන තමා කටයුතු කිරීමක් දක්නට ලැබේ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

එහෙත් වර්තමානයේ ගුරුවරුන්ගේ සේවය දෙස බැලීමේදී සමහර ගුරුවරුන්ට තමන් ගුරු පුහුණුව ලැබීමක් සිදුකර නැවත පාසල් වලට පැමිණ ඉගැන්වීමේ කටයුතු සිදු කිරීමේදී සිටින ගුරුවරුන්ට ඔවුන්ගේ අණට කීකරු වීමක් හා සමාජ පද්ධතිය තුළින් එල්ලවන හිරිහැර බාධක හමුවේ තම ඉගැන්වීම් කටයුතු සාර්ථක අන්දමින් ඉටු කිරීමේ නොහැකි තත්වයක් උද්ගත වී ඇත.

එසේම රූපවාහිනිය හා තාක්ෂණ මං පෙත් සමඟ ක්‍රියා කරන දරුවන් හේතුවෙන් සමාජයේ පවතින සාරධර්ම හීනවී යාමක් දක්නට ලැබේ. රූපවාහිනිය තුළින් පෙන්වන නොමනා ක්‍රියා කලාපයන් හා විකෘති දේවල් හේතුවෙන් ඒ ඔස්සේ ගමන් කිරීමට පෙළඹෙන දරුවා අවසානයේදී මංකොල්ල කරුවෙකු , සොරෙකු , මිනීමරුවෙකු බවට පත් වී ඇත. දරුවන් ට අධ්‍යාපනය දෙන ගුරු පිරිස දරුවන් කුඩා කාලයේ සිට දැනුම ආකල්ප කුසලතා වලින් පිරුණු වටිනාකමක් සහිත දරු පරපුරක් බිහි කිරීම සඳහා අවශ්‍ය මඟ පෙන්වීම සිදු කළ යුතුය.

" **උගත මනා ශිල්පයමයි මතු රැකෙනා** " යන උදාර පරමාර්ථය දරුවන්ගේ හදවත් තුළ පතිත කළ යුතුය. එසේම අතීතයේ දරුවන් ශිල්පය හැදෑරීම සිදු කලේ අල්ලට සිහාවත් රස කැවිලි කකා ඇල්මෙන් අකුරු උගනිව් ඉදිරි වැඩ තකා යන උදාර අදහසින් ශිල්පය ලබාදීමක් සිදු කර ඇති අතර අද නවීන තාක්ෂණය සමඟ එකට අත් වැල් බැඳගෙන යන මේ අධ්‍යාපනයේ ඇති හරවත් බව දරුවන්ට හඳුනා ගැනුමට උදන් උපකාර මෙන්ම මඟ පෙන්වීම ද සිදු කළ යුතුවේ.

දැනුවත් බවින් යමක් තෝරා බේරාගෙන ඉදිරිය වෙත පියමං මනින ආකාරය දරුවන්ට අවබෝධ කර දීමට උත්සහ දැරීමක් සිදු කළ යුතුය. වර්ථමානයේදී පළවන දිවයින , ලංකාදීප , සිළුමිණ ආදී පත්තර දෙස බැලීමේදී දක්නට ලැමෙන්නේ වැඩිපුරම මිනීමැරුම් , මංකොල්ල කෑම් වැනි අසුභ දර්ශනයන්ය. මෙවැනි දේ දක්නට ලැබේණුයේ ගුරුවරුන් යහපත් ලෙස අධ්‍යාපනය ලබාදීමක් සිදුනොවීම හේතුවෙන් බව පැවසිය හැක.

එහෙත් වර්තමානයේ පාසල් අධ්‍යනයේ නිරත වන ගුරුවරුන් සිහි තබාගත යුතු යහපත් දෙයක් ලෙස ළමයා හොඳින් හඳුනාගෙන අවශ්‍ය මඟ පෙන්වීම් සිදුකළ විට ඉදිරියේ දී පිපුණු මල් මෙන් දරු පරපුරක් බිහි කළ හැකිය යන්නයි.

A.L.රේණුකා දමයන්ති
ත්‍රි/ උසස් බාලිකා විද්‍යාලය ත්‍රිකුණාමලය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய கல்விச் சமூகத்தில் அதிகரித்து வரும் மாணவ சமுதாய சீர்கேடுகளுக்கு தீர்வு உண்டா?

திரு.அழகுராஜா ஹரிகரன்,
பிரதி அதிபர்,
தி/குளக்கோட்டான் த.வி
தம்பலகமம்.

இன்றைய சமூக அறிவியல் கலாசார மாற்றங்கள் மனிதர்களையும், மனித மனங்களையும் தடம்புரளச் செய்வது யதார்த்தமே. உண்மை, நேர்மை நடுவுநிலைமை இவை உள்ள நல்ல மனிதர்களைக் கூட நொடிப்பொழுதில் நொருங்க வைக்கும் சக்தி தற்கால சமூக நடவடிக்கைகளுக்கு உண்டு.

இவற்றில் இருந்து மாணவர் சமுதாயத்தை பாதுகாக்கும் பொறுப்பு முதலில் குடும்பத்திற்கு உரியது எனப் பலர் கருதி விடுகின்றனர். இன்றைய தனிக்குடும்ப நிலைகள் பெற்றோர் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவே அல்லல்படும் போது கல்வி ஒழுக்கம் பற்றிக் கதைத்து பல தடவை வலியுறுத்த வேண்டிய விடயங்கள் ஒரு சில தடவைகள் தான் முடிகிறது. அதுவும் அவர்களின் செவிவழியே சென்று நெஞ்சத்தில் உயிர் பெற வைப்பது என்பது கடினமே.

வெளிநாடுகளில் முழுமையாக பாடசாலையை நம்பியே பெற்றோர் உள்ளனர. பாடசாலை கற்றல் கற்பித்தலுக்கு முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பழக்கவழக்கங்களை வலியுறுத்தி அவை சிறுபராயத்தில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே பாடங்களைக் கற்பிக்க முனைகின்றனர்.

ஆனால் எமது நாட்டுக் கல்வித்திட்டம் பிள்ளைகளை இனங்காணும் போதே இலையை மடிக்கத் தெரியுமா? இலையை சமனாக பிரிக்கத் தெரியுமா? எழுத்துக்களை இனங்காணத் தெரியுமா? வாசிக்கத் தெரியுமா? எழுத்துக்களை எழுதத் தெரியுமா? பெயர் எழுதத் தெரியுமா? என்று ஆயிரம் வினாத்தொடுத்து ஒழுக்க செயற்பாடுகளை ஒரு புறம் தள்ளி விடுகிறது. இன்று ஆரம்பப் பிரிவுகளிலே புதியவர் ஒருவர் அல்லது பாடசாலையில் எமது திணைக்களத்தவர்கள் எவர் வந்தாலும் உடனடியாக எழுந்து வணக்கம் செலுத்தும் மாணவர்கள் ஒரு சிலரே. அல்லது ஆசிரியர் எழும்பச் சொன்ன பின்னரே, வணக்கம் செலுத்தும் பழக்கமும் பலருக்கு உண்டு.

இதைப் பொருட்படுத்தாது பெற்றோர் பார்வை எல்லாம் ஆசிரியர் எவ்வளவு பயிற்சி எழுதக் கொடுத்திருக்கிறார். எத்தனை பயிற்சிகளை திருத்தியிருக்கிறார்கள் என்பது தான். இவர்கள் இப்படி வளர்ந்த பின்னர் மாணவர் மத்தியில் எவ்வாறு சிறந்த ஒழுக்கத்தை உருவாக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஒரு புறம் இருக்க ஆசிரியர் மாணவர் வயது வளர்ச்சி எதிர்மறையான தொடர்புடையது. ஆசிரியர் தனது வயது முதிர முதிர செயற்பாடுகளைக் குறைத்துக் கொள்வார்கள். (இயலாமை, முதிர்ச்சி, தளர்வு) ஆனால் எல்லோரும் அல்ல. மாணவர்கள் வளர வளர உத்வேகம் கூடிக் கொண்டு போகும். இந்த இடத்தில் முரண்பாடு, வீடுகள், பாடசாலை மேலதிக வகுப்புக்கள், கூடி விளையாடும் இடங்களில் அதிகரிப்பது தவிர்க்கமுடியாது.

தரம் ஆறு வகுப்பிற்கு வரும் போதே சாரணியம், சுற்றாடல் படையணி, விளையாட்டுக்குழு, சுகாதாரக் கழகம், அனர்த்த முகாமைக்குழு, மாணவர் தலைவர்கள், இளைஞர் மன்றங்கள், பாடசாலை மட்ட பாடரீதியான மன்றங்கள், Mother Sri Lanka என்ற அமைப்புக்கள் ஏதோ ஒன்றில் இருநூறு பிள்ளை இருந்தால் இருநூறையும் பிரித்து ஒரு குழுவில் பத்து பேர் வீதமாவது இருபது குழுக்களை அமைத்து ஒரு குழுவை ஒரு ஆசிரியரிடமும் பொறுப்பு ஒப்படைத்து விட வேண்டும். பத்து பேரைக் கவனிப்பது ஆசிரியருக்குப் பெரிய வேலை இல்லை. காலை 7.15 க்கு வந்தாலே காலை 7.25க்கு முன்னர் 10 நிமிடத்தில் ஏகப்பட்ட விடயங்களை கவனித்து அவர்கள் ஆக்கபூர்வமாகச் சிந்திக்கவும் செயற்படவும் வழிப்படுத்தவும் முடியும்.

வருடாவருடம் குழுக்களை மாற்ற வேண்டும். நன்றாக மாணவரை எழுத வாசிக்க ஊக்கப்படுத்த வேண்டும். மாணவர்கள் முரண்படுகின்ற போது அவர்கள் பக்கமாகக் கதைத்து என்ன வேண்டும் என்று கேட்டு கேட்டு ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

இதற்கு ஆசிரியர் பக்கம் பற்றிப் பார்ப்போமானால் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு தரவுப்பத்திரம் தலையை பிடுங்கிக் கொண்டிருக்கும். இதனை விட சமூகத் தொடர்புகள் சங்கடத்தை ஏற்படுத்தும் அல்லது அலுவலக வேலை, வாகன வேலை, நோய்கள் மேலதிக வகுப்புக்கள் ஒரு புறம் இப்படி இவர்களது அர்ப்பணிப்பை அடியோடு பிடுங்கி எறிந்து விடுகிறது. குடும்ப வாழ்க்கைச் செலவுகளும் நெருக்கீடுகளும் நல் எண்ணங்களை நசுக்கி விடுகின்றன.

மாணவர்கள் தங்கள் வளர்ச்சி தேவை இவைகளை ஆசிரியர்கள், பெற்றோர்கள் கவனிக்காமல் அலட்சியம் செய்கின்ற போது அவர்கள் தமக்குரிய ஒழுக்கங்களை தவற விடுவதும், மதியாமை பற்றிய எண்ணங்களும் வலுப்பெறுகின்றன.

மாணவர்களின் கல்வியில் தினமும் 3-5 வரையான ஆசிரியர்கள் லீவு பெறும் போது பதில் கடமை ஒழுங்குகள் ஒழுங்கான முறையில் செய்ய முடியாமையும், பதில் ஒழுங்கு இல்லாத செயற்பாடுகளில், ஓய்வு நிலையில் உள்ள ஆசிரியர்கள் கற்பிக்க உடன்பாடு இன்மை, வேறு வேலைகளில் ஈடுபடுவதாக கூறல் போன்ற விடயங்கள் மாணவர் ஒழுக்க சீர்கேடுகளை ஏற்படுத்த பிரதான காரணமாகின்றது.

இதனை விட சில பெற்றோர்கள்,ஆசிரியர்கள் அல்லது சமூகத்தவர்கள் ஆசிரியர்கள் பற்றி மேற்கொள்ளும் வீணான விமர்சனங்கள், மாணவர்கள் மத்தியில் முரண்பாடுகளை உருவாக்க காரணமாகின்றன. இதனை எண்ணெய் ஊற்றி விடுவதனைப் போல் தூண்டி விட்டு குழப்பத்தை உண்டு பண்ணுபவர்களும் உண்டு. இதனை பற்றி சமாந்தர வகுப்புகளுக்கு இடையில் ஆசிரியர், மாணவர்களும் தெளிவுபடுத்த வேண்டும். நன்மை தீமை அடிக்கடி கூற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் பாடசாலையில் மிகப்பெரிய பணி மாணவ ஆலோசகர்களுக்கு உண்டு. இவர் முழுநேரக் கற்றல் கற்பித்தலில் இருந்து விலகி வகுப்பறை, வகுப்பறையாகச் சென்று மாணவர் நிலைகளை அடிக்கடி கலந்துரையாடி நம்பிக்கைக்குரிய பாத்திரமாக மாறவேண்டும். இவர்கள் 90% மான பாடசாலைகளில் பாடத்திட்டம் அல்லது அலுவலக உதவியாளராக செயற்படுவதும் இந்த முரண்பாடான செயற்பாடுகளுக்கு அடிப்படைக் காரணமாகின்றது.

அடுத்து மாணவர்களது கருத்துக்களுக்கு உரிய மரியாதை செலுத்தாமை அவர்களது வேண்டுகோள் அல்லது அபிலாசைகளை நிராகரிப்பதும் அவர்களது பரம இரகசியங்களை அம்பலப்படுத்தி, அவமானப்படுத்துதல், தகாத வார்த்தைப் பிரயோகம், மாணவர் உரிமைகளை மதிக்காமை, மறந்து செயற்படல் 119 இருப்பதை 1929 இருப்பதை மறந்து போதல், சட்ட திட்டங்கள் பற்றிய முழுமையான அறிவு இன்மைகளும், மாணவர்கள் தவறான நடத்தைகளைத் தூண்டி ஒழுக்க சீர்கேடுகளுக்குக் காரணமாகின்றது.

இவற்றுக்கு மேலாக ஆசிரியர் தன்னையும் தனது தொழிலையும் பாதுகாப்பதாக கருதி மாணவர் நடத்தைகளை கவனிக்காது புறம் தள்ளி விடுவதும் இன்று மாணவர் நடத்தைகளை நெறி பிறள வைக்கின்றன.

இவர்களிடம் தனியாகப் பேசி, அன்பு காட்டி அவர்களை முதன்மைப்படுத்தி ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுத்தி அவர்களிடம் சிறந்த ஆளுமை வளர்க்க பாடசாலை துடிக்க வேண்டும். அப்போது தான் மாணவர் ஒழுக்க சீர்கேடுகள் ஒதுக்கப்படும்.

இவற்றுக்கு மாறாக தொலைத்தொடர்பு சாதனங்களே முழுமையான காரணமாக கூறிக்கொள்ளும் குடும்பமும், பாடசாலையும் தங்களது பொறுப்புக்களில் இருந்து தப்ப இதை ஒரு வழியாகவே கண்டுபிடித்துள்ளன. சமய நிகழ்வுகளுடன் ஈடுபடும் அளவு குறைவடைகின்ற போதும் இந்த இணைப்பு புரிந்துணர்வு குறையும்.

இதைவிட எல்லாவற்றுக்கும் மேலாக குடும்பங்கள் தாங்கள் உழைக்கும் அனைத்தையும் தங்கள் வசதிகளை மட்டும் விருத்தி செய்து பிறரிடம் கொடுக்கின்ற அல்லது பகிர்ந்து கொள்கின்ற அளவுகள் குறைவதும் எல்லைகள் கடந்து பிள்ளைகள் விரும்பிய பாதையில் வழி தவற முனைவதும் மனவருத்தத்திற்குரியது. சிறிய வயதிலிருந்து அக்கா, தங்கை, அண்ணன்மாருடன் பழகும் அளவு கூடினால் அன்பு கூடும். அன்பு கூடினால் அதை விட உலகில் வேறு எதுவும் தேவை இல்லை. இவை அனைத்துக்கும் ஒரே வழி மாணவர்களுடன் தொடர்படும் அனைவரும் மாணவர்களுடன் அன்பு செய்யுங்கள் அதுவே அவர்களைத் திருத்தும் ஒரே ஆயுதம். இதை விட உங்கள் சட்டதிட்டங்களோ, ஒழுக்கக் கோவைகளோ இறுதியில் கசக்கிக் குப்பையில் போடப்பட வேண்டியதான். வெறும் ஆவணப்படுத்தலை தவிர்த்து ஆத்மாத்மான ஒரு சில நாள் பணி உங்களை நல்ல ஆளுமையுள்ள மனிதனாக்குவதுடன் உங்களுடன் சேர்பவர்கள், பழகுபவர்களையும் நல்லவர் ஆக்கும் என்பதில் ஐயமில்லை. நம்பிக்கையுடன் தொழிற்படுங்கள். நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைகளின் தீர்ப்பு. மாணவர்களைத் திருத்தமுடியும் என்ற நம்பிக்கையோடு ஆசிரியர் குழாம் செயற்பட்டால் இவை தவிடு பொடியாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட வாழ்வின் பண்பாட்டுப் பதிவுகள் ஒரு பார்வை

ஒரு சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றோடு மட்டுமல்லாது பண்பாட்டுடனும் பிணைந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. அரசியலில் ஏமாற்றுதல் , பொருளாதாரத்தில் சுரண்டுதல் போல பண்பாட்டு ரீதியாகவும் சாதாரண மனிதன் காலா காலமாகப் பாதிப்புக்கு உட்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது மனிதனின் அறியாமையும், மூடநம்பிக்கையின் வெளிப்பாடும் என்றும் கூறலாம்.

சமூக அமைப்பில் அரசியல் ஆதிக்கம், பொருளாதார ஆதிக்கம், பண்பாட்டு ஆதிக்கம் ஆகியவை நிலை பெற்றுள்ளன. மூன்றாவதாக அமையும் பண்பாட்டு ஆதிக்கம், சாதி வேறுபாடுகளை ஆழமாகக் கொண்டுள்ள எமது சமூகத்தில், அதற்கெதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு சில துறைசார் வெற்றியைப் பெற்றிருந்தாலும், முழுமையான நிலை தோன்றாமல் இன்று வரை சாபக்கேடாகவே இருந்து வருகின்றது. வெளி உலகத்திற்கு, அத்தகைய வேறுபாடுகள் இல்லை என்று கூறிக்கொண்டாலும், அடிமனத்தில் ஆழமாகப் பதிந்திருப்பதை அவர்களுடைய நடவடிக்கைகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

இந்தியாவில் சாதிகளுக்கான கட்சிகள் உருவாக்கப்பட்டு அம்மக்கள் மனதில் சாதி உணர்வைத் தூண்டி சாதிப்பிரிவினையைத் தொடர்ந்தும் வளர்த்து வருகின்றன. இலங்கையில் சாதியை அடிப்படையாகக் கொண்டு கட்சிகள் தோன்றாத போதும், இனத்துவ அடிப்படையில் கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளன. மதம், மொழி, கலாசாரம் என்ற பண்பாட்டு ரீதியான தனித்துவங்களையும் அடையாளங்களையும் கொண்டுள்ளன. இவை மேலேழுந்தவாரியாகக் காணப்படும் ஒரு தோற்றப்பாடாக அமைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

'பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலியனவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத்தொகுதியாகும்' என்று எட்வேட் பேர்னாட் ரெய்லர் (E.B.Tylor) என்ற ஆங்கில நாட்டு மானுடவியல் அறிஞர் தமது 'தொன்மைப் பண்பாடு' (Primitive Culture) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

'பண்பாடு என்பது ஒரு சமூகத்தில் கற்றறியப்படும் நடவடிக்கை என்ற கருத்தையே ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த அடிப்படையில் தான் றொபர்ட் ஹேலூவி என்பவரின் வரையறையும் அமைந்திருப்பதை நோக்கலாம். அதாவது 'பண்பாடு என்பது ஒரு தனிநபர், தனது சமூகத்தினரிடமிருந்து கற்றறியும் நம்பிக்கைகள், வழக்கங்கள், கலைநெறிகள், உணவுப்பழக்கவழக்கங்கள், கைவினைகள் போன்றவற்றின் ஒட்டுமொத்தத் தொகுப்பாகும். இவற்றை அந்தத் தனிநபர் தனது சுய படைப்புத்திறன் மூலம் அறியாமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலத்தின் மரபுத்தொடர்ச்சியாக முறைசார் மற்றும் முறைசாரா கல்வி முறைகளின் மூலம் அறிந்து கொள்கிறார்' என்று விளக்கியுள்ளார்.

'பண்பாடு பற்றி தெரிவிக்க முனைந்த மானிடவியலாளர் 'தரோபர்''உணர்வுகள், பழக்கங்கள், தொழில்நுட்பங்கள், கருத்துக்கள், விழுமியங்கள் மற்றும் தூண்டப்படும் நடத்தைகள், கற்றறிவதாலும் மரபுத்தொடர்ச்சியாலும் பெறும் ஒட்டுமொத்தத் தொகுப்பு' என்று கூறியுள்ளார்.

பண்பாடு என்பது 'சமூகப் பாரம்பரியம்' என்றும்,'மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கை' என்றும் குழுவிலிருந்து தனிநபர் பெறும் சமூக மரபுத் தொடர்ச்சி என்றும், கற்றலின் மூலம் பெறும் நடத்தை என்றும், நாடு புவிப்பரப்பு மொழி - இனம் சார்ந்ததான பண்பாடு வெளிப்பாடு' என்றும் பல்வகை அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இக்கூற்றின் மொத்த வடிவம் மக்களைக் குறித்து பண்பாடு நிற்கின்றது' என்ற உண்மை புலப்படுகின்றது.

புராதனச் சமுதாயம், அடிமைச் சமுதாயம். நிலவுடமைச் சமுதாயம் - முதலாளித்துவ சமுதாயம் என நான்கு வகையான சமூக அமைப்புகள் வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. இச்சமூக அமைப்புகளின் தோற்றத்திற்கு, பொருளுற்பத்தி முறையும் அதையொட்டி உருவாகும் வர்க்கங்களும் முக்கிய காரணிகளாக அமைகின்றன. இச் சமூகங்களில் நிலவும் பண்பாடானது குறிப்பிட்ட சமூக அமைப்பில் நிலவும் பொருள் உற்பத்தி முறை அங்கு உருவான வர்க்கங்கள் ஆகியவற்றின் தாக்கத்திற்கு உட்படுகிறது. இதன் அடிப்படையில் குறிப்பிட்ட சமூகத்தில் வாழும் வர்க்கங்களைச் சார்ந்தே பண்பாடு தன்னை வெளிப்படுத்தி நிற்கிறது என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

சமூகத்தின் பல்வகைப்பட்ட நிலைகளிலும் ஊடுருவி நிற்கும் பண்பாடானது அதிகாரத்தின் வெளிப்பாடாகவும், அடிமைத்தனத்தின் வெளிப்பாடாகவும் அமையும். வர்க்க வேறுபாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் மிகுதியாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பில் 'ஆளுவோர் பண்பாடு, ஆளப்படுவோர் பண்பாடு' என ஒன்றுக்கொன்று முரணான பண்பாடுகள் நிலைபெற்றிருப்பது தவிர்க்க முடியாததாகும். மக்களுடன் பிணைந்து நிற்கும் பண்பாடானது பல்வேறு அடையாளங்கள் வாயிலாக வெளிப்பட்டு நிற்கும். அவை ஆடை – அணிகலன் போன்ற புழங்கு பொருளாகவோ கல்வி, தத்துவம், மருத்துவம் போன்ற அறிவுத்துறையாகவோ மட்டுமன்றி பயன்படுத்தும் சொற்கள், சொற்களின் தொனி, முகபாவங்கள், சைகைகள் மூலமாகவும் கூட பண்பாட்டு அடையாளம் வெளிப்படும். இப்பண்பாட்டு அடையாளங்கள் வெறும் அடையாளங்களாக மட்டுமன்றி அதிகாரம் குறித்த கருத்துவாக்கமாகவும் அமைகின்றன.

அதிகாரம் குறித்த வெளிப்பாட்டை அறிந்துகொள்ள உயர்ந்தோர் (ELITE) அடித்தள மக்கள் (SUBALTERNS) பண்பாட்டு மேலாண்மை (CULTURAL HEGEMONY) என்ற மூன்றையும் குறித்து தெரிந்து கொள்வது அவசியம். உயர்ந்தோர் என்ற நிலையை நோக்கும் போது தாகூர் கூறியதை அவதானிப்போம். 'பெயர் அறியப்படாத மக்கள் கூட்டத்தை காலந்தோறும் நாகரீகச் சமுதாயங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன. எண்ணிக்கையில் அதிகமான இக்கூட்டமானது மனிதர்களாக விளங்க நேரமின்றி சுமைதாங்கும் மிருகங்களாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி தருகின்றன. சமூகத்தின் வளங்களிலிருந்து தமது பங்காகக் குறைந்த அளவிலான உணவு,உடை, கல்வி ஆகியவற்றை பெற்று ஏனையோர்க்கு ஊழியம் செய்து வருகின்றனர். மிகவும் கடுமையாக உழைத்து உழன்றாலும் அவர்களுக்குக் கிடைப்பதென்னவோ ஏளனமும் அவமதிப்புந் தான். விளக்குத் தண்டைப் போன்று நாகரிக விளக்கை தன் தலையில் சுமந்து கொண்டு இக்கூட்டம் இருக்கிறது. விளக்கிலிருந்து கசிகின்ற எண்ணையானது விளக்கைத் தலையில் வைத்துச் சுமப்பவர் மீது கசிந்து கொண்டிருக்க, மேல்நிலை மக்கள் விளக்கின் ஒளியைப் பெறுகின்றனர்' என்கிறார்.

சமூகவியல் அகராதி ஒன்று மேட்டிமையோர் என்பது குறித்துப் பின்வருமாறு வரையறுக்கின்றது. 'ஒரு சமுதாயத்தின் தனிமனிதர்களைக் கொண்ட ஒரு சிறுபான்மைக்குழு அல்லது ஒருவகைப்பிரிவினர் மேலாதிக்கம் உடையதாகச் சமூகத்தால் அங்கீககரிக்கப்பட்டு சமூதாயத்தின் பல்வேறு பகுதியினர் மீதும் தன் செல்வாக்கையோ கட்டுப்பாட்டையோ செலுத்துவர்.

உற்பத்தியையும் மூலதனத்தையும் ஒரு சிலரது கையில் குவிக்கும் பொருளாதார விதிகளைப் பின்பற்றி இயங்கும் சமூக அமைப்பில் மேல்தட்டு வர்க்கத்தினர் உருவாகின்றனர் என்ற யதார்த்தத்தை மேற்கத்திய சமூகவியலாளர்கள் வசதியாக மறந்துவிடுகின்றார்கள். இந்த இடத்தில் ஏங்கல்சின் கூற்றை மேற்கோளாகக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

'முழுமையாக உழைக்கும் மக்கள் கூட்டமானது அவர் தம் இன்றியமையாத உழைப்பில் முழுக்கவனம் செலுத்தி வருங்கால் அவர்களுக்கு உழைப்பின் தன்மை, அரச விவகாரங்கள், சட்டப் பிரச்சினைகள், கலை அறிவியல் போன்ற சமூகத்தின் பொதுவான விவகாரங்களைக் கவனிக்க நேரமில்லாது போகிறது. இத்தகைய நிலையில் ஒரு தனி வர்க்கம் தன்னை உழைப்பிலிருந்து முழுமையாக விடுவித்துக் கொண்டு மேற்கண்ட விபரங்களை நிர்வகிக்கும் உரிமையைத் தனதாக்கிக் கொள்கிறது. அத்துடன் தன்னுடைய சொந்த நலனுக்காக, உழைக்கும் கூட்டத்தின் மீது மேலும் மேலும் உழைப்புச் சுமையை திணிக்கிறது என்று தெளிவுபடுத்தியுள்ளார். ஏங்கல்சின் இக்கூற்றின் அடிப்படையில் நோக்கினால் உடல் உழைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட ஒரு கூட்டமே மேல்தட்டு வர்க்கமாக உருப் பெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

மேற்குடியினருக்கு நேர்மாறாக எண்ணிக்கையில் அதிக மாணவர்களாகவும் சமுதாயத்தின் வளங்களில் உரிய பங்கு பெறமுடியாதவர்களாகவும், குறைந்த அளவு உணவு, குறைந்தளவு உடை, குறைந்தளவு கல்வியைப் பெற்று வாழும் மக்கள் பிரிவினரே அடித்தள மக்கள் எனப்படுகின்றனர். இலங்கைச் சூழலில் அடித்தள மக்கள் என்பதற்கு செய்யும் தொழில், அரசியல் ஆதிக்கம், பாலியல் நிலை, பொருளாதார நிலை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது அனைத்து நிலையிலும் தாழ்ந்திருக்கும் மக்களென வரையறை செய்யலாம்.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பொருளுற்பத்தி முறை என்ற அடித்தளமானது (BASIS) அச் சமூகத்தின் மேல்தளத்தில் (SUPERSTRUCTURE) இடம்பெற்றுள்ளன. கலை-இலக்கியம்-சமுதாயம்-சமயம்-நீதிமுறை போன்ற பண்பாட்டுக் கூறுகளைப் பாதிக்கும் என்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை மார்க்ஸியம் எடுத்துரைக்கிறது. அதே நேரத்தில் மேல்தளத்தில் இடம்பெற்றுள்ள பண்பாட்டுக் கூறுகளும் தம் பங்கிற்கு அடித்தளத்தைப் பதிக்கின்றன என்பதையும் மார்க்ஸியம் குறிப்பிடுகிறது என்று 1890 இல் ஜோசப் பிளாக் என்பவருக்கு ஏங்கல்ஸ் எழுதிய கடிதத்தில் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

25.01.1894 இல் போர்ஜியஸ்க்கு எழுதிய கடிதத்தில் 'அரசியல், நீதிமுறை, தத்துவம், சமயம், இலக்கியம், கலை ஆகியவற்றின் வளர்ச்சியானது பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால் இவையனைத்தும் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று எதிர்வினை புரிவதுடன் பொருளாதார அடித்தளத்தின் மீதும் எதிர்வினை புரிகின்றன' என்று ஏங்கல்ஸ் எழுதியுள்ளார். 'வரலாறு என்பது வர்கக்ங்களுக்கிடையே நிகழும் போராட்டம்' என்ற மார்க்ஸின் கூற்றை அரசியல் பொருளாதாரத்தில் மட்டுமின்றிப் பண்பாட்டுத் தளத்திலும் பொருத்திப் பார்ப்பதன் அவசியத்தை ஏங்கல்ஸின் மேற்கூறிய கடிதங்கள் உணர்த்துகின்றன.

மேலாண்மையும் சாதியமும் இணைந்து காணப்படும் சமூகத்தில் பின்வரும் மூன்று வழிமுறைகளில் அவை நிலை நாட்டப்பட்டுள்ளன. 01) பண்பாட்டு அடையாளங்களை மறுத்தல் 02) இழிவான பண்பாட்டு அடையாளங்களை வழங்குதல் 03) வழக்கிலிருக்கும் பண்பாட்டு அடையாளங்களை இழிவுபடுத்தல் அல்லது மாற்றியமைத்தல் என்பனவாகும். சமயம்-சடங்கு-சம்பிரதாயங்கள் வாயிலாக மக்கள் மனதில் மூடக்கொள்கைகளை வேரூன்ற வைத்து, ஒரு சிறுபகுதியினர் மேலாண்மை செலுத்துவது இன்றும் நடைமுறையில் இருக்கிறது. வர்க்கப் போராட்டம், அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் முன்னெடுக்கப்படும் போது தான் மனித சமுதாயத்திற்கு விடிவு கிட்டும். அப்பொழுது தான் மனிதன் சுதந்திரத்துடன் தனது சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களைத் தெரிந்து கொண்டு வாழத் தலைப்படுவான்.

தமிழ்த்தென்றல் தம்பு சிவா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுடாக சமாதான சக வாழ்வைக் கட்டியெழுப்புவோம்

உலகிலே பிறக்கும் எந்தவொருபிள்ளையும் பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பதில்லை. பாடசாலை என்பது மனித வளங்களை உற்பத்தி செய்து மனித நேயமிக்க சமாதான சகவாழ்வை வாழ்வில் சான்று பகருகின்றவர்களாக மாற்றப்படும் இடமாகும். இத்தகைய மனிதர்களை பயிற்றுவிக்கும் அதிபர் ஆசிரியர்கள் தமது சொல்லிலும் செயலிலும் சமாதான சக வாழ்வை சான்று பகரும் முன்னுதாரணப் புருஷர்களாக இருக்கும் போது தான் சிறந்த மனித வள உற்பத்திகளை சமூகத்திற்கு வழங்க முடியும். நேரடியாகவும் மறை முகமாகவும் மாணவர் சமூகத்தோடு சம்பந்தப்படும் கல்வித்துறைசார் அதிகாரிகள், ஊழியர்கள் என மத்திய கல்வி அமைச்சு வரை விரிந்து செல்லும் பரப்பில் பணியாற்றுகின்ற அனைவரும் முன்னுதாரணப் புருஷர்களாக செயற்படுவது இன்றியமையாததாகும்.

பாடசாலையைப் பொறுத்தவரையில் மாணவர் செயற்பாடு புதுப்பிக்கக் கூடியதும், அதிக விளைவுகளைக் கொண்டதுமாகும். மாணவர்கள் சமூகத்தில் தலைவர்களாகவும், சமாதானத்தை சான்று பகர்பவர்களாகவும், சிறந்த செயல் வீரர்களாகவும் வெளியேறுவதற்கு இச் செயற்பாட்டின் ஊடாக பயிற்றுவிக்கப்படுகின்றனர். இதனால் மாணவர்களை பயிற்றுவிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் சமாதான சகவாழ்வுக்கான மனிதர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துவது அவசியம் ஆகும். குறிப்பாக மாணவர்களை ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை கட்டங்களில் கவனம் செலுத்தி அறிவு, திறன், மனவெழுச்சி மாற்றங்களுடன் சமூக மற்றும் ஆன்மீக எழுச்சி மாற்றங்களையும் ஏற்படுத்துவதன் மூலம் தான் சமாதான சக வாழ்வுக்கான அடித்தளத்தையிட முடியும் என்பது கவனத்திற் கொள்ளப்பட்ட வேண்டியதாகும்.

பாடசாலை அதிபர்கள் வெறும் நிருவாகிகளாகவும் முகாமையாளர்களாகவும் மட்டும் செயற்படாது சிறந்த தலைமைத்துவத்தை வழங்குகின்ற தலைவர்களாகவும் செயற்படுவது காலத்தின் தேவை மாத்திரமல்ல அதிபர்களின் கடமையுமாகும். தலைமைத்துவம் என்பது ஒரு குழுவை அல்லது தனக்கு கீழுள்ளவர்களை நிர்ணயிக்கப்பட்டதோர் இலக்கை நோக்கி வலுக்கட்டாயமற்ற வழிமுறைகளைப் பயன்படுத்தி, உற்சாகமூட்டி, நகர்த்திச் செல்லும் செயன்முறையாகும். எனவே அதிபர்கள் சுயமாக சிந்தித்து செயற்றிட்டங்களை வகுத்து, மாணவர்களை பயிற்றுவிக்கும் பாரிய பொறுப்பிலிருந்து விடுபடமுடியாது என்ற உண்மையை உணர்ந்து செயற்பட வேண்டும். அதே நேரம் சமாதான சகவாழ்வுக்கு வழிகோலக்கூடிய வகையில் சர்வதேச சமாதான தினம், சிறுவர் தினம், ஆசிரியர் தினம், மர நடுகை தினம், சுகாதார தினம், புத்தாண்டு தினம் போன்ற தினங்களை மையப்படுத்தி செயற்றிட்டங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஆசிரியர்களைக் கொண்ட உருவாக்கி வழி நடத்திச் செல்வதன் மூலம் மாணவர்கள் மத்தியில் சமாதான சக வாழ்வை ஏற்படுத்தி சமூகமட்டத்தில் விருட்சமாக மலரச் செய்ய முடியும்.

இன்று உலகில் சமாதான சகவாழ்வு தொடர்பாக அதீத கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. உலக சமாதான சகவாழ்வை வளமுறச் செய்வது நமது குறிக்கோளாக மாற வேண்டும். இதனை அடைய நாம் நமது வாழ்வை அர்ப்பணிப்போம். ஒவ்வொருவருக்கும் இடையே உள்ள அன்பை, கூட்டுறவைப் பலப்படுத்த முயலுவோம். தேசிய நலனுக்காக எமது தேசியச் சுதந்திர போராட்ட வீரர்கள் அன்றைய காலத்தில் இணைந்து செயல்பட்டிருப்பதை வரலாற்றினூடாக காணக்கூடியதாகவுள்ளது. சுதந்திரப் போராட்ட காலத்தில் சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாச்சலம், சேர் ராசிக் பரீட், T.B. ஜாயா, D.S.சேனநாயக்கா, S.W.R.D பண்டாரநாயக்கா ஆகியோர் ஒன்றாக இணைந்தே செயற்பட்டுள்ளனர். இவ்வாறு ஒன்றுபட்டு வாழ்ந்த சமூகங்களுக்கிடையில் ஏன் பகைமையும் வேற்றுமையும் உருவானது? இன முரண்பாடுகள் தோன்றுவதற்கான காரணம் என்ன? என்று நாம் பார்த்தால் கடந்த கால போர்களும், பிரச்சினைகளுமே காரணமாகும். பிரச்சினைகளுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்தால் பல விடயங்களை புரிந்து கொள்ள முடியும். அவற்றில் மிக முக்கியமானது தான் சமமான வளப்பகிர்வின்மை, நீதி நியாயங்கள் பேணப்படாமை, பெரும்பான்மை சிறுபான்மை என்ற மனப்பாங்கும் செயற்பாடும் போன்ற காரணங்கள் தாக்கம் செலுத்தியமையைக் காணலாம்.

எனவே யுத்தம் நிறைவுக்கு வந்து சமாதானம் நிலவும் இன்றைய சூழலில் போருக்கான அல்லது இன முரண்பாட்டுக்கான உண்மையான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து அவற்றை நிவர்த்திப்பதன் ஊடாக நாட்டில் நிலையான சமாதான சகவாழ்வை நிலைநாட்ட முடியும். இதனை சமூக மாற்றம் அரசியல் தலைமைகள் மாத்திரமே செய்வதற்குரிய அதிகாரமுடையவர்களாவார். அவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் அசாதாரண, மற்றும் அநீதிக்குட்படுகின்ற அல்லது உரிமைகள் மறுக்கப்படுகின்ற வேளையில் அகிம்சை வழியில் விட்டுக்கொடுப்புடனும், புரிந்துணர்வுடனும் செயற்படக்கூடிய மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதற்கான பயிற்சிகளையும், ஆன்மீகப் பெறுமானங்களையும் உருவாக்க வேண்டும். அதற்கேற்ற வகையான செயல்திட்டங்களை உருவாக்கி சமயபாடப் பரப்பினூடாக சாதிக்க முடியுமாக இருக்கும். 'பிற சமூகத்தவரை மதித்து நடப்போம்" என்ற சமய பாட அலகை கருப்பொருளாக மையப்படுத்தி திட்டத்தை வடிவமைக்க முடியும். அதாவது குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களை பிற சமூகப் பாடசாலைகளுக்கு அழைத்துச் சென்று அப்பாடசாலையிலுள்ள அதே வகுப்பு மாணவர்களுடனான கலந்துரையாடல்களையும், உபசரிப்புக்களையும் ஏற்பாடு செய்வதன் மூலம் மாணவர்கள் மத்தியில் புரிந்துணர்வுகளையும் பிற சமூகம் பற்றிய தெளிவுகளையும் ஏற்படுத்த முடியும். இது போன்ற வெவ்வேறு வகையான செயற்றிட்டங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் மத்தியில் ஆரம்ப வகுப்புகளிலிருந்து சமாதான சக வாழ்வுக்கான இடமாக மாற்றியமைக்க வேண்டும். அதற்கு ஓர் அதிபர் தன்னிடத்தில் சிறந்த தலைமைத்துவப் பண்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக பாகுபாடு காட்டாது. ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்தி உற்சாக மூட்டும் அதே நேரம் செயற்பாடுகள் குறைந்த ஆசிரியர்களையும், மாணவர்களையும் தட்டியெழுப்பி வழிகாட்டல்களை வழங்கி தமது தலைமைத்துவத்தை கொண்டு சென்றால் பாடசாலை அமைதியான சமாதான சூழல் நிறைந்த இடமாக மாறும்.

அடுத்ததாக தமது பாடசாலைக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளுடன் சமூகமான உறவுகளை ஏற்படுத்தி ஏனைய பாடசாலைகளுடன் முன் மாதிரியான செய்ற்பாடுகளை ஆசிரியர்களும், மாணவர்களும் பார்வையிடுவதற்கும் கலந்துரையாடுவதற்குமான சந்தர்ப்பங்களை ஏற்பாடு செய்து கொடுப்பதன் மூலம் சமாதான சக வாழ்வுக்கான உணர்வுகளை ஏற்படுத்தலாம்.

அதே போன்று பிற சமூகத்தவர்களின் விஷேட விழாக்கள், வைபங்களில் ஏனைய பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொள்வதன் மூலம் சமூக கலாசாரங்களை விளங்கி நடக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்கின்றது. சமயங்கள் மனிதனை மனிதனாக வாழ்வதற்கு வழி காட்டுகின்றன. அவற்றை தமது பாடசாலையினூடாக மாணவர் சமூகத்திற்கு அர்ப்பணிப்புடன் வழங்கினால் உள்ளார்ந்த ரீதியான சமாதான சக வாழ்வை சமூகத்தில் காண முடியும். அந்த வகையில் சமயங்களின் போதனைகளில் சிலதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

பௌத்த சமயம்

மனிதர் தம் உள்ளத்தில் அமைதியை நிலை நாட்டினால் மட்டுமே உலகில் அமைதியை நிலை நாட்ட முடியும் என்பது புத்த சமயத்தின் கருத்தாகும். புத்த சமயத்திற்கு அடி கோலிய கவுதம புத்தர் “ அமைதி உள்ளத்திலிருந்து பிறக்கின்றது அதை வெளியில் தேடாதே” என்று போதித்தார். மனித உள்ளத்தில் இருக்கின்ற கோபம், பொறாமை, வஞ்சகம் போன்ற எதிர் மறை உணர்வுகளே போர்களும் சண்டைகளும் உருவாக காரணமாய் உள்ளன. எதிர் மறை உணர்வுகளை களைத்து விட்டு அன்பு, இரக்கம், போன்ற ஆக்கமிகு உணர்வுகளை மனிதர் வளர்ப்பதே உலக அமைதிக்கு வழி.

கிறிஸ்தவ சமயம்

**“ சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் கடவுளின் குமாரர்கள்”** என கிறிஸ்தவ சமயம் சமாதானம் பற்றி போதிக்கின்றது. அதே நேரம் அமைதியின் அடித்தளங்களாக இருப்பவை நான்கு அவை, உண்மை, சுதந்திரம், அன்பு, நீதி ஆகியவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்து சமயம்**

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என இந்து சமயம் வலியுறுத்துக்கின்றது" குறிப்பாக மனிதர்கள் சமய வேறுபாடுகளை மறந்து உலக அமைதிக்கான உழைத்தல் வேண்டும் என்றும் உலகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அகிம்சையே வழியாக அமைய வேண்டும். போரல்ல என்றும் மகாத்மா காந்தி வலியுறுத்தினார். அவரது கருத்துக்கள் இந்து மற்றும் சமண சமயப் பின்னணியிலிருந்து எழுந்தனவென்பது பொதுவான கருத்து.

**இஸ்லாம் சமயம்**

இஸ்லாம் சமயம் உலக அமைதியின் தேவையை எடுத்துரைக்கின்றது. கடவுள் ஒருவராக உள்ளார். அல்லாஹ் என்னும் பெயர் கொண்ட அவர் மனித குலத்தை ஆதாம், ஏவாள் எனும் முதல் பெற்றோரிடமிருந்து தோன்றச் செய்தார். இவ்வாறே மனிதர்கள் அனைவரையும் ஒரே குடும்பத்தின் பிள்ளைகளாக்கினார். மனிதர்கள் இந்த உணர்வினை உணர்ந்து தம் வாழ்க்கை முறையை அமைதியான விதத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் சமயத்தின் திருநூலாகிய திருக்குர்ஆன் கூறுகிறது. "சொல்லாலோ செயலாலோ பிறர்க்கு தீங்கிழைக்காதவனே முஸ்லிம் ஆவான்" என்கிறது இஸ்லாம். அதே நேரம் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது முதலாவது ஸலாம் உரைப்பதன் மூலம் ஒருவருக்கொருவர் சமாதானத்தை இறைவனிடம் வேண்டிக் கொள்கின்றனர்.

மேற்படி சமயங்கள் அனைத்தும் அமைதியையும், அகிம்சையையும், சகோதரத்துவத்தையும் போதித்து சமாதான சகவாழ்வைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்துகின்றன. இவ்வாறான போதனைகளை மாணவர்களுக்கு ஆழமாகப் பதியும் வகையில் போதிப்பதோடு செயல் வடிவில் கொண்டு வருவதற்கான பயிற்றுவிப்புக்களையும் பாடசாலைகளினூடாக வழங்கினால் எமது பொறுப்பின் கீழுள்ள பாடசாலைகளுடாக சமாதான சகவாழ்வைக் கட்டியெழுப்ப முடியும். இறைவன் இப்பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு உலக அமைதிக்கும் சமாதான சக வாழ்விற்கும் ஒத்துழைக்க எல்லோருக்கும் பொதுவான இறைவனது அருள் கிடைக்குமாக!

மௌலவி.M.Y.ஹதியத்துல்லாஹ் (நத்வி SLPS)

பிரதி அதிபர்

தி/அல் ஹம்றா மகா வித்தியாலயம்

இறக்கக்கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ZONAL DAY & SELNERY PUBLICATION 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடவிதான மாற்றங்களும், கலைத்திட்ட மாற்றங்களும்

திருமதி. உதயகுமாரி வரேந்திரராஜா

தி/விபுலானந்தா கல்லூரி

கல்வி இலக்குகளை வினையாற்றலுடன் நடைமுறைப்படுத்தும் இயக்க வடிவமாக அமைவதே கலைத்திட்டமாகும். கலைத்திட்டம் (Curriculum) என்பது பாடவிதானம், பாட ஏற்பாடு, கல்விக் கட்டுமானம் என்ற பல சொற்களாலும் அழைக்கப்படும். இலத்தீன் மொழியில் வண்டி ஓடும் பாதையைக் குறித்த இந்த எண்ணக்கரு ஆங்கில மொழியில் கல்வி ஓடிச்செல்லும் பாதையைக் குறிக்கும் எண்ணக்கருவாக நிலைமாற்றம் பெற்றது. கலைத்திட்டமானது ஒரு புறம் கோட்பாட்டுப் பரிமாணங்களையும் மறுபுறம் நடைமுறைப் பரிமாணங்களையும் உள்ளடக்கிய இயங்கு வடிவமாக அமைகின்றது. கல்வி வரலாற்றில் ஆரம்பம் தொட்டு இன்று வரை பல்வேறு கல்வி நோக்கங்களை எய்தும் நோக்குடன் வெவ்வேறு பாடவிதானங்கள் தயார்படுத்தப்பட்டு வருகின்றன. கல்விக் கருமத்தில் பாடவிதானம் மூலம் கிடைக்கப்பெறும் பயன்கள் பற்றி கவனம் செலுத்தி வெவ்வேறு பாடவிதானங்கள் திட்டமிடப்படுகின்றன. கலைத்திட்டம் என்பது மாணவர்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாக ஆசிரியர் சகிதம் அல்லது ஆசிரியரின்றி பாடசாலையின் உள்ளும், வெளியேயும் பெறத்தக்கவாறு பாடசாலை வாயிலாகத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு வழங்கப்படும் பயனுள்ள அனுபவங்களின் தொகுப்பாகும். பாடவிடயங்களின் ஒழுங்கமைக்கப்பட்ட வடிவமாகவும் கலைத்திட்டம் கொள்ளப்படுகின்றது.

கலைத்திட்ட வகைகளாக மையக் கலைத்திட்டமானது முறைசார் ரீதியாக சகல பாடசாலைகளிலும் ஒரே வகையாகப் பிரயோகிக்கப்படுவதாகும். (பாடத்திட்டம், பாடநூல், சுற்று நிருபங்கள், ஆசிரியர் கைநூல்) இணைக் கலைத்திட்டம்,பாடசாலையில் இடம்பெறும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் (விளையாட்டு, கலைநிகழ்வு, சுற்றுலா, சாரணர்) மறை கலைத்திட்டம் (காலை ஆராதனை, சமய விழாக்கள், விழுமியங்களை மதித்தல், பாடசாலை ஒழுங்கைக் கடைப்பிடித்தல்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஒரு நாடானது தனது தேசிய கல்விக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்காகவே கலைத்திட்டங்களை வடிவமைக்கின்றது. ஒரு நாட்டின் கல்வித் தொகுதியின் முக்கிய அம்சமாக பாடவிதானத்துடன் உள்ளதுடன் கல்வியின் செயற்படு நிலையாகவும் உள்ளது. குறித்த நாட்டின் கலாசார அறிவுப் பொக்கிசங்கள், திறன்கள், விஞ்ஞான சமூக வளர்ச்சிகள், வளங்கள் என்பவற்றிற்கு ஏற்ப பாடவிதானம் தயாரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றது. இது பாடசாலைக் கல்வி போதனைதிட்டத்தினூடாக கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளாகப் பிரயோகிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்திட்ட ஆக்கத்தில் பாடசாலை வாழ்க்கை, பாடம் தொடர்பான நிபுணர்கள், தத்துவம், உளவியல் ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றது. தேசிய கல்வி முறைமையின் வெற்றியும் தோல்வியும் பெருமளவு பாடவிதான ஆக்கத்தின் மீதே தங்கியுள்ளது.

கலைத்திட்டமானது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதால் சில வேளைகளில் பல்வேறுபட்ட முரண்பாடுகளும் இதில் ஏற்படலாம். இங்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதால் இதன் உள்ளடக்கமானது மாற்றமடையக்கூடியது ஒன்றாகும். பயன்கொள்வாதியான John Dewey ம் கலைத்திட்டம் பற்றிக் குறிப்பிடுகையில் அதற்கு ஒரு நிரந்தர வடிவம் இருக்கக்கூடாது என்கின்றார். வகுப்பறைச் செயற்பாடுகளும் கலைத்திட்ட செயற்பாடுகளுக்கு ஏற்ப மாற்றம் அடைய வேண்டும். கல்வியின் பாதையை வடிவமைப்பது கலைத்திட்டம் என்ற வகையில் மாணவனுக்குத் தேவையான பல்வேறுபட்ட விடயங்களை எப்படிப் புகுத்துவது என்ற திட்டமிட்ட ஒரு செயலாக இது அமைகின்றது. ஆரம்ப காலங்களில் கலைத்திட்டமானது தற்போதைய நிலையைப் போல வடிவமைக்கப்படா விட்டாலும் கல்வியின் செல்நெறிகள் ஓரளவு வடிவமைக்கப்பட்டிருந்தன.

அறிவு (Knowledge) என்ற அம்சமானது சிதறி இருந்த நிலையில் கலைத்திட்டத்தின் செயற்பாட்டினால் ஒழுங்கமைக்கப்பட்டது. அறிவை ஒழுங்கமைத்து அனுபவங்களை மெருகூட்டி வழங்குதல் கலைத்திட்டம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் வெற்றி அடைந்தால் அதன் பயனை முழுமையாக அனுபவிப்பார்கள் மாணவர்கள். அறிந்து கொள்ளுதல், அறிந்தவற்றைத் தேக்கி வைத்தல், அதற்கு அமைவாக நடந்து கொள்ளுதல் ஆகிய மூன்று சந்தர்ப்பங்களையும் தாண்டி தலையை மாத்திரம் போசிப்பதற்குப் பதிலாக கூடவே கைகளையும் போசிக்கும் கல்வி முறையொன்றின் தேவை தற்காலத்தில் உணரப்பட்டதன் விளைவாக 2007 இல் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டம் உருவாக்கப்பட்டது. தேர்ச்சி என்பது 'அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளிடைத் தொடர்புகள் ஆகியவற்றின் திரட்சியால் உருவாகும் வாழ்க்கைப் பரிச்சயமாகும்'. அறிவு, திறன் மனப்பாங்குகளை அடிப்படையாகக் கொண்டு பழக்கங்கள் உருவாக்கப்படுவதை விபரிக்கும் KASP மாதிரியுடன் அண்மைக்காலத்தில் ஆளிடைத் திறன்கள் எனும் கூற்று இணைந்து கொள்கின்றது. பூகோளமயமாக்கலை நோக்கிச் செல்லும் சமூகத்தில் ஒவ்வொருவரும் தேர்ச்சி மிக்கவராவதற்காக ஆளிடைத் திறன்கள் விருத்தி செய்யப்பட வேண்டும் என்பது இக் கலைத்திட்டம் மூலம் வலியுறுத்தப்படுகின்றது. தேர்ச்சி விருத்திக்கு நீண்ட காலம் தேவை என்பதால் அவை தேர்ச்சி மட்டங்களாக வகுக்கப்படும்.

இக்கலைத்திட்டத்தில் குறிக்கோள்களை இலக்காகக் கொண்ட பாடக்குறிப்புக்குப் பதிலாக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டுத் திட்டங்கள் 5E மாதிரிக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட வேண்டும். இதில் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கட்டுருவாக்க கற்றல் - கற்பித்தல் இடம்பெறுகின்றது. இங்கு அறிவையும், அர்த்தத்தையும் தாமாகவே உருவாக்கிக் கொள்வதற்கு கற்போனுக்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. அத்துடன் ஆசிரியரது செயற்பங்கு நிலைமாற்று வகிபாகமாக (Transformation Role) ஒரு வளவாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுதலாகும். கலைத்திட்டத்தை அரசின் உயர்மட்டத்திலுள்ளவர்கள் தயாரிக்கின்ற போதிலும் அதனை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துபவர்கள் ஆசிரியர்கள் என்பதால் ஆசிரியருடைய ஒத்துழைப்பின்றி கலைத்திட்ட செயற்பாடுகள் வெற்றியைத் தராது. அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப காலத்திற்கு காலம் கலைத்திட்டத்தில் ஏற்படும் மாற்றமானது தவிர்க்க முடியாத ஒன்றாக இருப்பினும் மாணவர்களது ஒவ்வொரு பருவத்தையும் கருத்திற் கொண்டதாகவும், மகிழ்ச்சிகரமான கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறத்தக்க வகையிலும் நெகிழ்ச்சிப் போக்குடையதாகவும் மற்றும் ஆசிரியர்களது கற்பித்தல் தோல்வியைத் தழுவிச் செல்லாத வகையிலும் மாணவர்களை மையப்படுத்தியதாகவும் அவர்களை வாழும் உலகிற்கு தயார்படுத்துவதாகவும் கலைத்திட்ட மாற்றமானது அமைய வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முகாமையும், எதிர்நோக்கும் சவால்களும்

திரு.க.சதாசிவம் அதிபர்,

தி/கன்னியா அ.த.க பாடசாலை,

திருகோணமலை.

பாடசாலை என்பது சமூகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சமூக நோக்கு கொண்ட முறை சார்ந்த அமைப்புக்களில் முதன்மை பெற்றதொன்றாகும். இப்பாடசாலைகள் பல்வேறுபட்ட முகாமையை, நடைமுறைகளைக் கொண்டிருந்த போதிலும் அம்முறை அனைத்து நடத்தை வாத சமூகமயப்படுத்தலின் ஒன்றிணைந்தே அன்றிலிருந்து இன்றுவரை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

பாடசாலை முகாமையில் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல், மதிப்பிடல் போன்ற வழிகளை மேற்கொண்டு வருவது நிர்வாக தொழிற்பாடாகும். இத்தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் போது பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

**பாடசாலை முகாமை எதிர்நோக்கும் சவால்கள்**

***மனித வள ரீதியான சவால்கள்***

- மாணவர் ரீதியாக எதிர்நோக்கும் சவால்கள்
- பெற்றோர் ரீதியாக எதிர்நோக்கும் சவால்கள்
- ஆசிரியர் ரீதியாக எதிர்நோக்கும் சவால்கள்
- ஏனைய நிறுவன ஆளணி சார்பில் எதிர்நோக்கும் சவால்கள்

***பௌதீக வள ரீதியான சவால்கள்***

- பாடசாலை ஒன்றில் பௌதீக சவால்கள்
- வளப்பற்றாக்குறை
- வளத்தைப் பாதுகாக்கும் சவால்கள்
- வளத்தைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சவால்கள்
- வளத்தைப் பயன்படுத்தும் சவால்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***நிறுவன ரீதியான சவால்கள்***

- ஏனைய பாடசாலைகளிலிருந்து எதிர்நோக்கும் சவால்கள்
- பாடசாலையை மேற்பார்வை செய்யும் உயர் நிறுவனங்களிலிருந்து எதிர்நோக்கும் சவால்கள்
- சமூக அமைப்புக்களின் சவால்கள்
- முறைசார்ந்த முறைமை நிறுவனங்களின் சவால்கள்
- முறைசாரா நிறுவனங்களின் சவால்கள்

***நவீன தொழிநுட்ப ரீதியான சவால்கள்***

- கணினி யுகத்தில் எதிர்நோக்கும் சவால்கள்

இக்கட்டுரை எழுதுவதன் நோக்கம் சவால்களை இனங்காணும் அதேவேளை, சவால்களிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினைகளையும், நுட்பமுறைகளையும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். உணர்ந்து கொண்டால் பாடசாலை முகாமை சீர்மையத்துடன் உள்வாங்கப்படலாம் என்பதை அனுபவம் சார்ந்த உண்மையாகும்.

ஒரு பாடசாலை, மாணவர் ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சனைகள் ஏராளம். அம்மாணவர்களின் உளநலக் குறைபாடுகளும், உடல்நலக் குறைபாடுகளும் எண்ணில் அடங்காதவை. பாடசாலை ஒன்றில் மாணவர் வளத்தில் சீர்மையம் கொண்ட மாணவர் வளத்தினையும், சீர்மையப்படுத்தக் கூடிய மாணவர் வளத்தினையும், சீர்மையப்படுத்தவே முடியாத மாணவர் வளத்தினையும் கொண்டுள்ளோம் என்பதை யாரும் மறக்கவே முடியாது. பாடசாலை முகாமையின் வெற்றி மூன்றாவதாக குறிப்பிட்ட சீர்மையப்படுத்தவே முடியாத மாணவர் வளப்பகுதியினரே பாடசாலை முகாமைக்கு சவால் விடுக்கக் கூடியவர்கள். சீர்மையப்படுத்த முடியாத மாணவர்கள் கூறும் காரணங்கள் பாடசாலை முகாமை ஒன்றினால் சரிப்படுத்தக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கவில்லை. பாடசாலை முகாமை பல்வேறுபட்ட உயர்மட்ட கல்வி நிறுவனங்களுக்குக் கீழ் இயங்க வேண்டியுள்ள கடப்பாடாகும். இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம் கீழ் இயங்க வேண்டுமென்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது. மாறாக, பாடசாலை முகாமை நடத்தைவாத விஞ்ஞானத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய செயற்பாடுகளையே மேற்கொள்ள வேண்டும்.

மாணவர் வளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய காரணிகள் மிக அதிகமான வளர்ச்சி கண்டிருக்கின்றன. குறிப்பாக கணினி யுகத்தில் காலடி வைத்த மனித சமூகம் சமூகமயப்படுத்தலை நடைமுறையில் காணத் தவறிவிட்டன என்பது தான் சமூகம் சார்ந்த உண்மையாகும். கையடக்கத் தொலைபேசி (Hand Phone) கணினி (Computer) பென் செருகி (Pen Drive) இணையம் (Internet) மின்னஞ்சல் (E-Mail) இறுவட்டு (Compact Disk) மடிக்கணினி (Laptap) போன்ற நவீன கருவிகளினால் ஈர்க்கப்பட்டுள்ள மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் பிழையான முறைமைகளில் அதைப் பயன்படுத்தி வருவது வேதனைக்குரிய விடயமாகும். நாம் அன்றாட நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் மூலம் பார்த்தும் கேட்டும் கொண்டிருக்கும் விடயங்கள் எல்லாம் சமூகத்தை பாதாளத்தில் தள்ளப் போகின்றது என்பதை எண்ணும் போது பயமாக உள்ளது. எதிர்கால சந்ததியினருக்கு என்ன சமூகம் சார்ந்த உளநலக் கொள்கைகளை விட்டுச்செல்ல வேண்டுமென்பது பாரிய பொறுப்பாகும்.

பெற்றோர் சவால்களை இனங்காண முற்படும் போது அவர்களின் அடிப்படைப் பிரச்சனைகளான வறுமை, குடும்பப் பிரச்சனைகள், குடும்ப உறவுகளில் பொருத்தப்பாடில்லாத தன்மை முதலான உளம் சார்ந்த எண்ணங்களே சிக்கலானதாக உள்ளதால் பாடசாலையும் மாணவர்களின் பெற்றோர்கள் என்ற சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மாணவர்களின் குடும்பங்களில் குடும்ப முறை சார்ந்த உறவு முறையில் உளநலம் சார்ந்த எண்ணப்பாடுகளை தோற்றுவிக்க வேண்டியுள்ளது.

ஆசிரியர் ஆளணியைப் பொறுத்தவரையில் பாடசாலை முகாமைக்குப் பொருத்தப்பாடுடையவர்களாகவே கல்வி சார்ந்த அடிப்படையில் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். ஒரு சிலர் காலத்தின் கட்டாயத்திற்கேற்பவும், கால மாற்றங்களுக்கு ஏற்பவும் தங்களை மாற்றிக் கொள்ள முற்படுகிறார்கள். (எல்லோரையும் கருதமுடியாது) ¼ பகுதியினர் மட்டுமே பாடசாலை முகாமைக்கு ஏற்புடைய நடத்தை வாதத்தைக் கொண்டவர்களாகவும், ஏனையோர் ஏற்புடையவர்களாக செயற்பட முடியாததற்குரிய காரண காரியங்களை தேடிக் கொண்டிருப்பவர்களாகவும் உள்ளனர். 'வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணப்படுத்தும்' வசனங்களைக் கூறிக் கொண்டிருக்கும் நாம் வாசிப்பதைக் கைவிட்டு விட்டோம் என்பது தான் உண்மை. அதிபர்கள், ஆசிரியர்களாகிய நாம் எப்போதும் சமூகமயச் சிந்தனைகள் கொண்டவர்களாகவும், தொழில் தர்மம் கொண்டவர்களாகவும் வாழ வேண்டுமென்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

பாடசாலை முகாமை ஒரு பழமையான அமைப்பு என்பதை ஏனைய நிர்வாக முகாமையாளர்களும், நிறுவன ஆளணியினரும் புரிந்து கொள்வதில்லை. இதில் மிகவும் குறைபாடுள்ள விடயம் என்னவென்றால் ஏனைய நிர்வாக முகாமையில் நெகிழ்வற்ற போக்கும், சமூக மயப்படுத்தல் சிந்தனைகளும் குறைவடைந்து வருகின்றமையாகும். ஒரு நிறுவனம் மற்றைய சக நிறுவனத்தின் கட்டமைப்புகளைப் புரிந்து கொண்டு செயற்படும் போது தான் பாடசாலை முகாமையும், ஏனைய நிறுவனம் சார்ந்து ஒன்றித்து இயங்கமுடியும். ஒரு நிறுவனம் முழுமையாக கணினி மயப்படுத்தப்பட்டுள்ள அதே வேளை சில பாடசாலை முகாமைகளில் அச் செயற்பாடு இன்னும் வெளிப்படவே இல்லை என்பது உண்மை. 'பாடசாலை முகாமை நிர்வாகத்தையே கணினி மயப்படுத்தப்பட்ட பூரணத்துவம் அடையும் தறுவாயில் தான் அதன் வெற்றி தங்கியுள்ளது'. அதன் வேறுபாடு வலயப்பணிமனை கணினிமயப்படுத்தல் தீவிர போக்கக் காட்டப்பட்டுள்ளதால் அவர்களால் கோரப்படும் தகவல்சார் மையம் அகலப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ கல்வியியலாளர்களும், சமூக சிந்தனையாளர்களும் கூட தற்கால கணினி யுகத்தில் மடிக்கணினியுடன் வாழ்கின்றார்களே தவிர சமூகமயச் சிந்தனைகளிலிருந்து விடுபட்டுள்ளனர். கணினி யுகத்தில் நன்மைகள் அதிகமாக கிடைக்கப்பட்டுள்ள போது அந்நன்மைகளை நுகரும் சமூகங்களாக மாற்றமடையவில்லை. அதனால் தான் கணினி ரீதியிலான தகவல் முறைசார்ந்த திரட்டுக்களில் சமூகமயப்படுத்தலுக்கு எதிரான வைரசுகளைக் கொண்டுள்ளது போல் தோன்றுகின்றது. ஆனால் அவை உண்மையில்லை என்பதை நாம் புரிந்துணர்வு கொள்ள வேண்டும்.

பாடசாலை முகாமையில் எதிர்நோக்கும் அடுத்த சவால்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவது பௌதீக வள பற்றாக்குறைகளும் பயன்படுத்தலும் பாதுகாப்பதும் பெற்றுக் கொள்வதுமாகும். பாடசாலை முகாமையில் இருக்கின்ற வளங்களை வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் பயன்படுத்த வேண்டுமென்பது தான் முகாமைத்துவத்தின் தாரக மந்திரமாகும். இருந்த போதிலும் பொருத்தப்பாடில்லாத வளங்களின் ஒப்படைப்பு என்ற அம்சம் ஒன்றும் பாடசாலையில் உள்ளது என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். பாடசாலை முகாமையில் சில பௌதீக வளங்கள் தேவையானவையாக காணப்படுகின்ற போது அவை பற்றாக்குறையாகவும் உள்ளது என்பது வெளிப்படை உண்மை. அதே வேளையில் நவீன வளங்கள் அதை இயக்க கூடிய தொழில்நுட்ப ரீதியான ஆளணி வளங்கள் இல்லாமல் இருப்பதும் நவீன உபகரணங்கள் கிடப்பில் இருப்பது மட்டுமல்லாமல் அவற்றை பராமரிப்பதும் சிரமமானதொரு காரியமாகவுள்ளது.

பாடசாலை முகாமையில் பௌதீக வள பற்றாக்குறை காணப்படும் அதே வேளை அதை பெற்றுக் கொள்வதால் காணப்படும் தடைகளோ ஏராளம். அடுத்த விடயம் பாடசாலையை அரசாங்கம் தரப்படுத்திய போதும் ஒரு வகை பாடசாலைகளுக்குள்ளே பௌதீக வள முரண்பாடுகள் அதிகமென்றே கூறலாம். பாடசாலைகளுக்கிடையில் பௌதீக வள ரீதியான சமத்துவமற்ற தன்மை காணப்படும் அதே வேளையில் பௌதீக வள மாற்றுப்பயன்பாடுகளில் ஈடுபட முடியாத அளவுக்கு கட்டுப்பாட்டு நடைமுறைகளை கொண்டியங்குவதும் பெரும் குறைபாடாகும்.

பாடசாலை முகாமைகளில் எத்தனையோ வருடாந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். அதன் விளைவுகளின் இறுதி விளைவு பூச்சியமாகவே உள்ளது. உதாரணமாக கொண்டாடப்படும் பாடசாலைத்தினம், சிறுவர் தினம் , வருட இல்ல விளையாட்டுப் போட்டி, ஆசிரியர் தினம், ஒக்டோபர் வாசிப்பு மாதம், வாணி விழா, ஒளிவிழா

**இக்கட்டுரையில் கூறப்பட்ட கருத்துக்கள் யாவும் அனுபவம் சார்ந்தவையே எனவே வாசிக்கும் வாசகர் மனதைப் பொறுத்த விடயமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமை குறைவான மாணவர்களைத் திறமைப்படுத்துவதையே கல்வி விஷேட நோக்காகக் கொள்ள வேண்டும்.

சந்துரு மரியதாஸ் (உதவி விரிவுரையாளர்)
கல்வி, பிள்ளை நலத்துறை,
கலை, கலாசாரப் பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

பாடசாலைகளில் உள்வாங்கப்படும் மாணவர்கள் அனைவரும் ஒரே வகையான திறமை அல்லது ஆயத்தம் கொண்டிருப்பதில்லை. இது மாணவர் சார் இடர்பாடுகள் எனப்படும். பொதுவாக சாதாரண மாணவர்கள் கற்பதை விட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் போது சிரமப்படுபவர்களை கற்றலில் இடர்படுகின்ற மாணவர்கள் எனக் கருத முடியும். இது தொடர்பாக ரிம் லோர்மன் (Tim loreman) என்பவர் கற்றல் செயற்பாடுகளில் சாதாரணமாக ஈடுபடுவதில் கடினப்படுபவர்களே கற்றலில் இடர்படுவர் எனக் குறிப்பிட்டிருந்தார்.

கற்றல் இடர்பாடுடைய (Learning Difficulty) மாணவர்கள் கல்வி நிலையில் முன்னேறுவதற்கு பல கடினத் தன்மைகளை எதிர்நோக்குவர். இவர்கள் எழுதுதல், வாசித்தல், எண்சார் குலைவுகளைக் கொண்டிருப்பர். அதே வேளை கவனித்தற் குறைபாடுகளையும், உடனடியாக விளங்கிக் கொள்ளும் தன்மை அற்றவர்களாகவும் இருப்பர். கற்றலில் குறைவான ஆற்றலுடையோர் என்பவர் கற்பித்தலை சரியாக விளங்காமை, மொழியைப் புரிந்து கொள்ளாமை, தொடர்பாடலில் பின்தங்கி இருத்தல், கேட்டல், வாசித்தல், எழுதுதல் குறைபாடுள்ள நிலையிலுள்ள சிந்தனைக் குறைபாடுடையோரைக் குறிக்கின்றது. நியமப்படுத்திய அடைவுச் சோதனைகளின் படி இவர்களை இனங்கண்டு கொள்ள முடியும். ஆனால் ஒவ்வொரு மாணவனும் தனது திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தி முன்னேற அவனுக்கு தகுந்த வாய்ப்புக்களை அளிப்பதாகப் பாடசாலைகள் காணப்பட வேண்டும்.

ஆனால் சில வகுப்பறைகளில் இவ்வாறான மாணவர்களோடு மீத்திறன் கூடிய மாணவரும் கலந்து காணப்படும் போது அது பிரச்சினையைத் தோற்றுவிக்கலாம். பொதுக் கல்வியின் நோக்கங்களை அடையும் பொருட்டு வகுப்பறையில் கற்றல், கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் தனது முழுத் திறமைகளையும் ஈடுபடுத்தி அடிப்படைத் தேர்ச்சி மட்டங்களை அடையாத மாணவர்கள் குறை மட்டத் தேர்ச்சியுடைய மாணவர்கள் எனப்படுகின்றனர். இத்தகு மாணவர் மட்டில் இன்று அதிகூடிய கவனம் செலுத்தப்படுவது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

பாடசாலைகள் மீது அண்மைக்காலங்களில் கூறப்பட்டு வருகின்ற ஒரு பிரதான குறைபாடு என்னவெனில் பாடசாலைகள் தமது உயர்மட்டக் குறிக்கோளைக் கைவிட்டு ஏனைய பாடசாலைகளை விட தமது பாடசாலை முன்னணியில் திகழ வேண்டும் என்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களை பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் பணிகளிலேயே கூடிய கவனயீர்ப்பு செலுத்துகின்றன. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. இது மட்டுமல்லாது இன்றைய கட்டத்தில் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றதான 5E கற்பித்தல் முறைகள் கூட திறமை கூடிய மாணவர்களுக்குத் தான் அதிக பிரயோசனமாகக் காணப்படுகின்றது.

கட்டுருவாக்க வாதக் குறைபாடுகளாக நாம் முக்கியமான சில விடயங்களில் கவனத்தினை செலுத்துகின்ற போது கட்டுருவாக்க வாதத்தில் காணப்படும் பிரச்சினைகளில் முக்கியமானது மாணவர்களின் முன்னறிவு தொடர்பானதாகும். ஏனெனில் மொழியறிவு குறைவான மாணவர்களுக்கும், எழுத்தறிவு குறைவான மாணவர்களுக்கும், மெல்லக் கற்கும் மாணவர்களுக்கும் இக் கற்பித்தல் முறையை குறிப்பிட்ட நேரத்துக்குள்ளாக நிறைவேற்றி வெற்றிகாண முடியாதுள்ளது. அவ்வாறுபட்ட மாணவர்களுக்கு வேறு வழிமுறைகளையே கையாள வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இம் முறையில் காணப்படும் குழு ரீதியான செயற்பாடுகளில் வலுக் கொண்ட மாணவர்களின் பங்களிப்பே மிகவும் முக்கியத்தப்படுகின்றது. ஏனெனில் வலுவில்லாத மாணவர்கள் வலுக் கொண்ட மாணவர்களை மாதிரியாகக் கொண்டே செயற்பட எத்தனிக்கின்றனர். ஆனால் வலுக் கொண்ட மாணவர்கள் ஒரு குழுவிலோ அல்லது வகுப்பிலோ இல்லையென்றால் குறிப்பிட்ட 5E கற்பித்தல் முறையின் பிரதான பகுதியான குழுச் செயற்பாட்டை பூரணப்படுத்த முடியாததாகவுள்ளது.

அதே வேளை ஆசிரியரின் விளக்கத்திற்கு தைரியமான வினாக்களைக் கேட்கும் திறன் மாணவர்களிடம் காணப்படும் போது தான் அறிவு விரிவாக்கற் படிமுறை விருத்தியாக்கப்படும். இது மெல்லக் கற்கும், திறமை குறைவான மாணவர்களிடம் சாத்தியப்படாது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஆசிரியர் ஒரு கடினமான பணியை சந்திக்க நேரிடலாம். ஏனெனில் கல்விச் சூழலோடு முறையாக எதிர்த்து நிற்கும் பிள்ளைகளுக்கே இக்கட்டுருவாக்க அணுகுமுறை பொருத்தமுடையதாக அமையும்.

கில்பட் என்பவர் ஒரு பிள்ளை நுண்ணறிவில் மிகக் குறைந்த முட்டாளாக இல்லாமல் தன் பாடசாலை வாழ்வில் நடுநிலையில் (10 – 11 வயதில்) அதாவது தரம் 06 இல் தனது வயதுடைய பிற மாணவர்கள் சாதாரணமாக எந்த வகுப்புக்குரிய வேலையைத் திறம்படச் செய்கின்றார்களோ அவ்வேலையையும், அதற்கு அடுத்த கீழ்வகுப்புப் பாட வேலைகளையும் செய்ய முடியாமல் இருந்தால் அக்குழந்தையைப் பிற்பட்டதாகக் கருத வேண்டும் என்கிறார். கற்றலில் குறைபாடுடையோர் மெதுவாக அல்லது தாமதித்துக் கற்போர் எனக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் ஏனைய மாணவர்களை விட குறைந்த அடைவு மட்டத்தில் இருப்பதுடன் குறிப்பிட்ட அடைவை நோக்கி மிக மெதுவாகச் செயற்படுபவர்களாகவே இருப்பர். மெல்லக் கற்கும் மாணவர்களின் நடத்தைகளாக பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம். குறைந்த புலனியக்க வளர்ச்சி, மொழி வளர்ச்சியின்மை, கருத்துக்களை வெளியிடும் ஆற்றல் குறைவு, கஷ்டத்துடன் நடமாடுவர். பேச்சுக்குத் துலங்குவார், எழுத்துத்திறன் குறைவு, வாசிப்புத் திறன் குறைவு போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீத்திறன் கூடிய மாணவர்கள் நுண்மதி விவேகம் கூடியவர்கள். பொதுவாக பாட அடைவில் மேல் மட்டத்தில் காணப்படுவர். கிரகித்தல், பகுத்தல், தொகுத்தல், தர்க்கரீதியாகச் சிந்தித்தல், போன்றனவற்றில் விஷேட திறன் பெற்றிருப்பர். இவர்களைப் பொதுவாக புலமைப்பரிசில் பரீட்சை மூலம் இனம் காணலாம். இதன் அடிப்படையில் தான் தேசிய பாடசாலை அனுமதி கிடைக்கின்றது. மீத்திறன் என்பது விவேக ஈவை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. நுண்மதிக் கணிப்பீட்டின் படி 140 இற்கு மேல் பெற்றுள்ளவர் மீத்திறன் உடையோர் என டேமன் (Terman) கூறுகின்றார்.


இன்றைய மாணவர்களே நாளைய எதிர்காலம்! நாளைய எதிர்காலத்தின் சிற்பிகளும் அவர்களே! என்பதைப் போன்ற பல தரப்பட்ட பேச்சுக்களை நாம் மேடைகளில் கேட்டிருக்கலாம். அதனை நடைமுறை வாழ்விலும் நிரூபித்துக் காட்ட வேண்டும். திறமையான மாணவர்கள் எப்படியாயினும் தம் வாழ்வில் முன்னேறிக் கொள்வர். திறமை குறைவான மாணவர்கள் மீதிலே அதிகூடிய கவனம் இன்று தேவைப்பட வேண்டும். ஏனெனில் ஒரு நாட்டினுடைய எழுத்தறிவு வீதமானது குறிப்பிட்ட மாணவர்களை மட்டும் வைத்துக் கொண்டு தீர்மானிக்கப்படுவதில்லை. அனைத்து வகையான மாணவர்களுமே அதனுள் உள்வாங்கப்படுகின்றனர். எனவே திறமை குறைவான மாணவர்களை புறம் தள்ளிவிடாமல் அவ்வாறான மாணவர்கள் மீதே அதிகூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆனால் இன்று தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை மூலம் அதிதிறமையான மாணவர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். ஏனைய மாணவர்கள் வளம் குறைவான சாதாரண பாடசாலைகளில் தமது இடைநிலைக் கல்வியைத் தொடருகின்றனர்.

பாடசாலைகள் சமூகத்தில் தமது சுயாதீனம் இழக்கப்படாத விதத்தில் இயங்குவதற்கான தேவைகளை உரியவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதோடு திறமை குறைவான மெல்லக் கற்கும் மாணவர்கள் மீதான கவன ஈர்ப்பை முழு சமுதாயமும் மேற்கொள்ள வேண்டும் எனவும் இக்கட்டுரை பரிந்துரை செய்கின்றது. எந்தவொரு பாடசாலையாக இருந்தாலும், எந்தவொரு சமுதாயமாக இருந்தாலும் கல்வியின் அடிமட்டத்தில் உள்ள பிள்ளைகளின் வாழ்வில் அதிக முக்கியத்துவம் எடுக்க வேண்டும். இவ்வழியில் தான் குறிப்பிட்ட சமுதாயம் முன்னேற்றம் அடையும் என்பது இக்கட்டுரை மூலமான எதிர்வுகூறலாகும். மேற்கூறப்பட்ட ஆலோசனைகளைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு பாடசாலையும் செயற்படுகின்ற போது அதன் விளைவாக தத்தமது சமுதாயத்தினையும், நாட்டினையும் முன்னேற்ற முடியும். எனவே மீத்திறன் கூடிய மாணவர்களை விடவும் மீத்திறன் குறைவான மெல்லக்கற்கும் மாணவர்கள் மீது அதிகமான கவனயீர்ப்பினை இக்காலப் பாடசாலைகளும், ஆசிரியர்களும் செலுத்தினால் கல்விச் சமநிலை கொண்ட நாளைய சமுதாயத்தினை உருவாக்க முடியும் என்பது இக்கட்டுரையின் எதிர்பார்ப்பாகும்.

***'நோயுற்றவனுக்கே மருத்துவம் தேவைப்படும் மாறாக நோயற்றவனுக்கல்ல'***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய ஆசிரியரின் கல்வி அனுபவச் சிந்தனைகள்ஓர் கருத்துக் கண்ணோட்டம்

S.லக்குமிகாந்தன் Sp.Trd (Sci) Dip.in Special Edu,
P.D.C,
தி/கும்புறுபிட்டி M.M.T.M.பாடசாலை
திருகோணமலை

### கல்வியின் முக்கியத்துவம்

கல்வியின் மூலம் மாணவன் ஒருவர் மனப்பாங்கு (Moral) நுண்மதி (Intellectual) ஒழுக்கம் (Esthetics) அறிவு (Knowledge) ஆன்மீகம் (Spiritual) சமூக (Social) ஆகிய நியதிகளில் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் பெறுகின்றார். மேலும் அவனிடம் நன்நடத்தைகள் (Characters) உருவாக்கப்பட்டு நலங்கள் நிறைந்த எதிர்காலம் பிறக்க வழியும் சமைக்கப்படுகின்றது. எனவே 'கல்வி' சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றும் ஓர் முகவராக (Agency) தொழிற்படுகின்றது எனக் கூறப்படுகின்றது.

### கல்வியின் தரம்

'தரமான தொழிலாளர்களே தரமான பொருட்களை உற்பத்தி செய்ய இயலும்' தரமான ஆசிரியர்களே தரமான மாணவர்களை உருவாக்க இயலும். அத்துடன் தரமான கல்வியாளர்களே தரமான கல்வியை உறுதி செய்ய முடியும்.

### கல்வியின் தரத்தை அதிகரிப்பது எப்படி?

'தர அபிவிருத்தி' அல்லது 'தரமேம்பாடு' என்பது பொதுவாக ஓர் நிபுணரின் ஆலோசனையின் பேரிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் 'தரம்' என்பது பொருள் அல்லது சேவையொன்றின் புறத்தோற்றத்தை விட முக்கியமாக அதன் உள்ளடக்கத்திலேயே தங்கியுள்ளது. அப்பொழுது தான் தர மேம்பாட்டின் மூலம் எமது தேவைகளுக்கு பொருத்தமான சிறந்த பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ள இயலும்.

கல்வியானது அதன் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் நிறைவு செய்யுமானால் கல்வியின் தரம் அதிகரித்துள்ளது எனலாம். இதற்கு கல்வித்துறையிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பினை சிறப்பாக ஆற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்தை மேம்படுத்த முயலும் ஒருவர் பின்வரும் 4 விடயங்களையும் கருத்திற் கொள்ளுதல் இன்றியமையாததாகும். அவையாவன

i. தனது செயற்பாடுகள் மூலம் இலக்குகளையும், நோக்கங்களையும் அடைய முயற்சிக்க வேண்டும்.

ii. தனது தற்போதைய தகுதி, கிடைக்கக்கூடிய வளங்கள் பற்றியும் முன்னேற்றத்தை ஏற்படுத்த அவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றிய அறிவு வேண்டும்.

iii. இதுவரை செய்த செயற்பாடுகள், செய்து கொண்டிருக்கும் செயற்பாடுகள், செய்யவிருக்கும் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கிடையிலான இடைவெளியைக் குறைத்தலும் விரிவுபடுத்தும் வழிவகைகள் வகுக்க தயாராகவும் இருத்தல் வேண்டும்.

iv. வகுக்கப்பட்ட வழிவகைகளை உண்மையாகவும் நேர்த்தியாகவும் கடைப்பிடித்தல் வேண்டும்.

இதே போன்று கல்வித் துறையின் தரத்தை அதிகரிக்க வேண்டுமாயின்,

i. சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் சரிவர புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ii. தேவையற்ற நேரத்தை போக்கும் செயற்பாடுகளை தவிர்த்தல் வேண்டும்

iii. மேலதிகமான உதவி தேவைப்படும் நேரங்களிலும், இடைவெளியை குறைக்கும் போதும் தமது ஒத்துழைப்பை பொறுப்புக்களை ஏற்பதன் மூலம் நிறைவேற்ற முன் வரவேண்டும்.

**Hello Teacher What Category belongs to you?**
Poor minds discuss people
Average minds discuss Events
Clever minds discuss Ideas
Genies act salienty

எனவே சுய முகாமைத்துவம் (Self Management) குழுவேலை (Team Work) ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் (Understanding) செயற்படுவதன் மூலமும் கல்வித் துறையின் தரத்தை அதிகரிக்க இயலும் என்பது வெளிப்படையாகின்றது.

**இன்றைய கல்விநிலை**

இக்காலகட்டத்தில் 21ம் நூற்றாண்டின் நடுப்பகுதியை அண்மித்துக் கொண்டிருக்கின்றோம். இக்காலத்தின் சவால்களை எதிர்நோக்குவதற்கு ஏற்றவாறு புதிய கலைத்திட்ட அமுலாக்கம் 2015ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற இருக்கின்றது. சமூகத்தில் பசுமைப்புரட்சி, வெண்மைப்புரட்சி, கைத்தொழில் புரட்சி, தகவல் தொழில்நுட்ப புரட்சி என்பவற்றைக் கடந்து நாமோ தொழில்நுட்பப் புரட்சி யுகத்தில் பிரவேசிக்க இருக்கின்றோம். இப்படியான ஓர் அரியவாய்ப்பு எமக்கு கிடைத்திருக்கிறது. 2017ம் ஆண்டின் பின்னர் மனித சமூக பொருளாதார அமைப்பு, அத்தியாவசிய தேவைகளை பெற்றுக்கொள்ளல், விண்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் சூழல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் புதிய பரிமாணத்தை எட்டும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. எனவே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்விற்காக எம்மை நாம் தயார்படுத்தும் போது உலகநிலை, எமது நாட்டு நிலை போன்றவற்றில் கல்வி ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை உண்மையாகவும் நேர்மையாகவும் சிந்திப்பது இன்றியமையாததொன்றாகின்றது.

உலக நிலை

நாம் இருவேறுபட்ட உலகத்தை பார்க்க கூடியதாகவுள்ளது. ஒன்று விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியினால் தோன்றியுள்ள சந்தோஷமான நவீன உலகம் மறுபுறத்தில் துன்பங்களும் அவலங்களும் நிறைந்த வேதனையான உலகம்.

நாம் நவீன காலத்தவர்களாயும் விவேகமும் அளவிட முடியாத நன்மை செய்யும் ஆற்றலும் பெற்றிருந்ததும் வேதனை உலகம் தோன்ற காரணம் என்ன?

எமது நாட்டு நிலை

உலக நாடுகள் பலவற்றில் மக்கள் பலரால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நான்கு பெரிய மதங்கள் எமது நாட்டில் காணப்படுகின்றது. அத்துடன் எமது நாட்டின் சனத்தொகையின் 80% மான மக்களின் கல்வி அறிவு பெற்றவர்களாக இருக்கின்றார்கள் எனக் கூறி பெருமைப்படுகின்றோம். அதே வேளையில் உலகில் தற்கொலை, கொலை, மனித உரிமைகள் தொடர்பாக பேசப்படும் ஒரு நாடாக உள்ளோம். உள் நாட்டிலேயே 30 வருடங்களாக பெற்ற யுத்த அனுபவத்தை பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்குவதில் பெருமை கொள்கின்றோம்.

எமது நாட்டின் கல்வி முறைகளும், மதங்களும் மக்களின் வாழ்க்கை முறையிலோ, வாழ்க்கையின் தரத்திலோ எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த தவறிவிட்டன என்பதே உண்மையாகும். சமயக்கல்வி பரீட்சையில் சித்தியெய்தலையும், பாரம்பரிய விழாக்கள் பழக்கவழக்கங்களில் ஈடுபட்டு சந்தோஷம் பெறுவதையும் கொண்டதாகவே உள்ளது. எமது கல்வியினூடாக வந்த அரசியல்வாதிகள் நம்மால் தெரிவுசெய்யப்பட்டவர்களாவர். எனவே எமது தெரிவுக்கு நாமே பொறுப்பு கூறவேண்டியவர்களாகும். ஆசிரியர்கள், சமயத்தலைவர்கள், அரசியல் வாதிகள் போன்றோர் சமூகத்தின் முக்கிய நபர்களாகும். (Key Persons)

கல்வி நிறுவனங்கள் பல ஏழைகளுக்கும் பாமர மக்களுக்கும் எட்டாத கனியாக இருப்பதுடன் தங்கள் பெயருக்கேற்ப நல்ல பிரஜைகளை உருவாக்கதவறிவிட்டன என்பதை பொதுஜன ஊடகச் செய்திகள் உறுதிப்படுத்தவில்லையா?

கல்வியின் இறுதிநோக்கமான அடுத்த மனிதனையும் மதிக்கும் மாண்பு ஆண்டவருக்கு மிகவும் விருப்பமான ஓர் விடயமாகும். எனவே எமது கல்வி ஆன்மீக, மனப்பாங்கு, எமது கலை கலாசார விழுமியங்களை உணரத்தக்கதாக அமைந்தாலே வளமான எதிர்காலம் உருவாக முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒற்றுமையை நோக்கிய கல்வி**

மாட்டின் லூதர் கிங் கூறினார்.

'நான் ஈனர்களின் ஈனச் செயல்களுக்காக மனம் வருந்தவில்லை. நான் வருத்தப்படுவதெல்லாம் நல்லவர்களினதும் மௌனத்திற்காகவே'

250 வருடங்களுக்கு முன் வாழ்ந்த சீனத்தத்துவவியலாளர் கொன்பூலியஸ் கூறிய கருத்து 'சரியானதை தெரிந்து கொள்வதைப் பார்க்கிலும் அதை செயற்படுத்தாமல் விடுவது தான் மிகவும் கீழ்த்தரமான கோழைத்தனம்' என்பதாகும்.

எமது தற்போதைய நிலைக்கு பொருத்தமான கல்வி வேலை உலகின் தேவைகளை சிந்திப்பதுடன் மட்டுமல்லாது தேசிய ஒற்றுமை மற்றும் வாழ்நாள் நீடித்த மனப்பாங்கு மாற்றம் என்பவற்றை ஏற்படுத்த வேண்டும்.

மனித இதயத்தில் கருத்தரிக்கும் கற்பனைகளே எண்ணங்கள் ஆகின்றன. இந்த எண்ணங்கள் மனம் என்னும் குழாயினூடாக வெளிவருகின்றது. எனவே தான் இதயத்தை சீர்படுத்துகின்ற, இதயத்தை துர் எண்ணங்களிலிருந்தும் உணர்ச்சிகளிலிருந்தும் காத்து கொள்கிற ஓர் முதிர்ச்சியை கல்வி வழங்க வேண்டும். பாட கற்றற் பேறுகள் மட்டும் தேசிய கல்வி குறிக்கோள்களை நோக்கி அழைத்து செல்லாது.

**கல்வியும் விஞ்ஞானமும் மதமும்**

மதம் விஞ்ஞானத்தை கண்டு அஞ்ச வேண்டியதில்லை. மதம் அஞ்ச வேண்டியது எல்லாம் தான் புறுக்கணிக்கப்படுதல் கண்டே. எனினும் இன்றைய உலகின் மனிதன் ஒருவனுக்கான சவால் என்னவென்றால் இரண்டையும் பற்றிய உண்மை அறிவை பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பது தான்.

மனிதனின் விவேகம், சிந்திக்கும் ஆற்றல் என்பன ஓர் எல்லையற்ற வளங்களாகும். மனிதன் தர்க்கரீதியாக சிந்தித்து காரண காரியத்தை அறியக்கூடியவன். எனவே தான் தற்கால மாணவர்கள் தனது ஆசிரியரிடம் கேட்பெதல்லாம் இது தான் ..


எவ்வாறு சிந்திப்பது என எமக்கு கற்பிக்க வேண்டாம்
ஏனெனில் அதற்கு எம்மிடம் மூளை உண்டு
எப்படி சிந்திப்பது என எமக்கு கற்பித்தால் - நாம்
எமது கரங்களால் நட்சத்திரத்தைக் கூட தொட்டுவிடுவோம்

எனவே தற்கால ஆசிரியர்கள் மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றலை தூண்டுபவராகவும் ஆக்கத்திறனுக்கு வழி சமைப்பவராகவும் இருக்க வேண்டும். இத்திறன்கள் ஆசிரியரில் இல்லையாயின் அவ் ஆசிரியர் மாணவரை தூண்டுதல் இயலாத காரியம் ஆகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வியும் நவீன ஆசிரியத்துவமும்**




கல்வி என்பது உண்மையில் தகவல்களைப் பெற்று, அவற்றை மாணவர்கள் தம் உள்ளத்தில் நிறுத்தி அதன் மூலம் தங்கள் நடத்தையை மாற்றியமைக்கும் ஓர் செயன்முறைத் தொடராகும்.

கல்வியின் மூலம் ஆன்மீகவளர்ச்சி, அன்பு, சந்தோஷம், சமாதானம், அமைதி, நன்மை, இரக்கம், பெருந்தன்மை, கீழ்ப்படிவு, சுயகட்டுப்பாடு போன்ற சீரிய குணங்கள் நிரம்பிய முழுமையான மனிதன் உருவாக்கப்படுகின்றான்.

எனவே'கற்றல்' என்பது ஒரு தனிமனிதனின் மிகப்பெரிய தகுதியாகும். ஓர் ஆசிரியர் மாணவனின் தன்முனைப்பை 'நான்' என்பதிலிருந்து 'நாம்' என்பதற்கும் 'எனது' என்பதிலிருந்து 'எங்களது' என்பதற்கும் மனப்பாங்கை மாற்றுகிறார். ஆனால் துர் அதிஷ்டவசமாக தற்போதைய வகுப்பறையில் மாணவர்களிடையே ஆரோக்கியமற்ற போட்டிகள் நிலவுவதை அவதானிக்கின்றோம்.

ஆசிரியர்களிடையே திருப்தியற்ற பொருளாதாரக் குறைவு காணப்படுவதால் கற்பித்தல் செயற்பாடு இருள் படிந்ததாகவுள்ளது. இதனால் அவர்கள் மேலதிக வருவாய்க்காக தனிப்பட்ட வகுப்புக்களிலும் வேறு தொழில்களையும் நாடுகின்றார்.

கடந்த காலங்களை நினைத்துப் பார்த்தால் ஆசிரியத் தொழிலுக்கு தகுதியான வேதனம் அளிக்கப்படவில்லை என எண்ணத் தோன்றுகிறது. எனினும் ஆசிரியர்களுக்கு அதிக விடுமுறை சிரமக் குறைவு, பொறுப்பு கூற வேண்டிய தேவை போன்ற சலுகைகள் உள்ளன. எனினும் மாணவர்களின் கிரகிக்கும் திறன், ஓய்வு, மனநிலை போன்ற காரணிகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். எது எப்படியிருந்த போதிலும் மற்றைய தொழில்களில் கிடைப்பதை விட மனநிறைவும் சந்தோஷமும் ஆசிரியர்களுக்கு எப்போதும் உண்டு. என்பதை மறந்து விடலாகாது. பல மாணவர்கள் ஆசிரியர்களையே தமது வாழ்க்கையில் Role Model லாக (முன் மாதிரி) கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆசிரியத் தொழில் மாணவனின் ஆன்மாவைசெழுமைப்படுத்துகின்றது. மாணவர்களுக்கு பலவித அறிவையும் பல்வெறு கோணங்களில் சிந்திக்கும் ஆற்றல்களையும் தூண்டி மாணவனிடம் சரியானதை விரைவாக முடிவெடுக்கும் ஆற்றலை வளர்ப்பதுதான் ஆசிரியப் பணியின் முக்கிய நோக்கமாகும்.

**ஆசிரியனும், கற்பித்தல் செயன்முறையும்**

கல்வியை பின்வரும் இருவகையில் அளிக்க இயலும்.

1. தகவல்களை அளித்தல் அல்லது விளக்கத்தை கொடுத்தல்
2. அறிவுக்காகவும், கிரகித்தலுக்காகவும் கற்றல் அல்லது அனுபவக் கற்றல் அல்லது கற்றல் மூலம் முதிர்ச்சியடைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு செயன்முறைகளிலும் அதிகளவு ஆசிரியர்கள் முதலாவது விளக்கத்தை மட்டுமே நிறைவு செய்பவர்களாயிருக்கின்றனர். இது ஒரு அபாயகரமான கருதுகோளாகும். ஏடுகளின் மூலம் மாணவர்களின் மனம் இயந்திரப் பாவனையில் நிரப்பக்கூடிய வெற்றுப்பாத்திரம் அல்ல. அவர்கள் ஒளியேற்றப்பட வேண்டிய தீபங்களாகும். எனவே ஆசிரியப்பணி மிகவும் சக்தியும் பொறுப்பும் வாய்ந்த ஒன்றாகும்.

I have come to believe that a great Teacher
Is a great Artist (Teaching May) ever be the
Greatest of the arts since the medium
Is the Human mind and Sprits.
- John Steinbeck –

கல்வி என்பதன் ஆங்கில வடிவமான 'Education' என்ற பதம் 'Educate' என்ற இலத்தின் சொல்லில் இருந்து வந்ததாகும். இதன் பொருள் வழிநடத்தல், வழிகாட்டல் என்பனவாகும். ஜோனிற்கு மொழியை கற்பிக்க விரும்பும் ஒருவர் முதலில் ஜோனைப் பற்றி அறிதல் வேண்டும். அதாவது

மாணவர்களின் பின்னணி, எண்ணங்கள், திறன்கள் போன்றவற்றை அறியாது ஆசிரியர்கள் தம்மிடமுள்ள உண்மைகளை மாணவர்கள் மேல் திணிப்பதனால் பாடசாலைகள் மாணவர்களின் நிம்மதியையும் சந்தோஷத்தையும் நிராகரிக்கும் நிலையங்களாகியுள்ளன. மாணவர்கள் பயத்தினாலும் கோபத்தினாலும் வகுப்பறையை புறக்கணிக்கின்றர். இதனால் மாணவர்கள் சிந்தித்து புதியவற்றை கண்டுபிடிக்க முடியாதவர்களாகவும் கற்றவிடயங்களை சிந்திக்க இயலாதவர்களாகவும் இருக்கின்றனர்.

எனவே ஆசிரியர் மையக் கல்வியிலிருந்து மாணவர் மையக் கல்விக்கும் ஆக்கத் தொழிற்பாடுகளுக்கும் நாம் செல்வது தவிர்க்க இயலாதவொன்றாக உள்ளது. ஆசிரியர்களும் தமது வசதி பாதுகாப்பு என்பவற்றை தியாகம் செய்து மாணவர்கள் தமது சூழலை புரிந்து கற்றலை மேற்கொள்ள இலகுவாக வழிவகைகளை கண்டறிதல் வேண்டும்.

புத்தபிரான் தனது சீடர்களிடம் 'நான் போதிப்பதை எல்லாம் ஏற்றுக்கொள்ளாதீர்கள். ஆனால் அவற்றை எல்லாம் பரிசோதியுங்கள். அதிலிருந்து உண்மையை கண்டுபிடித்த பின் அதனை நம்புங்கள் என்றார்.' எனவே யார் யாருக்கும் கற்பிக்க இயலாது.

Education is not received, It is achjieved

கல்வி என்பது மனதின் உலா (Trip of Mind) ஆகும். நாம் பார்த்தல், அவதானித்தல், ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்தும் போது தோன்றும் அனுபவங்கள் ஆகியவற்றின் மூலம் கற்றுக் கொள்கின்றோம். அதுவே கற்கும் முறை 'குதிரையை தண்ணீர் உள்ள இடத்திற்கு அழைத்துச் செல்லலாம். ஆனால் அதை குடிக்க வைக்க இயலாது' என்பது ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமொழியாகும். எனவே அதிகமாக பேசுவதை விட செயற்பாட்டில் ஈடுபடுத்தும் போது மாணவனின் ஈடுபாட்டை, ஆர்வத்தை தூண்ட இயலும்.

மேலும் நாம் கற்பிக்கும் விடயம் தொடர்பாக மாணவர்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதே புத்தகங்களாகும். எனவே ஆசிரியர்கள் மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை தூண்டுதலும் அவசியமாகும். மாணவர்களிடம் செயன்முறை ரீதியிலான கற்பித்தலைத் தூண்ட இரு முறைகளை பயன்படுத்தி உண்மைக் கற்றலை உறுதிப்படுத்த இயலும்

1. உண்மை மாதிரிகள், படங்கள் - தொட்டுணர்ந்து பார்த்து கற்க வழிவகுக்கும்
2. சங்கீதம் பாடல் - கேட்டு ரசித்து கற்க வழிவகுக்கும்

இவற்றின் மூலம் மாணவர்களிடம் ஆக்கத்திறனை வளர்ப்பதுடன் சந்தோஷமாக வகுப்பறைச் சூழலையும் உருவாக்கமுடியும்.

I hear and I forget

I see and I remember

I do and I undersatand

கல்வியின் தாக்க விளைவுகள் (Impactt of Education)

இரண்டு வகைப்படும்

1. கல்வி வெளியீடுகள் (Output)
2. கல்வி விளைவுகள் (Out come)

கல்வி வெளியீடு என்னும் போது அது மாணவரின் பரீட்சைப் பெறுபேறுகள், அடைவு மட்டங்கள், வெற்றிகள்தொடர்பானதாகும். இதற்கு பாடசாலைகளுடன் தனியார் கல்வி நிறுவனங்களும் இணைந்து பணியாற்றுகின்றன.

ஆனால் கல்வி விளைவு என்னும் போது மாணவரில் தன்னம்பிக்கை ஏற்படுத்தி காரண காரியங்களை தேடியறிந்து பிரச்சனைகள் ஏற்படும் போது சமநிலை ஆளுமையுடன் செயலாற்றத்தக்கவராக இருத்தல் ஆகும். இச் செயற்பாட்டில் பாடசாலைகள் மட்டுமே பயிற்சி களங்களாக தொழிற்படுகின்றன. எனவே ஆசிரியர் ஒருவர் பாடசாலையில் பின்வரும் நான்கு விடயங்களில் கவனம் செலுத்தல் வேண்டும்.

1. மாணவன் தனது தனித்திறமையை இனங்கண்டு கொள்ளவும், கைவசம் உள்ள தகவல்கள், அறிவைப் பயன்படுத்தி சமூகமயமாதலுக்கு வழிகாட்டல் (Socialization)
2. தனது திறமை, அபிலாசைக்கு பொருத்தமான உயர்கல்வி பெற வழிகாட்டல் (Higher Education)
3. நல்ல பண்புகளின் விருத்திக்கு வழிகாட்டல் (Developing the Character)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமகால மாணவன் எதிர்நோக்கும் சவால்கள் (Challenges of the Students)**

1. தற்போதைய மாணவர்களின் உள்ளத்தில் படிப்பு எதனை சாதித்துள்ளது என்ற கேள்வி காணப்படுகின்றது. அவர்கள் அதிக பணம் சம்பாதிக்கும் வழி, வெளிநாட்டு மோகம் போன்றவற்றின்பால் கூடிய கவனம் செலுத்துகின்றனர்.
2. உயர்கல்வி ஒன்றை தொடர்வதற்கான தீர்மானங்கள் அற்றவர்களாக காணப்படுகின்றனர்.
3. கடினமான சவாலான கற்கை நெறியொன்றை தெரிவு செய்யாமல் இலகுவான கற்கை நெறிகளையே விரும்புகின்றனர். உதாரணம் : க.பொ.த விஞ்ஞானத் துறைக்குப் பதிலாக கலை வர்த்தகத் துறைகள் தெரிவு செய்யப்படல்.
4. மாணவர்களின் தனிப்பட்ட செலவினங்கள் உயர்ந்து காணப்படுகின்றது. உதாரணம் : கையடக்கத் தொலைபேசி பாவனை, கணனி விளையாட்டுக்கள்

**ஆசிரியத் தொழில்**

'ஒருவனுக்கு ஒருவேளை உணவுக்காக மீனை கொடுப்பதைக் காட்டிலும் மீனை எவ்வாறு பிடிப்பது எனக் கற்றுக்கொடுப்பதே மிகவும் பிரயோசமானது. ஏனெனில் எது எப்போதும் மீனை பெற்றுக் கொள்ள வழிசமைக்கும்.

மருத்துவம் சட்டம், பொறியியல் போன்ற வாண்மை தொழில்கள் போன்று ஆசிரியத்துவமும் முக்கியம் வாய்ந்ததாகும். ஏனெனில்

i. ஆசிரியத்துவம் முக்கியமான ஓர் சமூகச் செயற்பாடு
ii. ஆசிரியத்துவம் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டுடன் வகுப்பிற்கு வெளியிலும் பல செயற்பாடுகளைக் கொண்ட ஓர் தொடர் பணியாகும்
iii. ஆசிரியரொருவர் பரந்துபட்ட (Versatile) பல விடயத்தை அறிய வேண்டியுள்ளது
iv. தொழில்ரீதியில் அர்ப்பணிப்புடன் கூடிய முன்னேற்றத்தை ஆசிரியத்துவம் வேண்டி நிற்கின்றது.

பாடசாலையோ, கல்லூரியோ நலன் விரும்பிகளினதும் பெற்றோரினதும் மாணவர்களினதும் நன்மைக்காக தனது கொள்கைகளையும் திறன்களையும் ஆசிரியரே உருவாக்குகின்றார். பாடசாலைகள் ஏனைய துறைகள் போன்று வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தும் நிலையங்களாக தொழிற்பட இயலாது. ஆசிரிய மாணவ தொடர்பை பேணுவதன் மூலம் ஆசிரியர் தனது கடமைப்பாடுகளையும் திறன்களையும் வளர்க்க வேண்டும். இது வகுப்பறை கற்பித்தல், பாடசாலை ஐக்கியம், ஆசிரிய நடத்தை, அதிபர் ஆசிரியர் தொடர்பு, பாடசாலை பெற்றோர் தொடர்பு என்பவற்றை பொருளுடையதாக்குகின்றது.

ஏனைய துறைகளைப் போல ஆசிரியர்களுக்கும் தமது தகுதி, வாண்மையை அதிகரிக்கும் கற்கைகள், சேவைக்கால பயிற்சிகள் வழங்கப்படுகின்றது. இப்பயிற்சிகளில் கலந்து கொள்வது மூலம் ஆசிரியர் வகுப்பில் திறம்பட செயற்படமுடிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய விடுதலை

இன்று காணப்படும் ஒவ்வொரு ஆசிரியரும் தனிப்பட்ட விதங்களில் வேறுபட்டவர்களாக இருக்கின்றனர். ஆசிரியர்கள் உள்வாங்கப்படுவதிலோ அல்லது ஆசிரியர்களின் தகுதியை ஒழுங்குபடுத்துவதோ கடினமான காரியமாக உள்ளது. இதனால் தத்தமது நலன்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் பிரிந்து போயுள்ளனர். இதனால் ஆசிரியர்கள் தமது பிரச்சனைகளை ஒரே குரலில் கூற இயலாதுள்ளனர். இதற்காக தொழில்ரீதியில் ஆசிரியர் குழாம் நாடு தழுவிய விவாதத்தை ஒழுங்கு செய்ய வேண்டும் என்பது எதிர்காலத்தின் தேவையாகும்.

'குரு' என்பவன் எமது பண்பாட்டின் படி நடத்தையையும் மனத்தையும் பண்படுத்துபவன் ஆவான். அவன் சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிக்கப்படும் மனிதனாவான். அவன் கற்பித்தலுடன் எமது பண்பாடு, பாரம்பரியம், சரியான நடத்தை போன்றவற்றையும் மாணவர்களுக்கு உணர்த்துகின்ற கற்பகதருவாகும். ஆதிகாலத்தில் இருந்து 'கற்பித்தலும்'(Teaching) தேற்றுதலும் (Healing) மதிப்பு வாய்ந்த செயற்பாடுகளாக இருந்து வந்துள்ளது. ஆசிரியத்துவம் ஓர் மதிப்பு வாய்ந்த தொழிலாக தொடர்ந்தும் பேணப்படும் என நம்புவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய வாழ்க்கை

இ.குகநாதன்(கிழக்குப் பல்கலைக்கழகம்)
முனைக்காடு—வடக்கு
கொக்கட்டிச்சோலை
மட்டக்களப்பு

கண்ணை மூடி மமதை வாழ்க்கையில் தினம் வாழும் மனிதா —நீ
வாழும் வாழ்க்கையை அறிந்தாயா !
அறிந்தாலும் அதனை நினைத்துப் பார்த்தாயா!
பணம் உன் கண்ணை மறைக்கின்றது
குணம் உன்னை விட்டு தொலை தூரம் ஓடி விட்டது
கண்முன்னே நடக்கும் அவலங்களைப் பார்த்தும்
மௌனமாய் மரணித்துப் போய் உள்ளாயே!

ஆசைக் கதை பேசி அன்பாய் அரவணைத்து
பேதமின்றி சமூக வாழ்வு வேண்டி
சுய நலமற்று பொது நலம் பெற்று
சுகமுடன் வாழப் பெற்றது அன்றைய வாழ்க்கை


நவீனம் என்ற போர்வைக்குள் நின்று-இவ்வாழ்க்கை
ஆடம்பர பொருட்களுக்கு அடிமையாகி விட்டது
பெற்ற தாய் தன் பிள்ளை கையால்
கொடூரமாக கொலை செய்யப்படுகின்றார்கள் இன்று

தெருவுக்குத் தெரு முதியோர் இல்லங்கள்
தொழிலில்லாஅலையும் இளைஞர் கூட்டங்கள்
கழுத்தை கையால் நசிக்குது விலைவாசி
கண்ணுக்கு முன்னால் நடக்குது ஊழல் தொழில் பேசி

முடிந்தால் கண்ணைத்திறந்து கால் நடையாக
நூறு அடி வைத்து நடந்து பார்
கண்முன்னே நடக்கும் இன்றைய வாழ்வைப்பார்த்து
பூகம்பமாய் நீ வெடிப்பாய் புது மனிதனாய் உருவெடுப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்டவடு’

வாய்ச் சொல்லினால் ஒருவர் மனதைப் புண்படுத்தினால், அப்புண் ஒரு போதும் ஆறாது. எனவே நாம் எவரையும் மனம் நோகப் பேசக்கூடாது என்பதை வலியுறுத்துவதற்காக இக்குறளை நாம் பயன்படுத்துகிறோம். எனினும் காலம் காயங்களை ஆற்றும் மருந்தாகச் செயற்படுவதாலும் மன்னித்தல், மறத்தல் போன்ற குணங்களாலும் நாவினாற் சுட்டவடுக்களும் மறைக்கப்பட்டு விடுவதுமுண்டு.

பிள்ளைப் பருவத்தில் வாய்ச்சொல் பிரயோகம் காரணமாக ஏற்படுத்தப்படும் மனப்புண்கள் காலாகாலத்திற்கும் ஆறாதிருந்து எவ்வகையான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என்பதை அண்மைக்கால ஆய்வு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது. மனவெழுச்சி சம்பந்தப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகமானது அறிவு விருத்தியிலும், மூளையின் கட்டமைப்பிலும் எதிர்மறையான அல்லது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதைத் தனது கலாநிதி பட்டத்திற்கான ஆய்வின் கண்டறிந்துள்ளார். நெதர்லாந்து தேசத்தின் லெய்டன் பல்கலைக்கழக மாணவியான ஆன் லோராவான் ஹார்மிலன் (Anne-Laura van Harmelen) என்பவர்.

தமது பெற்றோரால் அடிக்கடி பரிகாசப்படுத்தப்படும் மற்றும் தொடர்ச்சியான புறக்கணிப்பிற்கும் தனிமைப்படுத்தலுக்கும் ஆளாகும் பிள்ளைகள் பிற்கால வாழ்வில் தோன்றும் அழுத்த நிலைமைகளின் போது வித்தியாசமான விதத்தில் துலங்கலைக் காட்டுபவர்களாகிறார்கள் என ஆன்லோராவான் ஹார்மின் வாதிடுகிறார். அவர்கள் கொண்டிருக்கும் தம்மைப்பற்றிய எதிர்மறையான கருத்துருவானது புதிய நிலைமைகளின் போது எதிர்மறையான உணர்வுகளையும் எண்ணங்களையும் அவர்களில் மேலெழச் செய்து அவற்றை வலுப்படுத்தியும் விடுகின்றது. அவர்களது இளமைக்கால நினைவுகளும் பாதிப்புக்குள்ளாகின்றன. இது அவர்களை அதிகரிக்கும் மனச்சோர்வு, பதகளிப்பு போன்றவற்றிற்கு இலகுவில் ஆளாகி விடக் கூடியவர்களாக ஆக்கிவிடும் என்கிறார் வான் ஹார்மிலன்.

சிறுவர் துஷ்பிரயோக வகைகளில் மிகவும் பொதுவாகக் காணப்படுவது மனவெழுச்சி சம்பந்தப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் ஆகும். அது வளர்ந்தவர்களின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது கடந்த சில ஆண்டுகளில் கூடுதலாக உணரப்பட்டிருப்பினும் தமது ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட உடலியல் மாற்றங்களினூடாக அது மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது என்கிறார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மூளையில் அறிவு, நடத்தை ஆகியவற்றின் செயற்பாட்டிற்கு முக்கியமாக இருப்பது 'உள் முன்மூளைப் புறணி' (medical prefrontal cortex) எனப்படும் பகுதியாகும். மனவெழுச்சி சம்பந்தப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களின் மூளையில் இப்பகுதி மிகவும் சிறிதாகக் காணப்படுவதை வான் ஹார்மிலன் தனது ஆய்வில் கண்டறிந்துள்ளார். இப்படிப்பட்டவர்கள் விடயங்களை நினைவுபடுத்தும் போது அது வித்தியாசமாகப் பிரதிபலிப்பதுடன் அழுத்தம் நிறைந்த சந்தர்ப்பங்களைச் சந்திக்கும் போது வேறுபட்ட விதத்தில் துலங்கச் செய்கிறது.

இதனைப் பரீட்சிப்பதற்கு அவர் சிலரின் மூளைச் செயற்பாடுகளை அளவிட்டார். உடன்பாடான (positive), எதிர்மறையான (negative) மற்றும் நடுநிலையான (neutral) முகபாவங்களைக் காட்டும் புகைப்படங்கள் அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டு அவர்கள் அவற்றைப் பார்க்கும் போது மூளைச் செயற்பாடுகள் அளவிடப்பட்டன. மனவெழுச்சி சம்பந்தப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு, ஆளானவர்கள் பரீட்சிக்கப்பட்ட போது அவர்களின் மூளையில் யஅலபனயடந என்ற பகுதி கூடுதலாகச் செயற்படுவது அவதானிக்கப்பட்டது. இப்பகுதியே மூளையில் பயமுறுத்தல் அல்லது அச்சுறுத்தல் (threat) எனும் உணர்ச்சிக்குரிய அடையாளங்களைக் காட்டும் பகுதியாகும். இந்த அவதானிப்பின் படி, மனவெழுச்சி சம்பந்தப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்கள் வெவ்வேறுபட்ட முகபாவங்களைப் பார்த்த போதும் அவை எல்லாவற்றையும் அச்சமூட்டுகின்றனவாக மாத்திரமே கருதினார்கள் என்ற முடிவுக்கு அவர் வந்தார்.

தனது ஆய்வின் முடிவுகள் சிறுவர் மனவெழுச்சித் துஷ்பிரயோகத்தின் எதிர்மறை விளைவுகள் பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடுகளுக்கு வழிகோல வேண்டுமென வான் ஹார்மிலன் எதிர்பார்க்கின்றார். இது ஒரு ஆரம்பம் மட்டுமே. இன்னும் பல விடயங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கூறும் அவர் பாதிப்புக்குள்ளானவர்களின் எதிர்மறை விளைவுகளைத் தணிக்கக்கூடிய மாற்று வழி முறைகள் பற்றிய ஆய்விலும் தற்போது ஈடுபட்டுள்ளார்.

ஆன் லோராவான் ஹார்மிலன்
(ஆதாரம் : http//news.leiden.edu/news-2013/verbal-abuse-does-hurt.html)

இந்த ஆய்வு நமது சமுதாயத்திற்கும், குறிப்பாகப் பெற்றாருக்கும் ஆசிரியர்களுக்கும் தருகின்ற செய்தி பெறுமதி மிக்கது. பிஞ்சு மனங்களைத் திட்டித் தீர்த்துத் தமது மனவெழுச்சிக்கு வடிகால்களைத் தேடிக்கொள்ளும் ஆசிரியர்களாக நம்மில் பலர் இருக்கின்றோம். ஆனால் அத்தகைய திட்டல்கள், பிள்ளைகளின் வருங்கால ஆளுமையைச் சிதைத்து உருக்குலைத்து விடுவதற்கு எவ்வாறு காரணமாகின்றன என்பதை உணர்ந்து கொண்டு செயற்படுவோம். பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் கூட இவ்விடயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சமநிலை ஆளுமை மிக்க வருங்காலச் சந்ததி உருவாவதற்கு நம்மால் இயன்றதைச் செய்யத் திடசங்கற்பம் பூணுவோம்.

எஸ். வரதசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்துவத்திற்குப் பிரியாவிடை



நா. நாகேந்திரகுமார்
முதுநிலை விரிவுரையாளர்
திருமலை வளாகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

முகாமைத்துவத்தினை அறிமுகப்படுத்தும் போது அதில் ஓர் அங்கமாக அமைவது அதிகாரத்துவம். அதற்கு மிகமுக்கியமான காரணமாக அமைவது பதவிகளுக்கு காணப்படும் அதிகாரங்களும் அத்துடன் முக்கியமான தகவல்கள் சில பதவிகள் நோக்கிய குவிவுமேயாகும். மிக அண்மைக்காலம் வரை (சில சமயங்களில் இன்றும் கூட) முகாமைத்துவக்கோட்பாடுகளில் அனுபவரீதியாகத் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது அதிகாரத்துவ முகாமைத்துவக் கோட்பாடாகும். இதனால் அதிகார ஒழுக்கு நிறுவனங்களில் மேலிருந்து கீழாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று இக் கோட்பாடு செயலிழந்து வருவது குறிப்பிடத்தக்கது.

அதிகாரத்துவதற்கு விடை கொடுக்கும் முதற் காரணியாகத் தகவல்களின் பரம்பலைக் குறிப்பிடலாம். இன்றைய சூழலில்தகவல்கள் நேரடியாக அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. ஆகவேஅனைவருக்கும் எவரதும் தலையீடும் இன்றித் தத்தமது செயற்பாடுகளில் சுயமாக ஈடுபட முடிகிறது. அத்துடன் முகாமைத்துவநடவடிக்கைகளிலும் சுயமாகப் பங்குபெறவும் முடிகிறது. எனவே தற்கால நிறுவனங்கள் சுய ஊக்கமுடைய சுயநம்பிக்கையுடைய சுயமாக தீர்மானம் எடுக்கக்கூடிய நபர்களை வேலைக்கமர்த்த விரும்புகின்றன முடிவாக நிறுவனங்கள் சுயநலமற்ற சுய ஊக்க அலகுகளாகத் தம்மை இனங்காட்ட எத்தனிக்கின்றன என்பது திண்ணம்.

செயற்பாடுகளில் பூகோளமயமாக்கல் அதிகாரத்துவத்திற்கு விடை கொடுக்கும் இன்னுமோர் காரணியாகும். தனிநபர்கள், நிறுவனங்கள், தேசங்கள் கூட ஓர் காலகட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டே காணப்பட்டன ஆனால் தற்காலத்தில் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட (e-mail internet social media மூலமாக) குறுகிய கிராமாக காட்சி தருகிறது எனவே முகாமைத்துவத்தில் பங்கு பெறல் மிக இலகுவாகக் காணப்படுகின்றது அதன் மூலம் அதிகாரத்துவம் பூகோளமயமாக்கலில் செயலிழக்கத்தான் செய்கிறது மிகமுக்கியமாக வியாபார உலகம் தமக்கிடையேயுள்ள(மட்டங்கள், செயற்பாடுகள், நுகர்வோர், வழங்குனர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவெளியைக் குறைக்க விரும்புவதும் இப்பிரியாவிடை நிகழ்வில் பங்குபெறலின் பங்களிப்பை அதிகரிக்கின்றது அதேவேளை அதிகாரத்துவம் மங்கிச் செல்கின்றது

தற்கால ஊழியம் தொழிநுட்பங்களால் பிரதியீடு செய்யப்படுகின்றது. தொழிநுட்ப மாற்றம் ஊழியத்தின் தன்மையினை மாற்றுவதுடன் நேரத்தினையும் மீதப்படுத்துகின்றது இம்மீதப்படுத்தப்படும் நேரம் பங்குபெறலில் செலவழிக்கப்படுகின்றது. தொழிநுட்ப முன்னேற்றம் உற்பத்திக்கான ஊழியத்தினை குறைப்பதுடன் உற்பத்திக்கான ஊழியத்தின் கணக்குக்கூறும் பொறுப்பினை அதிகரிக்கின்றது. இயந்திரமயமாக்கப்பட்டதும் கணனிமயமாக்கப்பட்டதுமான இக்கால உற்பத்திகளைப் பொறுத்தமட்டில் விதிவிலக்கான முகாமையாளர்களே தேவைப்படுகின்றனர். எனவே பழைய கடப்பாடுகளும் ஒழுங்கு முறைகளும் தற்கால நடைமுறைக்கு ஒவ்வாது எனவே பங்குபெறல் அதிகாரத்துவத்தினை விடையளிப்புச் செய்து முகாமைத்துவ அரங்கினுள் தனது விரிவாக்கத்தினைத் தடம் பதிப்பதில் முழுமூச்சாக ஈடுபடுகின்றது.

நுகர்வோரின் வளர்ச்சி அச்சுறுத்தலுக்கான காரணியாகும். சில காலங்களுக்கு முன்னர் நிறுவனங்கள் தாமே உற்பத்திகளை மேற்கொண்டன அவை மக்களுக்குபொருந்தும் என அறைகூவின. நுகர்வோரும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் தற்கால நுகர்வினைப் பொறுத்தமட்டில் அது அக்குறிப்பிட்ட நுகர்வோரின் விருப்பு வெறுப்புக்களைக் கருத்திற் கொள்ளப்பட்ட தனித்துவமான பண்டமாக சேவையாக அமைய வேண்டும். நுகர்வோரின் வளர்ச்சி தனது தனித்துவத் தேவையினை உடனடியாக நிறைவு செய்ய வேண்டும். என்ற கட்டளையை நிறுவனங்களுக்குப்பிறப்பிக்கும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. எனவே இந்நிலையில் நிறுவனங்கள் அதிகாரக்கோட்பாடுகளைக் கைவிட்டுப்பங்கு பெறல் கோட்பாட்டை ஆதரிக்கத்தொடங்கிவிட்டன.

மேற்கூறியவை தனித்தனியே அதிகாரத்திற்குப் பிரியாவிடை கொடுக்கின்றன என நான் இங்கு அறுதியிடவில்லை. ஒவ்வொன்றும் தனித்தனியாகவோஅல்லது சில கூட்டுச் சேர்ந்தோ அல்லது அனைத்தும் ஒட்டுமொத்தமாக இணைந்தோ இக்காரியத்தை நிறுவனங்களில் நிகழ்த்திக்கொண்டு வருகின்றன. எனவேதான் கழக முகாமைத்துவம், பொது உறவுகள் போன்ற விடயங்கள் தற்கால வியாபார உலகில் காலடி எடுத்து வைத்து வெற்றிநடை போடுகின்றன.

அதிகாரத்திற்குப் பிரியாவிடை கொடுப்பதென்றால் பங்கு பெறல் கிரமமாக நிகழவேண்டும் பங்குபெறல் எனும் பெயரில் சமூக அரட்டை அடித்தல் நிகழக்கூடாது அப்போது தான் பங்கு பெறலின் உண்மைப்பலனை அடையலாம். அத்துடன் அதிகாரத்துவம் செயலிழக்கப்பட்டமைக்கு ஓர் நவீனசான்றாகவும் அமையும்.

உலகமே ஓர் பெருத்த விஞ்ஞானமாகக் கொள்ளப்படலாம் அதனுள் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. எனவே முகாமைத்துவம் அச்சிக்கல்களுக்குமத்தியில் வளர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது இச்சிக்கல்களுடன் தொடர்பு பட்ட விஞ்ஞானங்கள் தொடர்ந்தேர்ச்சியான மாற்றங்களுக்குட்படும் இம்முறையினை எவ்வாறு கையாளலாம் என்பதற்கு விடை தருவனவாக அமைகின்றன இவ்வுரை மேலும் ஆழமாகச் சிக்கல்களுடன் தொடர்புபட்ட விஞ்ஞானங்களினுள் செல்லவில்லை. ஆனால் சிக்கல்களான பொருளாதாரம், சமூகம், சந்தைகள் நிறுவனங்கள் போன்றவற்றை முழுமையாகத் தீர்மானிக்கவோ கட்டுப்படுத்தவோ முடியாத நிலை காணப்படுகின்றது. என்பதனையே குறிப்பிடுகின்றது. எனவே பங்கு பெறல் என்பது மிக முக்கியமான கோட்பாடாக வளர்ச்சி கண்டு வருகிறது என்பது திண்ணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கல்விப் பண்புத்தர மேம்பாட்டை ஏற்படுத்த வினைத்திறனான உள்ளக மேற்பார்வை'

ஆ.செல்வநாயகம்,
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருகோணமலை.

பாடசாலைகளின் விளைதிறனை மேம்படுத்த அப்பாடசாலை ஆசிரியர்களின் வாண்மை விருத்தி மேம்பாட்டிலேயே தங்கியுள்ளது.

'தரமான ஆசிரியர் ஊடாக தரமான கல்வி

தரமான கல்வியூடாக தரமான சமூகம்'

என்பதே எமது கல்வி அமைச்சின் நோக்கக் கூற்றாக உள்ளது. இதற்கு அமைவாக ஒவ்வொரு பாடசாலையும் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியை ஏற்படுத்தி SBTD (School Based Teacher Development) பாடசாலைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த முடியும்.

பாடசாலைகளின் மேற்பார்வை வரலாறுகள்

மேற்பார்வைகள் பற்றிய கல்வியலாளர்களின் கருத்துக்கள்

மேற்பார்வை நுட்பங்கள், முறைமைகள்

மேற்பார்வை வகைகள், மேற்பார்வையாளர் - மேற்பார்வைக்கு உட்படுவோர் உளப்பாங்குகள், கடைப்பிடிக்கப்பட வேண்டிய பண்புகள் - செயல்நிலை ஆய்வு ஊடாக ஆசிரிய வாண்மை விருத்தியும் - கற்பித்தல் நுட்பங்களினூடாக மாணவர் அடைவில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய விடயங்கள் இந்த ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

'மேற்பார்வை என்பது ஆசிரியர்களிடம் பிழை காணும் செயற்பாடல்ல பாடசாலையின் இலக்குகளை வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் அடைவதற்கு வழிகாட்டும் ஒரு செயற்பாடாகும். மேற்பார்வையாளனும் மேற்பார்வைக்கு உள்படுவோரும் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஈடுபடல் வேண்டும். இந்நாட்டின் மேற்பார்வை என்பது பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கும் உந்துசக்தியாக விளங்க வேண்டும்.

வெளிவாரி மேற்பார்வை செய்யும் சகாக்களின் ஆதரவுடன் பாடசாலையினுள் செய்யப்படுகின்ற ஒழுங்கமைப்பும், கரிசனையுள்ள மேற்பார்வை மட்டுமே நாடு முழுவதும் பண்புநிலைச் சீர்திருத்தத்தை இயலச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, வெற்றிகரமான விளைவைப் பெறுவதற்கு மேற்பார்வை அவசியம் கல்வித் துறையில் மேற்பார்வை முறைகள் காலத்திற்கு காலம் மாற்றமடைந்து வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| 1850 - 1910 - | Inspectional Supervision<br>பரிசோதனை மேற்பார்வை |
| 1910 - 1920 - | Scientific Supervision<br>விஞ்ஞான ரீதியான மேற்பார்வை |
| 1920 - 1939 - | Bureacuratic Supercision<br>படிநிலை மேற்பார்வை |
| 1955 - 1965 - | Supervision as Curriculam Development<br>கலைத்திட்ட அபிவிருத்தி மேற்பார்வை |
| 1965 - 1970 - | Clinical Supervision<br>சிகிச்சை முறை மேற்பார்வை |
| 1970 - 1980 - | Supervision as Management<br>முகாமைத்துவ மேற்பார்வை |
| 1980 - | Management of Instructional Supervision<br>முகாமைத்துவ ஆலோசனை மேற்பார்வை |

பாடசாலைகளில் நடைபெறும் மேற்பார்வைகளை இரு வகையாகப் பிரிக்கலாம்

1. உள்ளக மேற்பார்வை
2. வெளிவாரி மேற்பார்வை

உள்ளக மேற்பார்வை என்பது பாடசாலை உள்ளகத்தில் முகாமைத்துவக் குழுவால் நியமிக்கப்பட்ட ஒழுங்கிற்கமைவாக இடம்பெறுவது. வெளிவாரி மேற்பார்வை என்பது கல்வித் திணைக்களத்தால் (உ-ம்) மத்திய கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம், கோட்டக் கல்விப் பணியகங்களால் செய்யப்படுவது. இது பாடசாலைகளுக்கு அவ்வளவு வினைத்திறனுடையதாக அமையாது. உள்ளக மேற்பார்வையே பாடசாலையின் விளைதிறனை அதிகரிக்கக்கூடிய சிறந்த மார்க்கமாகும்.

**மேற்பார்வை பற்றி கல்வியியலாளர்களின் கருத்துக்கள்**

1. (Supervision) மேலான நோக்கு – மேலான நோக்குடன் தொழிற்படுதல் (Burnham 1976)

இதன் பிரகாரம் மேற்பார்வை என்பது
1. உதவி செய்தல்
2. ஆலோசனை கூறல்
3. வழிகாட்டல்
4. ஊக்குவித்தல்

ஆகிய சிறப்பான தொழிற்பாடுகளைக் கொண்டதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 'ஓர் செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது அது சிறப்பாகவும் பொருத்தமான முறையிலும் நடைபெறுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் அவதானித்தல் (Observation) நடவடிக்கைகள் அல்லது 'ஆய்ந்தறிதல்' (To research) நடவடிக்கைகள் 'oxford Dicitionary'
3. மேற்பார்வை என்பது கற்பித்தல் நடவடிக்கையினை விருத்தி செய்தலும் மதிப்பிடலும் (Burton 1932)
4. தனியாள் ஒருவரையோ அல்லது குழுவினரையோ அல்லது செயல்திட்டம் ஒன்றினை விருத்தி செய்வதை நோக்கமாக கொண்ட செயற்பாடு (Cauton 1933)
5. 'மேற்பார்வையானது ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை விருத்தி செய்வதற்கும் தலைமைத்துவப் பண்பினை வளர்ப்பதற்கு பாடசாலை ஆளணியினரால் மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளையும் உள்ளடக்கிய செயற்பாடு' (Carter 193)
6. கல்வி மேற்பார்வை என்பது 'கற்றல் கற்பித்தலுடன் தொடர்புடைய எல்லாக் காரணிகளையும் விருத்தி செய்வதற்கான நிபுணத்துவ உதவிச் சேவையாகும்' கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் வகுப்பறை இதயம் போன்றது' (Koacher – 1981)
7. 'மேற்பார்வையானது பாடசாலையின் இயக்கத்திற்கு மிகவும் பிரதானமானதாகும். மேற்பார்வையானது பல்நுட்பங்களை கொண்ட ஒரு செயல்முறையாகும்' – (Benhariss 1975)
8. மேற்பார்வை என்பது 'கற்றல் கற்பித்தல் தொழிற்பாட்டினை திறம்பட ஆற்றுவதற்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஓர் சேவை அல்லது நிபுணத்துவ உதவி' ஆகும் (Oliver – 1976)
9. 'மேற்பார்வை என்பது கீழ்ப் பணியாளர்களை வழிநடத்துவது மட்டுமல்ல. அவர்களிடமிருந்து பயனுறுதித்தன்மை வாய்ந்த சேவையைப் பெற்றுக் கொள்ளல்' ஆகும் (Brian Strean)
10. 'மேற்பார்வையானது தன்கூடப் பணியாற்றுபவர்களுடன் இணைந்து அவர்களுக்கூடாக நிறுவனத்தின் குறிக்கோளை அடைவதை நோக்கமாக கொண்ட நடவடிக்கையாகும் (Dubrin J.A.1989)
11. மேற்பார்வையானது 'ஜனநாயக பண்புகள் நிறைந்ததாகவும் வகுப்பறை கற்றல் கற்பித்தலை முன்னேற்றுவதை நோக்கமாகவும், மாணவர்கள், ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள், பெற்றோர் மற்றும் பாடசாலைச் சமூக உறுப்பினர்களின் விருத்திக்கும் வழிகோலுவதாக இருக்க வேண்டும்' (Newkily Evans – 1978)
12. 'தரமான மேற்பார்வையானது கற்றல் கற்பித்தலின் தரத்தினை உயர்த்தும், பாடசாலையின் அடைவு மட்டங்களை உயர்த்தும் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் ஏனைய விருத்திக்கும் உதவும்' (Marks strubs – 1978)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. 'மேற்பார்வையானது கற்றல் கற்பித்தலை முன்னேற்றுவதற்கான பல செயற்பாடுகளை உள்ளடக்கிய ஓர் கூட்டு முயற்சியாகும். நெறிப்படுத்தல், வழிகாட்டல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல் என்பன இதன் தொழிற்பாடுகளாகும்' (Stolre – 1985)

14. 'மேற்பார்வை என்பது ஆசிரியர் நடத்தையோடு தொடர்பு கொண்டது கருத்துப்பரிமாற்றம், மற்றும் கற்றல் சந்தர்ப்பங்களை வழங்கி ஆசிரியர்களை முன்னேற்றும் நோக்கோடு மேற்கொள்ளப்படும் மேலான நடவடிக்கை' என்கிறார் (Lovel 1975)

15. 'கற்பித்தலில் பண்பு நிலையான முன்னேற்றம் அடைய கண்காணிப்பும், மேற்பார்வையும் ஆசிரியர்கள் மீது மேற்கொள்ளல்' மிகவும் அவசியமாகும். (rgh nauhrh 1992)

**மேற்பார்வை நுட்பங்கள்**

மேற்பார்வையில் ஈடுபடுபவர்கள் - மேற்பார்வை நுட்பங்களில் தேர்ச்சியும் ஆற்றலும் பெற்றவராக இருக்க வேண்டும். மேற்பார்வையாளரது கல்வித் தகைமையே அவரை மேற்பார்வையாளராக்குகின்றது. மேற்பார்வை செய்பவர் அன்பிற்கும் மதிப்பிற்குமுரியவராக இருக்க வேண்டும். பிழை பிடிக்கும் நோக்கிலன்றி அவர் திருந்த உதவும் நோக்கிலேயே ஆசிரியரை அணுக வேண்டும். இதற்கு மேற்பார்வையாளரிடம் பாடப்புலமை, தொழில்நுட்பத் திறன், நிர்வாக ஆற்றல், கல்வித்தகைமை, மனிதாபிமான உளவியல்பு என்பன ஒன்றாக மிளிர்ந்து இருக்க வேண்டும். அத்துடன் மேற்பார்வை நுட்பங்கள் பற்றிய தெளிவு பெற்றவராகவும் இருக்கும் போதே ஆசிரியரை ஊக்குவித்து சிறந்த விளைவைப் பெற முடியும்.

சிறந்த முகாமையாளரே சிறந்த மேற்பார்வையாளராக முடியும். ஒரு சிறந்த மேற்பார்வையாளரிடத்தில் இருக்க வேண்டியது

1. கற்றுக் கொண்டிருக்க வேண்டும்
2. பயிற்சி பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்
3. அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்
4. மூத்தோரின் ஆலோசனைகளை செவிமடுக்க வேண்டும்
5. கடந்த கால தவறுகளை மீளாய்வு செய்ய வேண்டும்
6. அர்ப்பணிப்பு ஈடுபாடு கொண்டவராக இருக்க வேண்டும்
7. சிறந்த அறிவாற்றலுடன் விளங்க வேண்டும்
8. புதிய மாற்றங்களுக்கேற்ப நவீன உத்திகளை பயன்படுத்த வேண்டும்
9. எல்லோரையும் ஒருங்கிணைத்து செல்லக்கூடிய ஆற்றலை வளர்க்க வேண்டும்.

இவ்வாறான ஆற்றலுள்ளவராலேயே கற்பித்தல் மேற்பார்வை செய்ய முடியும்

**உள்ளக மேற்பார்வை முறைகள்**

1. **சமயோசித மேற்பார்வை**

அதிபர் நேரம் கிடைக்கும் போது அவதானித்து நடைபெற்ற தவறுகளை திருத்துவதற்காக ஆசிரியர்களுடன் கலந்துரையாடி திருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முன்னறிவித்தலில்லாத மேற்பார்வை

வகுப்புக்குள் திடீர் பிரவேசம் செய்து கற்பித்தல் மேற்பார்வை செய்தல். மேற்பார்வையில் கண்டுபிடிக்கப்பட்ட திருத்தப்பட வேண்டியவை பின்னர் கலந்துரையாடி திருத்தப்படும்

3. முன்னறிவித்த மேற்பார்வை

திட்டமிட்ட கால அட்டவணை ஒழுங்கின் படி நடைபெறுவது. ஆசிரியர் ஆயத்தமாக இருப்பர் அடிக்கடி இம்முறை இடம்பெறுவதால் ஆசிரியர் தொடர்ந்து வினைத்திறனான கற்பித்தலுக்கு வழிவகுக்கும்

4. வரவழைப்பு மேற்பார்வை

ஆசிரியர்கள் மேற்பார்வையாளரை தமது கற்பித்தலை அவதானித்து ஆலோசனை கூறும்படி அழைத்து நடைபெறும் மேற்பார்வையே சிறந்தது. ஆசிரியர்கள் தங்கள் ஆற்றலை விருத்தி செய்து கொள்ள தாங்களே முன்வர வேண்டும். மேற்பார்வையாளர் தகைமையுடைவராகவும் நம்பிக்கையுடையவராகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

இம்முறை வெற்றிகரமாக நடைபெற இரு விடயங்கள் பிரதானமானவை

1. ஆசிரியர்களை ஊக்குவித்தல்
2. மேற்பார்வையாளர்களில் நம்பிக்கையை வளர்த்தல்

இவ்விரண்டும் ஏற்படுத்தப்பட்டால் ஆசிரியர் தொழில்சார் விருத்தி, வேலை ஈடுபாடு கற்றல் வளர்ச்சி கல்வி நிலை உயர்ச்சி, கற்பித்தல் உத்தி என்பவை சுயமாகவே ஏற்படும்

5. மாதிரி வகுப்பும் நிபுணத்துவ ஆலோசனையும்

மேற்பார்வையில் ஈடுபடுபவர்கள் கற்பித்தலில் பாட ஆசிரியர்களுக்கு உதவுகின்ற முறை இதுவாகும். கடினமான பாட அலகுகளை இலகுவாக கற்பிக்கக்கூடிய முறைகளை தான் அல்லது பாடத்துறை ஆசிரிய ஆலோசகர்களினூடாக மாதிரியாக கற்பித்து ஆசிரியர்கள் பின்பற்றவும் பாடப்புலம் சார் சந்தேகங்களை தீர்க்கவும் இம்முறை உதவும்.

6. சிகிச்சை மேற்பார்வை

கற்றல் கற்பித்தல் செயன்முறையில் தரவிருத்திக்காக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய பயன்தரும் ஒரு வழிமுறை சிகிச்சை மேற்பார்வை முறையாகும். கர்ப்பமுற்ற ஒரு தாய் மருத்துவமனையுடன் ஏற்படுத்திக் கொள்கின்ற தொடர்பை ஒத்ததாக இது உள்ளது.

சிகிச்சை முறை மேற்பார்வைக்கு இரு எடுகோள்கள் உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 'கற்பித்தல்' என்று குறிப்பிடும் சிக்கார்ந்த நடத்தைக் கோலம் மாற்றத்திற்கு உட்படுத்தலாம்
2. மேற்பார்வையாளர் ஒரு திட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் அந்த மாற்றத்திற்கான தாக்கத்தை ஏற்படுத்தலாம்

இது 5 படிமுறைகளைக் கொண்டது

1. **கற்பித்தலை பார்வையிடுவதற்கு முந்திய சந்திப்பு**

கற்பித்தலை பார்வையிடுவதற்கு முன்னர் பாட விடயம் தொடர்பாக ஆசிரியருடன் சந்திப்பை ஏற்படுத்தி பாடத்திட்டமிடல், கற்பித்தல் சாதனங்கள், கற்பித்தல் முறைகள், மதிப்பீடுகள் தொடர்பாக கலந்துரையாடுதல்

2. பாடத்தைப் பார்வையிடல்

பார்வையிடுதலுக்கு முந்திய சந்திப்பில் கலந்துரையாடிய விடயங்களை கற்பித்தலின் போது ஆசிரியர் மேற்கொள்கின்றாரா என்பதை அவதானித்துக் கொள்ளல்

3. பார்வையிடுவதற்கு பிந்திய சந்திப்பு

கற்பித்தலின் போது அவதானிக்கப்பட்ட நல்ல அம்சங்களையும் குறைபாடுகளையும் ஆசிரியருடன் மேற்பார்வையாளர் கலந்தாலோசித்தலாக அமைகின்றது

4. பார்வையிடுவதற்குப் பிந்திய சந்திப்பு

திட்டமிட்டபடி ஆசிரியருடன் சந்திப்பொன்றை ஏற்படுத்தி அவதானித்த விடயங்களின் நலிவுகளையும் சிறப்பம்சங்களையும் கலந்துரையாடி நலிவுக்கும் தீர்வொன்றை வகுத்தல் இதுவாகும். இது மேற்பார்வையாளரும் ஆசிரியரும் இணைந்து மீள்பரிசீலனை செய்வதாக இருக்க வேண்டுமே தவிர மேற்பார்வையாளரின் உபதேசமாக இருக்கக்கூடாது.

5. மீளாய்வு

பிந்திய சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வகுப்பறையில் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பதை மீள்பார்வை செய்தல்.

இம்முறை ஒவ்வொரு படியும் அடுத்தபடிக்கு இட்டுச் செல்வதால் எல்லோராலும் விரும்பப்படும் முறையாகும். நோயாளி பிரச்சினையைக் கூறி நல்ல மருந்தைப் பெற்று குணமாவதைப் போல் இது பயனுள்ளதாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்வகை மேற்பார்வைகளின் பின்**

மேற்பார்வை முற்றுப் பெற்ற பின்னர் குறிப்பிட்ட ஆசிரியரோடு கலந்துரையாடல் ஜனநாயக ரீதியாக அமைதல் வேண்டும்.

1. இது சந்தோசமான சூழ்நிலையில் இடம்பெற வேண்டும்.
2. ஆசிரியரது கருத்துக்களை வெளியிட வாய்ப்பு வழங்க வேண்டும்.
3. பாடத்தின் குறைகளை சுட்டிக்காட்ட முன்னர் தாம் கண்டுகொண்ட நல்ல அம்சங்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும்.
4. அதனையடுத்து விருத்தி செய்து கொள்ள வேண்டிய அம்சங்களைப் பற்றி ஆலோசனைகளை அளிக்க வேண்டும்.
5. கலந்துரையாடலின் போது ஆசிரியர் ஏற்றுக்கொள்பவராகவும் எதிர்பார்ப்பவராகவும் செயற்பட வேண்டும்.
6. இருசாரின் இணக்கத்தோடு மேற்பார்வை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

ஒரு மேற்பார்வையாளரில் காணப்பட வேண்டிய பண்புகள் சில கல்வியமைச்சின் 17/91 இலக்க சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படுகின்றன. அத்தோடு 1993ல் கல்வியமைச்சின் 3/பீபீ/ஜீ/3.1 இல சுற்றுநிருபம் மேற்பார்வை செய்வோர், செய்யும் நேரம் என்பன பற்றி கூறுகின்றது.

மேற்பார்வை நடவடிக்கை நெடுங்காலமாக விரிவடைந்து வளர்ந்து வந்ததொன்றாகும். இன்று நவீன முகாமைத்துவ தொழில்நுட்பத்தில் மேற்பார்வையின் பங்கே முக்கிய இடம் வகிக்கின்றது. ஆசிரியர்கள் எவ்வளவு வாண்மை விருத்திக்கான கலைத்திட்டத்தை நிறைவு செய்து பட்டங்கள் பெற்றிருப்பினும் நடைமுறையில் தொடர் மதிப்பீட்டின் மூலம் பிழைகள் தவிர்க்கப்படும் போது ஆசிரியரின் தொழில் வாண்மை தொழில் திறன் விரிவடைந்து எதிர்பார்க்கப்படும் கல்வி இலக்கை அடையும்.

ஒவ்வொரு பாடசாலையும் அதிபர் முகாமைத்துவ அணியினர் மேற்படி நடவடிக்கைகளை செய்யும் போது பாடசாலையின் பண்புத் தரவிருத்தி பாடசாலைகளில் உள்ளக மேற்பார்வையை – ஆசிரியர் வாண்மை விருத்தியை ஏற்படுத்தும் வகையில் செயல்நிலை ஆய்வு ஊடாக கற்பித்தலில் மேம்பாடடையச் செய்தல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் இங்கு குறிப்பாக உதாரணமாக ஒரு பாடசாலையில் உள்ள ஆசிரியர்களில் மேற்கொள்ளப்பட்ட செயல்நிலை ஆய்வினூடாக கற்பித்தல் முறையின் மேம்பாட்டை அவதானிக்கலாம்.

1. நிலையை இனம் காணல்
   1. ஆசிரியர்களின் கற்பித்தல் தரம்
   2. தொழில் வாண்மை
   3. ஆசிரியர் அறிந்திருக்க வேண்டிய புதிய கற்பித்தல் உத்திகள்
   4. உளவியல் அணுகுமுறைகள்
   5. மாணவரை அறிதல்
   6. ஆசிரியர் இடைத் தொடர்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. வகுப்பறை முகாமைத்துவம்
8. தர உள்ளீட்டுப் பயன்பாடு கற்பித்தல் உபகரணப் பயன்பாடு
9. பெற்றார் ஆசிரியர் தொடர்பு
10. சீர்மியமும் - ஆற்றுப்படுத்தலும்

மேற்படி விடயங்களில் ஆசிரியர்களுக்கு இருக்கும் அறிவு பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படுதல்

பாட ஆயத்தம் சம்பந்தமாக

1. பாடத்திட்டம்
2. வேலைத்திட்டம்
3. பாடக்குறிப்பு தயாரித்தல்
4. கற்பித்தல் துணைச்சாதனங்கள் - தயாரித்தல்

பாட வேளையின் போது

1. நேர முகாமைத்துவம்
2. பாடத்தை முன்னெடுத்தல்
3. மதிப்பீடு
4. மீள வலியுறுத்தல்
5. கணிப்பீடு
6. ஆசிரியர் நற்பண்புகள்

போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டது. ஆசிரியர் வாண்மை விருத்திக்கான அறி தலைப்புக்களையுடைய நூல்கள், சஞ்சிகைகள், ஆசிரியர் கைநூல்கள் முதலானவைகளை வாசிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலையில் உள்ளக மேற்பார்வை திட்டம் தயாரிக்கப்பட்டது.

திட்டத்தின் ஊடாக 1வது சுற்று மேற்பார்வை பாடசாலையின் இடைநிலைப்பிரிவு ஆசிரியர்களிடத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இதில் பிரதானமாக உள்ளக மேற்பார்வைப் படிவத்தின் உள்ளடக்கம்

1. பாட ஆயத்தம்
2. பாடத்தை முன்வைத்தல்
3. ஆசிரியர் பண்புகள்
4. மதிப்பீடு

முதலான விடயங்களுக்காக புள்ளிகள் வழங்கப்பட்டு மேற்பார்வை நுட்பங்கள் ஆசிரியர்கள் இணைக்கப்பாட்டுடன் மேலும் அறிவுறுத்தல்கள் - மாதிரிவகுப்புக்கள் எடுக்கப்பட்டு 2வது சுற்று மேற்பார்வை இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆசிரியர் இலக்கம் / பெயர் | 1வது சுற்று உள்ளக மேற்பார்வை – புள்ளிகள் | 2வது சுற்று உள்ளக மேற்பார்வை – புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 87 | 89 |
| 2 | 91 | 94 |
| 3 | 79 | 83 |
| 4 | 78 | 82 |
| 5 | 79 | 91 |
| 6 | 53 | 71 |
| 7 | 62 | 81 |
| 8 | 70 | 87 |
| 9 | 77 | 86 |
| 10 | 78 | 94 |
| 11 | 56 | 80 |
| 12 | 67 | 75 |
| 13 | 75 | 90 |
| 14 | 67 | 89 |
| 15 | 61 | 73 |
| 16 | 60 | 84 |
| 17 | 63 | 76 |
| 18 | 57 | 73 |
| 19 | 63 | 77 |
| 20 | 62 | 74 |
| 21 | 71 | 81 |
| 22 | 61 | 75 |
| 23 | 59 | 73 |
| 24 | 74 | 90 |
| 25 | 68 | 87 |
| 26 | 48 | 71 |
| 27 | 76 | 81 |
| 28 | 58 | 81 |
| 29 | 56 | 72 |
| 30 | 88 | 92 |
| 31 | 79 | 83 |
| 32 | 60 | 74 |
| 33 | 68 | 80 |
| 34 | 76 | 79 |
| மொத்தம் | 2327 | 2768 |
| சராசரி | 68.44 | 81.41 |

(1வது மேற்பார்வையின் பின் வழங்கப்பட்ட பயிற்சியின் பின் 2வது சுற்று மேற்பார்வையில் புள்ளிகள் அதிகரித்துள்ளன)


இவ்வாறு ஆசிரியர்களின் கற்பித்தலில் உயர் நிலை புள்ளிகள் பெறும் போது வகுப்பு மாணவர்கள் மதிப்பீடு கணிப்பீடு ஒவ்வொரு பாட வேளைகளிலும் இடம்பெறும் போது கற்றல் நிகழ்வு மேம்பாடடைய கல்வித்தரம் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பாடசாலைகளின் வினைத்திறனாக உள்ளக மேற்பார்வையே கல்வித்தர மேம்பாட்டை ஏற்படுத்தும் என்பதை உறுதிப்படுத்தலாம்

வரைபில் பார்க்கும் போது




இங்கு 1வது சுற்று மேற்பார்வையின் தொகுப்பும் 2வது சுற்று மேற்பார்வையின் தொகுப்பும் வரைபில் காட்டப்பட்டுள்ளது.

செயற்திட்ட செயற்பாடுகளினால் ஏற்பட்ட மாற்றமாகவே இவற்றைக் கருத முடிகின்றது. 1வது சுற்றில் குறைவான புள்ளிகளைப் பெற்றோருக்கு மேற்பார்வையாளர்களின் அறிவுறுத்தலும் செயற்திட்டங்களின் பயன்களும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.


2வது சுற்று மேற்பார்வையின் படி கற்பித்தலில் தரமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளதை வரைபுகள் ஒப்பீடு மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம், கருத்தரங்குகள், மாதிரி கற்பித்தல் போன்ற நடவடிக்கைகளினால் மதிப்பீடு ஆசிரியர் பண்புகள் ஆகிய விடயங்களில் ஏழு ஆசிரியர்கள் குறிப்பிட்ட இலக்கை அடைந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

எனினும் மூன்று ஆசிரியர்கள் சுகயீனம், குடும்பச் சூழல், கருத்தரங்குகளில் பங்கு கொள்ளாமை போன்ற காரணங்களால் மேலும் நலிவுற்ற நிலையில் காணப்படுகின்றனர். இவர்களை தொடர்ந்து மேற்பார்வைக்கு அடிக்கடி உட்படுத்தப்படுவதன் மூலம் இலக்கை அடையச் செய்தல் சாத்தியமாகும்.

எனவே பாடசாலைகளின் உள்ளக மேற்பார்வை ஆசிரியர்களின் வாண்மையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்பது உறுதியாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வா நிலவே

வா..... நிலவே எங்கள் பூமிக்கு

வந்து எம் மனக்கவலை தீர் நிலாவே

உன் வரவை எதிர்பார்த்து

கண்ணிமை மூடாமல் காத்து நிற்கின்றேன்

நாங்கள் பட்ட இன்பம் உன்னால்

நாளையும் நினைவுக்கு வரும்

கல்லறை சென்ற என் ஆசைப்பாட்டி –அன்று

உனைக்காட்டியே நிலாச்சோறு ஊட்டினாள்

அவள் நினைவு தினமும்

வருவதை நீஅறிந்து கொள்

வீட்டு முன் வாசலில்

வெள்ளைப் பெருமணலில் கால் புதைத்து

வட்டமாய் இருந்து உன் ஒளியில்

சங்கு விளையாட்டு விளையாடினோம்

என்பதை நீ அறிந்து கொள்

கருமேகம் உன்னை சிறு நேரம் விழுங்கும் போது

மேகத்தில் பெருங்கோபம் கொண்டு

வானை நோக்கி கல்லால் எறிந்தோம்

இதையும் நீஅறிந்து கொள்

அ.....எழுதி அதன் மேல் அழகாய்

சிறு கல் இட்டு

அகரவரி பழகியதும் உன்னால்

என்பதை புரிந்து கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமாய் அழகாய் இருந்த நீ

ஒரு நாள் கத்தியால் வெட்டப்பட்டு

சிறு பாதியாய் இருந்தாய்

அன்று அம்மாவோடு சண்டை செய்து

அழுததையும் நீ நினைத்துக் கொள்

வா....நிலாவே எங்கள் பூமிக்கு

வந்து நீ பார் நிலாவே


பார்வையில்லா சிறுவர்கள்

உனைத்தொட்டு ரசிக்க விரும்புகிறார்கள்

மனம் வருந்தி உன்னிடம்இதை சொல்லுகிறேன்

வா நிலாவே என் வட்ட நிலாவே

வந்து எம் மனக்கவலை தீர் நிலாவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகளுக்கு உயிரளிப்போமா?

அறிவால், கலையால், மொழியால் மனிதன் விலங்கினின்று வேறுபட்டவன். இம்மூன்றையும் உள்ளடக்கியதாக இறைவன் மனிதனுக்கு வழங்கிய உயர்ந்த கொடையே உரையாடல் ஆகும். வல்லவன் புல்லையும் வில்லாகப் பயன்படுத்துவான். அது போல் வாய்மையுள்ள உரையாடலைப் பயன்படுத்தி, வாழ்க்கையில் உயர வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

மானிடர் வெளிப்படுத்துகின்ற எண்ணங்கள், கருத்துக்கள் உண்மையுடையனவாக, அவர்களது உயர்வுக்கு ஊன்றுகோலாக இருக்கும் பட்சத்தில் அவை நன்மை பயப்பனவாகிவிடும்.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொல்"

என்ற வள்ளுவர் வாக்கு, 'பிறருக்கு எவ்விதத்திலும் ஒரு தீங்கேனும் விளைவிக்காத சொற்களைச் சொல்லுதலே வாய்மை' என்று விளக்கம் தருகின்றது. நாம் உள்ளத்தினின்று உதடுகளால் உதிர்க்கும் வார்த்தைகள் மூலம் பிறரை நோகடிக்கவோ, தொல்லை தொந்தரவு விளைவிக்கவோ கூடாது.

ஊரவரில் உண்மை உருவெடுக்காமையாலேயே எம்மத்தியில் அமைதியில்லை, நம் நாட்டில், அயல் நாடுகளில் அமைதியில்லை: ஏன் அவனியிலே அமைதிக்காக ஏங்கித் தவிக்கின்ற உள்ளங்கள் தான் எத்தனை! எத்தனை! அவனியை விட்டு விட்டு சமுதாயத்தின் அடித்தளமாக விளங்கும் குடும்பங்களின் இன்றைய நிலையைப் பார்ப்போம்.
அன்பால் உருவாகி, உயிரூட்டம் பெற வேண்டிய குடும்பங்களிலே நிலவ வேண்டிய அமைதி எங்கே? வாழ்நாள் முழுவதும் ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழ்வதாக வாக்குறுதி வழங்கித் தொடங்கிய புனிதமான வாழ்வில் கணவன் - மனைவி இடையே நம்பிக்கையின்மை. ஒருவரை ஒருவர் ஏற்காது கீரியும் பாம்பும் போன்ற நிலை. இதனால் இனிமையான இல்லற வாழ்வில் சந்தேகப் புயல் சுழன்றடிக்கின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற மெய்மை பொய்ப்பிக்கப்பட்டு, நம் கலாசாரம் களங்கப்படுத்தப்பட்டு, மணமுறிவு (விவாகரத்து) வரை சென்று குடும்பம் சீரழிந்து சிதைவடைவதால் பிள்ளைகளது எதிர்கால வாழ்வையும் பாதிக்கின்றது.

பிள்ளைகள் பெற்றவர்களையும், பெற்றவர் பிள்ளைகளையும் ஏமாற்றி வாழும் நிலை இன்று பரவலாகக் காணப்படுகின்றது. துரிதமாக மாறிவரும் உலகில் கல்வியின் காரணமாகவோ, கடமையின் நிமித்தமோ வெளியில் செல்லும் குடும்ப அங்கத்தவர்கள், இச்சந்தர்ப்பத்தில் தகாத உறவுகளை உருவாக்கி, விசுவாசமின்மையாக நடந்து, வாய்மையை வரண்டு விடச் செய்கின்றனர்.

பிள்ளைகள் படிப்பு, படிப்பு என்று பாடசாலை செல்கின்றார்களா? பாடசாலை என்று சொல்லிவிட்டு, படத் தியேட்டர்களுக்கும், பாழாய்ப் போன இடங்களுக்கும் சென்று, பாதகச் செயல்களில் ஈடுபட்டுப் பொழுதைக் கழிக்கின்றார்களா? என்பது இன்று கேள்விக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணையாகவுள்ளது. விடயம் முற்றிய பின்பே பெற்றோர் விழிக்கின்றனர். கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரமா?

தொடர்பு சாதனங்களால் கவரப்பட்டு, தன்னைப் பற்றியும், தன் குடும்ப கௌரவத்தைப் பற்றியும் சிந்திக்காது, நாணயமில்லாது, நம்பிக்கையில்லாது, சத்தியத்தைச் சாகடித்து சரிந்து போகின்றவர்களாகவே இன்றைய இளம் தலைமுறையினர் உருவாகிக் கொண்டிருக்கின்றனர் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.
இவ்வாறான செயற்பாடுகளுக்கு உண்மைத்தன்மை ஊனமாகியமையே காரணமாகி நிற்கின்றது. பண்பு ரீதியாக ஒருவரை ஒருவர் கொலை செய்கின்றோம். இவ்வாறான நிகழ்வுகள் குடும்ப உறுப்பினர்களின் உடல், உள, ஆன்மீக ரீதியில் பலத்த தாக்கங்களை ஏற்படுத்தி, அவர்களது ஆரோக்கிய நற்சுக வாழ்வுக்கு கேடு விளைவிக்கின்றது என்பதை உணரத் தவறுகின்றோம்.

குடும்பத்திலே அன்பு, ஆசிமொழிக்கும்: பண்பு, பணிவு மொழிக்கும் : இன்ப இனிய மொழிக்கும் இருப்பிடம் அளிக்க, உண்மையின் உத்தமர்களாக விளங்க வேண்டும். எதையும் மறைக்காது, வெளிப்படையாக, பகிரங்கமாகப் பேசி, பரிமாறிப் பலனடைய உண்மைகளுக்கு உயிரளிப்போமா?

குடும்பங்களிலே மட்டுமல்ல, உண்மையை மறைத்து வாழ முற்படுவதால் நீதியை நிர்மூலமாக்க வேண்டிய நிலை எம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து நடைபோடுகின்றமை பற்றியும் நோக்குவோம்.

சாகக் கிடக்கும் உயிருக்கு உயிரளிக்க 'பணம் கொடுத்தால் வருவேன்" என்ற மனநிலையில் மடிந்து கிடக்கும் மருத்துவர்: ஜெயிக்கக் கூடிய வழக்கை, மெய்யை மேலாகக் கருதாது பணத்திற்காகவும், பணம் கொடுக்காமையாலும் தோற்கடிக்கும் வக்கீல்கள்: நிரபராதிகளைத் தண்டிப்பதும், குற்றவாளிகளை விடுதலை செய்வதும் சாதாரண நிகழ்வாகி விட்ட காலமிது: பின்னேர வகுப்புக்குச் சென்ற பிள்ளை கட்டணம் கட்டத் தவறியதால் புத்தகப்பையுடன் விரட்டிவிடும் வாத்தியார்:இலஞ்சம் பெற்று வஞ்சம் செய்யும் அரச அதிகாரிகள்: கற்காதவர்களுக்கு கல்விச் சான்றிதழை காசுக்காக வழங்கி, எதிர்காலச் சமூகத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் கூட்டத்தினர்: கலப்படத்திலேயே காலத்தைக் கழித்து மற்றையவரை ஏமாற்றிப் பிழைக்கும் கயவர்கள். இப்படியாக இன்னும் எத்தனையோ ரகங்கள்.


இவ்வாறனவர்கள் உண்மைக்கு உருக்கொடுக்காது, எப்படியும் நாம் முன்னேறினால் சரி. அடுத்தவர் எப்பாடு பட்டால் என்ன? எக்கேடு கெட்டால் என்ன? என்று ஏமாற்றிப் பிழைப்பவர்களாக இருப்பதைக் காண்கின்றோம்.

ஒருவரிடையே நல்லுறவும், நட்பும் நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களிடையே உண்மைகள் வாழப்பட வேண்டும். மனித உறவுகள் மேம்பட பணக்கொடுக்கல் வாங்கல்கள் மட்டுமல்ல: அன்பு, அறிவு, நற்பண்புகளில் பரிமாற்றங்கள் பாரபட்சமின்றி பகிரப்பட வேண்டும். மனித வெற்றிகளுக்கும், உயர்வுகளுக்கும் உரமாகி நிற்கும் உண்மையைக் கட்டியெழுப்புகின்றவர்களாகி, எதிர்கால சமுதாயம் ஏற்றமுடன் எழுச்சி பெற உண்மைகளுக்கு உயிரளிப்போமாக.

ஜெயவதனி மரியதாஸ்
தி/புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தற்கால மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

திருமதி.சரோசா இராமநாதன்
கலைமாணி பட்டதாரி
தி/கலைமகள் மகா வித்தியாலயம்

இன்று உலகம் உள்ளங்கைக்குள் சுருங்கிக் கிடக்கிறது. நினைத்தவுடன் எதனையும் பார்க்கக் கூடியதாக, செய்யக்கூடியதாகத் தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டுள்ளது. இது விஞ்ஞானத்தின் பெருவளர்ச்சி எனலாம். இதனால் தற்காலத்தில் வீட்டுக்கு வீடு கணினியும் இன்ரநெற் வசதி, தொலைபேசி, ஸ்கைப், முகப்புத்தகம், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி எனப் பல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மாணவர்கள் பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் இவற்றின் பயன்பாட்டிலேயே காலத்தைச் செலவிடுகின்றனர். மாணவர் தாமாகவே சிந்தித்து நூல்களை வாசித்துக் கிரகித்துக் குறிப்பெடுத்து தமது மூளை அறிவை விருத்தி செய்யும் தன்மை குறைவாகவே காணப்படுகிறது.

பாடசாலைக் கல்வி முறையில் பல்வேறு தொடர் மதிப்பீடுகள், கணிப்பீடுகள், செயற்றிட்டங்கள், பரீட்சைகள் காணப்படுகின்றன. இவற்றிற்கான ஆயத்தங்கள் தயார்ப்படுத்தலுக்கு எவ்வாறு ‘இன்ரநெற்’ இனை நாடலாம்? அல்லது உள்ளவர்களிடம் உள்ள தகவல்களை எவ்வாறு போட்டோப் பிரதி எடுத்து வைத்துக் கொள்ளலாம்? என்றே மாணவர்கள் யோசிக்கின்றனர். இதனால் ஆற அமர வாசித்துக் கிரகித்து மனதில் பதித்து நினைவில் நிறுத்திக் கொள்ளுகின்ற தன்மை காணப்படுவது குறைவு. இவ்வாறான நிலைமையில் தான் அரசாங்கப் பரீட்சைகளை எதிர்நோக்க வேண்டி வருகின்றது. பெறுபேறுகள் எதிர்பார்த்தளவு வெற்றியளிப்பதில்லை, தவிரவும் தற்காலத்தில் பரீட்சைகள் யாவும் போட்டிப் பரீட்சைகளாகக் காணப்படுகின்றன. இப்பரீட்சைகளில் சித்தியடைவதற்காக தனியார் கல்வி நிறுவனங்களை நாடி ஓடுகின்றனர். காலை முதல் மாலை வரை ரியூட்டரிகளையும், பிரத்தியேக வகுப்புக்களையும் நாடிச் செல்லும் முறை அதிகரித்துக் காணப்படுகிறது. அவ்வாறு செல்லாதவர்கள் கூடுதலான பெறுபேற்றைப் பெற முடியாதென்று மாணவர்கள் நினைக்கின்றனர். இதனைப் பெற்றோரும் நம்புகின்றனர். இதனால் கல்விக்கான செலவினம் அதிகரிக்கின்றது.

நமது நாட்டில் இலவசக் கல்வி முறை பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை காணப்படுகிறது. பாடசாலையில் கற்பிக்கும் விடயங்களை மீண்டும் வாசித்துக் கிரகிக்க மாணவர்களுக்கு நேரங்கிடைப்பதில்லை. பசுமாடு ஒன்று இரைதேடி அலைந்து புல்லை மேய்கிறது. பின்பு ஓரிடத்தில் அமர்ந்து இரைமீட்டு அசைபோட்டு மென்று ஜீரணிக்கச் செய்கிறது. இது போன்றதே கல்வி கற்றல் நிகழ வேண்டும். இதனை மாணவர்கள் உணர வேண்டும். இதற்கான வீட்டுச் சூழலையும் நேரத்தினையும் பெற்றோர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாறாகப் பெற்றோர் எந்நேரமும் தொலைக்காட்சியைப் பார்ப்பதும், அதிலுள்ள நிகழ்ச்சிகளுக்கு ஏற்றவாறு தமது வேலைகளைச் செய்து முடிப்பதும் சிறுவர்களுக்கு கற்றலுக்குச் சாதகமான சூழலாக அமையமாட்டாது. தவிரவும் மாணவர்கள் தற்காலத்தில் சொகுசான வாழ்க்கை வாழவே விரும்புகின்றனர். கல்வியும் இலகுவாகக் கிடைக்க வேண்டுமென்பதே அவர்களது எதிர்பார்ப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலங்களில் இலட்சியத்தோடு கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று வைத்தியராக, பொறியியலாளராக, முகாமையாளராக வந்த மாணவர்கள் பலர் இருந்தனர். தற்காலத்தில், கல்வியை இலட்சியத்துடன் வருந்திக் கற்றுத் தேற வேண்டும் என்றோ, போட்டி நிறைந்த கல்வியுலகில் சவாலை ஏற்றுக் கொள்ளத் தம்மைத் தயார்ப்படுத்தல் வேண்டும் என்றோ நினைக்கும் மாணவர்கள் குறைவு. குறைந்த பெறுபேற்றுடன் தனியார் பல்கலைக்கழகங்களில் அல்லது கல்வி நிலையங்களில் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு தாம் நினைத்தவாறு சித்தியடைந்து பதவிக்கு வருகின்றனர். இதனால் திறமைசாலிகள் உளத்தாக்கம் அடைகின்றனர். ஆக இரு பிரிவினரும் ஒரே நேரத்தில் ஒரே களத்தில் சேவையில் ஈடுபடுகின்றனர். இந்நிலைமை மாற வேண்டுமாயின் 'தேடல்' என்பது மாணவர்களுக்கு இருக்க வேண்டும்.

நாகரிகமானது அதிவேகமாக வளர்ச்சியடைந்து விட்ட இக்காலத்தில் மேலைத்தேய நாடுகளைப் போன்று எமது நாட்டிலும் நவநாகரிக ஆடைகளைப் பெண் பிள்ளைகள் அணிகின்றனர். இது ஒன்றும் தவறல்ல என்று எடுத்துக் கொண்டாலும், இடம், பொருள், ஏவல் அறிந்து நடந்து கொள்ள முயலுவதில்லை.தற்கால உணவுப் பழக்கவழக்கங்கள் சிறுவர்களுக்கு மிதமிஞ்சிய வளர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இதனோடு நாகரிகத்தில் கொண்டுள்ள மோகம், 'செல்போன்' பாவனை என்பன பெண் பிள்ளைகளைச் சிக்கலில் கொண்டு சென்று விட்டு விடுகின்றது. ஆண் பெண் சமத்துவம் என்ற நிலைமை, சிறுவர் உரிமைகள் என்று நினைத்துப் பெற்றோர் அளவுக்கு மீறிய சுதந்திரம் கொடுப்பதனால் 'கண்டிப்பு' என்ற நிலைமை இல்லாது போகின்றது. தவிரவும் பெற்றோரின் பொறுப்பற்ற தன்மையும் மாணவர்களைச் சரியான பாதையில் இட்டுச் செல்வதில்லை. கல்வியைக் கற்றுக் கொள்ள இடர்ப்படும் ஒரு பிள்ளை தனக்கு வசதியேற்படுத்துதுநராக ஒரு அயலவர் அல்லது ஒரு பாதுகாவலர் அல்லது ஒரு உறவினரை அண்டிப் பிழைக்க வேண்டிய நிலைமை ஏற்பட இடமுண்டு. இங்கு இப்பிள்ளைக்கு சாதகமான நிலைமை மட்டுமன்றிச் சிலவிடத்து ஆபத்தான நிலைமையும் தோன்ற இடமுண்டு. இவ்வேளை பெற்றோர் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

தமது ஆண், பெண் பிள்ளைகளைக் கண்ணுங்கருத்துமாகத் தமது கண்காணிப்புக்குள் வைத்து வளர்த்து ஆளாக்குபவர்கள் மிகச் சிலரே உள்ளனர். கூடுதலான பெற்றோர் தமது பிள்ளைகள் எவ்வாறாயினும் கற்று முன்வரட்டும் என்ற போக்கினால் தமது பொறுப்பிலிருந்து தவறிவிடுகின்றனர். பிள்ளை தன்னிச்சையான முடிவை எடுக்கத் துணிந்து விடுகின்றது. இவ்வேளை தனது சகபாடிகள், நண்பர்கள் போன்றோர் உதவி செய்வது போன்று ஆலோசனை வழங்கிப் பிழையான பாதைக்கு இட்டுச் செல்லும் நிலைமையும் உருவாக இடமுண்டு. யாரிடம் ஆதரவு கிடைக்கின்றதோ அவரே தனக்கு நல்லவர் எனப் பிள்ளை நினைத்து பெற்றோரைப் புறக்கணித்து நடக்க முயல்வதும் உண்டு. இவ்விடத்துப் பெற்றோர் தமது பாரிய பொறுப்பினை மனதில் கொண்டு நடத்தல் வேண்டும்.

ஆண், பெண் இருபாலாரும் என குடும்பத் தலைவனும் தலைவியும் உத்தியோகம் பார்க்கும் ஒரு குடும்பத்துப் பிள்ளை ஒன்று தனது அவசர தேவைகள், கஷ்டமான, இக்கட்டான நிலைமைகளில் உடனுக்குடன் தாய் தந்தையாரிடம் சொல்லக் கஷ்டப்படுகின்றது. இந்த வேளையில் மூன்றாம் நபர் ஒருவர் பிள்ளை விடயத்தில் செல்வாக்குச் செலுத்த முன்வரலாம். இது எல்லா நேரத்திலும் சாதகமானதாக அமைவதில்லை. சில குழந்தைகளை காலை முதல் மாலை வரை சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் விட்டுச் செல்லுகின்றனர். பழைய காலங்களில் சிறுவர் நிலையங்கள் இல்லை. கூட்டுக் குடும்ப வாழ்க்கை காணப்பட்டது. தாலாட்டிக் கதைகள் சொல்லி, அறக்கருத்துக்களை எடுத்துக் கூறும் அப்பப்பா, அம்மம்மா, கண்டிக்கும் தாய்மாமன் என்று தொடங்கிப் பிள்ளையின் முகம் பார்த்து அகத்தை அளவிடும் மூத்தோர் உறவுகள் போன்று தற்காலத்தில் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால மாணவர்கள் புதுமைகளையே பெரிதும் விரும்புகின்றனர். இதற்கேற்றவாறு வேலைக்குச் செல்லும் தாய் அவசர அவசரமாக விடியற்காலையில் சமைத்துப் பிள்ளைகளுக்கும் பரிமாறி, தனக்கும் எடுத்துக் கொண்டு கணவனுக்கும் கட்டிக் கொடுத்தல் என்ற நிலைமையில் உணவு ருசியாக இருப்பதும், பாசத்துடன் உணவூட்டலும் எந்தளவுக்குப் பொருத்தமானதாகும் என்று சொல்ல முடியாது. வகை வகையாகப், புதிது புதிதாகச் சந்தைக்கு வரும் பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட இலகுவாகத் தயாரிக்கக் கூடிய உணவு வகைகளையே அனைவரும் நாடுகின்றனர். கீழைத்தேச உணவு முறைகள், அதற்கான ஆயத்த வேலைகள் செய்யப் பெரும்பாலான தொழில் புரிவோருக்கு நேரங்கிடைப்பதில்லை. இதனால் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே. மாணவப் பருவத்தே அவர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துள்ள உணவுகள் கிடைக்கப் பெறாமையால் அவர்கள் சோர்வடைந்து காணப்படுகின்றனர்.

சில குடும்பங்கள் பிளவுபட்ட குடும்பங்களாகக் காணப்படுகின்றன. தாய் தந்தையரிடையே காணப்படும் சச்சரவுகள் பிணக்குகள் காரணமாக பிரிவுகளால் பிள்ளைகள் உறவினரை அண்டி வாழ வேண்டிய சூழ்நிலையில் அவர்களது சீவனோபாயம் மோசமான நிலையை அடையக் கல்வி கற்கச் சிரமமடைகின்றனர். இவ்வேளை இவர்களால் சக மாணவர்களைப் போன்று தமது ஆற்றல்களையோ, திறன்களையோ வளர்த்துக் கொள்ள முடியாமல் போகின்றது. அத்துடன் தாய் வெளிநாடு செல்ல அவ்வருமானத்தில் குடும்பத்தை நடத்திச் செல்லும் வேளை பிழைகள் நடந்து விடுவதும் உண்டு. கண்ணுங் கருத்துமாகப் பிள்ளைகளை வழிநடத்திக் கல்வி கற்க வைக்கும் தந்தையரும் உண்டு. மாறாக இன்னுமொரு பெண்ணை மணந்து பிள்ளைகளைக் கவனிக்காது விட்டு விடும் தந்தையரும் உள்ளனர். இவ்வேளை இடர்பாடுகளுக்குள் சிக்கித் தவிப்போர் பிள்ளைகளே. இவ்வாறான பிள்ளைகள் சிலரைப் பாட்டன், பாட்டிமார் வளர்க்கின்றனர். இவர்கள் பேரன், பேர்த்தி மீது அளவுக்கு மீறிய பாசம் காட்டி வளர்ப்பதனால் பிள்ளைகள் தாமாகவே உரிமைகளை எடுத்துக் கொள்கின்றனர்.

நாட்டில் சிறுவர் தொடர்பான சட்டங்கள் காரணமாகப் பாடசாலையானது பிள்ளையைத் தண்டிக்க முடியாத நிலைமை ஆசிரியர்களுக்கு ஏற்படுகிறது. இந்நிலைமையில் பெற்றோரை அழைத்து விடயத்தைச் சொல்லும் போது பெற்றோரும் பிள்ளையைக் கண்டிக்கத் தயக்கம் காட்டுகின்றனர். இரு பிரிவினரும் தம்மைத் தண்டிக்கச் சட்டங்கள் தடை போடுவதனால் சிறுவர்கள் சுதந்திரமாகத் தீர்மானங்களை எடுக்கின்றனர். இவை சாதகமானதாகவோ பாதகமானதாகவோ அமையலாம். ஒரு பிள்ளை பதினெட்டு வயது வரை எவ்வாறு பேணி வளர்த்து கல்வி நிலைமையை பெற்றுக் கொள்ளுகிறதோ அக்கல்வியே அப்பிள்ளையின் வாழ்நாளைத் தீர்மானிக்கின்றது. 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்ற வரிசையில் பெற்றோருடன் இணைந்து நல்வழிகாட்டுபவர் ஆசிரியர்களே. ஆசிரியர் குற்றம் களைபவர் என்று பொருள்படுபவர். இந்த வகையில் மாணவர்களை நல்வழிப்படுத்தி ஆலோசனை வழங்கி வாழ்க்கைப் பாதைக்குத் தொழிலுக்கு வழிகாட்டி நற்பிரஜைகளாக ஆக்குபவர்களும் அவர்களே. ஆசிரியர்களுடன் இணைந்து பெற்றோர்களும் மாணவர்களுக்கு ஆவன செய்து அவர்களை முன்னேற்ற முயல வேண்டும்.

அனேகமான பிள்ளைகள் மாணவர் இல்லங்கள், அனாதைச் சிறுவர் இல்லங்கள் போன்றவற்றில் தங்கி வாழ்கிறார்கள். சிலர் பாதுகாவலர், உறவினரிடமிருந்து வளர்கிறார்கள். எது எவ்வாறிருப்பினும் 'சிறுவர்' என்ற வகையில் வெறுமனே சட்டத்துக்கு மட்டும் கட்டுப்பட்டு நடந்தால் போதுமானதல்ல, உயிர்கள் என்ற வகையில் மனிதநேயங் கொண்டு இறை தொண்டாகக் கருதி இவ்வாறான பிள்ளைகளைச் சரியான பாதையில் இட்டுச் சென்று கல்வி புகட்டச் சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# CORONATION STORES

கொரனேஷன் ஸ்ரோர்ஸ் කොරනේෂන් ස්ටෝර්ස්

***Wholesale & Retail Dealers of Electrical Goods, Fancy Goods, Stationery, Sports Items, Baby Gift Items, Dankotuwa Porcelain, Arpico Mattress & Plastic Chairs***

**No. 172, Ahambaram Road,**
**Trincomalee.**
**Tel & Fax : 026-2222445**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BANK OF CEYLON

BOC

ලංකා බැංකුව இலங்கைவங்கி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

People's Bank

PEOPLE'S BANK

THE PULSE OF THE PEOPLE

Sisu Udana

An outstanding future generation

# "சிசு உதான" மாணவர் சேமிப்பு கணக்கு

- முன்னணி அரச வங்கி என்ற வகையில் எதிர்கால உத்தரவாதம்.
- வைப்பு அதிகரிப்பிற்கேற்ப பற்பல பரிசுப் பொருட்கள்.
- மாதாந்த வட்டி வழங்குவதுடன் கல்வி, சுகாதார தேவைகளுக்காக பணம் மீளப் பெறும் வாய்ப்பு.
- தரம் 1 இல் அனுமதிக்கபடும் அனைத்து மாணவர்களுக்கும் "முதல் நாள் முதல் பாடம்" விஷேட திட்டத்தின் மூலம் ரூபா.500/- அன்பளிப்பு.
- 5ம் தர புலமைப்பரீட்சை, சாதாரண தரப்பரீட்சை, உயர்தரப்பரீட்சைகளில் அதிசிறந்த பெறுபேறுகளுக்கு பெருந்தொகைப் பணப்பரிசு.
- உள்நாட்டு , வெளிநாட்டு உயர்கல்விக்கான கடன்வசதி.
- உயர்கல்வியின் பின்னர் சுயதொழிலுக்கான கடன் வசதிகள்.

ஆசிரியர்களுக்கு

- சகல தேவைகளுக்குமான கடன் ஒரு பிணையாளருடன் ரூபா.1,000,000/- வரை குறைவான வட்டி வீதத்தில்.
- அரச சலுகை வட்டி அடிப்படையிலான விரைவான வீடமைப்பு கடன்கள்.
- கையடக்க தொலைபேசி வங்கிச் சேவை , இணைய வங்கிச்சேவை, கடன் அட்டை வசதி போன்ற நவீன வங்கிச்சேவை வசதிகளும் உண்டு.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# If you deposit 10,000 at HNB Pathum Vimana Rewards are yours for free!

Just as your friends and family will always be with you at those special moments in your life, we are also with you...

**Why are we with you?**

HNB Pathum Vimana Rewards stands ready to gift you cash at significant moments in your life. What this means is that everyone who has an HNB Normal Savings Account (single/joint) will receive these amazing benefits.

**This is how you will receive Pathum Vimana Rewards...**

If you have maintained a minimum of Rs. 10,000 three months prior to the life event (listed below), you are eligible to receive Pathum Vimana Rewards.

### 21st Birthday

**Up to Rs. 100,000 in cash, depending on your account balance.**



### University Graduation

**Up to Rs. 100,000 in cash, depending on your account balance.**

### Wedding

**Up to Rs. 100,000 in cash, depending on your account balance.**

Both are eligible for gifts if they have separate normal savings accounts.

### Childbirth

**Up to Rs. 100,000 in cash in an HNB Singithi Account**

*Both parents are eligible to receive the reward if they have normal savings accounts.

### Purchasing a Vehicle

**Up to Rs. 100,000 in cash, depending on your account balance.**



### Moving into a New Home

**Up to Rs. 100,000 in cash, depending on your account balance.**

### First Day in School

**Up to Rs. 100,000 in cash, depending on the mother's or father's account balance**



### 10th Wedding Anniversary

**Up to Rs. 100,000 in cash, depending on your account balance.**

Both are eligible for gifts if they have separate normal savings accounts.

### 55th Birthday

**Up to Rs. 100,000 in cash, depending on your account balance.**

### Hospitalisation

**The account holder or the account holder's closest relative* will receive up to Rs. 100,000 in cash, depending on the account balance.**


Closest relative*
If the account holder is married, the account holder's wife/husband and children under 18 years of age.

If the account holder is single, the account holder's parents and brothers/sisters under 18 years of age.

**The rewards you will receive based on your account balance are listed below:**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Account Balance | Rs 10,000- Rs 49,999 | Rs. 50,000- Rs. 99,999 | Rs. 100,000- Rs. 499,999 | Rs 500,000- Rs 999,999 | Rs 1,000,000- Rs 4,999,999 | Rs. 5,000,000- Rs 9,999,999 | Rs. 10,000,000- upwards |
| Cash Reward | Rs 2,500 | Rs. 5,000 | Rs. 10,000 | Rs 15,000 | Rs 25,000 | Rs. 50,000 | Rs. 100,000 |

HNB PATHUM VIMANA Rewards
Everyone wins




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINCO AUTOMOBILE SERVICE (PVT) LTD.

Mobile :- 0773783840,
No.301B/1, Varothayanagar Road,
Trincomalee.
Phone :- 026-3265137
Fax :- 026-2225299


ATS

Email :-trincoaspl@gmail.com
Branch :- Kaithadi Road,
Maruthanarmadam, Jaffna.
Phone :- 021-3202133
Fax :- 021-2241955

**GENUINE SPARES,**
**QUALITY SERVICE,**
**GENERAL REPAIRS,**
**ACCIDENT REPAIRS,**
**WHEEL ALIGENMENT,**
**ENGINE SCANER AND TUNER,**
**SUSPENSION, BREAK ,**
**AND SHOCK UPSOWER TEST.**










AUTHORIZED DEALERS FOR

TOYOTA
MICRO
MARUTI SUZUKI
MITSUBISHI
NISSAN

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# Can Can Computer Repairing

## (Mobile Service) 0776424058

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம் ...



திருகோணமலை கல்வி வலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட CSDI பிரவு அகவை ஆறில் தடம்பதித்துள்ளது. அதன் சீரிய முயற்சியின் காரணமாக "நித்திலம்" சஞ்சிகையை பிரசவித்துத் தந்திருக்கும் இவ்வினிய தருணத்தில்...

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவனின் வாக்குக்கேற்ப நன்றி நவில்வது எமது தமிழ் மரபாகும். இப்பிரிவு உயிர்த்துடிப்பாகவும், உத்வேகத்துடனும் செயற்படுவதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிவரும் எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.N.விஜேந்திரன் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றிகளை கூறுகின்றோம். இச்சஞ்சிகையை எமது வலயத்தில் ஆரம்பித்து வைத்த முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாரும் தற்போதைய மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளருமான பெருமதிப்பிற்குரிய திரு.A.விஜயானந்தமூர்த்தி அவர்களுக்கும் அவர்களோடு CSDI பிரிவின் ஆசிரியராக இப்பணியை சிறப்புற வழிநடத்திய முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி.சி.சிவநிர்த்தானந்தா அவர்களுக்கும் மனநிறைவுடன் நன்றி கூறுகின்றோம்.

எமது நித்திலம் சஞ்சிகைக்காக வாழ்த்துரைகளை வழங்கிய கௌரவ முதலமைச்சர்-கிழக்கு மாகாணம், கௌரவ கல்வி அமைச்சர், முதன்மைச் செயலாளர், கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். ஆசியுரைகளை வழங்கிய சர்வமதப்பெரியார்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். இம்மலரினை அழகுற அலங்கரிக்க ஆக்கங்களை வழங்கியுதவிய சிரேஸ்ட விரிவுரையாளர்கள், கல்வியியலாளர்கள், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள்,ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதில் பெருமிதமடைகின்றோம். இக்கல்விச் ச ஞ்சிகை வெளியீட்டிற்காக செயற்பாடுகள் அனைத்திற்கும் தேவையான நிதியுதவி-களை வழங்கிய வலயக்கல்வி அலுவலகத்தின் கணக்காளர் செல்வி.S.அமுதா அவர்களுக்கும், நித்திலம் சஞ்சிகை உருவாக்கம் மற்றும் வெளியீட்டு செயற்பாடுகளில் முன்னின்றுழைத்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நல்லுள்ளங்களுக்கும் மனம்நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் எமக்கு விளம்பர உதவி வழங்கிய திருகோணமலை பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளருக்கும் மற்றும் பிரதான வங்கிக்கிளை இலங்கைவங்கி முகாமையாளருக்கும், ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளருக்கும், திருகோணமலை யாழ் சேவிஸ்ஸ்ரேக்ஷன் உரிமையாளர் திரு புஸ்கரன் அவர்களுக்கும் ,கொறினேஸன் உரிமையாளர் அவர்களுக்கும், நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். எமது விழா சிறப்புற அமைய சிற்றுண்டி குளிர்பான வகைக-ளையும் போக்குவரத்து உதவிகளையும் வழங்கிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் (CDF) பணிப்பாளர், ஊழியர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச்சஞ்சிகை புதுப்பொலிவு பெற செவ்வை பார்த்துதவிய எமது வலயத்தின் ஆசிரிய ஆலோசகர்களான திருமதி.சு.அமிர்தலிங்கம், திருமதி.ஐ.ரகுந்திரராஜா, செல்வி.T.சாரதா, திருமதி.V.ஜெயகணேஸ் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். இன்றைய நிகழ்விற்கு மண்டப உதவிகளையும் ஏற்பாட்டு உதவிகளையும் செய்து தந்த உவர்மலை விவேகானந்தாக்கல்லூரியின் அதிபர்.திரு.S.ஆனந்தசிவம் ஐயா அவர்களுக்கும் அவர்தம் பாடசாலை சமுகத்தினர்க்கும், இன்றைய நிகழ்வில் கலைநிகழ்வுகள் மூலம் எமை மகிழ்வித்த மாணவச்செல்வங்களுக்கும் அவர்களை வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் சரீர உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். இம்மலரை சீராக வடிவமைக்க எம்மோடு உடனிருந்து அரும்பணியாற்றிய ஆசிரியர் திரு.டே.பகிரதன் அவர்களுக்கும் இம்மலரை அழகுற அச்சிட்டு வெளியிட்ட Ben Vision Printers அச்சகத்தினருக்கும் மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

Lion **கோ.செல்வநாயகம்** ( JP)
**கோட்டக்கல்விப்பணிப்பாளர்(குச்சவெளி)**
**வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Zonal Education Office, Trincomalee.

## Milestone Towards the Achivement of the Objectives (for the Year 2016)

### PROMOTE EQUITABLE ACCESS TO BASIC & SECONDARY EDUCATION

- **Develop all schools as Child friendly schools.**
- **Increase the number of students' sustainability rate at schools.**
- **Build a physically powerful Student Community with the support of nutrition programme.**
- **Carrier guidance to school levers and dropout students.**

### IMPROVE THE QUALITY OF PRIMARY & SECONDARY EDUCATION

#### PRIMARY STUDENTS


- **Steps to help the primary students to reach the ELC level**
- **Create an environment to all students to obtain above 70 marks at Grade-5 Scholar -ship examination.**
- **Steps to increase the number of students to get pass at Grade-5 Scholarship examination.**
- **Build a good students community full of human values, morality, and knowledge .**

#### SECONDARY STUDENTS

- **Ensure the efficient environment at teaching and learning process to help the students to reach the Competence level.**
- **Increase the number of students to get an entrance to the University.**
- **Increase the number of students to get pass at G.C.E (O/L) and G.C.E(A/L) Examinations.**

#### TEACHERS

- **Develop a capacity of the teachers to build a student community with the ability to face the world's challenges successfully.**




### STRENGTHEN EDUCATION GOVERNANCE AND SERVICE DELIVERY

- **Fulfill the expectation of the society through strengthen the schools and students**
- **Ensure the satisfaction of the society through effective delivery of services by Us**

**CSDI Unit, , Zonal Education Office ,Trincomalee.**

Ben Vision Printers : 0778802526

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org